தலவரலாற்று ஆய்வுக் கட்டுரைகள்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

T. 22418

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 555

ஸ்ரீ:

தலவரலாற்று ஆய்வுக் கட்டுரைகள்

ஆசிரியர்:

முனைவர் ஆ. வீரராகவன், M.A.,B.L.I.S. Ph. D.,

சம்ஸ்கிருத பண்டிதர்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும் ஆய்வு மையம்

தஞ்சாவூர்.

2014] [விலை ரூ. 180-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	தலவரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஆ. வீரராகவன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	*555*
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2014
தாள்	:	**TNPL** *18.6* கி. கி
நூல் அளவு	:	*21* x *14* செ. மீ.
பக்கங்கள்	:	324
படிகள்	:	250
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	தலவரலாறு
விலை	:	ரூ. *180-00*

வெளியீட்டாளர் முகவுரை

தரணி போற்றும் தஞ்சை பல கலைகள் வளருவதற்கு பெரும்பங்காற்றி வந்திருப்பது யாவரும் அறிந்த விஷயமே. அதனிலும் சிறப்பு அறிவுசார் கருவூலமான சரசுவதி மகால் நூலகம் நாயக்கர் மன்னர்களாலும், மராட்டிய மன்னர்களாலும் பேணி பாதுகாக்கப்பெற்று, சுவடிகளை ஆய்ந்து நூலாகப் பதிப்பித்து மக்களிடையே கொண்டு சேர்க்கிறது.

அவ்வகையில் தஞ்சை மற்றும் தஞ்சை மாவட்டத்தைச் சுற்றி அமைகின்ற புராதன சிற்பங்கள், கலை, இலக்கியம், வரலாறு ஆகியவற்றைக் குறித்து ஆய்ந்தெழுதிய கட்டுரைகளைச் சேகரித்து வரலாற்று ஆய்வாளர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயன்படுமாறு தொகுத்துரைப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

இந்நூலில் பல அரிய தல வரலாறுகள் தஞ்சை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் காணப்படும் அரிய வகை சிற்பங்கள், இலக்கியம், புராணம் ஆகியவற்றைச் சார்ந்த செய்திகள் தொகுக்கப்பெற்றுள்ளன. தலவரலாற்று ஆய்வுக்கட்டுரைகள் எனும் இந்நூலினை சிறப்பாக பதிப்பித்துள்ள சரசுவதி மகால் நூலக சம்ஸ்க்ருதப் பண்டிதர் முனைவர் ஆ. வீரராகவன் அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூல் வெளிவரத்தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில்வெளிவர கணினிப்பிரிவில் பணியாற்றியவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மற்றும் சுற்றுவட்டாரத்திலுள்ள விசேஷ தலங்களைப் பற்றி அரிய விழைவோரும், பக்தி இலக்கிய ஆய்வாளர்களும் இந்நூலினை வாங்கிப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்
17-02-2014

டாக்டர்என். சுப்பையன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முன்னுரை

நமது பாரததேசம் பற்பல கலையம்சங்களை உள்ளடக்கி பாரோரா் புகழும்படியாக புராதன காலத்திற்கும், நவீன யுகத்திற்கும் வித்தாய் விளங்கு கின்றது. அதிலும் தமிழகத்தின் தஞ்சை பற்பல கலை இலக்கிய வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்து தன்னிகரற்றுத் திகழ்கின்றது. தஞ்சை மற்றும் தஞ்சையைச் சுற்றியுள்ள இடங்களில் மன்னராட்சிகால பற்பல வரலாற்றுச் செய்திகள் நிரம்பக் கிடைக்கின்றன. அவற்றுள் சிலவற்றை ஆய்வுக்கட்டுரைகளாக அமைத்து 1. தலவரலாறு, 2. சிற்பம், 3. இலக்கியம், 4. புராணம் ஆகிய நால்வகைப் பொருட்பிரிவின் கீழ் பகுத்து 'தலவரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்' என்ற பெயரில் தற்போது வெளியிடப்படுகிறது.

இந்நூலில் காணப்பெறும் நால்வகைப் பொருட்பிரிவுகளில் 'தலவரலாறு', ப.எண். 1 முதல் 98 வரையிலும், 'சிற்பம்' ப.எண் 99 முதல் 173 வரையிலும், 'இலக்கியம்' ப.எண். 174 முதல் 242 வரையிலும், 'புராணம்' ப.எண். 243 முதல் 304 வரையிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை தரும் செய்தி குறித்துச் சிறிது பார்ப்போம்.

1. தலவரலாறு:

இப்பகுதியில் அமைந்துள்ள இருபது கட்டுரைகள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட தலங்களின் பெருமைகளை எடுத்தியம்புகின்றன. குறிப்பாக பொருளடக்கம் தரும் 1-11/ பக்க எண். 58ல் 'தஞ்சையில் திருப்பதி கோவிந்தராஜர்' எனும் கட்டுரையை எடுத்துக் கொள்வோம். இது நம் தஞ்சையிலேயே ஆந்திர

மாநிலத்திலுள்ள திருமலை அப்பனையும், திருப்பதி கோவிந்தராஜப் பெருமாளையும் தத்ரூபமாக நினைவிற்தரவல்லது. தென்திசை இலங்கை நோக்கும் திருவரங்கப்பெருமானையும் நினைக்கச்செய்கின்றது. இவ்வாறு பார்த்தோமானால் இதன்பால் இன்னும் பல்வேறு செய்திகளை அறியலாம்.

2. சிற்பம் :

பதினைந்து கட்டுரைகளைக்கொண்ட இப்பகுதி பற்பல சிற்பச்செய்திகளை நம் கண்முன்னே நிறுத்துகிறது. அனுமன் அசோக வனத்தில் சீதையைக் கண்டு கணையாழி அளிக்கும் அரிய அற்புதக் காட்சியினை தஞ்சை 'விண்ணாற்றங்கரை பெருமாள் கோயில் சிற்பங்கள்' *(2-15/ப. எண். 168)* என்ற கட்டுரையின் அடிப்படையிலும், சோழர்காலத் தொன்மை வாய்ந்த ஊரொன்றினை 'சிற்பத்தால் சிறப்புறும் சிறுவிரம்பூர்' *(2-7/ப.எண். 126)* எனும் கட்டுரையிலும், தஞ்சை நாலுகால் மண்டபம் பிரசன்ன வேங்கடேசர் ஆலயத்தில் அமைந்த சிற்பமொன்றின் சிறப்புச்செய்திகளை 'சதா சேவையில் (என்றுமே கைதொழுதவண்ணம் இலங்கும்) பெருமாள் நாயக்கர்' *(2-5/ப.எண். 119)* என்ற கட்டுரை வாயிலாகவும், ஆகம அடிப்படையில் தஞ்சை எல்லையம்மன் கோயில் தெருவிலே கருவறை மற்றும் உற்சவ மூர்த்திகளைப் பற்றி 'ஜனார்தன வாசுதேவர்' *(2-8/ப.எண். 134)* என்கிற கட்டுரையாலும் அறிந்து கொள்ளலாம் என சிறிதே இங்கு எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

3. இலக்கியம்

இப்பகுதி மொத்தம் 10 வகையான கட்டுரைகளைப் பெற்றுள்ளது. தஞ்சை மற்றும் இதனைச் சுற்றியமைந்த செய்திகளின் தொகுப்புதான் இந்நூலின் நோக்கமென்கிற

வழியில் ஒரு சில எடுத்துக்காட்டுகள் இங்கே அளிக்கப்படுகின்றன. 'ஆகமத்தில் பெரு உடையார் கோயில்' *(3-2/ப.எண்.178)* என்பது மகுடாகம முறைப்படி தஞ்சை பிருகதீச்வர ஆலயம் அமைந்து விளங்குவதை விவரிக்கின்றது. 'நீலமேகப் பெருமாள் கீர்த்தனைகள்' *(3.6/ ப.எண்.206)* என்பது விண்ணாற்றங்கரையில் விளங்கும் ஆழ்வார் பாடல்பெற்ற திருத்தலங்களின் பெருமையை விளம்புகின்றது. 'யக்ஞமூர்த்தியும், பூலோககிருஷ்ணனும்' *(3.9/ப. எண். 233)* தஞ்சைசகாநாயக்கன் பகுதியில் விளங்கும் திருக்கோயில் சார்ந்த இலக்கிய வகைக் கட்டுரையாகும்.

4. புராணம் :

தலபுராணத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்த கதைச் சார்ந்த இலக்கியச் செய்திகளை தலவரலாற்று குறிப்புகளோடு 10 கட்டுரைகள் இப்பகுதியில் அமையப்பெற்றுள்ளன. 'தஞ்சை பெருஉடையார் கோயில் தலப்பெருமை' *(4.7/ப.எண்.275)* 'பராசரர் போற்றிய பிரசன்னவேங்கடேசர்' *(4.10/ப.எண்.297)* போன்ற கட்டுரைகள் தஞ்சபுரி, பராசரக்ஷேத்திர மாகாத்மியங்களின் அடிப்படையில் அமைந்தவை.

பதிப்பு முறை :

'தலவரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்' என்னும் இந்நூல் வெளியீட்டாளர் முகவுரை, நூலாசிரியரின் முன்னுரை, பொருளடக்கம், நூற்பகுதி, இணைப்பு, துணைநூற் பட்டியல் ஆகியன அமையும் வண்ணம் பதிப்பிக்கப் பட்டுள்ளது. தலவரலாறு, சிற்பம் போன்ற நால்வகைப் பொருட்பிரிவுகளில் பகுக்கப்பெற்ற கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருட்பிரிவிலும் அகர வரிசையில் அமைக்கப் பெற்றுள்ளன. மேலும் இதனை எளிய முறையில் கையாள வழிவகையும் இதில் செய்துதரப்பட்டுள்ளது.

இந்நூலின் பொருளடக்கப்பகுதி (ப.எண்.x-xii) துணையோடு ஒரு சில தலங்களின் குறிப்பு மட்டுமே அறிய இயலும். அவை கட்டுரையின் தலைப்போடு தலப்பெயரையும் தாங்கி நிற்கும். மற்றவை காண பின் இணைப்பு - I (ப.எண். 305-306)ல் இந்நூல் தரும் திருத்தலங்களை அகரவரிசையாக்கி, பொருளடக்கப் பகுதியின் வரிசை எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக இந்நூலின் 306 ஆம் பக்கத்தில் 49ம் எண்ணில் 'பவுண்டரீகபுரம்' குறிக்கப்பட்டுள்ளது. அதனருகில் 1-19 என்ற வரிசை எண் தரப்பட்டுள்ளது. இவற்றுள் 1 என்பது இந்நூலின் பாலமைந்த நான்கு பிரிவுகளுள் முதலாவதான தலவரலாற்றுப் பகுதியைச் சுட்டுகிறது. 19 என்பது அந்த பொருட்பிரிவின் கீழமையும் கட்டுரையின் எண்ணைக் குறிப்பிடுகிறது. 1-19க்கு பொருளடக்கப்பகுதி பக்க எண். 89னைத் தருவதால் 'வேள்வியால் விளங்கும் வியத்தகு க்ஷேத்திரம்' என்ற கட்டுரையின்பால் குடந்தைக்கருகே அமைந்த பவுண்டரீகபுரத் தலப்பெருமையினை அறிந்து மகிழலாம்.

இந்த நூலின் முகப்பு அட்டைப்படமாக தஞ்சை பிரசன்ன வேங்கடேசர் மற்றும் அக்கோயிலின் கல்வெட்டு களையும், பின் அட்டைப்படமாக ஸ்ரீமுஷ்ணம் திருக்கோயிலின் பூவுலகத் தோற்றமுரைக்கும் புருஷோத்தமனின் அரியசிற்பம், கொடிமங்கை சிற்பங்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

நன்றியுரை :

இந்நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கா. பாஸ்கரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் டாக்டர். ந. சுப்பையன் இ.ஆ.ப., அவர்களுக்கும், நூற்பணியினைச் செவ்வனே

நிறைவேற்றிடத் துணைபுரிந்த நிருவாக அலுவலர் திரு. ம. சங்கரநாராயணன் B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலகக் கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலின்பாலமைந்த கட்டுரைகளை பத்திரிகைகளில், நாளிதழ்களில் வெளியிட்டு இந்த மாபெரும் முயற்சிக்கு அடிப்படையாய்த் திகழ்ந்த வெள்ளிமணி-தினமணி, தினதந்தி, ஸ்ரீரங்கநாதபாதுகா, ஸ்ரீந்ருசிம்மபிரியா, ஸப்தகிரி, சிவஒளி ஆகிய பத்திரிகை நிறுவனத்தாருக்கும், கட்டுரை சார்ந்த கோயில்களின் அறங்காவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், ஆன்மீக அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

முனைவர். ஆ. வீரராகவன்
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர்
02-02-2014

பொருளடக்கம்

பக்க எண்

1. தலவரலாறு 1-98

1-1 அடம்பரில் அருள்தரும் அழகிய ராமன் 1

1-2 அப்பக்குடத்தானோ ஆராவயிற்றோனோ 5

1-3 கலியுகவேங்கடேசர் 15

1-4 கல்யாணபுரமும், கண்டியூர்க்கருடசேவையும் 17

1-5 களிமேட்டில் காட்சிதந்த கருமுகிலன் 29

1-6 குருகையோகியும், குருகாவலப்பர் கோயிலும் 35

1-7 குற்றுயிராய்க்கிடக்கும் புத்தூர் விண்ணகரம் 43

1-8 கோயிலான் குடிகொண்ட கோயில்வெண்ணி 46

1-9 தஞ்சாநகரத்தில் கம்பயநத்தம் ஸ்ரீநிவாசர் 50

1-10 தஞ்சையில் இராமநவமி விழாவும்,
இராமபிரான் திருக்கோயில்களும் 53

1-11 தஞ்சையில் திருப்பதி கோவிந்தராஜர் 58

1-12 தஞ்சையில் பஞ்சகிருஷ்ணர்கள் 62

1-13 தாயிலும் நல்ல விண்ணகர் 65

1-14 திட்டை நவநீதகிருஷ்ணன் 68

1-15 வல்லம் திருக்கோயில்கள் 70

1-16 விட்டோபா அக்கிரஹாரத்தில் வீரஆஞ்சநேயர் 77

1-17 விண்ணாற்றங்கரையில் விளங்கும் விஜயேசர் 80

1-18 விண்ணாற்றங்கரையே சந்தியாமண்டபம் 86

1-19 வேள்வியால் விளங்கும் வியத்தகுக்ஷேத்திரம் 89

1-20 வைரமுடித்திருவிழவில் திருநாராயணன் 95-98

பக்க எண்

2. சிற்பம் 99-173

2-1 அன்னாதிபதி எனும் அசோதை இளஞ்சிங்கம் 99

2-2 அரங்கனின் இரத்னாங்கி ஓர் ஆய்வு 106

2-3 ஆனைக்கருளிய ஆதிமூலம் 112

2-4 கண்ணன் காட்சிதந்த கனகதாசர் ஜன்னல் 116

2-5 சதாசேவையில் பெருமாள் நாயக்கர் 119

2-6 சரித்திரத்தை விளக்கும் சக்கரத்தாழ்வார் சிற்பம் 123

2-7 சிற்பத்தால் சிறப்புறும் சிறுவிரம்பூர் 126

2-8 ஜனார்தன வாசுதேவர் 134

2-9 தாயினும் நல்ல சங்கரனும்,
ரங்கக்கதிரிசிரபுரத்தின் வரதராஜனும் 139

2-10 திருமண்கருடனும் திருநாராயணபுரத்தில்
உடையாரும் 145

2-11 பூவுலகத்தோற்றமுரைக்கும் புருஷோத்தமன் 149

2-12 ரங்கராஜஸ்தவத்தில் சிற்பம் 155

2-13 வலவெந்தை நரசிங்கர்கள் 162

2-14 விண்ணாற்றங்கரை பெருமாள்கோயில்
சிற்பங்கள் 164

2-15 விளங்குடியில் விளங்கும் வேங்கடரமணன் 168-173

3. இலக்கியம் 174-242

3-1 அரங்கனின் அரிய ஆனைவாகனக்காட்சி 174

3-2 ஆகமத்தில் பெருஉடையார் கோயில் 178

3-3 குடந்தைக்கிடந்தானும் கோனேரிதாஸ்யையும் 181

3-4 குடந்தைதேசிகன் தொழுத
கும்பகோணக்கோயில்கள் 189

பக்க எண்

3-5	சேஷ அய்யங்கார் கீர்த்தனைகளில் சில திருத்தலங்கள்	194
3-6	நீலமேகப்பெருமாள் கீர்த்தனைகள்	206
3-7	பங்குனிஉத்திரமும் அரங்கனின் பல்வேறு விழாக்களும்	215
3-8	பட்டீசுவரத்தில் கோவிந்ததீக்ஷிதர் நந்தவனம்	227
3-9	யக்ஞமூர்த்தியும், பூலோககிருஷ்ணனும்	233
3-10	வேழமுடை வேங்கடம்	237-242
4. புராணம்		**243-304**
4-1	அனந்தநகர் மேவிய ஆண்டளப்பான்	243
4-2	அன்பில் ஜலசயனன்	246
4-3	அன்பில் பிரேமபுரீசுவரர்	256
4-4	ஆதிசேஷன் இயற்றிய அனந்தாஷ்டகம்	265
4-5	கந்துகாபுரமாகாத்மியத்தில் பசுபதீசுவராஷ்டகம்	268
4-6	குரிச்சித் தலப்பெருமை	273
4-7	தஞ்சைப் பெருஉடையார்கோயில் தலப்பெருமை	275
4-8	திருவேங்கடமும் அதன் பெருமைகளும்	281
4-9	திவ்யதேசமஹிமா எனும் திருத்தலப்பெருமை	285
4-10	பராசரர் போற்றிய பிரசன்னவேங்கடேசர்	297-304
இணைப்பு -I		**305-306**
துணைநூற்பட்டியல்		**307-312**

ஸ்ரீ:

1. தலவரலாறு

1-1 அடம்பரில் அருள்தரும் அழகியராமன்

அதம்பார் ஸ்ரீகோதண்டராமன் திருக்கோயில் நன்னிலம் தாலுகா, பூந்தோட்டத்திற்கு அருகில் கடகம்பாடிக்கு தெற்கில் 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு ஐராவதம் எனும் யானை கோதண்டராமரைப் பூசித்ததால் இதற்கு 'வெள்ளை அதம்பார்' என மற்றொரு பெயரும் உண்டு. 'அதம்பார் உக்கடை' என்னுமொரு கிராமமும் சிற்றூர்களின் பெயர்க் குறிப்பில் காணப்படுகிறது. தொ. மு. பாஸ்கரத்தொண்டமான் அவர்கள் 'வேங்கடம் முதல் குமரி வரை' என்னும் தமது நூலில் இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'தஞ்சை ஜில்லாவிலே திருவாரூருக்கு வடக்கேயுள்ள நன்னிலம் போய் அங்கிருந்து மேற்கு நோக்கி நான்கு மைல்கள் சென்றால் **அடம்பர்** என்ற ஊருக்குவருவோம். அந்த ஊரைப்பற்றி ஒரு பாட்டு-

> **"ஆயிரம் வேலி அதம்பார் ஆனைகட்டும் தான்**
> **வானைமுட்டும் போர் அதில் ஆறு கொண்டது பாதி**
> **தூறுகொண்டது பாதி அதனால் கொட்டாங்-**
> **கச்சியிலே நெல்லு கொடுங்கையிலே வைக்கோல்".**

இதற்கு மேலும் அந்த ஊரின் பிரபாவத்தைச் சொல்லவும் வேணுமா ? என்கிறார். இதனால் அன்றும் இன்றும் அவ்வூரின் நிலை உணரப்படுகிறது.

__அதம்பாரப்பத்து__

சகஜியின் ஆட்சிக்காலத்தில் வேதியர் வாழ்விடங் களான பந்தணைநல்லூர், மிலட்டூர், வேப்பத்தூர், கோமல், வடுவூர், தாடாளங்கோயில், பட்டமங்கலம், வலங்கைமான், பெருமாளகரம், மன்னார்கோயில் ஆகியவற்றுள் ஒன்றாக இந்த 'அதம்பாரப்பத்து

பேசப்படுகிறது. இப்பெயரைக் குறிக்கின்றதான செப்பேடு (எண்.1) சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. சகஜி மன்னர் திருவாரூர் தியாகராஜப்பெருமான் சந்நிதியில் ஓர் அன்னதானக் கட்டளையை ஏற்படுத்து கிறார். அதற்கு ஒப்பம் அளித்தவர்களாய் மேற்குறிப்பிட்ட சீமைக்காரர்களும், அதம்பாரப்பத்து அசேஷமகா ஜனங்களும் குறிக்கப்படுகின்றனர். இந்த செப்பேட்டின் காலம் 1695 A.D. ஆகும்.

தஞ்சை-மராட்டியமன்னர் முதலாம் துளஜா (1729-1735 A.D.) அவர்களின் ஆட்சிக் காலத்தில் தஞ்சைமாவட்டம் திருவாதி, கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி என நான்கு சுபாக்களாகப் பிரிக்கப்பட்டு, கும்பகோணம் சுபாவிற்கு உட்பட்ட பகுதி 'அதம்பாரப் பத்து' என அழைக்கப்படுகிறது.

அதம்பர் அகரம்

இத்தலத்தில் அதம்பார் வண்டுவார்குழலி சந்நிதி கிழக்குச்சுவரில் ஒரு கல்வெட்டும், கைலாசநாதர்கோயில் கருவறை தென்புறக்குமுதத்தில் மற்றொரு கல்வெட்டும், வடப்புறச்சுவரில் மூன்றாவதாக ஒரு கல்வெட்டும் உள்ளது. மூன்றாவதாக அமைந்த கல்வெட்டில் 'அதம்பர் அகரம்' என இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. இவை மூன்றும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சேர்ந்தவை. (நன்னிலம் கல்வெட்டுகள், மூன்றாம் தொகுதி, தொ. எண். 410/1978) கங்கைகொண்ட சோழசதுர்வேதிமங்கலத்து நம்பூர்க்காட்டு ஸ்ரீராமபட்டன் 'அதம்பாரர்' எனக் குறிப்பிடுவது ஈண்டு நினைக்கத் தக்கது.

அதம்பார்பத்து என்பதற்கு தஞ்சைமராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும், குறிப்புரையும் நூல் தாழ்வான நிலப்பகுதி என்ற பொருளைத் தருகிறது. 'அதோ புவனபாதாளம் பலிஸத்ம ரஸாதலம்' என்பது

அமரகோசம். அதம் என்ற சொல்லுக்கு தாழ்வு, பாதாளம் போன்ற பொருளைத் தருகிறது தமிழ்- தமிழ் அகரமுதலி. அடம்பர் ராமன், கதாதரபுரம் ராமன், ஆகியோர்களுக்கு பொருந்துவதாக அமையும் இராமாயணத்தை ன்று குரிச்சி எனும் லக்ஷ்மீபுர தலப்பெருமையில் காணப் படுகிறது. இக்கதை மேற்கூறிய இருக்ஷேத்திரங்களின் தலபுராணத்தையும் விவரிக்கும். ஏனெனில்; அடம்பரில் (கதாதரபுரம், குரிச்சி ஆகிய தலங்களில்) அருள்புரியும் ஸ்ரீகோதண்டராமன் ஸ்ரீலக்ஷ்மீநாராயணப் பெருமாளுடனே தான் காட்சிதருகின்றனர். குறிப்பாக அத:பச்ய! (அதம்= கீழே, பச்ய=பார்) என்று பொருள்பட அமையும் இராமயணக் கதையை இனிப்பார்ப்போம்.

ஸ்ரீலக்ஷ்மீபுர மாகாத்மியத்தில் இராமாயணக்கதை

பந்தணைநல்லூரின் அருகேயுள்ள குரிச்சித்தலப் பெருமையுரைக்கும் 'லக்ஷ்மீபுமாகாத்மியம்' என்கிற நூல் கோபுரீ என வடமொழியில் அழைக்கப்பெறும் தஞ்சை-பாபநாசம் தாலுகா-ஆதனூர்த் தலப்பெருமையுடன் தஞ்சை சரசுவதிமகால் நூலகம் வெளியிட்டுள்ளது.

இராமாயணக்கதை

'திரேதையில் ராமபிரான் ராவணனுடன் போர்புரிந்து அவனைக் கொன்ற பிறகு இத்தலத்தின் வழிவந்தார். அப்போது புஷ்பக விமானத்திலிருந்தவாறே ராமபிரானிடம் சீதையால், கௌசிகன் வேள்விகாக்க ராஜா தசரதனால் பணிக்கப்பெற்ற தாங்கள் ஸ்ரீசுந்தரவிமானத்துடன் கூடிய இந்த திவ்யக்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினீர்கள். அது சமயம் இந்த க்ஷேத்திரம் தாடகையின் பொறுப்பில் ஒரு பெரிய கானகமாகக் காட்சி கொடுத்தது. அதுவே தற்போது பெருநகராக விளங்குகிறது போலும். இதை அறிந்து செல்வோம் என்று கூறியவர்களாய் ராமனும் சீதையும் இத்தலத்திற்குப் பெருமைசேர்க்குமளவில் வருகை தந்தனர். ஆகையால் இத்தலத்தில் அனுமன் பணிவிடையை ஏற்று

ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகியோர் இத்தலத்தில் அருள்பாலித்து வருகின்றனர் என்பது குரிச்சி தலபுராணம்.

வந்தெதிர்ந்த தாடகை தன்னுரத்தைக் கூறி
வருகுருதி பொழிதர வன்கணையொன்றேவீ
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்கர் உயிருண்ட மைந்தன் காண்மின்" எனப்

பெருமாள்திருமொழியில் (10:2) லவகுசர்கள் இராமாயணத்தை உரைப்பது போன்ற குலசேகர ஆழ்வாரின் மங்களாசாஸனத்தின் வழி அமைந்ததும் ஆகிறது இத்திருத்தலத்தின் பெருமை.

மூர்த்தி

அதம்பார் எனப்படும் இத்தலத்தில் லக்ஷ்மீநாராயணர், சீதா ஸமேத கோதண்டராமர்கள் அருள்பாலித்து வருகின்றனர். தொ.மு. பாஸ்கரத்தொண்டமான் அவர்கள் இந்த சிறிய ஊரிலே ஒரு கோயில் கள்ளிக் கோட்டை ஒடு போட்டே முன்கூரை வேய்ந்திருக்கும். அங்கிருப்பவர் கல்யாணரங்கநாதர் என்று அழைக்கப் படுகிறார் போலும். (வேங்கடம் முதல் குமரிவரை எனும் நூலில் வடுவூர் ராமனைப்பற்றி எழுத ஆரம்பிக்கும்போது தில்லி மாநகரத்திலேயே ஸ்ரீலக்ஷ்மீநாராயணர் தான் அருள்பாலிக்கிறார் என்று தொடங்குவதும் ஈண்டு நினைக்கத்தக்க ஒன்று) அங்குள்ள (அதம்பர் அகரத்திலுள்ள) ராமனே மிகமிக அழகுவாய்ந்த அவனைப் பார்க்கவே ஒரு நடை போகலாம் அந்த ஊருக்கு. ராமர் கோயில்களென்றால் கும்பகோணம், நீடாமங்கலம், முடிகொண்டான், தில்லைவிளாகம், வடுவூர் ஆகிய திருத்தலங்கள் நம் நினைவிற்கு வரும். இத்திருக்கோயில்களில் உள்ள ராமர்களையெல்லாம்விட அழகனாக நிற்கும் ராமனைக்காண அடம்பர் என்ற ஊருக்கே செல்லவேணும் என்று நிறைவு செய்கிறார்.

1-2 அப்பக்குடத்தானோ ஆராவயிற்றோனோ

திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்ன
திருமால்வந்து என்னெஞ்சு நிறையப்புகுந்தான்,
குருமாமணியுந்து புனல் பொன்னித்தென்பால்,
திருமால் சென்று சேர்விடம் தென்திருப்பேரே.

(திருவாய்மொழி 10.8.1)

திருவரங்கம் போலே காவிரி இருமருங்கிலும் புடைசூழ விளங்குவதே கோயிலடி எனும் அப்பக்குடத்தான் திவ்யதேசமாகும். இங்கிருந்து 5 மைல் தூரத்தில் அன்பில் திவ்யதேசமுள்ளது. கோயிலடி திருவையாறு-திருக்காட்டுபள்ளி - கல்லணை பேருந்து மார்க்கத்திலுள்ளது. திருக்காட்டுப் பள்ளியிலிருந்து 8 கிலோமீட்டரிலுள்ள இவ்வூரிலிருந்து 15 மைல் தொலைவில் திருச்சிராப்பள்ளி உள்ளது. கும்பகோணம் தஞ்சாவூர் ஆகிய ஊர்களிலிருந்து நேரடியாக பஸ் வசதியுமுண்டு. இக்கட்டுரையில் காவிரிக்கரைத் தலங்களின் ஆய்வு, அப்பக்குடத்தான் பற்றிய செய்திகள் போன்றவை அணி செய்கின்றன.

அகண்டகாவிரி சோழன் வாய்த்தலைக்கு அருகில் வடதிருக்காவிரி, தென் திருக்காவிரியாகப் பிரிந்து ஓடி கல்லணையில் இணைந்து, மறுபடியும் இரண்டாக அமைந்து பாய்கின்றது. இப்படிச் சோழநாட்டை வளப்படுத்தும் ஆறுகளாகக் கொள்ளிடம், காவிரி வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு, குடமுருட்டி ஆறு (புனல்வாசல்), பன்னியாறு, வெள்ளையாறு, கண்ணனாறு பாண்டவயாறு, எடயாறு, கோரையாறு, அரிச்சந்திராநதி, அய்யனாறு, அடப்பாறு, முள்ளியாறு, கடுவையாறு ஓடம்போக்கி, கிட்டாறு, தேவநதி, சோழ சூடாமணியாறு, புத்தாறு, தென்புத்தாறு, வேலப்பாறு,

முடிகொண்டானாறு, திருமலைராஜனாறு, முள்ளியாறு, நூலாறு, அரசலாறு, நாட்டாறு, கீர்த்திமானாறு, வன்னியாறு, நன்டலாறு, வீரசோழனாறு, மஹிமலையாறு, கடலளியாறு, பலவாறு அய்யாவையனாறு, உப்பனாறு, மஞ்சவாய்க்கால், வேதாரண்யம் கால்வாய், போன்றவை அறியப் படுகின்றன.

வளம்கொழிக்கும் சோனாட்டு வடகரையில் வளர் இருப்பதாறும் தென்கரையில் ஈரேழும் (26+14=40) என்ற விஷ்ணுஸ்தலக்கோவை (தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் நூலகம் T 6255, கங்கா யாத்ராவிதி, 10ஆம் பிற்சேர்க்கை) / யின் முன்னுரைப் பாடல்வரி காவிரியின் வடகரை, தென்கரைத் திவ்யதேசங்களை ஒருவாறு பிரித்தறிய வழிவகுக்கின்றது. அதிலேயே விஷ்ணுஸ்தலங்களை கோர்வையாகக் கூறுமிடத்து சிற்சில மாறுபாடுகள் தென்படுகின்றன.

அவற்றுள் தென்னரங்கம், தென்திருப்பேர் குறித்து செய்திகள் பற்றி சிறிது சிந்திப்போம்.

“பொன்னித் தென்பால் திருமால் சென்றுசேர்விடம் தென்திருப்பேரே” என்றார். ஸ்ரீநம்மாழ்வார், “வண்டுகளிக்கும பொழில்சூழ் வருபுனல் காவிரித் தென்னரங்கம்” என்கிறது பெரியாழ்வார் திருமொழி. இந்த இருவிடத்திலும் வடதிருக்காவிரி நதியே சுட்டப்பெறுகின்றது. வடதிருக்காவிரி தென்திருக்காவிரி ஆகிய இரண்டையும்கொள்ள “பொன்னிசூழ் அரங்கமேய பூவை வண்ணன்” என்னும் திருச்சந்தவிருத்தப் பாடல்வரி துணைநிற்கின்றது. தில்லை திருச்சித்திரகூடம், திருகரம்பனூர், திருவெள்ளறை ஆகியவை உபய காவிரியின் வடகரைத் திருத்தலங்களும், செல்வம் மல்கு தென்திருக்குடந்தை என்ற திருமங்கையாழ்வார்

திருவாக்குப்படி குடமூக்கும், அஸ்தி காவேரிகா தீரே தக்ஷிணே புண்யபூதலே । பாரிஜாதவனம் நாம ப்ரஹ்மணா பரிபூஜிதம் ॥ என்றபடி தாராசுரத்தலமும் உபய காவிரியின் தென்கரைத் திருத்தலங்கள் ஆகின்றன.

பந்தணைநல்லூர் (கந்துகாபுரமாகாத்மியம்) தஞ்சை, ஸரஸ்வதி மஹால் வெளியீடு) அமைவிடத்தைக் குறிப்பிடும்போது சோழநாட்டின் வளநாட்டுப் பிரிவுகளுள் 'வடகரை விருதராஜபயங்கரவளநாடு' என கல்வெட்டு கூறுகிறது. முதலாம் இராஜராஜனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று இராஜேந்திரசிங்கன் என்பது. இராஜேந்திர சிங்கவளநாட்டின் கீழ்ப்பகுதி விருதராஜபயங்கரவளநாடு ஆகும். மேற்பகுதியாகிற உலகுய்யவந்த சோழவளநாட்டையும் உள்ளடக்கிய இந்த இராஜேந்திர சிங்கவளநாடு கொள்ளிடம், காவிரி என்னும் இரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட பகுதியைக் குறிக்கின்றது.

கொள்ளிடம், காவிரி ஆகிய இரு ஆறுகளுக்கும் இடையே உள்ள நிலப்பரப்பை சுட்டும் போதிலும் கல்வெட்டில் பயன்படுத்தப்பட்ட வடகரை என்னும் சொல் தென்திருக்காவிரியின் வடக்கே எனப்பொருள் படுவதால் காவிரியின் வடகரைத் தலவரிசையில் திருவரங்கம் பெரிய கோயிலையும், திருப்பேர் நகராகிய கோயிலடியையும் விஷ்ணுஸ்தலக் கோவை நூல் குறிப்பிடுகின்றது.

இனி கோபுரீ (ஆதனூர்) மாகாத்மியம் தரும் காவேரி குறித்த செய்திகளைச் சிறிது பார்ப்போம்.

பஸ்சிமோததி தீரே ஸஹ்யோ நாம மஹாசல: தஸ்மாத் । அத்ரி ஸமுத்பூதா நதீ பாபபிரணாசினீ ॥ சு. 33 யஸ்யா: ஸ்மரணமாத்ரேண ஸர்வபாபக்ஷயோ பவேத் । தஸ்ய

தக்ஷிணகங்காயா: காவேர்யாஸ்தீரயோர்த்வயோ: || *ஸு. 34.* **ஆஸஹ்யாத்ரேள பூர்வார்த்தே விஷ்ணுக்ஷேத்ராண்யனேகச: சிவக்ஷேத்ராணி புண்யானி தத்ர ஸந்தி பஹூனி ச ||** *ஸு. 35.* **தேஷு ஸர்வேஷு விக்யாதா காவேர்யா உத்தரே தடே | கோபுரீ நாம நகரீ விஷ்ணோ: ப்ரியகரீ ஸதா ||** *ஸு. 36. (ப.எண். 15, லக்ஷ்மீபுர மாகாத்மியம், தஞ்சை, சரசுவதிமகால், வெளியீடு)*

இதனால் ஆதனூர் அமைவிடம் தென் திருக்காவிரியின் உத்தரத்தில் - வடக்கில் என்பது உறுதி படுகின்றது.

*உத்தரம் என்ற சொல்லை "திக்தக்ஷிணாபி பரிபக்த்ரிம புண்யலப்யாத் ஸர்வோத்தரா பவதி தேவி தவாவதாராத்" என ஸ்வாமி தேசிகன் தமது கோதாஸ்துதியில் ஆண்டாளைப் புகழ்வது போலே காவிரி தேவியே தென்திருக்காவேரியாக அமைந்து அனைத்திற்கும் உத்தரமாக சிறந்தவளாக ஆனாளோ என்றும் கருதமுடிகிறது. காவிரித் தென்கரைத் தலமான திருச்சேறையில் ஸாரபுஷ்கரணிக்கு அருகில் காவிரி தேவியின் கோயிலை ஸ்ரீரங்க மாகாத்மியம் (*T.3990, PNo.79, T.M.S.S.M.L. Thanjavur*) தெரிவிப்பதும் ஈண்டு நினைக்கத் தக்கது.*

சோழநாட்டின் 40 திவ்ய தேசத்துள் திகழும் திருவாலியின் அமைவிடத்தைச் சுட்டும்போது **காவேர்யா: சோத்தரே தீரே நூபுராயய்ச தக்ஷிணே** *என்பதால் வடதிருக் காவிரியாகிய கொள்ளிடம் நூபுரம் என்றழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.*

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சுவாமிமலையில் வாழ்ந்த வேங்கடேசகவி தமது காவேரிஸ்துதி (தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு)

என்னும் நூலில் காவிரியின் குணநலன் இவ்வளவே என்று கவிஞர்களாலும் வருணிக்க முடியாது. இருப்பினும் எவ்வளவு நீரை விட்டாலும் பொறுமையாய் அவற்றை ஏற்றுக்கொள்ளும் பாங்கு வியத்தற்குரியது என்கிறார். 'தஸ்மாதேவ ஹி கொள்ளடம் புனரிதி த்வம் போத்யஸே த்ராவிடை:' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"திருமாலிருஞ்சோலை மலை" என்ற பதிகத்தின் முதற்பாசுரத்திலேயே "பொன்னித் தென்பால்" என்பதற்கு காவேரித் தென்கரையில் என்றும், "தென்திருப்பேர்" என்ற விடத்தில் காணும் 'தென்' எனும் சொல்லுக்குப் பொருளாக அழகு என்பதாகவும் பொருள் கொண்டுள்ளார் தமது திருவாய்மொழி வடமொழி உரையில் ஸ்ரீரங்கராமாநுஜமுனிகள்.

இருப்பினும் முடிவாக காவேரி சூழும் திவ்ய தேசமாதலால் தென்னரங்கம், தென்திருப்பேர் ஆகிய இவ்விரண்டு மட்டும் வடதிருக்காவிரியை இட்டு தென்னரங்கமாகவும், தென்திருப்பேராகவும் தான் கொள்ளவேண்டுமாகிறது.

திருப்பேர் நகரானின் தியான சுலோகம்

ஸ்ரீரா(நா?) மநகரே திவ்யசேஷசாயிநமச்யுதம் |
ஸஹ்யஜாமத்யத: சுத்தே ஸேவே அபூபப்ரியம் ஹரிம் ||

(அர்சாவதார வைபவ தர்ப்பணம் - P.No. 43)

(பொருள்) திவ்யே - திவ்யமயமான, ஸ்ரீரா(நா?) மநகரே-ஸ்ரீரா(நா) மநகரத்தில், ஸஹ்யஜாமத்யத: சுத்தே = காவேரி நதிகளின் நடுவே தூய்மையான பிரதேசத்தில், சேஷசாயிநம் - பாம்பணையில் பள்ளிகொண்டவனை, அச்யுதம் -(அண்டியவர்களைக் காப்பதில்) வழுவா நிலையானை, அபூபப்ரியம் - அப்பம் உண்ண ஆசை உள்ளவனை, ஹரிம் - அரியை - ஸேவே - வணங்குகிறேன்.

ப்ருஹத்புர்யாவாஸீ ஹரிரதிரஸாபூப கடவான்-
விமாநம் சாப்யைந்த்ரம் புஜகபதிஸாயீ கமலிநீ।
ததைவைந்த்ரீ ஸஹ்யாசலபவா திவ்யதடினீ-
ஸதா மாலாரூப: ப்ரணதவரத: பஸ்சிமமுக: ॥

(அஷ்டோத்தர சதாதி திவ்யதேச விவரணம்)

(பொருள்) ப்ருஹத்புர்யாவாஸீ ஹரிரதிரஸாபூப கடவான் - பேரூரில் உறைகின்ற ஹரி அதிரஸமாகின்ற அப்பக்குடத்தை உடையவன். விமானம் சாப்யைந்த்ரம் - அவன் உறையும் விமானத்தின் பெயரோ இந்திரவிமானம் ஆகும். புஜகபதிசாயீ அவன் பாம்பரையனான அரவத்தின் மேல் கண் வளர்ந்தருளுகிறான். கமலினீ - அவனது நாயகி கமலவல்லீ. ஆமோதவல்லீ என்றும் கல்வெட்டு குறிப்புள்ளது. ததைவைந்த்ரீ ஸஹ்யாசலபவாதிவ்ய தடினீ ஸதா மாலாரூப: அப்படியே இந்துவைப் (சந்திரனைப்) போல் தூய்மையானதும் ஸஹ்யமலையிலிருந்து தோன்றியதுமான திவ்யநதிகளை எப்போதும் மாலையாய் அணிந்து விளங்குபவன். ப்ரணதவரத: - வணங்கியவர்க்கு வரம் அளிப்பவன். பஸ்சிமமுக: மேற்றிசை நோக்கியவாறு ஆங்கே அருள்பாலித்து வருகின்றான்.

கல்வெட்டில் கோயிலடி திவ்யதேசத்தின் திருநாமம் ஆழ்வார் பாடல் வழி திருப்பேர் நகர் என்பதாகும். கல்வெட்டில் திருப்பெர் நகராகி, பேரையும் சொன்னாய், ஊரையும் சொன்னாய் என்ற ஆசார்ய ஹ்ருதய சூத்திரத்தின் உரையும் ஈண்டு நினைக்கத்தக்கது. அதுவே வடமொழி தியான ச்லோகத்தில் 'ஸ்ரீ ரா(நா)மநகரம்' (பிருஹத்புரீ) என்று சுட்டப்படுகின்றது. ஸ்ரீராமநகரம், ஸ்ரீ நாமநகரம், பிருஹத்புரீ என்பனவற்றுள் இந்த திவ்ய தேசத்தின் வடமொழிப் பெயர் ஸ்ரீ நாமபுரீ என்பதே ஆகும்.

இதனை 'சேதிபூபே' எனத் தொடங்கும் கீழ்வரும் கல்வெட்டுப் பாடலாகிய வடமொழிச் சுலோகம் உறுதி செய்கின்றது. இனி கல்வெட்டிலுள்ள வடமொழி சுலோகத்தைப் பார்ப்போம்.

சேதிபூபே சகாப்தே சரதி கலியுகே ரம்யரக்தாக்ஷி வர்ஷே-
வைசாகே மாஸி பக்ஷே ஸகலசசதரே பஞ்சமீ ரஞ்சிதே ச ।
வாரே சாந்த்ரே ச புஷ்யே பரிமலலிதாம் நாயகீம் நாமபுர்யா:
பத்மாம் ப்ராதிஷ்டிபத் வை பரமகுணநிதீ ரங்கதாதார்யவர்ய: ॥

என்ற இக்கல்வெட்டில் சாலிவாஹன சகாப்தம் *1484 (+78=1562* A.D.*)*ல் ரக்தாக்ஷி வருடம், வைகாசி மாதம், சுக்ல பக்ஷம், பஞ்சமீ, திங்கட்கிழமை புஷ்ய நக்ஷத்திரம் கூடிய நாமபுரியில் ப்ரதிஷ்டை செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் சுலோகங்களின் வழி திருவாராதனத்திற்கு வேண்டிய பொருட்களையும் அவர் தானமாக அளித்துள்ளமை தெரியவருகிறது. இக்கல்வெட்டு கோயிலடிப்பெருமாள் கோயில் முதல் பிராகாரத்தில் கருவறையின் பின்புறம் பட்டிகை, குமுதம், ஜகதிவரிகளில் காணப்படுகிறது. கருவறைக்கு நேராக பின்புறமிருக்கும் (கோஷ்டத்தின்) பறையின் கீழே விளக்குகள் ஏற்றப்பட்டு எண்ணெய் கரைபடிந்துள்ள இடத்தில்தான் நாமபுரீ என்னும் சொல் தென்படுகின்றது. இவ்வாறு ஊர்ப்பெயரையே தாங்கி நிற்கும் 448 ஆண்டு பழமையைப் பறைசாற்றும் கல்வெட்டு வெள்ளை யடிக்கப்பெற்று விளங்குகின்றது.

இவ்வூரின் புராணப்பெயரை 'பலாஶவனம்' என்று ஒரு கல்வெட்டு சுட்டுகின்றது. மற்றொன்று எம்பெருமானின் திருநாமங்களைப் பரக்கப் பேசுகின்றது. இதுபோன்ற வரலாற்றுச் செல்வத்தை நாம் பாதுகாக்க (பார்த்து, களிக்க)வேண்டும்.

அப்புள் கிடந்தான்:

இந்த திவ்ய தேசத்தின் பெருமாள் திருநாமம் அப்புள்கிடந்தானோ ! அப்பக்குடத்தானோ !! என்பதும் பெரும் சர்ச்சைக்குட்பட்டதாக உள்ளது. மேற்கூறிய தியான சுலோகங்கள் வழி ஸஹ்யஜாமத்யத: ஶுத்தே ஹரிம் ஸேவே - பொன்னியின் நடுவே சுத்தஸத்வமயமாய் விளங்கும் ஹரியை வணங்குகிறேன். ஸஹ்யாசலபவா திவ்யதடினீ ஸதா மாலாரூப: - ஸஹ்ய மலையிலிருந்து உண்டான திவ்ய நதிகளை எப்போதும் மாலையாய் அணிந்து விளங்குபவன் என்பதாலும் 'அப்புள் (நீருள்) கிடந்தான்' என்பது உறுதி. இக்கருத்திற்கு வலிமை யூட்டும் வகையில் (கோயிலடியின்) திருப்பேர் நகரான் கோயிலும் காவேரியின் கரையில் காவேரி நாற்புரமும் சூழ, சிறிது மேடானவிடத்தில் மேற்கு பார்த்தவாறே அமைந்தும் காணப்படுகிறது.

அப்பக்குடத்தான்:

'அபூபப்ரியம்' 'அதிரஸாபூபகடவான்' என்று மேலே குறிப்பிட்டுள்ள வடமொழிச் சொற்கள் பிற்காலத்தவை. ஆயினும் அவை ஆராயத்தக்கவை. 'அப்பக்குடத்தான்' என்ற திருநாமத்திற்கான ஆதாரமும் தலபுராணத்தில் கிடைக்கின்றது. அதாவது ஒருவர் இந்த க்ஷேத்திரத்தில் அன்னதானம் செய்ய, பெருமாள் ஆராவயிற்றானாக மீண்டும் உணவருந்த விரும்பி அப்பம் கேட்டு உண்டாராம். ஆதலால் இவருக்கு அருகிலுள்ள குடத்தையும் இட்டு 'அப்பக்குடத்தான்' எனத் திருநாமம் உண்டாயிற்று என்பர். இதற்கு வலிமை சேர்க்கிறது 'அபர்யாப்தோதரன்' (ஆராவயிற்றான்) எனக் கோயிலடிக் கல்வெட்டுகள் தரும் எம்பெருமானின் திருநாமம்.

மேலும் அந்த எம்பெருமான் 'வேதாந்த வேத்யன்' (-வேதங்களால் அறியப்படுபவன்) 'மார்க்கண்டேயாபய

பிரதன்' (கண்டும் தெளிந்தும் கற்றார் கற்றார் காளன்றி ஆவரோ வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழும் நாள் இண்டைச் சடைமுடி ஈசனுடன் கொண்டு உகாச்செல்ல கொண்டங்கு தன்னோடும் கொண்டுடன் சென்றது உணர்ந்துமே. திருவாய்மொழி 7.5.7) என்கிறபடியே மிருகண்டுபுத்ரன் சிவபெருமானைக் குறித்து தவம் செய்துவர யமன் தன் மந்திரி காலனை அனுப்ப, பொருட்படுத்தாததால் யமன் பாசக்கயிறு போட்டு இழுக்க, மார்கண்டேயன் சிவபெருமானை அணுக, அவருடன் சேர்த்து பாசத்தால் பிணைக்க, பின் ஸ்ரீமந் நாராயணனை நினைத்து வெளிவந்த பரமேஸ்வரன் மார்க்கண்டேயனை காப்பாற்றினான். 'அநந்தநாராயணன்' (அநந்தன் மேல் கிடந்த எம் புண்ணியன் - திருச்சந்த விருத்தம்-45) 'திருப்பேர் நகரான்' (ஸ்ரீநகரவாஸீ) எனப்பெருமை போற்றும் திருநாமங்களையும் கோயிலடிக் கல்வெட்டில் நாம் கண்டு களிக்கலாம். இவ்வாறு இந்த திவ்யதேசத்து எம்பெருமானின் திருநாமங்களைப் பரக்கப்பேசும் கல்வெட்டுகளுள் 'அப்பக்குடத்தான்' என்ற திருநாமத்திற்கும் அங்குள்ள ஒரு நிலக்கொடை சாஸனம் சான்றாகிறது. இதுவரை வெளிவராததான இக்கல்வெட்டு மதிள் செடிகளின் நடுவே மறைந்து கோயிலடி பெருமாள்கோயிலின் வெளிச்சுற்றுத் தென்புறமதிள் சுவற்றில் தென்படுகின்றது. இந்நூலின் ஆசிரியர் முனைவர் ஆ. வீரராகவன் அவர்களால் நேரில் கண்டு குறிப்பெடுத்துவந்த அச்சிதைந்த கல்வெட்டு இங்கே பதிவிடப்படுகிறது.

கல்வெட்டு: கோயிலடிப்பெருமாள்கோயில்: வெளித்திருச்சுற்று

வரி-1. சுபமஸ்து! ஸ்வஸ்திஸ்ரீசாலிவாகனசகம் 1655
கல்யப்தம் 4834 இதன்மேல் செல்லாநின்ற
பிறமாதி நாம ஸம்வத்ஸர புரட்டாசி ....

வரி-2. ஞுமாவாசை குரு வாரத்தில் சந்திரகிரஹண புண்ய காலத்தில் ராஜாதிராஜ ராஜபரமேஸ்வர ராஜமார்த்தாண்ட ராஜகம்பீர .... ஸ்ரீமதிரை......

வரி-3. அம்மாள் அவர்களுக்கு .....வெங்கிடப்பெருமாள் நாயக்கரய்யரவர்கள் .... நாயக்கர்

வரி- 4. .....பெருமாளப்ப குடற்றாருக்கு ...... ற்றூரில் சேஷ........ அம்மங்கார் கையில் ..... புண்ணிய காலத்தில் தாரா பூர்வமாக ......ஊருக்கு வடக்கு .... மேலப்படுகை ....

வரி- 5. ஸ தொப்பு கொல்லை நிலமன்னார் கோவிலுக்கு கிழக்கு ....

இந்த கல்வெட்டில் குறிப்பிட்ட வருடங்களின் பெயர்கள், ஆண்டெண்ணிக்கை ஆகியவற்றை காலக் கணக்கு நூலுடன் ஒப்பிடுகையில் ஆங்கில ஆண்டும் தேதியும் 13.9.1733 எனக் கிடைக்கிறது. பிரமாதி ஆண்டு புரட்டாசித் திங்கள், பௌர்ணமீ, வியாழக்கிழமை, உத்திரட்டாதி கூடிய நன்னாளில் சந்திரகிரகணம் சம்பவித்தமையும் அறியப்படுகிறது.

இதனால் ஆராவயிற்றான் ஆன கோயிலடிப் பெருமாள் திருநாமம் அப்பக்குடத்தான் என்பது இன்றைக்கு 280 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்தமை உறுதி படுகின்றது.

1-3 கலியுக வேங்கடேசர்

(தெற்குராஜவீதி, தஞ்சை)

தஞ்சாவூர் பல கலைகளுக்கு சிறப்பிடம் தந்ததுபோல் ஆன்மீகத்திற்கும் வழிவகுக்கும் பற்பல தேவாலயங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்ற வகையில் தஞ்சையிலிருந்தவாறே அத்தனை எம்பெருமான்களையும் ஒருசேர நாம் வணங்கி வழிபடமுடியும். கிருதயுகத்தில் நரசிம்மராகவும், திரேதையில் ராமனாகவும், துவாபரத்தில் வாசுதேவனாகவும் கலியுகத்தில் வேங்கட நாயகனாகவும் அருள்பாலித்த அந்த வேங்கடவன் தஞ்சையில் கலியுகவேங்கடேசராக தெற்குராஜவீதியில் அருள்பாலித்து வருகிறார். பெருமாள் கோயில் காஞ்சிப்பேரருளாளன் பெருந்தேவிக்கு ஒப்பான மூர்த்தியையும், கோயிலையும் தஞ்சை கீழராஜவீதியில் காணமுடிகிறது. பெருந்தேவித்தாயார், வரதராஜப் பெருமாள் இராஜகோபுரங்கள் தனித்தனியே அமைந்தமை தஞ்சைக்கே தனிச்சிறப்பு சேர்ப்பன.

கலியுகவேங்கடேசர்

பொலிக ! பொலிக ! போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்குயாதொன்றுமில்லை.
கலியும் கெடும் கண்டுகொள்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசைபாடி ஆடி உழிதரக்கண்டோம்.

(திருவாய்மொழி 5-2-1)

என்கிறபடியே கலியுகத்தை கெடுமாறு அருளும் நம் வேங்கடவன் கலியுகவேங்கடேசன். இத்திருக் கோயில் வடக்குபார்த்த இராஜகோபுரத் துடன் விளங்குகிறது. எம்பெருமான் கலியுக வேங்கடேசன் கிழக்கு நோக்கி ஸ்ரீதேவி பூமிதேவி ஸமேதராகச் சேவை சாதிக்கின்றார். கோயிலின் முன் மண்டபத்தில் வடக்கு

நோக்கியவர்களாய் ஸ்ரீசதுர்புஜ வரதராஜரும், ஸ்ரீஅமிர்தவேங்கடேசரும், ஸ்ரீபூர்வ சஞ்சீவி ஆஞ்சநேயரும் காட்சி தருகின்றனர். துவஸ்தம்ப மண்டப கருங்கல் மேற்கூரையில் இராமாயணம் சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது. ஒரு திருச்சுற்று மூலவர் விமானம், கல்யாணஉற்சவ மண்டபம் ஆகியவை இத்திருக் கோயிலில் காணக்கிடைக்கின்றன. எம்பெருமான் தஞ்சை பன்னிருகருடசேவை விழாவில் சிறப்பு அலங்காரத்துடன் இராஜ வீதிகளில் வலம்வருகிறார்.

சுல்தான்ஜியப்பா கோயில்

சுல்தான்ஜி என்பது மராட்டியர்களின் பெயர் களோடு சேர்ந்து வழங்கிவரும் மற்றொரு சொல்லாக அமைந்திருக்கின்றது. வேதாரண்யம் வேதாரண்யேச்வர சுவாமி கோயிலின் மேற்பார்வையாளர் சாவந்தராவ் ஆவார். மராட்டியரது ஆட்சியில் ஆட்சிப் பொறுப்பை வகிப்பவர்களுக்கும் கோயிலில் பல திருப்பணிகள் செய்பவர்களுக்கும் கோயிலில் உருவச் சிலையை அமைப்பது வழக்கமாக இருந்து வந்துள்ளது. அவ்வாறு அமைந்தமையை சீர்காழிச்சீமை வைத்தீச்வரன் கோயிலில் பல திருப்பணிகள் மேற்கொண்ட மல்லார்ஜி காடேராவ் அவர்களின் தூண் சிற்பத்திலிருந்து உணரலாம்.

தஞ்சை தெற்கு வீதி கலியுகவேங்கடேசர் திருக்கோயிலின் மற்றொரு பெயர் '**சுல்தான்ஜி அப்பா கோயில்**'. சுல்தான்ஜி என்பவரால்தான் இத்திருக்கோயில் கட்டப்பெற்றது. இக்கோயிலின் துவஜஸ்தம்ப மண்டபத்தில் **சுல்தான்ஜி அப்பா** அவர்களின் திருஉருவச் சிலை கருங்கல் தூண்சிற்பமாக நாட்டப் பெற்றுள்ளது. கோயிலின் கிழக்கு மதில்சுவரை ஒட்டி தென்வடலாக அரண்மனைத் தெற்கு வீதியையும் அதற்கு அடுத்துள்ள

தென் அலங்கத்தையும் இணைக்கின்ற சந்திற்கு **சுல்தான்ஜியப்பா சந்து** என்பது பெயர். அந்த சந்தில் சுல்தான்ஜி அப்பா வாழ்ந்திருக்க வேண்டும். அங்குள்ள பிள்ளையாருக்கு **சுல்தான்ஜியப்பா பிள்ளையார்** என்ற திருநாமமுண்டு.

அரண்மனைக்குத் தென்புறம் மதில்சுவரை அடுத்துள்ள கிழக்கு மேற்காகச் செல்லும் தாஸ்தா மகால் சந்தில் ஸ்ரீசதுர்புஜவரதராஜன் கோயில் கொண்டருள்பாலித்தார். பயனில்லாத அந்த இடத்திலிருந்து கீழவீதி ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயிலுக்கு இடம்பெயர்க்கப்பட்ட ஸ்ரீசதுர்புஜ வரதராஜப்பெருமாள் தற்போது சுல்தான்ஜியப்பா கோயிலில் பிரதிஷ்டிக்கப்பட்டார். அவ்வாறே அமிர்த வேங்கடேசரும் கோயில் கொண்டார். ஸ்ரீபூர்வசஞ்சீவி ஆஞ்சநேயரும் ஆங்கே அருள்பாலிக்க, ஸ்ரீதேவி பூமிதேவி உடனுறை ஸ்ரீகலியுக வேங்கடேசப்பெருமாளுக்கு **28.10.2012** ஞாயிற்றுக் கிழமையன்று ஜீர்ணோத்தாரண புனரஷ்டபந்தன மகாசம்ப்ரோக்ஷணப் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

1-4 கல்யாணபுரமும், கண்டியூர்க் கருடசேவையும்

தஞ்சைக்கோயில் எம்பெருமானிடம் நேராய் வரம்பெற்று நின்ற தஞ்சகாசுரன் தன் பேரால் விளங்குகின்ற பேரூர் தஞ்சாவூர். இத்தஞ்சைமாநகரம் மகதம், மாளவம், புலிந்தம், மத்ஸ்யம் முதலான ஐம்பத்தாறு தேசத்துள் மேலான தெய்வபூமியாகவும்,

கர்ணாட தேசத்தின் சோழமண்டலத்தில் இடம் பெற்றும் திகழ்கின்றது. தஞ்சைக்கோயில், தஞ்சைமாமணிக் கோயில் என்றவாறெல்லாம் போற்றப்பெறும் இந்த ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசத்திற்கு 'ஸித்திக்ஷேத்திரம்' என்ற மற்றொரு பெயரை கண்டியூர்த் தலபுராணம் தெரிவிக்கின்றது. கண்டியூர்த் திவ்யதேசத்தின் அபிமானத்தலமே கல்யாணபுரம் ஆகும்.

கல்யாணபுரம்

'கல்யாணம்' என்ற சொல்லே நலம் தரும் நற்சொல். "ஸ்வச்ரேயஸம் சிவம் பத்ரம் கல்யாணம் மங்களம் சுபம்" என்பது அமரகோசம். அதன்படி எப்போதும் கல்யாணத்தையே (நல்லனவே) செய்யும் புரம் கல்யாணபுரம். ஆங்கே அலர்மேல்மங்கை உறைமார்பனாய் ஸ்ரீநிவாஸன் எழுந்தருளி பிரம்மோற்சவ, கல்யாண உற்சவாதிகளையெல்லாம் கண்டு களிப்புற்று காவேரி தீரவாஸியாக பக்தானுக்கிரஹம் செய்துவருகின்றான். இருமருங்கிலும் எண்ணற்ற வீடுகள் நிறைந்த எழிலார்ந்த இரட்டை அக்ரஹாரமே இத் திருக்கல்யாணபுரம். அறிஞர்கள், அஹோபிலமடத்துப் பீடாதிபதிகளுள் 24ம் பட்டம் ஸ்ரீமத்அழகியசிங்கர், விண்ணாற்றங்கரை ஸ்ரீமதாண்டவன் போன்றோரையும் ஈன்றெடுத்த பெருமை பெற்றது இந்தத் திருத்தலம். தஞ்சை மராத்திய மன்னர்கள் விஜயதசமி நன்னாள் அம்புபோடும் பெருவிழாவில் நகர்வலம் வரும்போது அவர்களைத் தொடர்ந்து அணிவகுத்துச் செல்லும் பெரியோர்களால் கல்யாணபுரம் வரதய்யங்கார் என்பாரும் ஒருவர். கண்டியூர் அரன் சாபம் தீர்த்த பெருமாள் தன்னுடைய ப்ரம்மோத்ஸவத்தில் இரண்டாம் திருநாள் கல்யாணபுரம்

மார்கமாக இராயம்பேட்டை எழுந்தருள்வது வழக்கம். அது சமயம் திருக்கண்டியூர் திவ்யதேசத்து எம்பெருமானை கல்யாணபுரம் ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஊர் எல்லையில் இருந்து பூர்ணகும்ப மரியாதையுடன் தன் திருப்பதிக்கு அழைத்துச் செல்வார் நூற்றெட்டு திவ்யதேசங்களுள் ஒன்றாகத் திகழும் "உலகமேத்தும் கண்டியூர்" எம்பெருமான் கல்யாணபுரம் எழுந்தருள் வதால் அவரது வரவேற்பு விழாவில் ஆன்றோர்கள் ஆஸ்திகப் பெருமக்கள் அறிஞர்கள், அன்பர்கள் பலர் பக்தியோடு பங்கு கொள்வர். அரனின் சாபங்களைந்த புண்ணியப் புராணபுருடனைப் போற்றியுகந்து உபசரித்து வரவேற்று வழியனுப்புங்காட்சியைக்காண கட்டாயம் பூர்வஜன்ம ஸுக்ருதம் (முப்பிறவியில் செய்த நல்வினைப்பயன்) இருக்கவேண்டும்.

கண்டியூர் எனப் போற்றப் பெறுகின்ற திவ்யதேசம் **காவேர்யா: தக்ஷிணே தீரே ஸித்தி க்ஷேத்ரோத்தரே சுபே । ஸங்கமக்ஷேத்ர நைர்ருத்யாம் கண்டன க்ஷேத்ரமுத்தமம் தத்ராஸ்தே பகவான் தேவ: சிவசாபஹரோ ஹரி: ॥** என்கிற படியே காவிரி நதிக்குத் தெற்கிலும், ஸித்திக்ஷேத்ரம் எனப்பெறும் விண்ணாற்றங்கரைக்கு வடக்கிலும், ஸங்கமக்ஷேத்ரமாகிய கூடலூருக்குத் தென்மேற்கிலும் அமைந்துள்ள கண்டன (கண்டியூர்) க்ஷேத்ரம் உத்தமமானது. ஆங்கே சிவசாபம் நீக்கிய மஹாவிஷ்ணுவாகப் பெருமாள் அருள்பாலிக்கின்றார். இத்தலமே க்ருதயுகத்தில் நான்கு யோசனை, திரேதையில் மூன்று யோசனை, துவாபரத்தில் இரண்டு யோசனை அளவு விஸ்தாரமுடையதாய்த் திகழ்ந்தது. கலியுகத்தில் ஒரு யோசனை அளவுடைத்ததாய் விளங்குகின்றது. எம்பெருமான் தன்னை அண்டிவருபவர்களின் பாபத்தை வெட்டுவதால் இத்தலத்திற்குக் கண்டனபுரம் (கண்டியூர்) என்று பெயர். ஒரு காலத்தில் பலிச்சக்ரவர்த்தி

இத்தலத்தினை ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டை செய்து வைத்ததால் இத்தலத்திற்கு பலிக்ஷேத்திரம் என்ற மற்றொரு பெயருமுண்டு. பாபங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தும் படியான கண்டனக்ஷேத்திரத்தினை நினைத்தாலே, பாதகங்கள் கழிந்துவிடும். இத்தலத்தினை வணங்கியவர் முத்தராய் விஷ்ணுவின் ஸாயுஜ்யத்தை அடைவர் என்பது க்ஷேத்திரபுராணம். சங்கு சக்ர கதாதரரும், திருமகள், மண்மகள் புடைசூழ கருட விஷ்வக்ஸேநாதிகளுடன் காட்சி நல்கும் எம்பெருமானான தாமரைபோல் நீண்ட கண்ணானை ஒருமுறை சேவித்தவன் நற்கதியடைவது திண்ணம். கமலாக்ருதி விமானத்தையும், கமலவல்லி நாதனையும் தொலைவிலிருந்தபடி வணங்கினாலும் அமோக பலனைத் தரும். ஒரு சமயம் ஜகத்ச்ருஷ்டியின் போது மகத் தத்வரூபமாக பிரம்மதேவனை விஷ்ணு படைத்தார். பிரம்மதேவருக்கு ஐந்து முகங்கள் இருந்த படியால் அதைக்கண்டு மகாலக்ஷ்மி திடுக்கிட்டாள். இயற்கைக்கு மாறான இப்பிரமனை ஈன்றதால் மஹாவிஷ்ணு நம்மைப் பார்க்காமல் இருந்து விடுவாரோ என ஐயமுற்றாள் மஹாலக்ஷ்மி. தன் மகனான பிரம்மாவின் நடுமுகத்தைக் கிள்ள நினைத்தார். அகங்கார தத்துவமாய்ப் படைக்கப்பெற்ற சிவபெருமானைக் கொண்டு பிரம்மதேவரின் நடுமுகத்தை வெட்டினார். இதனால் பிரம்மஹத்திதோஷம் சிவபெருமானுக்கு வந்து விடுகிறது. பிரம்மா கோபத்துடன் உருத்திரனுக்கு மண்டையோடு ஒட்டிய கையுடன் நூறு வருடகாலம் பூமியில் சஞ்சரிப்பாய்' என சாபமிட்டு விடுகிறார். கையில் ஒட்டிய கபாலம் விழ விஷ்ணுவை தலந்தோறும் சேவித்து வணங்க விஷ்ணுவே கட்டளை பிறப்பிக்கின்றார். சாபவிமோசனார்த்தம் அவர் சென்று வந்த தலங்களின் குறிப்புகளுக்கிடையே 108 வைணவத்தலக் குறிப்பும்

கொடுக்கப்படுகிறது. பரே க்ஷீரே ஏகமேகம் தொண்டே துவாவிம்சதிஸ்ததா | மத்யதேசே துவயம் சைச சத்வாரிம் சஸ்து சோளகே || பாண்ட்யே ஸப்ததச ப்ரோக்தா மலயாளே திரயோதச | ஏகாதசோத்தரே சைவ திவ்யஸ்த்தானானி மே சிவ | ஏவமஷ்டோத்தர சதம் ஸ்தானம் திவ்யம் பரம மங்களம் || க்ஷேத்திராடனம் செய்த சிவபெருமான் கண்டன க்ஷேத்திரத்திற்கு இறுதியாக வந்து கோயிலின் மேற்புரத்திலமைந்த சதா தீர்த்தத்தில் நீராடிஎழுந்திருக்கும் போது தன் கபாலம் நிரம்பி வழிகின்ற நீரைப்பெற்றவராய் நாராயணன் அருளாலே சாபம் களையப்பெற்று, கையில் ஒட்டிய கபாலமும் நீங்கப்பெற்று பிரம்மஹத்தி தோஷத்திலிருந்தும் விடுதலை பெற்றார். ஆதலால் மனமுவந்த சிவபெருமான் சைத்ர மாஸம் திருவாதிரையில் தொடங்கி ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பிரம்மோத்ஸவத்தை நடத்தி வைத்தார் என கண்டனபுர க்ஷேத்திர மாகாத்மியம் கூறுகிறது.

சாஸனங்களில் கண்டியூர் வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்படுகிறது. பெருமாள் கோயில் முகமண்டபத் தென்புறச்சுவற்றில் 15ம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் - தெலுங்கு கல்வெட்டு உள்ளது. அதில் வீரபாண மல்லரசரின்புதல்வர் நாராயணராசரின் அக்கோயிற்கொடைகள் பேசப் படுகின்றன. பொய்யாமொழிப்புலவரின் நண்பன் சீநக்கன் எனும் குறுநில மன்னனின் தலைநகரம் கண்டியூராகும். சீநக்கனின் அரண்மனை அரசூரில் இருந்தது. கண்டியூரில் 1751ம் ஆண்டு பிரெஞ்சுக்காரர் களுக்கும் ஆங்கிலேய வீரரான கிளைவின் படைகளுக்கும் இடையே போர் நடைபெற்று, போரில் ப்ரெஞ்சு ஆபீஸர் காயமடைந்தார். அப்போராலும் புகழ்பெற்ற கண்டியூர் திவ்யதேசம் தஞ்சைக்கு வடக்கே 8 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கருடசேவை

கண்டியூர் ஹரசாபவிமோசனப் பெருமாள் தன்னுடைய பிரம்மோத்ஸவத்தின் நான்காம் நாள் ராயம்பேட்டை எழுந்தருள்கிறார். ராயம்பேட்டை எனும் ஸ்ரீக்ராமம் திருக்குடந்தை தேசிகன், திருக்குடந்தை ஆண்டவன் போன்ற மஹனீயர்களை ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு அளித்த பெருமை வாய்ந்தது. ஆண்டவன் ஆச்ரமாதிபதியான சின்னாண்டவன் ராயம்பேட்டைச் காவிரிக் கரையில் அனுஷ்டானம் செய்த படித்துறை இன்றும் 'சாமிப்படித்துறை' என அழைக்கப்பெறும் சிறப்பினைப் பெற்றுள்ளது.

ராயப்பேட்டை அக்கிரஹாரத்தில் சிறிய கோயில் ஒன்று உள்ளது. அத்திருக்கோயிலில் ஸ்ரீவரதராஜ கோபாலப்பெருமாள் அருள்பாலித்து வருகிறார். ஆதி காலத்தில் ஸத்யாகால ஸ்ரீவைஷ்ணவர்களான ஷடமர்ஷண கோத்திரத்தார் இத்தலத்திற்குக் குடியேறி ராயம்பேட்டையில் பஞ்சகருடோற்சவ விழாவினைச் சிறப்புறச் செய்து வந்தனர். கருடசேவை விழாவில் ஸ்தலத்து எம்பெருமான் ராயம்பேட்டை ஸ்ரீவரதராஜ கோபாலனும், கல்யாணபுரம் ஸ்ரீநிவாஸனும், பெரும்புலியூர் ஸ்ரீசுந்தரராஜனும், திங்களூர் ஸ்ரீவரதராஜனும், கண்டியூர் ஸ்ரீஅரன் சாபம் தீர்த்தவனும் சேர்ந்து காட்சி தருகின்றனர்.

இக்கருடோற்சவ வைபவத்தினைக் கண்டு களிக்க வேண்டுமாயின் கண்டியூர் எம்பெருமானின் பிரம்மோற்சவ சமயம் நான்காம் திருநாள் ஸ்வாமி தேசிகனின் மாதுலவம்சத்தாராலும், ஸத்யாகால ஸ்ரீவைஷ்ணவர் களாலும் ஏற்றம் பெற்ற ராயம்பேட்டை ஸ்ரீகிராமத்திற்குச் சென்றாக வேண்டும்.

இன்றையநாளில் ஆங்கே பஞ்சகருட சேவைதனைக் காண இயலாது. ஆயினும் ராயம்பேட்டை எழுந்தருளும் கண்டியூர் திவ்யதேசத்தெம்பெருமானுடன் ராயம்பேட்டை திங்களூர் எம்பெருமான்களையும் சேர்த்து மூன்று கருடசேவைகளை நாம் கண்டு மகிழலாம்.

இதுவரை 'கல்யாணபுரமும் கண்டியூர் கருட சேவையும்' என்ற தலைப்பில் பஞ்ச (ஐந்து) கருடசேவைக் குறித்து அறிந்தோம். இதைப்போலவே தொன்மையாக நடந்துவரும் 9, 11, 12 ஆகிய கருடசேவை விழாக்கள் குறித்து இனிப்பார்ப்போம்.

ஒன்பது கருடசேவை (ஆழ்வார் திருநகழி)

வைகாசி விசாகத்தில் நம்மாழ்வாருக்கு நவதிருப்பதி எம்பெருமான்கள் கருடசேவைக் காட்சி நல்குகின்றனர். (விஷ்ணுஸ்தல மஞ்சரி ப.எண். 60) இந்த கருட சேவை விழா 1807 ஆம் ஆண்டு பந்தளராமஸ்வாமி நாயக்கரால் தொடங்கப்பெற்றது. இவ்விழாவிற்காக ஒரு தனி மண்டபம் அமைக்கப்பெற்றது. ஆதலால் இதனை பந்தல் மண்டபம் என்றே அழைத்துவருகின்றனர். ஆகையால் இந்த ஆழ்வார் திருநகரி கருடசேவை 206 ஆண்டுக்காலப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பதினொரு கருடசேவை (திருநாங்கூர்)

திருமங்கை ஆழ்வாருக்குப் பதினோரு கருடசேவைக்காட்சி திருநாங்கூரில் தை அமாவாசையின் மறுநாள் நடைபெறுகிறது. இந்த கருட சேவை விழா 1894ஆம் ஆண்டு திருமலை விஞ்ஜிமூர் ஸ்ரீநிவாஸ தாத்தாச்சாரியாரால் தொடங்கி வைக்கப்பெற்றது. இம்மஹனீயர் ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ராக சிதம்பரத்தில் பணிபுரிந்து வந்தார். பணிமாற்றமாகத்

திருநெல்வேலிக்குச் சென்றபோது ஆழ்வார் திருநகரியில் நவதிருப்பதி கருடசேவை விழாவைக் கண்ணுற்று நம்மாழ்வாருடைய ஸ்தானத்தில் திருமங்கை ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணி மங்களாசாஸனம், கருடசேவை ஆகியவற்றை வெகு சிறப்பாக சிரமப்பட்டு நடத்தி வைத்தார். ஆகையால் இந்த பதினோரு கருடசேவை 119 ஆண்டுக்காலப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பன்னிரு கருட சேவை (தஞ்சாவூர்)

தஞ்சை பள்ளியக்கிரஹாரம் துவாதச கருடாழ்வார் தாஸர் என்னும் R.V.V. நாராயணசாமிராஜு என்பவரால் 1906ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று 1930 வரை 25 ஆண்டுக் காலம் சீரும்சிறப்புமாய்க் கொண்டாடப்பெற்று வந்தது. 1931 முதல் 1934 வரை இவ்வுற்சவம் நடந்ததற்கான சான்றுகள் கிட்டவில்லை. 1935 ஆம் ஆண்டு இவ்விழா நவநீதசேவையுடன் தொடங்கப்பெற்றது. அன்றுமுதல் பன்னிருகருடசேவைப் பெருவிழாவினை தஞ்சை இராமானுஜதர்சன் சபையினரின் பெருமுயற்சியால் சிறப்பாய் நடத்தி வரப்பெறுகிறது. (ஆதாரம் : தஞ்சை திருக்கோயில்கள், 1939) இப்பெருவிழாவில் 22 கருடவாகனங்களில் திருமால் காட்சி தந்து, தஞ்சை நகர் வலம்வந்து அடியார்களை மகிழ்விக்கின்றனர். ஆண்டுதோறும் இவ்விழா 1. மங்களாசாஸனம், 2. கருடசேவை, 3. வெண்ணைத்தாழி, 4. விடையாற்றி என்கிறபடி நான்கு நாட்களாகக் கொண்டாப்பெறுகிறது. ஆகையால் இந்த கருட மகோற்சவம் சுமார் (25+78=)103 ஆண்டுக்காலப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தஞ்சை பன்னிரு கருடசேவையின் விரிவான விளக்கம் பராசரக்ஷேத்திர மாகாத்மியத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பன்னிரு கருடசேவை (கும்பகோணம்)

ஆண்டுதோறும் சித்திரைமாதம் அக்ஷயதிருதீயை நன்னாளில் திருக்குடந்தையில் பெரிய கடைவீதியில் 12 கருடசேவை விழா நடைபெறுகிறது.

அக்ஷயத்ருதீயையும் கும்பகோணம் 12 கருடசேவையும்

அக்ஷயம் என்றால் அழிவற்றதான பயன்தரக்கூடியது என்பது பொருள். அ என்றால் வாசுதேவனையும் க்ஷயம் என்பதால் அதில் வசிப்பதையும் குறிப்பிட்டு அக்ஷயன் என்ற சொல்லால் ஸ்ரீமந்நாராயணன் குறிப்பிடப் படுகிறான். அக்ஷயாபிமானி தேவதை அனந்தன் என்பதும் ஈண்டு நினைக்கத்தக்கது.

அக்ஷயமும் நாளும்

அழிவில்லாப்பயனை அளிக்கக் கூடியவை தினத்தையும், திதியையும் இட்டுக் கூறப்படுகின்றன. திங்கட்கிழமையுடன் கூடிய அமாவாசை, ஞாயிறுடன் கூடிய சதுர்த்தி, வியாழனுடன் கூடிய அஷ்டமி ஆகியவை அக்ஷயம் அளிக்கும் நாட்களாகக் கருதப்படுகின்றன.

அக்ஷயத்ருதீயை

யுகங்களுக்கு ஆதி ஆதலால் இது யுகாத்யம் எனப்படுகிறது. இது எல்லா பாபங்களையும் ஒழித்து அனைத்துச் சுகங்களையும் தரவல்லது. வைசாக சுக்ல த்ருதீயை தினமே அக்ஷயத்ருதீயை ஆகும். அது ஸத்யயுகம் என மற்றொரு பெயர் கொண்ட க்ருதயுகத்தின் ஆதியுமாகும்.

ஓர் ஆண்டினையே நான்கு யுகங்களாகப் பார்க்கும் மரபு நம்மிடையே உண்டு. அது சாந்திரமான முறைப்படி குறிக்கப்படுகிறது. சாந்திரமானம் என்பது மாதப் பிறப்புக்கு முன்வரும் அமாவாசையிலிருந்து

தொடங்குவது ஆகும். சௌரமானம் என்பது மாதப்பிறப்பிலிருந்து தொடங்குகிறது. சைத்ரம், வைசாகம் போன்ற சாந்திரமானக் குறிப்புக்கு நேர் சித்திரை, வைகாசி போன்றவை ஆகும். வைசாக சுக்ல பக்ஷத்ருதீயையில் கிரேதையும், கார்த்திக சுக்ல பக்ஷ நவமியில் திரேதையும், ஆச்வயுஜ திரயோதசியில் துவாபரமும், மாக பௌர்ணமியில் கலியுகமும் தொடங்கப்படுகிறது. யுகாரம்பத்தில் உள்ள திதி யுகாத்யம் என்றும் அழைக்கப்படுகிறது. மேஷ ராசியில் சூரியன் நிற்கும் வைசாக மாதத்தில் பிறந்தவன் அந்தணர் மற்றும் தேவர்களிடத்தில் பக்தனாயிருப்பான். மேலும் அவன் நல்லவர்களை தாங்குபவனாயும் அறச்செயல் புரிபவனாயும் உலக மக்களால் விரும்பக்கூடியவனாயும் நற்குணங்களால் விளங்குபவனாயும் இருப்பான்.

<u>அக்ஷயத்ருதீயை விரதம்</u>

மாதவ மாஸத்தில் வைசாக சுக்ல த்ருதீயையில் தீர்த்தஸ்நானம், திலத்தால் பித்ருதர்ப்பணம் தானம், மதுசூதனபூஜனம், ஆகியவை மதுசூதனனுக்கு மகிழ்ச்சியைத் தருமென்று பவிஷ்யோத்தர புராணத்தில் கூறப்பட்டுள்ளன. அக்ஷயத்ருதீயை புண்ய நதியில் நீராட்டம் புரிய நதிபெயர் அல்லது தீர்த்தத்தின் பெயர் தெரியாதுபோயின் 'விஷ்ணு தீர்த்தம்' என்று கூறவேண்டும். வைசாகஸ்நானம் புரியும்போது மதுசூதனனின் மகிழ்ச்சியாலும் பிராம்மணரின் அருளாலும் எச்செயலிலும் தமக்கு எவ்வித இடையூறில்லாம் புண்ணியமாகட்டும் என சங்கற்பித்துக் கொள்ளவேண்டும்.

<u>அக்ஷயத்ருதீயை விரதக் கதை</u>

கிருஷ்ணன் கூறுகிறார் - அர்ஜுனா! முன்பு மகோதய புண்ய காலத்தில் வறுமையுடன் கூடிய ஒரு

வணிகன் (வைச்யன்) இருந்தான். அவன் அன்பாளன். உண்மைவிளம்பி. தேவர்களையும், பிராம்மணர்களையும் மதிப்பவன். குடும்பத்தில் கஷ்டமான நிலையிருந்த போதிலும் புண்ணியக்கதை கேட்பதில் ஈடுபாடு அற்றவனாய்த் திகழ்ந்தான். கதையிலும் திருதீயையும் ரோஹிணியும் கூடிய நாள் பெரும்பயனைத் தரவல்லது. அன்று செய்யும் சிறியதானம் அக்ஷய (அழிவற்ற) பயனைத் தரும் என்று விளக்கப்பட்டது. அதைக் கேட்ட வணிகன் உடனே கங்கையில் பித்ருதர்ப்பணாதிகளைச் செய்து, வீட்டில் மனைவியால் தடுத்தபோதிலும் அறத்தினின்று சிறிதும் வழுவாது ஜலகும்பம், அன்னகும்பம், யவம், கோதுமை, உப்பு, ஸத்துமா, தத்யோதனம், கரும்பு, பால், பொன் ஆகியன சக்திக்கேற்ப சுத்தமாக தூய்மையான மனதோடு பிராம்மணர்களுக்கு தானமாக அளித்தான். நெடுநாள் கழிந்த பிறகு வாசுதேவனையே நினைத்தவனாய் அந்த வணிகன் இயற்கை எய்தினான். பிறகு குசாவதி நகரில் வைச்யனுக்கும் மேலான க்ஷத்திரிய வர்ணத்தில் பிறப்பெடுக்கிறான். அழியாச்செல்வம் பெற்று அறம் பல செய்து வறியவர்களுக்கும் செல்வத்தை வாரி வழங்கினான். அதனால் அக்ஷயமானசெல்வம் பெருகியது. அந்த செல்வப்பெருக்கு அக்ஷய த்ருதீயை விரதத்தினை அந்த வணிகன் தனது வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள நிலையிலும் பக்தியுடன் மேற்கொண்டதால் ஏற்பட்டது என விரத சூடாமணியில் காணப்பெறும் அக்ஷயத்ருதீயை விரதக் கதை கூறுகின்றது. வைசாக மாதத்ருதீயையில் லக்ஷ்மீ ஸமேதனான ஜகத்குரு நாராயணனை புஷ்பம், தூபம், தீபம், சந்தனம் ஆகியவற்றால் பூசிக்கவேண்டும். யாரொருவர் இந்த அக்ஷய த்ருதீயையில் ஜலகும்பம், விசிறி போன்றவற்றை தானம் செய்வரோ அவர் பொன்மாலையை அணிந்துள்ள விஷ்ணுவின் லோகத்தை அடைவர். அப்படியே வைசாக

சுக்ல த்ருதீயையில் கங்கையில் நீராட்டம் நம்மை அனைத்து தோஷங்களிலிருந்து விடுவிக்கும். மேலும் வைசாக திருதீயையில் ரோகிணீ நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் சிவபெருமானை பூசித்து மும்மூர்த்திகளின் உருவாகிற ஜலகும்பத்தை ஒருவர் குறிப்பிட்ட மந்திரத்தைக்கூறி தானமளித்தால் அவர் சிவலோகத்தில் விளங்குவார் என்றும் விரத சூடாமணி கூறும் அக்ஷய திருதீயா விரதக் கதையில் குறிக்கப்பட்டுள்ளது. அக்ஷய திருதீயை பற்றி அரிய சப்த கல்பத்ருமம் என்ற கோசமும் துணைநின்றது.

<u>அக்ஷயத்ருதீயை கருடசேவை</u>

வைசாக சுக்கில த்ருதீயை எனப்படும் அக்ஷய த்ருதீயை க்ருதயுகத்தின் ஆதியாதலாலும், அக்ஷய த்ருதீயா விரதக் கதையில் வைச்யன் க்ஷத்திரியனாகப் பிறவியெடுத்து பெரும்பேறுபெற்ற நிகழ்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டும், "கிரேத திரேத துவாபர கலியுகம் இவை நான்கும் முன் ஆனாய்" என்ற திருமங்கையாழ்வாரின் மங்களாசாஸனப்படி யுகயுகாந்தரங்களைக் கடந்து வந்தருள் செய்யும் அந்த மதுசூதனனுக்கு, கருட வாகன சேவையை ஏற்படுத்தி மகிழ்விக்கின்றனர். ஆதலால் இன்றும் கும்பகோணம் காசிக்கடை தர்மவர்த்தகர்கள் சங்கத்தினர் அருமையாக பன்னிரு கருட சேவைதனை கும்பகோணம் பெரியகடைத்தெருவில் அக்ஷய த்ருதீயை நாளில் அரவப்பகையூர்தி அமலனாதி பிரான்களை சரியாக காலை 10 மணியளவில் ஒரு கொட்டகையில் எழுந்தருளச் செய்கின்றனர். பல்லாண்டுகளாக நடைபெற்று வரும் இவ்விழாவில் ஸ்ரீசார்ங்கபாணி, ஸ்ரீசக்ரபாணி, ஸ்ரீராமசாமி, ஸ்ரீ ஆதிவராகன், ஸ்ரீ ராஜகோபாலன், பாட்ராச்சாரியார் தெரு ஸ்ரீகிருஷ்ணன், வெங்கடராயர் அக்கிரஹாரம் ஸ்ரீ பட்டாபிராமன், சோலையப்ப

முதலியார் அக்கிரஹாரம் ஸ்ரீராமன், மல்லுசெட்டித்தெரு ஸ்ரீ சந்தானகோபால கிருஷ்ணன், புளியஞ்சேரி ஸ்ரீவேணுகோபாலன், கொட்டையூர் ஸ்ரீநவநீத கிருஷ்ணன், மேலக்காவிரி ஸ்ரீராஜகோபாலன், அகோபிலமடம் ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மன் ஆகிய மூர்த்திகளை ஒரே இடத்தில் தரிசிக்கலாம். பிரம்மன், வரதன் போன்றோரும் ஒரு தனிக்கொட்கையில் ஆங்கே காட்சி நல்குவது சிறப்பான தொன்றாகும். கருடவாகனங்களுக்கு எதிரில் ஆஞ்சனேய மூர்த்தியை எழுந்தருளச்செய்வதும் வழக்கமாக உள்ளது.

அக்ஷயத்ருதீயை உதயகருடசேவை தஞ்சாவூர் மகரநோன்புச்சாவடியிலும், மாலையில் கருடசேவை தஞ்சையாளி வீரநரசிங்கப்பெருமாள் கோயிலிலும், இன்னும்பிற விஷ்ணுவாலயங்களிலும் அக்ஷய த்ருதீயை நாளன்று கருடசேவையில் திருமால் காட்சி கொடுக்கிறார்.

1-5 களிமேட்டில் காட்சிதந்த கருமுகிலன்

களிமேடு என்பது தஞ்சாவூரின் மேற்குப் பகுதியைக் குறிக்கின்றது. விண்ணாற்றங்கரை ஸ்ரீநீலமேகப்பெருமாள் வம்புலாஞ்சோலைத் தடத்தில் தடம் பருகு கருமுகிலாய்க் காட்சி தந்தது போல தஞ்சை மேலவெளித் தோட்டத்தில் இன்றும் காணப்படும் சிங்கப் பெருமாள் குளத்தின் (சூர்ய புஷ்கரிணியின்) மேல்கரையில் ஸ்ரீவீரசிங்கப்பெருமாள் விளங்கியது போல, ஸ்ரீமணிக்குன்றப் பெருமாள் முன் காலத்தில் களிமேடு கிராமத்தின் கீழ்ப்புறமாக கோயில்கொண்டு அருள்பாலித்தார். அவ்வெம்பெருமான் குறித்த சில செய்திகளை **களிமேட்டில் காட்சி தந்த கருமுகிலன்** என்ற தலைப்பில் சிறிது சிந்திப்போம்.

களிமேடும் விண்ணாற்றங்கரைக் கோயில்களும்

களிமேடு என்னும் பகுதிக்கு கழுமேடு என்ற பெயருமுண்டு. தஞ்சை நாயக்கமன்னர் அரசு செய்யும் நாளில் கும்பகோணம் கடலங்குடியில் அரண்மனைப் பணிதாங்கிய ஒருவர் விஷ்ணுபக்தர் எனும் பெத்ததாஸர். அரசர் ஒரு சமயம் இவரிடம், ‘வைகுண்டம் எங்கு உள்ளது?’ எனக்கேட்க, ‘கூப்பிடு தூரத்தில் உள்ளது’ என்று பெத்ததாஸர் எடுத்துரைத்தார். அதைக்கேட்ட அரசர் தன்னை வாழ்த்திப் பாடப்பணித்தார். அதற்கு ஒப்புக் கொள்ளாததால் பெத்ததாஸரைக் கழுவேற்ற உத்திரவிட்டார். அத்தருணம் கழுமரம் தீப்பற்றி எரிந்தது. ஆகையால் பெத்ததாஸர் விடுவிக்கப்பட்டார். பிறகு அவர் பூக்கடை இராமஸ்வாமி கோயிலில் இராம பட்டாபிஷேகத்தினை ஓவியமாக வரைந்து பூஜித்து வந்தார். பெத்தாஸர் பூஜித்துவந்த அந்த ஓவியத்தினை அய்யங்கடைத்தெரு பூக்கடை இராமஸ்வாமி கோயிலில் இன்றும் நாம் காணலாம். பின்பொருகால் திருவரங்கம் கீழசிங்கப் (காட்டழகிய சிங்கப்) பெருமாளுடன் பெத்ததாஸர் ஐக்யமானார் என்று கூறுவர். கழுவேற்றும் மேடே இந்நாளில் களிமேடு என அழைக்கப்பட்டு வருகிறது.

களிமேட்டிலிருந்த கோடியம்மன் ஆலயம் தற்போது கரந்தை விண்ணாற்றங்கரைப் பெருவழியில் கோயிலாய் அமைந்தமை அறியப்பெறுகின்றது. ஆண்டிற்கு ஒருமுறை கோடியம்மன் களிமேட்டிற்கு விஜயம் செய்வதும் குறிப்பிடத்தக்க ஒன்று. குபேரன் வருகை, வசிஷ்ட்டேச்வர விஜயாபுரி வைபவங்கள், அமுதகலசப் போர், ஆனந்தவல்லீ உடனுரை தஞ்சபுரீச்வரர் தோற்றம், போரில் அசுரர்களை அழிக்க ஆனந்தவல்லீ தனது சக்தியை ஏகவீரா, ஜயந்தீ, மர்தினீ, சண்டகாதினீ ஆகிய தேவியர்களாகத் தோன்றச் செய்கை, அவர்களும் முறையே தண்டகன், வீரன், வஞ்சகன், தஞ்சகன்

போன்றோரை போரில் அழித்தல் கோடியம்மன் பெருமை போன்றவற்றை தஞ்சை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ள அளகாபுரி மாகாத்மியத்தில் விரிவாகக் கண்டு கொள்ளலாம்.

களிமேட்டில் காட்சி தந்த கருமுகிலன்

தஞ்சை மாநகரத்தல புராணம் குறிப்பிடும் மணிமகுடம் கொண்ட பெருமாள் மராத்திய மன்னர் காலத்தில்தான் களிமேட்டிலிருந்து விண்ணாற்றங் கரைக்கு இடம் பெயர்க்கப்பட்டார் என்பது 'கோட்டையின் வெளியில் விண்ணாற்றங்கரையில் புதிதான கோயில்களைக் கட்டுகிறார்கள். அந்த வேலைக்காக தென்னை மரங்கள் எட்டினை நீலமேக ஸ்வாமியின் கோயிலுக்காகத் திருவையாறு கல்யாண மகாலிலிருந்து (திருவையாறு அரசர்கல்லூரியே முன்னாளில் கல்யாணமகாலாகத் திகழ்ந்தது. அதிலிருந்து) கொடுக்கிறது. எட்டுமரங்களை மணிகண்டப்பெருமாள் ஸ்வாமியின் கோயிலுக்குக் கொடுக்கிறது' என்கிற மோடி ஆவண குறிப்பின் அடிப்படையில் உறுதிபெறுகின்றது. தஞ்சைத் திருத்தலத்து எம்பெருமான்கள் ஒருக்கால் தஞ்சையின் மேற்குப் பகுதியில் எழுந்தருளியிருந்தமை காரணமாக விஜயதசமி தினம் 'கோட்டைக்கு வெளியிலுள்ள கோயில்கள் மேலசிங்கப்பெருமாள், நீலமேக ஸ்வாமி, 'மணிகுன்றப்பெருமாள்' ஸன்னா ஸவாரியுடன் புறப்பட்டு பராசரர் குளத்தின் கரைக்கு வந்து அம்பு போடுதலைச் செய்து திரும்பிப் போகுவதற்கு உத்திரவிடவேண்டும்' என்று தஞ்சை மராட்டியர் மோடி ஆவணம் குறிப்பிடுகின்றது.

சந்தியா மண்டபமும் சேதுபாவா ஸ்வாமிகளும்

தஞ்சை மராட்டியர் கால மோடி ஆவணத்தில் விண்ணாற்றங்கரை 'சந்தியா மண்டபம்' என்றே அழைக்கப்படுகிறது. விண்ணாற்றினை சந்தியா மண்டப

நதி என அழைப்பதற்கு மணிகுன்றப் பெருமாள் கோயில் சந்தியா மண்டபம் நதியின் கரை சீர்படுத்த தஞ்சாவூர் சக்ரங்கள் 50 என அளித்த மோடி ஆவணம் சான்றாகிறது. தஞ்சை மராத்திய இராணிமார்கள் துலாகாவேரி ஸ்நானத்தினை இந்நதியில் மேற்கொண்டனர் என்பது போன்ற பல்வேறு செய்திகளை பராசர க்ஷேத்திர மாகாத்மியம் எனும் நூல் பரக்கப்பேசுகின்றது. இன்று அந்நதியின் கரை சின்னாபின்னமாகி பழமையைப் பறைசாற்றுவதாய் புதரினுள்ளே புகுந்து கிடக்கின்றது. பங்குனி உத்திரத்தில் நிறைவடையும் வண்ணம் பத்துநாள் பிரஹ்மோத்ஸவம் கண்ட மணிக்குன்றனுக்கு தீர்த்தவாரி இப் படித்துறையில் நடைபெற்றுவந்தது. ஆங்கே கல்வெட்டும் இருந்ததாய் கண்டோரின் கூற்றுமுளது.

மராட்டிய மன்னர்களின் குலகுருவாக விளங்கியவர் சேதுபாவா ஸ்வாமிகள், அவரது காலத்தில் தஞ்சை மூலை ஆஞ்ஜநேயர்கோயில் ப்ரதிஷ்டை செய்யப் பெற்றது. அப்போது தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் பிரதாபசிம்மர் சிறந்த ராமபக்தர். சேதுபாவா ஸ்வாமிகளின் சந்தியா மண்டபம் கோட்டைக்கு வெளியிலுள்ள விண்ணாற்றங்கரை ஆனந்தவல்லியம்மன் கோவில் தேரோடும் வீதிக்கு வடக்காகவும், விண்ணாற்றுக்கு தென்புறம் சர்க்கார் படித்துறை, தோட்டம், தோப்புகள், மண்டபம்வீடு ஆகியவற்றிற்கு மேற்காகவும் அமைந்திருந்தது. அது பின்னாட்களில் மாட்டுக்கொட்டிலாகியது.

பட்டுக்கோட்டையிலுள்ள சேதுபாவாசத்திரம் இவரது நினைவுக்குச் சான்றாவதனையும், சேதுபாவா ஸ்வாமிகளின் சமாதி குடந்தைக்கருகிலுள்ள குற்றாலத்தில் காணப்படுவதாகவும் குடந்தை மகாமகச் சிறப்புமலர்கள் பேசுகின்றன. விண்ணாற்றங்கரை சேதுபாவா ஸ்வாமிகளின் சந்தியா மண்டபத்திற்கு

விண்ணாற்றங்கரை ஆனந்தவல்லியம்மன் கோவில் மற்றும் தஞ்சை ராஜகோபால ஸ்வாமி கோயில்களின் முன்மண்டபங்கள் அமைக்கப்பயன்பட்டன எனும் செய்தியை 'தஞ்சை திருக்கோயில்கள்' நூல் தெரிவிக் கின்றது. இதனால் சேதுபாவா ஸ்வாமிகள் தஞ்சை விண்ணாற்றங்கரையில் தங்கியிருந்தார் என்பது உறுதியாகின்றது.

மணிக்குன்றப்பெருமாள்கோவில் கல்வெட்டுகள்

விண்ணாற்றங்கரை - ஸ்ரீமணிக்குன்றப் பெருமாள் ஆலயத்தில் கருவறை வடபுற (வெளி) அதிஷ்ட்டானத்தில் உள்ள நான்கு வரிகளுள்ள (மூவராய கண்டன் தக்ஷிண பச்சிம உ....... தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சை மஹாமணி ..... கள் பக்கல் நாங்கள் ... விட்டு ...) என்ற ஒரு சிதைந்த கல்வெட்டும், பரமபதவாசல் வெளிமேடையின் அதிஷ்டானம் - வடமேற்கு மூலையில் மேற்றிசை பார்த்தவாறு நான்கு வரிகளுள்ள (.....மஹா ஜனங்கள் பக்கல் தங்கள் பட்டயத்தில் .... க்கு உட்பட்ட ஓடைக்கண்டம் இத்தருண நி ......) மற்றும் ஒரு சிதைந்த கல்வெட்டும் உள்ளதை 'தஞ்சாவூர்' என்னும் நூல் குறிப்பிடுகின்றது. மூன்றாவதாக முகமண்டபப் படிக்கட்டு இடதுபுறம் கைப்பிடிச்சுவரின் அடிப்பகுதியில் 'ஸ்ரீ தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானங்களின் ஆதீனஸ்தரான மாதுஸ்ரீ காமாக்ஷியம்பாபாய் ஸாகேப் அவர்களுடைய ஆக்ஞையின் பேரில் ஏஜண்டு ஸ்ரீநாகராஜ ராமாஜி பண்டிதர் அவர்களால் இந்த ஸ்ரீமணிக்குன்றப் பெருமாள் கோவிலில் நூதனமாகக்கட்டை கோபுரம் கதவு உள்படவும் மதிள் செவர் ப்ராகாறம் தளவரிசை பலிபீடம் கருடன் கோயில் இதுகளை ஸ்தாபித்து 1892ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் தேதி புதன்கிழமை தனுர் லக்னத்தில் மேற்படி ஆழ்வார்களுக்கு ப்ரதிஷ்டையும் செய்யப்பட்டு மிருப்பதுடன் ஸ்ரீகல்யாண வேங்கடேசப்பெருமாள் கோவில் வடபிறம் மதிள் ப்ராகாறம் தளவரிசையும்

புதிதாய் செய்யப்பட்டுமிருக்கிறது' என்றுள்ள கல்வெட்டினை தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடான பராசர க்ஷேத்திர மாகாத்மியம் என்னும் நூலின் ப. எண். 97ல் காணலாம்.

வம்புலாஞ்சோலை தஞ்சை மாமணிக்கோயில் என்ற ஆழ்வார் பாடலுக்கேற்ப விண்ணாற்றங்கரை ஸ்ரீமணிக்குன்றப் பெருமாள் ஆலயத்தில் அமைந்துள்ள 'தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சை மஹாமணி' என்னும் கல்வெட்டின் அடிப்படையிலும், கோனேரிமை கொண்டான் கல்வெட்டில் (1455 A.D.) காணப்படும் அக்ரஹாரக் குறிப்புகளுள் தஞ்சைமாமணி ஒன்றாகக் திகழ்வதாலும், ஸ்ரீவைகானஸர்களில் சிலர் தஞ்சை மாமணி அக்ரஹாரவாசிகள் ஆகையாலும், ஆழ்வார் களால் போற்றி போற்றிப் பாடப்பெற்ற நீலமேகப் பெருமாள், மணிமகுடம் கொண்ட பெருமாள், சிங்கப்பெருமாள் ஆகியோர் முறையே வம்புலாஞ் சோலை, களிமேடு, மேலவெளித்தோட்டம் ஆகிய தஞ்சையின் மேற்குப் பகுதியிலேயே கோயில்கொண்டு அருள்பாலித்ததனாலும் தஞ்சையின் மேற்கில் தஞ்சை மாமணிக்கோயில்கள் முன்னர் அமைந்த பகுதியின் முழுமைக்கும் **தஞ்சை மாமணி அக்ரஹாரம்** எனப்பெயர் அமைந்திருக்க வாய்ப்புண்டு.

கோயிற் குறிப்பு

ஸ்ரீமணிகுன்றப் பெருமாளுக்கு இரத்தின சைல ஸ்வாமி என்பது வடமொழிப் பெயர். இந்த எம்பெருமானின் திருக்கோயில் விண்ணாற்றங்கரையில் நடுக்கோயிலாக, பெயருக்கேற்றவண்ணம் குறுமணிக் குன்றாய் காட்சி தருகிறது. அரசகோபுரம், அமர்ந்தநிலை கருடன் சந்நிதி ஆகியன அமைந்த அந்த கோயிலில் அம்புஜவவல்லித் தாயாருக்குத் தனிக்கோயிலும் காணக்

கிடைக்கிறது. தனிக்கோயில் உத்தர அஹோபில மடாதிபதி வீரராகவாச்சார்ய ஸ்வாமியால் நிறுவப் பெற்றது. கருவறையில் மூலவர் உபயநாச்சியாருடன் அமர்ந்த கோலத்திலும், உத்ஸவர் நின்ற நிலையிலும் காட்சி கொடுக்கின்றனர். இக்கோயிலின் முக மண்டபத்தில் 'பரமபதவாசல்' வடதிசையில் உள்ளது. வைகுண்ட ஏகாதசி நன்னாளில் எம்பெருமான் அவ்வாசல் வழியாக எழுந்தருளுவார். "மலையே திருஉடம்பு" என்ற நம்மாழ்வாரின் கூற்றினைப் போலே திருமங்கையாழ்வார் "பொன்செய் மால்வரை மணிக்குன்று" என இந்த பெருமாளைப் போற்றியுள்ளார். பங்குனி உத்திரத்தில் தீர்த்தவாரி கண்டருளும் வண்ணம் பத்துநாள் பிரஹ்மோத்ஸவம் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகிறது.

களிமேட்டில் காட்சிதந்த கருமுகிலன் அங்கிருந்து இடம்பெயர்ந்து இன்றைக்கு தஞ்சையின் வடபகுதி விண்ணாற்றங்கரையில் வீற்றிருந்து ஸ்ரீமணிக்குன்றப் பெருமாளாக அருள்பாலிக்கிறார்.

1-6 குருகையோகியும், குருகாவலப்பர் கோயிலும்

திருச்சிராப்பள்ளிமாவட்டம்-உடையார்பாளையம் வட்டத்தின் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வடமேற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது குருகை காவலப்பர் திருக்கோயில். குருகை காவலப்பர் திருக்கோயில் ஆளவந்தார் தனது எட்டாம் வயதில் கட்டினார். சோழமன்னர்களின் அரசாட்சிக்கு முன்பே ஆளவந்தார் இதனைக் குருகைகாவலப்பர் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டார்.

குருகை காவலப்பர் என்னும் ஸ்ரீநாதமுனி சீடரின் கண்காணிப்பில் விளங்கியதால் இத்தலத்திற்கு

குருகாவலோகனபுரம், குருகாவலோகன க்ஷேத்திரம் कुरुहा(का?) वलोकनक्षेत्रम् என்பது பெயர்.

कुरुकावलोकनपुर-वेदनारायण-ध्यानम् (குருகாவலோகனபுர - வேதநாராயண-தியானம்) वेदवेद्यं देवदेवं वीरनारायणम् हरिम्। वेदनारायणं वन्दे श्रिया युक्तं रमासखम् ।(வேதவேத்யம் தேவதேவம் வீரநாராயணம் ஹரிம் வேதநாராயணம் வந்தே ச்ரியா யுக்தம் ரமாஸகம்) கிழக்கு பார்த்த திருக்கோயில், பெருமாள் திருநாமங்கள்: வேத நாராயணன், வீரநாராயணன் என்பன. தாயார் திருநாமங்கள் : வேத நாராயணன், வீரநாராயணன் என்பன. தாயார் திருநாமங்கள்: வேதவல்லி, மரகதவல்லி ஆகியன. விமானம் - யோகவர்த்தன விமானம். இரு தீர்த்தங்கள். பார்கவ புஷ்கரிணீ, சுவேத கமல புஷ்கரிணீ. சௌனகர், நாரதர், பார்கவர், சாண்டில்யர், நாதமுனி ஆகியோர்களுக்குப் பிரத்யக்ஷம். பெருமாளும் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் அருள்பாலித்து வருகிறார். இக்கோயில் தனி நிர்வாகத்திலுள்ளது.

வீரநாராயணபுரம் என்பது சிதம்பரத்திற்கு 14 கல் தொலைவிலுள்ள காட்டுமன்னார்குடியாகும். வீரநாராயணன் என்பது முதற்பராந்தகசோழன் (கி.பி. 907-953) விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். அவன் பெயரால் அமைந்ததே வீரநாராயணபுரம் என்பது. அவ்வூரை அடுத்து வீரநாராயண ஏரி ஒன்று அமைக்கப்பட்டது. அதுவே இக்காலத்தில் வீராண ஏரி என்றும், வீராணத்தம் ஏரி என்றும் சொல்லப்படுகிறது.

வீர நாராயணபுரம் - வீரநாராயணராஜகோபால தியானம்

வீரநாராயணம் வந்தே ராஜகோபாலவிக்ரஹம் ।
மதங்கபூஜிதம் தேவம் ஸ்ரீபூம்யாதிபிரந்விதம் ॥)

ஸ்ரீவீரநாராயண ராஜகோபால பகவான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம், தாயார் வேதவதீ, கல்பத்ரும விமானம், வேதபுஷ்கரிணீ, மதங்க ரிஷிக்கும், நாதமுனிக்கும் ப்ரத்யக்ஷம். நாதமுனிகள் மங்களாசாஸனம். நாதமுனிகள், ஆளவந்தார்களின் அவதார ஸ்தலம்

நாதமுனிகளின் திருவாராதனப்பெருமாள் ஸ்ரீராமன். இவரது சீடர்கள் உய்யக்கொண்டார், குருகைகாவலப்பர் நம்பி கருணாகரதாஸர், ஏறு திருவுடையார், வானமாமலை தெய்வநாயக ஆண்டான், உறுப்பட்டூர் ஆச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான், பிள்ளை கருணாகரதாஸர், மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான் ஆகியோர். குருகைகாவலப்பனுக்கு நாதமுனிகள் யோகக்ரமத்தை அருளிச் செய்து, அனந்தரம் நாம் சொன்ன தர்சனதாத்பர்ய, யோக ரஹஸ்யார்த்த விசேஷங்களை யமுனைத் துறைவருக்கு உபதேசியுங்கோள் என்றும் பணித்தாராம். குருகைக்காவலப்பர்-குருகாயாம் பௌஷே மாஸே விசாகாயாம் தத்ரஜனி என்கிறபடி திருக்குருகூரில் பௌஷமாஸத்தில் விசாகா நக்ஷத்திரத்தில் திருவவதாரம் செய்தவர். புஷ்யயுக்தா பௌர்ணமாஸி பௌஷீ மாஸே து யத்ர ஸா என்ற அமரகோச வாக்கியத்தின்படி புஷ்யமாஸமே பௌஷமாஸம் ஆகும். பூசநக்ஷத்திரத்துடன் பௌர்ணமி கூடிய தை மாஸம் புஷ்யமாஸமாகும். ஸ்ரீ நாதமுனிகள் யோகம் மேற்கொண்ட இடம் குருகாவலப்பர் கோயிலாகும். குருகை காவலப்பர் தமது ஆசார்யரான ஸ்ரீநாதமுனிகள் இந்த க்ஷேத்திரத்தில் திருநாட்டுக்கு எழுந்தருள அவரைத் திருப்பள்ளிபடுத்தும் கைங்கர்யத்தில் நிரதராய் இங்கு வாசம்புரிந்தார். ஸ்ரீமந்நாதமுனிகள் யோகநிலையிலிருந்த இடத்தருகே குருகாவலப்பர் எழுந்தருளியிருந்தார். ஆகையாலும் ஆளவந்தாரால் கட்டப்பெற்ற இத்திருக்கோயில் குருகைகாவலப்பர் வசம் ஒப்படைக்கப் பெற்றதாலும்

குருகை காவலப்பர் கோயில் என்று சிறப்படைந்து தற்போது குருகாவலப்பர் கோயில், குருவாரப்பன் கோயில் என அழைக்கப் படுகின்றது.

குருகை காவலப்பரும் யோகத்தில் எழுந்தருளி யிருந்தபோது ஆளவந்தார் குருகாவலப்பர் கோவிலுக்கு வந்தார். யோகத்திற்கு இடையூறு செய்யக் கூடாதென மௌனமாய் அவருக்குத் தெரியாமல் நின்றார். குருகை காவலப்பரும் பின் திரும்பிப் பார்த்து, 'இங்கே சொட்டைக் குலத்திலே ஆரேனும் வந்தாருண்டோ ?' என்று கேட்டார். அதற்கு 'அடியேன் யமுனைத்துறைவன், யான் மறைந்து நின்றபோதும் தேவரீர் கண்டது எவ்வாறு' என்றும் வினவினார். அதற்கு அப்பனும், 'அடியேன் யோகத்திலாழ்ந்திருந்த போது என்தோள்கள் மீது கையையூன்றிக்கொண்டு எட்டி எட்டிப் பார்த்தார் எம்பெருமான். இப்படிச் சிலமுறை நடந்ததை யோகத்தினிடைக் கண்ணுற்ற நான் சொட்டைக் குலத்திலிருந்து ஆரேனும் வந்திருக்க வேணும் என்று கேட்டேன்' என்றார்.

யோக: சித்தவ்ருத்தி நிரோத: என்கிறபடி யோகமென்பது மனத்தை அது போன போனபடியே போகவிடாமல் தடுத்து நிறுத்தி ஒரு குறிப்பிட்ட பொருளில் ஒன்றுபடுத்துவது என்பதாகும். நிகழ்காலத்தில் இருந்து நம்மை வருங்காலத்தில் சேர்த்துவைப்பது என்றும் பொருள் கூறலாம். இந்த யோகப்பயன் எத்தகையது ? எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? என்பதை திருமங்கை ஆழ்வார் தனது திருக்குறுந் தாண்டகத்தில்-

இளைப்பினை இயக்கம் நீக்கி இருந்து முன் இமையைக் கூட்டி
அளப்பில் ஐம்புலன் அடக்கி அன்பு அவர்கண்ணே வைத்து,
துளக்கமில் சிந்தை செய்து தோன்றலும் சுடர்விட்டு - ஆங்கே
விளக்கினில் விதியில் காண்பார் மெய்ம்மையைக் காண்கிற்பாரே.

என்றவாறே மிக எளிமையாக விளக்குகின்றார். இப்படிப்பட்ட யோக விசேஷத்தைத் தனது ஆசார்யரான ஸ்ரீமந்நாதமுனிகளிடம் குருகைக்காவலப்பரும் குறைவற கற்றுத்தேர்ந்தார். இவ்வாறு யோகத்தின் வழி மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக உணர்ந்து என்ற தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலைப் பாசுரப்படி எம்பெருமானை நேரிலே கண்டுபோற்றிய வர்களின் திருக்கோயில்தான் குருகாவலப்பர் திருக்கோயில்.

இவ்வாறு குருகாவலப்பரின் யோகப்பெருமையை நமக்குணர்த்திய ஆளவந்தார் தமக்கும் அந்த யோக ரகசியத்தை உபதேசிக்க அவரிடம் ப்ரார்த்தித்தார். குருகைக் காவலப்பனும் வருகிற புஷ்யமாஸம், புஷ்யயோகம், அபிஜத் முஹூர்த்தம் (தை மாதம், பூசநக்ஷத்திரம் பகல் 12 மணி முதல் 1 மணி வரை) கூடின நேரத்தில் நாம் பரமபதம் செல்வோம். அதற்கு முன்னதாகத் தாங்கள் வரவேண்டும் என்று சொல்லி ஒரு ஸ்ரீமுகம் எழுதிக்கொடுத்தார். அப்படியே ஆளவந்தாரும் அதைப் பெற்றுக்கொண்டு திருக்கச்சி சென்றிருந்து, சிலநாளில் அங்கிருந்து திருவரங்கத்தில் அரங்கனைச் ஸேவிக்கச் ஸேவிக்கச் சென்றுவிட்டார். அங்கு அத்தியயன உத்ஸவம் - இராப்பத்து பத்தாம் திருநாளில் "இன்று போய்ப் புகுதிராகில் எழுமையும் ஏதம் சாரா" என்று அரையர் ஸேவையில் திருவாய்மொழி - அநந்தபுரநகர் பாசுரம் கேட்டு, திருவனந்தபுரம் மேவி ஆங்கே அப்பன் திருமுகத்தை எடுத்துப் பார்த்தபோது அன்று குருகை காவலப்பன் பரமபதம் செல்லும் நாளாக இருந்தது. இவ்வாறு அப்பன் ஆளவந்தாருக்கு யோகரகசியம் உபதேசிக்காமலே பரமபதம் சென்றுவிட்டார். நாதமுனிகளின் யோக தத்துவமும் அவருடன் மறைந்து போயிற்று.

குருகைக்காவலப்பன் திருவாய்மொழிகளாக மொழிகளாக இரண்டு செய்யுட்கள் கிட்டியுள்ளன.

அவை -

சீராரும் மாடத் திருக்கோவலூ ரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு - ஓராத்
திருக்கண்டேன் எனஉரைத்தசீரான்கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே உகந்து.

இது குருகைக் காவலப்பன் அருளிய மூன்றாம் திருவந்தாதித் தனியன் ஆகும். மூன்றாம் திருவந்தாதி என்பது நாலாயிரதிவ்யபிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமான இயற்பாவில் மூன்றாவது பிரபந்தமாகும்.

ஆஜாந ஸித்தபரதுஷ்கரஸாங்கயோக
ஸாக்ஷாத் க்ருதாகில பராவரதத்ஸ்வரூபா: ।
வம்சே மஹத்யனுபவன் கில தாவகீனே
நாதஸ்ய வக்துமிஹ க: பிரபவேத் பிரசஸ்திம் ॥

என்று நாதமுனிகள் வம்சமஹத்வத்தை குருகைக் காவலப்பன் அருளிய யாமுனவைபவம் கூறுகிறது.

ஸ்வாமி தேசிகனின் புதல்வரான குமார வரதாசார்யார், பிரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியுடன் கங்கைகொண்ட சோழபுரம் எழுந்தருளி யுள்ள குறிப்பு மூவாயிரப்படி குருபரம்பரா பிரபாவத்தில் காணப் படுவதால் அவரும் இவ்பெருமானை மங்களாசாஸனம் புரிந்திருப்பார் போலும். மேலும் திருக்குடந்தை தேசிகனுக்கு வடதிசையிலிருக்கிற திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்யத் திருவுள்ள மிருந்ததால் ஸ்வாமியுடன்கூட 3 யதிகளும் அனேக கிருஹஸ்தாச்ரமசிஷ்யர்களும் அனுயாத்திரையாக எழுந்தருள ஆராவமுதன் நியமனம் பெற்று, "குருகைக் காவலப்பன் கோயிலில் வேதநாராயணனை" தண்டம் ஸமர்ப்பித்து, வீரநாராயணபுரத்தில் நாதமுனி ஆளவந்தார்களை அடிபணிந்து, ஸ்ரீமுஷ்ணத்தில் அம்புஜவல்லி தாயாரையும், வராஹநயினாரையும் திருவடிதொழுது, திருக்கோயிலூர் எழுந்தருளி

முதலாழ்வார்கள் புருஷகாரமாக ஆயனாரைச் சேவித்தாங்கே நிகமாந்த மஹாதேசிகனுடைய திருமாளிகை ஸ்தலத்தையும் சேவித்துச் சென்றார்" என முனித்ரய குருபரம்பரா பிரபாவம் (ப. எண். 15ல்) குறிப்பிடுகின்றது.

இங்குள்ள ஸ்ரீராமர் சந்நிதி மிகவும் சிறப்பானது. ராமர் ஸீதை, லக்ஷ்மணர், ஹனுமார் ஆகியோர் தாருசிற்பங்களாக அமைந்து அருள்பாலிப்பதோடு அனுமனின் விக்கிரஹம் அஞ்ஜலிபந்தத்திற்கு பதில் ஒருவரைக குறிப்பிட்டுக் காட்டும் பாவனையில் ஒரு கையைக் கீழாகவும் மற்றொன்றை அதற்கு மேலாகவும் சுட்டிக் காட்டும் பாவனையோடு அமைக்கப் பெற்றிருக்கிற விசேஷத்தையுடையதாய் உள்ளது. இவ்விடம் பார்கவ புஷ்கரிணியில் ஒரு தாமரைப் புஷ்பத்தில் வாஸம் செய்து கொண்டிருந்த மரகதவல்லித் தாயார் ஸ்ரீராமபிரான் முன்னிலையில் ஸ்ரீவீரநாராயணப் பெருமாளுக்கு விவாஹம் செய்துவைக்கப்பட்டனளாம். ஹநுமாரை மரகதவல்லி இருப்பதைப் பார்த்து வரச் சொன்ன ஸ்ரீராமரிடம் அவர் வந்து தாயாரின் அளவு முதலிய விவரங்களைத் தெரிவித்தமாதிரியாக ஹநுமாரின் குறிப்பு ஏற்பட்டுள்ளதாம்.

உடையார்பாளையம் ஜமீன்தாரர்கள் மன்னார்குடி, ஸ்ரீமுஷ்ணம், திருப்பனந்தாள், கங்கை கொண்ட சோழபுரம், குருகைகாவலப்பன் கோயில் போன்ற தலங்களில் தமது திருப்பணிகளை மேற்கொண்டனர். இந்த உடையார்பாளையம் ஸமஸ்தானம் நல்லப்ப, ரங்கப்ப உடையார்களின் ஆட்சியில் சிறப்புற்று விளங்கியது. காஞ்சீபுரத்தில் பாளையக்காரர்களாக இருந்தனராதலால் உடையார்பாளையம் ஜமீன்தாரர் களுக்கு கச்சி என்னும் அடைமொழி உண்டு. 'காலாட்கள் தோழ உடையார்' என்பது இவர்களது பட்டப்பெயர். விஜயநகரத்தில் அரசாட்சி செய்த வீரநரசிம்ஹராயர் காலத்தில் காஞ்சீபுரத்தில்

பாளையக்காரர் பள்ளிகொண்டரங்கப்ப உடையார். இவருக்குப் பின் இவரது மூத்த புதல்வர் பெரிய நல்லப்ப உடையாரும், பிறகு அவரது தம்பி சின்ன நல்லப்ப காலாட்கள் தோழ உடையாரும் பாளையக்காரர்கள் ஆயினர். சின்ன நல்லப்ப உடையார் ராஜதானி உடையார்பாளையம் ஆகும். இந்த ஸமஸ்தானத்தை நிறுவிய புகழுடையார் சின்ன நல்லப்ப உடையாரே ஆவர். இவருக்குப்பின் பல ஜமீன்தாரர்கள் இதனை ஆண்டு வந்தனர்.

சுமார் 363 கிராமங்கள் இவர்களது கட்டுப்பாட்டில் இருந்ததாம். ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகு 300 கிராமங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு மீதம் 63 க்ராமங்களை ஜமீன்தார்வசம் ஒப்படைத்தனர். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 3.1.1951ல் ஜமீன் ஒழிப்பு முறை கொண்டுவந்தபோது இந்த 63 கிராமங்களும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன கடந்த பல நூற்றாண்டுகளாக ஆண்டுவந்த ஜமீன் ஸாம்ராஜ்யம் 1953-ல் 25வது தலைமுறையாக கச்சியுவரங்கப்ப காலாட்கள் தோழஉடையார் என்பவரின் மறைவுக்குப் பின்னர் முடிவுக்கு வந்தது.

கலாபகாலத்தில் காஞ்சி ஏகாம்பரேச்வரர், வரதராஜர், காமாக்ஷி ஆகியோர் இத்தலத்தில் பாதுகாப்பாகக் கொணர்ந்து, ரங்கப்ப உடையார் ஆண்டு வருகையில் கி.பி. 1710 ஆம் ஆண்டு மீண்டும் காஞ்சீபுரம் கொண்டு போகப்பட்டனர். காமாக்ஷி அம்பிகையின் ஸ்வர்ணவிக்ரஹம் மட்டும் அவ்வூரிலேயே இருந்ததாகத் தெரியவருகிறது. பிற்காலத்தில் அந்த ஸ்வர்ண விக்ரஹமே பங்காரு காமாக்ஷி எனத் தஞ்சை மேலவீதியில் நிறுவப்பட்டுள்ளது என்பது வரலாறு.

இத்திருக்கோயிலில் மாசிமக உத்ஸவத்தினை சென்னை குப்புசாமி அய்யங்கார் குமாரர்களும், விஜயதசமிநாள் குதிரை வாஹனத்தில் எம்பெருமான் அம்புபோடும் உத்ஸவத்தினை சாவடியார் வகையறா செல்லம் ஸஹோதரர்களும் வெகு விமர்சையாக நடத்தி வருகின்றனர். பிரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவன் இக்கோயிலின் புராதனச் சிறப்பைக் கருத்தில்கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடன் அடிக்கடி இத்தலம் எழுந்தருளி எம்பெருமானை மங்களாசாஸனம் செய்துவருகிறார்.

அங்கு ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமமுறையில் திருவாராதனம் நடைபெறுவதோடு வடகலை ஸம்ப்ரதாயானுஷ்டானமும் கடைபிடிக்கப்படுகின்றது. இக்கட்டுரை சிறப்புற அமைய பி.வி. ஜகதீச ஐயரின் தென்னிந்திய க்ஷேத்ரங்கள், மு. அருணாசலம் இயற்றிய தமிழ் இலக்கிய வரலாறு, திருச்சிராப்பள்ளி கெஸட், விஷ்ணு ஸ்தலமஞ்ஜரீ, அஷ்டோத்தர சதாதி திவ்யதேச விவரணம், மதுரகவி ராமாநுஜதாஸரின் அர்ச்சாவதார ஸ்தல வைபவ தர்ப்பணம், நல்லுரைக்கோவை, தினமணி 2010 புத்தாண்டுச் சிறப்பிதழ் போன்ற நூல்கள் துணை நின்றன.

1-7 குற்றுயிராய்க் கிடக்கும் புத்தூர் விண்ணகரம்

புத்தூர் அல்லது திருபுவனம் எனும் புதையுண்ட விண்ணகரம் பாபநாசம் தாலுகாவின் தென்பகுதியில் தஞ்சையிலிருந்து நாகைக்குச் செல்லும் புகை வண்டிப் பாதையிலுள்ள சாலியமங்கலம் என்னும் ஊருக்குத் தெற்கே ஒரு கல் தொலைவில் இருக்கிறது. இன்று சிற்றூராகக் காட்சிதரும் இவ்வூர் 12ஆம் நூற்றாண்டளவில் ஒரு சிறந்த நகரமாகத் திகழ்ந்துள்ளது. இவ்வூரின் வடக்கே வீரசோழ வடவாறும், தெற்கே பரவை ஏரியும்

காணக்கிடைக்கின்றன. நாட்டுப் பாடல்களில் இவ்வூர் என்பது நெடுவீதிகளைக் கொண்டதாக அறியப் படுவதோடு கல்வெட்டில் திரிபுவன வீரபுரம் என்றும் குறிக்கப் பெறுகின்றது.

விக்ரமசோழ விண்ணகரம், திரிபுவனமகாதேவிச் சதுர்வேதிமங்கலம், புத்தூர் என்றவாறெல்லாம் அழைக்கப் பெறும் இவ்வூரில் திருமால் சிற்பங்கள் மட்டுமே கர்பக்ருஹம் சிதைக்கப்பட்ட நிலையில் ஓர் ஓட்டு வீட்டில் ஒடுங்கிக் கிடக்கின்றன. சேதமடைந்த கர்ப க்ருஹத்தை மட்டுங்கொண்டு குற்றுயிரும் கொலை உயிருமாய்க்கொண்ட புத்தூர் விண்ணகரத்தைப் புதுப்பிக்க முயற்சிப்போம். புத்தூர் என்றும் அழைக்கப் பெறுகின்ற இவ்வூரில் உடையார் கோவில் சாஸனப்படி உதய திவாகர ஆசாரி என்பவருக்கு அந்நாளில் நிலம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வூர் பெருநகரமாக இருந்தபோது வீரசோழ வடவாற்றின் கரையில் சிவன் கோயிலும், ஊர் நடுவே திருமால்கோயிலும், தெற்கே ஐயனார், பிடாரி கோயில்களும் இருந்திருக்கின்றன. இவைகள் இன்று முழுவடிவில் காணக்கிடைக்கவில்லை. சிவன்கோயில் சிதைவுண்டு பின்னர் ஆற்றின் அழிவால் புதைந்து கிடக்கின்றது. திருமால் கோட்டம் இருந்த இடம் என்பதற்கறிகுறியாகத் திருச்சுற்று மதிற்சுவரில் சில பகுதிகளும், கருவறையில் அடித்தளமும் எஞ்சி நின்று காட்சி தருகின்றன. இக்கோயிலே மேற்குறித்த தலைப்பிற்கு இலக்காகச் சிதைந்த விக்கிரமசோழ விண்ணகரமாகும். இச்சிதைந்த பகுதி பிற்காலத்தில் ஆற்றின் அழிவுக்கும் உள்ளாகியுள்ளதென்பதைச் சூழ்நிலையால் அறியவியலுகின்றது. இவ்விண்ணகரத்

தினுள் விளங்கிய திருமாலும், திருமகளும் புதைந்து சீர்கெட்டுக் கிடந்ததைக் கண்ட ஊரார், சில ஆண்டுகட்கு முன்னர் முயன்று அத்திருமேனிகளை எடுத்து கோயில் திருமுற்றத்திலேயே கீற்றுக்கொட்டகையிட்டு அமைத்துள்ளனர். கீற்றுக் கொட்டகை தற்போது மங்களூர் ஓடாக மாற்றம் பெற்றிருக்கின்றது.

மங்களூர் ஓடுபோட்ட கொட்டகையுள் தற்போது ஒன்பதடி அளவில் நெடிதாக அரிதுயில் கொண்டுள்ள பெருமாள் திருமேனியும், நான்கடி அளவில் அமர்ந்த பாங்கிலுள்ள திருமகள் திருமேனியும், சிற்பத்தால் சிறந்து உயிர்ப்புடன் விளங்குகின்றன. இச்சிதைந்த கோயிலினுட் கிடந்தகோலத்தில் காட்சி தரும் எம்பெருமானுக்கு மிக அருகில் வரதராஜர், நரசிங்கமூர்த்தி, இராமபிரான், பிராட்டியார் ஆகிய தெய்வத்திருமேனிகளுடன், நம்மாழ்வார், இராமானுசர், இரண்டு சேனை முதல்வர்கள் ஆகிய படிமங்களும் ஒரு சேர எடுக்கப்பட்டு மூலவருடனேயே வைக்கப்பட்டுள்ளனர். திரிபுவன வீரபுரமாகிய இத்தலத்தில் காணப்பெறும் ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மர் சிறப்புடைச் சிற்பமாக லக்ஷ்மீ தன் மணாளனான நரசிம்மனை அன்றி மற்றொன்றை நோக்காமுகமாக என்றும் எம்பெருமானையே கண்ணால் பருகும் வண்ணம் அமைக்கப்பெற்றுள்ளார். இவர் விழுப்புரம் மாவட்டத்தில் தென் அகோபிலம் என்று போற்றப்படும் பூவரசன்குப்பம் அமிர்தவல்லி உடனுறை ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மருக்கு இணையாக காட்சிதருகின்றார். எம்பெருமானை மட்டுமே நோக்குமாறு அமைக்கப் பெற்றமை பூவரசன்குப்பம் ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மரைக் காட்டிலும் இங்கே சிறப்பானது. இவ்வளவு மூர்த்தி களும், ஆழ்வார்களும் எழுந்தருளி சிறப்பாக விளங்கிய இவ்விண்ணகரம் காவலுரிமை பூண்டவர்களால்

தங்களுக்குரிய உரிமைகள் உள்ளவாறு கிடைக்கப் பெறாததால் 'வேலியே பயிரை அழித்ததைப் போல்' ஆத்திரத்தால் அறிவிழந்து ஊரும் பாழ்படுத்தப்பட்டு கோயில்களும் தரைமட்டமாக்கப்பட்டன. இவ்வாறு புயலுக்குப்பின் அமைதியைப் போல் இன்று முடிவடைந்த போர்க்களக் காட்சியைப் போல் இந்த விண்ணகரம் தோற்றமளிக்கின்றது.

மேலும் தஞ்சை நாட்டுபுற நாடகங்களில் பிரஹ்லாத சரித்திரம் (இரணியநாடகம்) நடந்ததாக அறியவரும் சில ஊர்களில் திருபுவன வீரபுரம் ஒன்றாகவும், வடக்குநத்தம், ஆர்சுத்திப்பட்டு ஆகிய ஊர்களில் நடிக்கப்பட்டதாகவும் தஞ்சை மாவட்ட நாட்டுப்புற நாடகங்கள் (பிரஹ்லாதன் சரித்திரம்) எனும் நூல் (ப. எண். 64 &69) சரசுவதி மகால் நூலகம், தமிழ்ப்புத்தக எண்-13238) தெரிவிக்கிறது. இக்கட்டுரை எழுத கரந்தைப் புலவர் சி. கோவிந்தராசனாரின் 'விக்கிரசோழ விண்ணகரம்' (தமிழ்ப் பொழில் - 1959/35/2) எனும் கட்டுரை பெரிதும் துணைபுரிந்தது.

1-8 கோயிலான் குடிகொண்ட கோயில்வெண்ணி

அளகாபுரியில் தஞ்சைக்கோயில் எனத் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்யதேசமானது சிங்கப்பெருமாள் கோயில் (நிறுத்தம்) எனும் விண்ணாற்றங்கரையில் அமைந்துள்ளது. ஆங்கே ஸ்ரீவைகானஸாகமத்தின் வழி பூஜ்ஜைமுறைகள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீவைணவத்தினைச் சார்ந்த மற்றொரு ஆகமம் ஸ்ரீபாஞ்சராத்திரம் ஆகும். பகவான்

ஸ்ரீமன் நாராயணனால் பஞ்ச(ஐந்து) இரவுகளில் ஐவர்க்கு உபதேசிக்கப்பட்டு பாஞ்சராத்திரமானது.

பகவான் ஸ்ரீமன் நாராயணனால் பஞ்ச (ஐந்து) இரவுகளில் ஐவர்க்கு உபதேசிக்கப்பட்ட அந்த ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமமுறைப்படி திருவாராதனம் கண்டருள்வதும் தஞ்சை திவ்யதேசம் தற்போது அமையப் பெற்ற இடமான விண்ணாற்றங்கரைக்கு சற்றுத் தொலைவில் காணக்கிடைப்பதுமே கோயில்வெண்ணித் திருத்தலமாகும்.

கோயில் என்றால் திருவரங்கம். அந்த திருவரங்கக் கோயிலானையொத்த அரங்கநாதனே **கோயில் வெண்ணியிலும்** கோயில் கொண்டுள்ளான். கோயில்வெண்ணிக்கு **வெண்ணியூர், வெண்ணிப் பரந்தலை, வெண்ணிவாசல், வெண்ணிக் கூற்றம்** போன்ற பெயர்களுண்டு. இவ்வூர் தஞ்சைக்குக் கிழக்கே 25 கி.மீ. தொலைவில் நாகை சாலையில் காணக்கிடைக்கின்றது. சோழ நாட்டை ஆண்ட ஆதி அரசருள் தலை சிறந்தவன் திருமாவளவன். ஒரு சமயம் சேரனும் பாண்டியனும் இணைந்து கரிகாலனை அழிக்க முயன்றனர். ஆகவே கரிகாலனுக்கும் சேரபாண்டியர்களுக்கும் போர் நடைபெற, போரிட்ட இடம் கோயில்வெண்ணி ஆகும். போரில் பாண்டியன் விழுந்தான். கரிகாலன் விட்ட அம்பு சேரமன்னன் முதுகில் தைத்து மானமழிந்த சேரன் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்தான். பாண்டிய சேரர்களை வெண்ணியில் வென்று தமிழ்நாட்டை ஆட்சி செய்த குறிப்பினை வெண்ணிக்குயத்தியார் என்னும் புலவர் தமது புறநானூற்றுப்பாடல் 66 மேலும் 72ல் புகுத்திப் பாடியுள்ளார். கோயில்வெண்ணியில் போர்புரிந்த சோழ மன்னன் தன் வாளுக்கு நீராட்டு செய்ததால் **நீராட்டு மங்கலம்** பின்னாளில் **நீடாமங்கலம்** ஆயிற்று. இவ்வாறு கோயில்வெண்ணியில் நடந்தபோரை

நினைவில் நிறுத்தும் வகையில் லாயம், முன்னாவல் கோட்டை, பெரியக்கோட்டை போன்ற இடங்கள் இவ்வூருக்கு அரணாக அமைந்துள்ளன. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்றோரால் பாடல்பெற்ற சிவத்தலம் இவ்வூரில் உள்ளது. சிவபெருமானின் திருநாமம் **வெண்ணிக்கரும்பேச்வரர்** ஆகும். கோயிலான் ஆன ரங்கநாதன் கோயில், கோயில் வெண்ணியில் **வடகலை ரங்கநாதர்** என்ற பெயரில் இருபுறமும் வீடுகள் கொண்ட இரட்டை அக்ரஹாரத்தின் ஆதியில் காட்சி தருகின்றது. கோயிலின் பின்புறம் அழகியதாய் பரந்து விரிந்து காணப்படும் அற்புதமான புஷ்கரிணி ஒன்றுள்ளது. கோயில் கிழக்குத்திசை நோக்கி அமைந்துள்ளது.கோயிலின் அர்த்த மண்டபத்தில் தென்திசை நோக்கியவாறு ஸ்வாமி தேஶிகன் ஸந்நிதி உள்ளது. ஹஸ்தம், ரேவதி நக்ஷத்திரங்களில் மாதந்தோறும் விசேஷத் திருவாராதன பூஜை நடைபெறுகின்றது. அக்ஷய த்ருதீயை நவராத்ரி, ஸ்வாமி தேஶிகனின் அவதார விழா போன்ற மஹோத்ஸவங்கள் இங்கே வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

கோயில் கொண்டான் தன் திருக்கடித்தானத்தை
கோயில் கொண்டான் அதனோடுமென்னெஞ்சகம்
கோயில் கொள் தெய்வமெல்லாம் தொழ-வைகுந்தம்
கோயில் கொண்ட குடக் கூத்தவம்மானே.

என்ற திருவாய்மொழியின் கூற்றுக்கு இணங்க கோயிலான் என அழைக்கப்பெறும் திருவரங்கன் கோயில் தோறும் எழுந்தருளியிருக்கக் கோயில் வெண்ணியில் அரங்கநாதனாகவே அருள்பாலிக்கிறான்.

பாவோசி கங்காதரபுரம்

கோயில்வெண்ணிக்கு 'பாவோசி கங்காதரபுரம்' என்பது மற்றொரு பெயர். சகஜி மன்னரின் கார்யகர்த்தர் ராயஸ்ரீ கங்காதர பண்டிதர் அய்யன் அவர்கள். அவரது

புதல்வர் ராயஸ்ரீ பாவோசி பண்டிதர். கங்காதர பண்டிதரின் மகன் பாவோசி பண்டிதர் மராட்டிய மன்னர்களின் படைத்தளபதி ஆவார். இச்செய்தியைப் பட்டுக்கோட்டை கல்வெட்டு தெரிவிக்கிறது. இது பட்டுக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் உள்ளது. மதுரை நாயக்க மன்னர் மூன்றாம் முத்துவீரப்பனை *(1682-1689.* A.D.*)* எதிர்த்துப்போரிட தஞ்சை மராட்டிய மன்னர் ஏகோஜியுடன் *(1676-1684.* A.D.*)* இராமநாதபுரம் மன்னர் இரண்டாம் இரகுநாதத்தேவர் என்னும் கிழவன் சேதுபதி *(1674-1710.* A.D.*)* கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். சகஜியும் *(1684-1711.* A.D.*)* அதனை மதித்தார். மதுரை நாயக்க மன்னர் சேதுபதிமீது படையெடுக்க, தஞ்சைப்படை சென்று வெற்றி கண்டது. அந்த வெற்றியின் சிறப்பை வெளிக்காட்டுகிறது பட்டுக்கோட்டை தாலுகா அலுவலகத்திலுள்ளகல்வெட்டு.

ஆதலால் பாவோசி பண்டிதர், கங்காதரபண்டிதர் ஆகிய இருவரின் பெயரையும் நினைவில் நிறுத்தும் வகையில் 'கோயில்வெண்ணி' என்னும் ஊர் பாவோசி கங்காதரபுரம் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என ஐயப்பாடு மேலெழுகிறது. அவ்விதம் பெயர் அமைய வில்லை என்பதை உறுதி செய்யும் வகையில் மேலும் சில சான்றுகள் கிட்டியுள்ளன. பாவோசி கங்காதரபண்டிதர் போன்ற வித்வன்மகாஜனங்களுக்கு வாழ்விடமாய் அமைந்தது கோயில்வெண்ணி. ஆதலால் பாவோசி கங்காதர பண்டிதர் வாழ்ந்த அக்ரஹாரம் 'பாவோசி கங்காதரபுரம்' ஆகியிருக்கலாம். தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் சம்ஸ்க்ருதத் துறையில் பதிவாகியுள்ள ஒரு சுவடி *(*T.M.S.S.M. Library, Sanskrit Catalouge Vol. VI, P.No. 2437, B. 4863/ D. 2784*)* ரகுவம்சம் ஆகும். இச்சுவடியின் இறுதியில் 'இது பாவோசி கங்காதர பண்டிதருடையது' என குறிக்கப் பெற்றுள்ளது. இதனால் பாவோசி கங்காதர பண்டிதர் என்ற பெயரிலேயே ஒரு தனிநபர் அங்கு வாழ்ந்தமை

அறிய வருகின்றது. மேலும் அவ்வூர் பல வித்வத் ஜனங்களுக்கு இருப்பிடமாய் அமைந்தமை "கோயில்வெண்ணிக்குப் பிரதிநாமமான பாவோசி கங்காதரபுத்தில் இருக்கும் அசேஷ வித்வன் மகாஜனங்கள் அனைவரும் கரம்பை தானசாஸனம் பண்ணிக் கொடுத்தபடி இதனால் எங்களுதான கரம்பை சாலைகரைக்கு தெற்கு, ஈச்சங்குளத்திற்கு வடக்கு, கிராயித்தாக்கு வரகுகொல்லை கீழ்வரப்புக்கு கிழக்கு, பாகக்குளம் கெங்கமோட்டுக்கு வரகு கொல்லைக்கு மேற்கு" என நான்கெல்லைகள் குறிக்கப்பட்ட கரம்பை தான சாஸனக்குறிப்பு தரும் தீபாம்பாபுர வல்மீகநாதர் செப்பேட்டால் (T. 8398, P.No. 223) அறியமுடிகின்றது.

மேலும் இவ்வூர் குறித்து ஆராயப்படவேண்டிய செய்திகள் வெண்ணி ஊர் நத்தம், வெண்ணித் திருவரங்கவிளாகம், வெண்ணியில் கணபதி வாய்க்கால் (S.I.I. Vol. VII, No. 1031, P.No. 489 & UG. 2936 / P.No. 51) வெண்ணித் தாமோதர விண்ணகர் போன்றவை திருபுவனமகாதேவி சதுர்வேதிமங்கலச் செப்பேட்டில் காணக்கிடைக்கின்றன.

1-9 தஞ்சாநகரத்தில் கம்பயநத்தம் ஸ்ரீநிவாசர்

அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை உறைமார்பா
நிகரில் புகழாய் உலகமூன்றுடையாய் என்னையாள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகரொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

(திருவாய்மொழி)

தஞ்சை சோழநாட்டில் எண்ணற்ற பல திருமால் திருவிண்ணகரங்கள் உள்ளன. அவற்றுள் பல ஆழ்வார்களால் பாடல் பெற்றவை . தஞ்சாநகரமான கீழ்த்திசையில் ஒரு சிறுபகுதி 'கம்பர்நத்தம்' என்று அழைக்கப்பட்டு வருகிறது.

கம்பர்நத்தம் எனும் கம்பயநத்தம்

தஞ்சை ஸ்ரீ நீலமேகர் எழுந்தருளி கும்பாபிஷேகம் கண்டு அபிமானத்தலமாய் விளங்குவது கிழக்கே மகர்நோன்புச்சாவடி ஸ்ரீபிரசன்னவேங்கடேசர் திருக்கோயில் அதற்கும் கிழக்கே, சோழேந்திர விஜயத்தில் குறிப்பிட்ட அருண்மொழிப்பேட்டை மராட்டிய மன்னர் காலங்களில் 'மாரியம்பாள்புரம்' என்றும் அழைக்கப்பட்ட (பின்னலூர்) புன்னைநல்லூர் மாரியம்மன்கோயிலுக்கு அருகாமையில் அமைந்ததே கம்பயநத்தம் ஸ்ரீகிராமம் ஆகும். இவ்வூர் தஞ்சை மாவட்டம் - சாலியமங்கலம் வழியில் கிழக்கே 20 கிலோமீட்டர் மற்றும் வடுவூர் ஸ்ரீகோதண்டராமஸ்வாமி கோயிலுக்கு 8 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்திருக்கின்றது. இதன் அருகிலுள்ள ஊர்களாக புலவநத்தம், கத்தரிநத்தம், ரா.ரா. முத்திரைக்கோட்டை, சூழியக்கோட்டை போன்றவை அறியப்பெறுகின்றன.

ஆங்கிலத்தில் 1906 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற வட்டமாவட்டங்களிலுள்ள கிராமங்களின் அகராதி நூலில் 'கம்பயநத்தம்' தஞ்சாவூர் வட்டத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இப்பகுதியே ஒரு காலத்தில் பாபநாசம் வட்டக் குறிப்பில் மாற்றப்பெற்றுள்ளது. நியமி (சக்கரவர்த்தி) முசுகுந்தன் மரபில் வந்தவன். புகார் பட்டினத்தை இராசதானியாகக் கொண்டவன். நியமம் எனும் தேவாரம் பெற்ற சிவத்தலத்தையும், நியமித்தான் பட்டி என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் எழுந்த அமுதத்தை (தானவர்கள் அருந்தாமல்) வானவர்களருந்த உதவி செய்தவன். அந்த நியமி மரபில் வந்தவன் தான் கரம்பையன். கரம்பைக்கோட்டை (கரமுண்டான் கோட்டை) எனும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். கரவீரபுரம், கரபுரம் என்றும் (தேவாரம்

பெற்ற) இத்தலங்களையும் கரம்பை, கரம்பையம், கரம்பைக்குடி, காஞ்சிப்பட்டி என்னும் ஊர்களையும் உண்டாக்கினவன். இவன் மரபோர்க்கு கரம்பையன் கரம்பை கொண்டான் (கரமுண்டான்) போன்ற பட்டப்பெயர்கள் வழங்கி வந்தன என்பதை சூரியகுலக்கள்ளர் சரித்திரம் எனும் நூல் தெரிவிக்கின்றது. கரம்பயன் பெயரில் அமைந்த நத்தம் கரம்பயன் நத்தம் ஆகி, கரம்பயநத்தம் ஆக மறுவி, இறுதியில் கம்பயநத்தம் என அழைக்கப்பட்டிருக்கலாம். ஒருகால் கம்பர் இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்ததாகவும், அப்போது இவ்வூரின் நிலவளத்தைப்பற்றிச் சிறப்பித்து "கட்டுக் கலம் காணும், கதிர் ஒன்று உழக்கு காணும்" என்று பாடிச்சென்ற செவிவழிச்செய்தியும் ஆங்கே நிலவி வருவதால் இத்தலம் கம்பர்நத்தம் என அழைக்கப்பட்டு வருகிறது.

அந்த செவிவழிச்செய்தி தோன்ற திருநாளைப் போவார் எனும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் காணும்-

கதிரொரு முழமே நீளும் கட்டு முக்கலமே காணும்
துதிபெறு நந்தா உன்கை தொட்டதே தங்கமாகும்
பதிதனில் பெருமை சொல்லும் பறையனாயிருந்தும் தில்லைச்
சிதம்பரப் பித்தேன் கொண்டாய் செய்தொழில் ஏதென்றாரே.

என்கிற பாடல் காரணமாய் இருக்கலாம்.

ஸ்ரீநிவாசர் கோயில்

கம்பர்நத்தம். ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயில் கிழக்கு நோக்கியவாறு அமைக்கப்பெற்றுள்ளது. எம்பெருமான் திருமகள் மண்மகளுடனாய திருவேங்கட முடையானாகச் சேவைசாதிக்கிறார். சங்கு சக்ரங்கள் வடகலைத் திருமண்காப்போடு கூடிய அழகிய தோரணவாயிலைக் கடந்து உள்ளே சென்றோமானால்

நமக்கு இடப் பக்கத்தில் ஆசார்யர், அனுமார் சந்நிதிகள் கிடைக்கின்றன. ஆசார்யர் சந்நிதியில் ஸ்ரீராமானுஜரும், ஸ்ரீநிகமாந்தமகாதேசிகனும் எழுந்தருளியுள்ளனர். அனுமன் சந்நிதியில் அழகிய சிற்பவேலைப்பாடு களமைந்த அனுமன் சிலாவிக்கிரஹங்கள் நம் மனதைப்பற்றி ஈர்க்கின்றன. இக்கோயிலுக்கு மிக அருகாமையில் செட்டிசத்திரம் வாய்க்காலும், பெருமாள் கோயிலுக்கு கிழக்கே சிவன்கோயிலும், அருந்தவபுரமும், மேற்கே கத்திரிநத்தமும், திருபுவனமகாதேவி சதுர்வேதி மங்கலமும், தெற்கே ஆர்சுத்திப்பட்டு எனும் கிராமமும் அமைந்து விளங்குகின்றன.

1-10 தஞ்சையில் இராமநவமி விழாவும், இராமபிரான் திருக்கோயில்களும்

தஞ்சை ஆண்ட மராட்டிய மன்னர்களுள் பிரதாபசிம்மர் மிகவும் இராமபக்தி உடையவர். மராட்டிய மன்னர்களின் ஓலையிலோ காகிதத்திலோ அமைந்த முத்திரை **ஸ்ரீவீரகரவாஸினீ**(P.No. 21/Sel. No. 9/ModiSeal/ modi documents in the T.M.S.S.M. Library, T0anjore. Vol. I) அல்லது **ஸ்ரீபிரதாப வீரகரவாஸினீ** (P.No. 34/Sel. No. 14/ModiSeal/ modi documents in the T.M.S.S.M. Library, Tanjore. Vol. I) (ஸ்ரீ பிரதாபவீர என்பதால் பவானியையும், கரவாஸினீ என்பதால் மகாலக்ஷ்மியையும் இணைத்துச் செய்த அரசாங்க முத்திரை) 'ஸ்ரீராமபிரதாப' (இது கையெழுத்து & முத்திரை) எனும் தொடர்கள் பொறிக்கப் பட்டிருக்கும். சதாரா மாவட்டம் - மகாபலேசுவரம் அருகே உள்ள கோட்டை சூழ்ந்த ஓர் ஊருக்கு 'பிரதாபகடா' என்பது பெயர். 'பிரதாப' என்னும் சொல் இவ்வூரைக் குறிப்பதாகும். சிவாஜியின் குலகுரு சமர்த்தராமதாஸர் தஞ்சைக்கு வந்து ஆட்சி நிலைபெற

ஆசீர்வதித்ததால் மராட்டியர்கள் தங்கள் முத்திரையில் 'ஸ்ரீராமபிரதாப்' என்று கொண்டனர். தஞ்சைராஜகோபாலசுவாமி கோயிலில் கொடி கம்பத்தின் அருகில் தரையில் 'ஸ்ரீராமபிரதாப்' சா.1769 (+78-1847 A.D.) எனும் கல்வெட்டு (P.No. 24/Sarasvati Mahal Library, Tanjore. book No. 8398.) உள்ளது.

இராமநவமி விழா

ஸ்ரீராமநவமி உற்சவம் பல திருமடங்களில் நடத்த மராட்டிய அரசு உதவியளித்துள்ளது. அரண்மனையிலும் இவ்வுற்சவம் சிறப்புறக் கொண்டாடப்பெற்றுள்ளது என்பதற்கு மாதுஸ்ரீ அன்னபூர்ணா, பவானி, பார்வதிபாயி ஆகியோர்களுக்கு பூசைக்குத் தேவையான பொருட்கள் கி. பி. 1786ல் அரசிலிருந்து அளித்தமை சான்றாகின்றது. ஸ்ரீராமநவமி போன்ற பண்டிகை நாட்களில் கோதானமும் செய்ததாக மோடி ஆவணம் குறிப்பிடுகிறது. தஞ்சாவூர் கோட்டை அன்ன சத்திரத்தைச் சேர்ந்த பட்டாபிராம சுவாமி கோயில் ராமநவமித்திருவிழா நடந்ததற்கான சான்றுள்ளது. ஸ்ரீராமநவமி திருவிழாவில் சீதாகல்யாணம் முடிந்தபிறகு பட்டாபிஷேககோலத்துடன் இராமபிரான் ஊர்வலம் வரும் உற்சவத்தை (நாளை) 'லலிததினம்' என்றழைக்கப்படுகிறது. (த.ம.ம.மோ. தமிழாக்கமும் ஆவண குறிப்புரையும், பகுதி I, P.No. 91, T. 9531)

ஊர்வலத்தில் ஸ்ரீராமமூர்த்தி அரண்மனை மாடியிடம் வரும்போது ஒரு சக்கரம் தக்ஷிணை அளிக்கப்பட்டது. மன்னார்குடி மேருஸ்வாமியார் மடத்திற்கு ஸ்ரீராமநவமிக்காக 1842ல் ரூபாய் 306 அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேப்பெருமாள்நல்லூர் வரதராஜப்பெருமாள் சந்நிதி ஸ்ரீராமநவமி உற்சவத்தில் 9ம் திருநாள் கம்சவதநாடகம் சர்க்கார் மண்டபகப்படியாக நடந்துள்ளது. (தஞ்சை மராட்டியர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்)

இராமன் திருக்கோயில்கள்

தஞ்சையில் இராமபிரான் திருக்கோயில்களாக புன்னைநல்லூர், கொண்டிராஜபாளையம், வல்லம் பட்டாபிராமர், பஜார்ராமர், விஜயராமர், ஆஜாரம் ராமர் என அறுவகை இராமகோயில்கள் தென்படுகின்றன.

1) புன்னைநல்லூர் இராமர்

புன்னைநல்லூர் என்பது தஞ்சை திருவாரூர் சாலையில் 8 கி. மீ. தொலைவில் மாரியம்மன் கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் உள்ளது. இக்கோயிலிலுள்ள கோதண்டராமர் 'யமுனாம்பாபுரம்' அல்லது நீடாமங்கலத்திற்கு அடுத்த பூவனூரிலிருந்து கொணர்ந்து இங்கே அமைக்கப்பெற்றார். தஞ்சை மராட்டிய மன்னரின் பிரதாப சிம்மனின் மனைவி யமுனாம்பாள். நீடாமங்கலத்தில் யமுனாம்பாள் பள்ளிப்படைக் கோயிலும், யமுனாம்பாளை மாமரமாக வழிபடுவதும், சீனிவாஸம்பிள்ளை அன்னதானசத்திரமும் ஆங்கே குறிப்பிடத்தக்கன. பிரதாபசிம்மனின் (1739-1763 A.D.) திருப்பணியும் சிவாஜியின் மனைவி இத்தலத்தில் ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனுக்கு தனிச்சந்நிதி அமைத்து திருவாபரணங்கள் அளித்தமையும் குறிப்பிடத்தக்கவை. கோயிலின் உட்பிரகாரத்தில் 'திருமாலைப்பத்தி'யில் வாகன மண்டபமும், கோயில் ஊழியம் செய்யும் பிராமணர்கள் தங்குவதற்கு வசதியாக மேற்கு பார்த்த 5 மச்சு வீடுகள் அடங்கிய அக்கிரஹாரமும், வடவாற்றில் இராமன் தீர்த்தவாரி கண்டருள படித்துறையும் 1892ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

2) (கீழவாசல்) கொண்டிராஜபாளையம் ராமர்

தஞ்சைக்கோட்டை கீழவாசல் அருகே கொண்டிராஜபாளையம் என வழங்கும் பகுதியில் கீழ

நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு எதிரில் இக்கோயில் அமைந்துள்ளது. நின்ற திருக்கோலம். வடக்கு பார்த்த கோயில். இக்கோயிலில் தினம் உச்சி கால பூசைக்காகவும், ஆண்டுதோறும் இராமநவமி அன்று கருடசேவை நடைபெறவும், திருப்பந்துருத்தியில் ஒரு வேலி நிலம் விலைக்கு வாங்கி 1865ல் மங்கள விலாசம் கோவிந்தபாயி அம்மாள் இந்த கீழவாசல் கோதண்டராமருக்குத் தானம் அளித்துள்ளார்.

3) மேலவீதி விஜயராமர்

தஞ்சை மேலவீதியில் மேல் சரகில் கிழக்கு நோக்கி கோயில் கொண்டுள்ள ராமர் விஜயராமர் ஆவார். இந்த விஜயராமர் கோயிலை டபீர் ராமசாமி கோயில் எனவும் அழைப்பர். டபீர் பண்டிதர் நில அளவிற்காக வடநாட்டி லிருந்து இங்கே அழைத்துவரப்பட்டார். இவர் நாள்தோறும் தம் கொட்டிலிலுள்ள பசுக்களுக்கு உணவுப் பொருள் கொடுத்து பராமரித்துவந்தார். ஒரு நாள் அவ்வழக்கம் தவறிப்பசுக்கள் உணவின்றி இருந்த பாவம் அகல தஞ்சைக் கீழவாயிலுக்கு அடுத்தார்ப்போல் விஜயராமர் கோயிலையும், டபீர் குளத்தையும் கட்டினார். கும்பகோணத்திலும் டபீர் தெரு, டபீர்குளம் உள்ளன. தஞ்சை கீழவாயிலுக்கு அருகே அமைந்த விஜயராமர் கோயில் பிற்காலத்தில் மேலவீதிக்கு மாற்றப்பட்டது. இந்த ராமருக்கு பிரதாபவீரராமர் என்ற மற்றொரு பெயருண்டு. இக்கோயிலில் 'கணேச லீலார்ணவம்' நாடகம் நடிக்கப்பட்டது.

4) பஜார்ராமர்

தஞ்சாவூர் கோட்டையினுள் அமைந்த தொன்மையான கடைத்தெரு அய்யன் கடைத்தெரு ஆகும். அய்யன் என்பவர் நாயக்கர் காலத்து மந்திரி கோவிந்த தீக்ஷிதர் ஆவார். அத்தெருவின் ஒரு பகுதியை

மானோஜியப்பா தெரு என்றழைக்கப்பெறுகிறது. பட்டாபிராமர் அமர்ந்தநிலையில் தெற்குமுகமாக அருள்பாலிக்க, அவரெதிரே அமைகின்ற வண்ணம் வேட்டைமார்க சஞ்சீவி ஆஞ்சநேயரையும் அத்தெருவிலே காணலாம்.

5) வல்லம் பட்டாபிராமர்

அய்யன்கடைத்தெரு பஜார்பட்டாபிராமர்ஸந்நிதியில் மேற்கு பார்த்தவாறே இவர் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். லக்ஷ்மணர் போன்றோரும் நின்ற நிலையில் நிறுவப்பெற்றதைக் காண்கிறோம். ஒரு காலத்தில் வல்லத்திலிருந்து இங்கே எழுந்தருளியதாகக் கூறுவர். அதேபோல் அய்யன் குளக்கரையில் வல்லத்திலிருந்த லக்ஷத்தோப்பு ஆஞ்சநேயரை பிரதிஷ்டை செய்துள்ளனர். அய்யங்கடைத் தெருவில் உள்ள ராமர் கோயிலில் 'பெத்ததாசரி' என்பவர் வழிபட்ட ராமர் பட்டாபிஷேக வரைபடமும் காணக்கிடைக்கின்றது.

6) ஆஜாரம் ராமர்

ஆஜாரம் என்பது குறிப்பாக அரண்மனையின் வடக்கு வாசலையும், வடக்குவீதியையும் இணைக்கும் நடுப்பகுதிக்குப் பெயராக அமைந்துள்ளது. வடக்கு வாசலான அலிதர்வாஜா கோபுரத்தை ஒட்டியே ஒரு இடிபாடுள்ள கோயில் காணக்கிடைக்கிறது. இன்றைக்கு அது உபயோகமற்ற நிலையில் இருப்பினும் இராமர் கோயிலாக இருந்து அரசர்கள் அவ்வாயில் வழியே நுழையும் போது வழிபட ஏதுவாக அக்கோயில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் குறிப்பு தஞ்சை மராட்டியச் செப்பேடுகளில் 'ஸ்ரீஆசாரம் ராமசாமி கோவில்' (தஞ்சை சரசுவதி மகால் தமிழ்ப்புத்தக எண் 7929, பக்க எண் - 156ல்) என்ற குறிப்பு காணக்

கிடைக்கின்றது. இன்றளவும் வடக்குஇராஜ வீதியை இணைக்கும் பகுதி ஆஜாரம் என்றே அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்று. தஞ்சை வடக்குஇராஜவீதியில் 'இராமர் கோயில் சந்து' எனக் குறிப்பிட்ட ஒரு பகுதியும் உள்ளது. ஆஜாரம் ராமசாமி கோயிலுக்கும் இராமர் கோயில் சந்திற்கும் ஏதேனும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பதெல்லாம் இனி வருங்காலங்களில் ஆய்ந்தறியப் படவேண்டிய ஒன்றாகின்றது.

1-11 தஞ்சையில் திருப்பதி கோவிந்தராஜர்

தஞ்சை ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயிலுக்கு கிழக்கே தென்திசை பார்த்து விளங்குவதே ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள் கோயிலாகும். ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில் சில படிக்கட்டுகளுடன் உயர்ந்த பகுதியில் விளங்குகின்றதாய் திருமலை என்றே போற்றுமாறு அமைந்துள்ளது. திருமலையின் கீழே திருப்பதி காணப்படுவது காணப்படுவது போன்று விளங்கு கின்றதுதான் ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள் கோயில்-

வத்ஸ! பஞ்சநதாக்யம் யத் பிரக்யாதம் சாம்பவம் பதம் |
காவேர்யா: உத்தரதடே கௌதமாதி நிஷேவிதம் ||
தஸ்ய தக்ஷிணதிக்பாகே க்ரோசத்வயமிதே ஸ்தலே |
பராசரோऽபி தத்ரைவ யக்ஞதான தபோவ்ரதை: ||
ஆராதயாமாஸ சிரம் பிரஸன்னம் வேங்கடேச்வரம் |
பராசரக்ஷேத்ரமிதி க்யாதம் தச்ச ததோऽபவத் ||

என்கிறபடியே காவேரி நதிக்கு வடக்கில் கௌதமாதி முனிவர்களால் பூசிக்கப்பட்டு பிரசித்திபெற்ற சிவக்ஷேத்திர முள்ளது. அதன் தெற்கே இரண்டு குரோசத் தொலைவில் உள்ள தலத்தில் பராசரர் யக்ஞதானதபோ விரதங்களால்

நீண்ட காலம் மகாவிஷ்ணுவை பூசைசெய்து வேங்கடேசர் ஆங்கே பிரஸன்னமானார். பராசரரின் தவத்தினால் அத்தலம் பராசர க்ஷேத்திரமாயிற்று.

பிரஸன்ன வேங்கடேசஸ்ய விஷ்ணோராயதனம் மஹத் ।
பராசரக்ஷேத்திரமிதி ப்ரக்யாதம் புவனத்ரயே ॥
தத்க்ஷேத்ரம் தாத்ருசம் யஸ்மாத் நித்யம் ஸந்நிஹிதோ ஹரி: ।
வேங்கடேசாபிதோ விஷ்ணு: வ்ருஷாசல நிகேதன: ॥
பிரஸன்ன வேங்கடேசாக்யம் அவாப்ய து ததோ ஹரி: ।
அத்யாபி வரதஸ்தத்ர ஸந்நிதத்தே ஜகத்பதி: ॥
ததஸ்ததுத்தமம் க்ஷேத்ரம் ஸந்நிதானாத் ஹரேஸ்ஸதா ॥

(பராசரக்ஷேத்ர மாகாத்மியம். ப.எண். 2 & 3)

என்றவாறு இந்த க்ஷேத்ரம் மூவுலகிலும் பராசர க்ஷேத்திரம் என்ற பெருமையைப் பெற்றுத் திகழ்கிறது. பிரஸன்ன வேங்கடேசரின் ஸ்தானம் பெருங்கோயிலாய்க் காட்சி அளிக்கிறது. அது க்ஷேத்திரங்களுக்கெல்லாம் உத்தம க்ஷேத்திரமாகும். ஏனெனில்; திருமலை திருப்பதி க்ஷேத்திரத்திற்கு எவ்வளவு மகிமையும் புண்ணியமும் உண்டோ அவ்வளவு பெருமையும் சிறப்பும் இந்த க்ஷேத்திரத்திற்குமுண்டு. வேங்கடவன் என்ற பெயரில் அருள்தரும் வ்ருஷபாசல நிவாஸியான அந்த மலையப்ப ஸ்வாமியே இங்கு பிரசன்ன வேங்கடேசராக காட்சி தருவதே அதற்கு காரணமாகும். ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயிலில் திருப்பணி மேற்கொண்டவரின் திருவுருவத்தோடு கூடிய கல்வெட்டுக் குறிப்புகள் இரண்டு மட்டுமே (தெளிவாய்க்) கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று கருடனுக்கு அருகில் நின்றவாறே எம்பெருமானைத் தொழும் சதாசேவையில் பெருமாள் நாயக்கர் சிலையும், மற்றொன்று திருச்சுற்றுத் தென்பகுதியில் காணப்படும் ஆண்டாளம்மையாரின் தூண் சிற்பமுமாகும்.

தூண் சிற்பமும், கல்வெட்டும்

ஸ்ரீபிரசன்னவேங்கடேசப்பெருமாள் கோயில் நாலுகால் மண்டபம், தஞ்சாவூரில் திருச்சுற்றுத் தென்பகுதியில் ஆழ்வார்களின் சந்நிதிக்கருகாமையில் ஒரு தூண் உள்ளது. அத்தூணில் ஒரு பெண்மணியின் உருவம் தென்படுகிறது. அவ்வுருவத்தின் கீழே மூன்று வரிகளாகக் கல்வெட்டு (1) ஆண்டா (2) ளம்மாள் (3) தர்மம் எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டாள் அம்மாள் என்றும் இவ்வம்மையாரே இக்கோயிலின் அருகே கீழைத்திசையில் கோயில் கொண்டருளும் ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாளுக்கு ராஜகோபுரம் அமைத்துக்கொடுத்திருப்பவராகலாம். அதற்கான கல்வெட்டினை ஸ்ரீகோவிந்தராஜர் கோயில் ராஜகோபுர வலது மூலையில் அம்மையாரின் உருவத்தோடு முறையே மேலுங்கீழுமாகச் செய்து நாட்டியுள்ளனர். 12 வரிகளுள்ள கல்வெட்டினைத் தற்போது காண்போம்.

ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள் கோயில் கல்வெட்டு

1) தாரண ஸு பங்குனி மீ

2) தஞ்சாவூர் அரண்மனை இலாகா

3) தேவஸ்தான பரபம்பரை டிரஸ்டி

4) யுமான ஸ்ரீமந்தராஜஸ்ரீராஜ

5) ராம் சாகேப் அவர்கள் விசாரணை

6) க்குள்பட்டதுமான ஸ்ரீகோவிந்த

7) ராஜப்பெருமாள் கோவில் ராஜ

8) கோபுரம் தஞ்சாவூர் அய்யங்

9) கடை வஸ்திர பஜார் சந்திலிரு

10) க்கும் வைத்திலிங்க கோனார்

11) பாரியாள் ஆண்டாளம்மாளால்

12) கட்டப்பட்டது - 1-2-44

தஞ்சாவூர்- காசுகடைத்தெருவில் - காணப்பெறும் ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள்கோயிலின் அரசகோபுரம் 69 ஆண்டுகாலப் பழமை வாய்ந்தது. இந்த ராஜகோபுரம் 1-2-1944 ஆம் ஆண்டு தஞ்சாவூர் அய்யங்கடை வஸ்திரபஜார் சந்திலிருக்கும் வைத்திலிங்கக் கோனார் பாரியாள் ஆண்டாளம்மாளால் கட்டிக்கொடுக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு விளக்குகின்றது. இராசகோபுரத்தைக் கடந்து கோயிலுக்குள்ளே சென்றவுடன் எம்பெருமான் "குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி" வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கைநோக்கி கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத்துயிலுமாகண்டு உடலெனக்குருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே என்பதாக அரங்கனே இங்கே வந்து அறிதுயில் அமர்ந்த பரமனாய் விளங்குகிறானோ என எண்ணத் தோன்றும் தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலை பத்தொன்பதாவது பாசுரம் இங்கே அனுசந்திக்கத்தக்து.

இந்த பாசுரம் ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள் கோயில் அமைப்பினையும் கோயிலின் கருவறைமூர்த்தி ஸ்ரீகோவிந்தராஜனின் சயனகோலத்தையும் எடுத்தியம்பு வதாய்த் திகழ்கின்றது. தஞ்சையை மராட்டிய மன்னர்கள் ஆண்டு வருகையில் அகோபிலமடம் ஜீயர் இங்கே எழுந்தருளினார். அவருக்கு பாதபூஜையையும், கனகாபிஷேகமும், அன்னம் பாலிப்பும் அரசு சார்பில் நடைபெற்றதை தஞ்சை மராட்டியர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் நூலின் பக்கஎண்-436ல் காணலாம். இரண்டாம் சரபோஜி மன்னரின் ஆட்சிக் காலத்தில் 25ம் பட்டம் அழகியசிங்கர் தஞ்சைக்கு விஜயம் செய்தார். தொண்ரடிப்பொடியாழ்வார் போற்றிய திருமாலைப் பாசுரம் குடதிசை முடியை வைத்து எனத் தொடங்கும் பாசுரத்தைப் போலவே தஞ்சை கதாதரபுரம் 25ம் பட்டம் அகோபில ஜீயர் திருவரங்கம் அரங்கனை மங்களாசாஸனம் பண்ணுகையில் -

ஸ்ரீரங்கே ரங்கநாத: பணிபதிசயனே தக்ஷிணம் வீக்ஷமாண:
க்யாதம் சீதாம்சுதீர்த்தம் ப்ரணவபரிணதம் தத்விமானம் ச திவ்யம் |
ஆத்யம் வ்யக்தம் ஸ்வயம் ச ஸ்த்தலமதிசுபதம் நாயகீ ரங்கபூர்வா-
பூமேர் வைகுண்டமேதத் ஜகதி விஜயதே ஸஹ்யஜேந்த்ர ப்ரஸித்தம் ||

என்றவாறு தோத்தரித்தார் என ஆசார்ய வைபவம் நூல் கூறுகிறது.

1-12 தஞ்சையில் பஞ்சகிருஷ்ணர்கள்

திருமகள்கேள்வனான திருநாராயணன் நல்லோர்களைக் காக்கவும், தீயோர்களை ஒடுக்கவும் புரிந்த அவதாரங்களில் பெரிதும் அனுபவித்து மகிழத்தக்கது. ஸ்ரீகிருஷ்ணாவதாரம். தஞ்சையில் பஞ்ச கிருஷ்ணர்களாக மகரநோன்புச்சாவடி ஸ்ரீகிருஷ்ணன், சகாநாயக்கன் தெரு ஸ்ரீபூலோககிருஷ்ணன், மேலவீதி ஸ்ரீகிருஷ்ணன், கரந்தை யாதவக்கண்ணன் ஆகியோர் அருள்புரிகின்றனர்.

மகரநோன்புச்சாவடி ஸ்ரீகிருஷ்ணன் :

வலது கரத்தில் வெண்ணெயை வைத்துக் கொண்டிருக்கும் வெண்ணெய் கூத்தனாகவும் ருக்மணி, சத்யபாமா சமேதராகவும் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் காட்சி தருகின்றார். இத்திருக்கோயில் சௌராஷ்டிர மகாஜனங்களின் பரிபாலனத்துக்கு உட்பட்டதாக விளங்குகின்றது.

ஸ்ரீராஜகோபாலன்:

தஞ்சையில் ஸ்ரீராஜகோபாலன் ஸ்வாமி கோயில் என்றொரு பெரிய தேவாலயம் இருக்கிறது. அக்கோயில்

அண்மையில் சம்புரோக்ஷணம் கண்டு மிகப் பொலிவோடு விளங்குகிறது. ஆங்கே தற்போது ஸ்ரீசுதர்ஸன மூர்த்தி அருள்புரிகின்றார். அழகிய ராஜகோபுத்தையுடைய இக்கோயில் தஞ்சை நாயக்க மன்னர்களால் கட்டப்பெற்றது. சான்றாக பிரதான நுழைவாயிலிலேயே இருநாயக்கமன்னர்கள் சிலையுருவாய் நின்று நம்மை வரவேற்கின்றனர், இங்கே சிவேந்திரர் போன்ற பல மூர்த்தங்களுள்ளன. இங்கிருந்த ஸ்ரீராஜகோபாலன் குலோத்துங்க சோழ விண்ணகரமான மன்னார்குடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு திரும்பாமல் அவர் அங்கேயே நிலைபெற்றார். நாயக்கர் கால பிரதிஷ்டையான ஸ்ரீமதனகோபாலன் மற்றும் ஆதிகேசவன் தஞ்சை பிரஸன்ன வேங்கடேசப் பெருமாள் கோயிலில் எழுந்தருளச் செய்யப் பெற்றனர். ஸ்ரீமதனகோபாலனுக்கு பணியாரம் மற்றும் அமுதுபடிக்காக கோபாலன் காலால் (காலால் - நெல் அளவுக் கருவியால்) நெல் அளக்கப்பெற்றதை ஸ்ரீராஜகோபால ஸ்வாமி கல்வெட்டு பரக்கப் பேசுகின்றது.

ஸ்ரீபூலோககிருஷ்ணன்:

மேலவீதி கொங்கனேசுவரன் கோயிலின் எதிரே செல்லும் சகாநாயக்கன் தெருவில் தென்திசையை நோக்கியவாறு மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படும் ஆலயமே ஸ்ரீபூலோகக் கிருஷ்ணன் திருக்கோயில் "சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண்கோடச் செய்யவாய் கொப்பளிப்ப, குருவெயர்ப்புருவம் கூடலிப்ப, கோவிந்தன் குழல் கொடூதினபோது, பறவையின் கணங்கள் கூடு துறந்து வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப, கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கி செவியாட்ட கில்லாவே"

என்று பெரியாழ்வாரின் பாடலின்படி அனைவரையும் ஆட்படுத்தும் ஸ்ரீவேணுகான கிருஷ்ணமூர்த்தி தென்திசை நோக்கியவாறு அருள்பாலிக்கின்றார்,

மேலவீதி ஸ்ரீகிருஷ்ணன் :

தஞ்சை அரண்மனையைச் சுற்றி அமைந்துள்ள வீதிகளில் மேலராஜவீதியின் மேல்சரகில் ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் போன்ற ஆசார்யர்கள் தொழுதேத்தும்படியாய் கீழ்த்திசையை நோக்கும் வண்ணம் அமைந்தது கிருஷ்ணன் திருக்கோயில். கண்ணனின் லீலைகள் என்றும் தெவிட்டாதது. இத்திருக்கோயிலில் உள்ளங்கவர் கள்வன் நவநீத நாட்டியனாக சேவைசாதிக்கின்றார். 1805 ஆம் ஆண்டில் சரபோஜி மன்னர் திருப்பணி செய்திருந்தாலும் இக்கோயில் நாயக்க மன்னர்காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம் என்ற குறிப்பு காணப்படுகிறது. இந்த கிருஷ்ணனை தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி 'தாழியான்' என்று போற்றுகிறது.

கரந்தை யாதவக் கண்ணன்:

இக்கோயில் ராஜகோபுரத்துடன் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. வேய்ங்குழல் ஊதும் ஸ்ரீவேணுகானகிருஷ்ணன் இக்கோயிலில் பிரதான எம்பெருமான். ராஜகோபுரம் கடந்து உள்ளே செல்கையில் திருவேங்கடவனும், திருநாராயணனும் ஓவியமாக காட்சி தருகின்றனர். இந்த எம்பெருமான் தஞ்சை பன்னிரு கருடசேவை விழாவில் கலந்து கொள்கிறார். இத்திருக்கோயிலில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழா பத்துநாட்கள் வெகு சிறப்பாக சொற்பொழிவுகளுடன்

கொண்டாடப்படுகிறது. யாதவர்களின் பராமரிப்பில் இருந்துவருவதால் இது யாதவக் கண்ணன் திருக்கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

தஞ்சையில் பஞ்சகிருஷ்ணர்களின் தேவஸ்தானங்கள் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்தனவாய் திகழ்கின்றன.

1-13 தாயிலும் நல்லவிண்ணகர் (வெண்பாவூர் வரதராஜப்பெருமாள்கோவில்)

'தாயிலும் நல்ல விண்ணகர்' என்ற பெயரில் ஸ்ரீதேவி பூமிதேவி சமேத வரதராஜப்பெருமாள் கோயிலின் குறிப்பை வெண்பாவூர் திருக்கோயில்களின் வரலாற்று நூல் தருகிறது. தாயிலும் நல்ல விண்ணகர் என்பதற்கு அந்நூல் தரும் கல்வெட்டே பெருத்த சான்றாகும்.

கல்வெட்டு மற்றும் திருத்தலப்பெருமை குறித்து நாம் இனிச் சிறிது பார்ப்போம். தாய், தாயுள்ளம், தாயினிற் சிறப்பு இவை அனைத்திற்கும் எல்லை நிலம் காண்பதரிது. அம்ருதரஞ்சனீ எனும் தமது பிரபந்தத்தில் "தள்ளத் துணியிலும் தாய் போலிறங்கும் தனித்தகவால் உள்ளத்து உறைகின்ற உத்தமன் தன்னை உணர்ந்துரைத்தோம்" (தேசிகப்பிரபந்தம் - அமிருதரஞ்சனீ பாடல்:2) என்றார் ஸ்வாமிதேசிகன். "பெற்றதாயினும் ஆயின செய்யும்" (பெரியதிருமொழி-1-1-9) என்பது பன்னிரு ஆழ்வார் களில் ஒருவரான திருமங்கை ஆழ்வாரின் பாடல் வரி. 'மாதாவானவள் சரீரத்துக்கு உத்பாதகையாம் (உடலைத் தோற்றுவித்து விடும் அவளாம்) அளவிறே; ஆத்மாவுக்கு ஸ்வரூபமான ஞானவிகாஸத்தைப் (அறிவுப் பெருக்கத்தைப்) பிறப்பிப்பான் அவனே (எம்பெருமானே) யிறே, "சரீரமேவ

மாதா பிதரௌ ஜனயத:" என்று விரோதியான சரீரத்தை உத்பாதித்து விடுமளவிறே அவர்கள் செய்வது; "ஸஹி வித்யாத: தம் ஜனயதி தச்சிரேஷ்ட்டம் ஜன்ம" என்று ஞானபிரதன் (அறிவை வழங்குபவன்) ஆவான். அவனே (எம்பெருமானே) யிறே என்று இதற்கு உரைகாரர்கள் உரை செய்துள்ளனர். இதனால் உடலைத் தோற்றுவிப்பவரைக் காட்டில் அறிவைத் தரும் எம்பெருமானே உயர்ந்தவன் என்பது தெளிவு. ஸ்ரீகடிகாசதம் அம்மாள் இயற்றிய யதிராஜவிஜயம் எனும் நாடகத்தில் ஒரு நீதி சுலோகம்-

ஹிதஸ்ய கரணாத் நித்யம் அஹிதேப்யோ நிவாரணாத் ।
மாதுரப்யதிகோ பந்து: பிராப்தோ தர்மோயம் ஆத்மனாம் ॥

என்கிறபடியே ஒரு மனிதனுக்கு நன்மையை எப்போதும் செய்தலாலும், தீமைகளிலிருந்து காப்பாற்றுதலாலும் தாயைக் காட்டிலும் சிறந்த உறவு தர்மமே (அறமே) என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. காளிதாஸன் இயற்றிய ரகுவம்ச மகாகாவியத்தில் மனிதர்கள் வணக்கமுறச் செய்து, காப்பாற்றி வளர்க்கின்ற பொறுப்பை உடைய அரசனே அவர்களுக்கு தந்தை, ஆனால் அவர்களது பெற்றோர்கள் பிறப்பு தந்தருளிய பெருமை பெற்றவர்கள் மட்டுமே ஆவர். இக்கருத்திற்கு கீழ்க்காணும்

பிரஜானாம் வினயாதானாத் ரக்ஷணாத் பரணாதபி ।
ஸ பிதா பிதரஸ் ஸ்தேஷாம் கேவலம் ஜன்மஹேதவ: ॥

என்ற சுலோகம் சான்றாகின்றது. வரலாற்று அடிப்படையில் பார்க்கின்ற போது 'தாயிலும் நல்லான்' என்பது ஒரு அரசரையும், பின்பு அவ்வரசரால் திருப்பணி செய்யப்பெற்ற கோயிலுக்கு பெயராகவும் அமைந்தமை ஈண்டு நினைக்கத்தக்கது.

மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் சிற்றரசராகவும் படைத்தளபதியாகவும் பணியாற்றிய பொன்பரப்பின

வாணகோவரையன் (கி.பி. 1172-1216) சகோதரன் தாயிலு நல்ல பெருமாள் ஆன குலோத்துங்கசோழ வாணகோவரையர் என்பவரும் கி.பி. 1220 வரை இணைந்து ஆட்சி செய்துள்ளனர். பொன்பரப்பின் வானகோவரையனின் சகோதரரான தாயிலு நல்ல பெருமாளான குலோத்துங்க சோழ வாணகோவரையனின் பெயராலும் பெரம்பலூர் மாவட்டம்-வேப்பம்தட்டை தாலுகாவில் உள்ள வெண்பாவூரில் தாயிலும் நல்ல விண்ணகர் ஆழ்வார் கோயில் என்ற ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயிலை செம்பை இராஜராஜமகதனான வாணகோவரையர் (கி.பி.1226-1246) கட்டியுள்ளார் என்பது "வெம்பாரூரவரும் நகரத்தாரும் கண்டு திங்களூர் மிளகு தரகு ஆயம் உடையார் பொன்பரப்பினை ஈசுவரமுடையனாயனார் திருப்பணிக்கு இருகூறும் தாயிலும் நல்ல விண்ணகர ஆழ்வார் திருப்பணிக்கு ஒருகூறும் குடுத்தேன்" என்ற இவ்வூர் சொர்ணபுரீச்வரர் கோயில் கல்வெட்டால் அறிய முடிகிறது. இந்த வரதராஜப்பெருமாள் கோயில் வளாகத்துள் கிடக்கும் கற்பலகையில் சித்திரமேழி மலைமண்டலத்து தேசிவிண்ணகர் தாயிலும் நல்ல பெருமாள் எனக்கோயிலின் பெயரும், பெருமாள் பெயரும் (நூல்: வெண்பாவூர் திருக்கோயில் வரலாறு By Dr. இல. தியாகராஜன்.) குறிக்கப்பெற்றுள்ளது.

இதனால் தாயைப்போற்றி மதிக்கவேண்டும் என்றும், தாயிற்கு நம் தேசம் காட்டிய பெருமையும் அளவிடற்பாலது. இவ்வாறு தாயிலும் நல்லபெருமாள், தாயிலும் நல்ல விண்ணகர் ஆகியவற்றை அறிந்த நாம் 'தாயிலும் நல்லான் திருமண்டபம், என்பதாக ஒரு மண்டபம் குறித்த வரலாற்றை அறிய இதே நூல் தரும் 'ஆனைக்கருளிய ஆதிமூலம்' கட்டுரையில் கண்டு மகிழ்வோம்.

1-14 திட்டை நவநீதகிருஷ்ணன்

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன், என்னுள்ளங் கவர்ந்தானை
அண்டர் கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

திருமகள் கேள்வனான திருநாராயணன் மேலை விண்ணோரும் மண்ணோரும் தொழுதிறைஞ்சும்படியாக திவ்யதேசம் தோறும் திகழ்ந்தருள்பாலிக்கின்றான். திவ்யதேச வரிசையில் மூன்றாவது திவ்யதேசமாகவும், உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய் எனக் கொண்டாடும்படியாக விளங்கும் கோயில்கள் விண்ணாற்றங்கரையில் அமைந்திருக்கின்றன. தஞ்சாவூர்-கும்பகோணம் சாலையில் கருந்திட்டைக்குடிக்கும் பள்ளி அக்கிரஹாரத்திற்கும் இடைப்பட்ட ஊர் விண்ணாற்றங்கரை. இவ்வூருக்கு அருகாமையில் சுமார் 5 மைல் தொலைவில் வெண்ணெய்க் கூத்தனான நவநீத நாட்டிய கிருஷ்ணன் திட்டையெனும் அக்கிரஹாரமாம் தென்குடித்திட்டையில் கோயில் கொண்டுள்ளான்.

ஆழ்வார்களால் மங்களாசாஸநம் செய்யப் பெற்று, காலத்தால் மிகத் தொன்மையான வைணவத் திருவிண்ணகரங்களைத் தன்னகத்தே கொண்ட பெருமை வாய்ந்த விண்ணாற்றங்கரைக்கருகில் தான் வெண்ணெய்க் கூத்தனான ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் அருள்பாலிக்கும் திட்டை எனும் சிற்றூர் அமைந்துள்ளது.

தென்குடித்திட்டை என்னும் திருத்தலமே வடமொழியில் தக்ஷிண குடித்வீபம் என்றழைக்கப் படுகிறது. தென்குடித்திட்டையில் விளங்கும் சிவபெருமான் நாயன்மார்களால் பாடல் பெற்றவர். அக்ரே ஹரம் என்னும்படி நவநீத கிருஷ்ணனின்

தேவாலயத்திற்கு ஈசான்ய (வடகிழக்கு) பாகத்தில் சிவாலயமமைந்த சிறந்த ஒரு அக்கிரஹாரம் திட்டை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. செண்பகவனம் என்னும் கிருஷ்ணாரண்யம் எம்பெருமான் ஸ்ரீநவநீத கிருஷ்ணனாக காட்சி கொடுத்தருளும் இடத்திற்குப் பெயராகும். ஆங்கே ஹேமாப்ஜநாயகி- தனிக் கோயிலிலும், நவநீத கிருஷ்ணனின் இருமருங்கில் ருக்மிணீ ஸத்யபாமா ஆகிய உபயநாச்சியார்களும் காட்சி தருகின்றனர்.

ஸ்ரீ நவநீத கிருஷ்ணனின் திருக்கோலம் ஸ்வாமி தேசிகன்

ஆவிர்பவத்வநிப்ருதாபரணம் புரஸ்தாத்
ஆகுஞ்சிதைகசரணம் நிப்ருதான்யபாதம் |
த்த்தா நிமந்த முககரேண நிபத்த தாலம்
நாதஸ்ய நந்தபவநே நவநீதநாட்யம் ||

என்று கோபால விம்சதியில் போற்றியுள்ளபடி ஆபரணங்கள் எல்லாம் அரைகுலைய ஒரு காலை ஊன்றி மற்றொரு காலை எடுத்து, தாய் தயிர் கடைந்தெடுக்கும் போது வெண்ணெய்யைக் கையிலே கொண்டு ஆடுகின்ற கண்ணனின் வெண்ணெய்க் கூத்துத் திருக்கோலம் காண்போரின் மனத்தைக் கொள்ளை கொள்கிறது.

கிழக்கு முகமாக அமைந்த திட்டை நவநீத கிருஷ்ணனின் கோயிலின் தென்பகுதியில் புதிதாக அமைக்கப்பெற்றுள்ளது ஸ்ரீஹேமாப்ஜநாயிகா திருக் கோயில். அக்னி மூலையில் (தென்கிழக்கில்) கோயிலின் திருமடைப்பள்ளி உள்ளது. கோயிலின் நுழைவாயிலைக் கடந்து கருடனையும் தாயாரையும், பெருமாள், விமானம் ஆகியவற்றை வலம் வந்து உள்ளே நுழைந்தால் உடன் நம் கண்ணுக்குப் புலப்படுவது தென்புறம் திருமுக மண்டலத்துடன் காட்சி தரும் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன். அவருக்கு அருகில் சக்ரவர்த்தித் திருமகனாரின் சந்நிதியும் அதற்கு எதிரில் கார்யஸித்தி ஆஞ்ஜநேயர் ஸந்நிதியும்

காணக்கிடைக்கின்றது. இக்கோயிலின் நடுமண்டபத்தை மேலே நிமிர்ந்து பார்த்தால் முயலை (அடையாளமாகக் கொண்ட சந்திரனை) நாகம் விழுங்கும் காட்சி தென்படுகிறது.

இதனால் நவக்கிரஹங்களுள் எந்த கிரஹத்தின் வழி தொந்தரவு ஏற்பட்டாலும், அதைப் போக்கி அச்சந்நிதானம் வரும் பக்தரை ஸர்வலோக சரண்யன் ஸ்ரீலக்ஷ்மீநாராயணன் காத்தருள்வான். எழிலாழி இறைவனும், ஆண்டாளும் ஆங்கே அருளாசி புரிகின்றனர். நினைத்த செயலைக் கார்யஸித்தி ஆஞ்ஜநேயன் நிறைவேற்றுவான். அத்துடன் மூலஸ்தானத்தில் அருள்பாலிக்கும் நவநீத கிருஷ்ணன் நலங்கழல் காட்டி நற்பதம் அருள்வான் என்பது திண்ணம்.

கோயிலின் பின்புறம் விசாலமான ஒரு புஷ்கரிணி உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றாலும் திட்டை நவநீதகிருஷ்ண ஸ்வாமி கோயில் சிறப்புற்றுத் திகழ்கிறது.

1-15 வல்லம் திருக்கோயில்கள்

தஞ்சை விண்ணாற்றாங்கரைப் புராணத்தில் தஞ்சகன், தண்டகன், தாரகன் என மூவசுரர்களின் குறிப்பு காணக்கிடைக்கின்றது. மூவசுரர் குறிப்பு தரும் விண்ணாற்றங்கரைப் புராணத்திற்கும் வல்லம் புராணத் திற்கும் சிறிது தொடர்பு உள்ளது.

ஒரு சமயம் ஸ்ரீநீலமேகப் பெருமாளுக்கும் அரக்கர்களுக்கும் நடந்த மாபெரும் போரில் தஞ்சகன் யானை உருக்கொண்டு பெரிய ஸால விருக்ஷங்களை எடுத்துவந்து திருமாலுடன் போர் போரிய, திருமால்

ஆளரியாய்த் தஞ்சகனுடன் போர் புரிந்தான். அந்நிலையில் மனம் மாறிய தஞ்சகனின் வேண்டுகோளால் அந்த நகரம் தஞ்சாபுரீ எனப்பெயர் பெற்றது. அப்புராணத்தையே அரிய சிற்ப வடிவில் பெற்றுத் திகழும் திருக்கோயில் தஞ்சையாளி நகர் (ஸ்ரீவீரநர) சிங்கப் பெருமாள் கோயில்.

போரினைக் கண்டஞ்சிய தண்டகன் என்பவன் பூமியைப் பிளந்து சென்று மறைய நீலமேகன் கமண்டலம் ஒன்றைக் கைக் கொண்டவராய் வராஹ உருவெடுத்து தண்டகனை மாய்த்தார். அக்கருத்தைச் சித்தரிக்கின்ற வகையில் அவ்வெம்பெருமான் தண்டகனின் வேண்டுகோளால் வராஹப் பெருமாளாக நின்ற கோலத்தில் வம்புலாஞ் சோலைமதில் தஞ்சைமாமணி (ஸ்ரீ நீலமேகப்பெருமாள்) கோயிலில் காட்சி நல்குகிறார்.

எஞ்சிய அசுரன் தாரகனை வல்லத்து பட்டாரகி மாய்த்தாள் என்றும், தாரகனுடன் ஏகவீரை (வீராங்கனை)யாய்ப் போரிட்டுத் தாரகனை மாய்த்ததன் காரணத்தால் தஞ்சை மாமணிக்கோயில் ஸ்ரீநீலமேகப் பெருமாள் வல்லத்து மாகாளியை ஏகவீரா என்று புகழ்ந்ததாகப் பராசரக்ஷேத்ர (விண்ணாற்றங்கரை) மாகாத்மியம் கூறுகிறது.

ஏகவீரா அம்மன் கோயிலே ஏககௌரி அம்மன் கோயில் என்ற பெயரோடு வல்லத்தில் காணக் கிடைக்கின்றது. வல்லம் என்பது தஞ்சாவூர் தோன்றுவதற்கு முன் சோழர்களின் தலை நகரமாகத் திகழ்ந்திருக்கிறது. கடைச்சங்க காலத்தில் புகழ் பெற்று இருந்த பூம்புகார், உறையூர், ஆரூர், குடவாயில் போன்ற நகரங்களில் வல்லமும் ஒன்று. அங்கு அருள்பாலித்துவரும் காளி கரிகாற்சோழமன்னன் காலத்தில் வல்லத்து

பட்டாரகி என்றும், ராஜராஜ சோழ மன்னன் காலத்தில் காளாபிடாரி என்றும், தற்போது "ஏகௌரி அம்மன்" என்றும் அழைக்கப்படுகிறாள். பராந்தகன் காலத்திய கல்வெட்டும் ஆங்கே இடம் பெற்றுள்ளது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகாலப் பழமையைப் பெற்றுள்ளது அத்திருக்கோயில்.

ஏகவீரா அம்பாள் மாயத்தவசுரன் பெயர் தஞ்சகன் என்று வல்லத்தில் கூறப்படும் புராணத்தில் தெரிவிக்கப்படுகிறது. அஸுரனுக்கும் அம்பாளுக்கும் இடையே கடும் போர் நடக்கிறது. இறுதியில் அஸுரன் எருமை உருவங்கொண்டு அம்மனை எதிர்த்துப் போரிடவர கடுங்கோபங் கொண்ட காளி எட்டுக் கரங்களுடன் வாளேந்தி எருமை உருவெடுத்த அஸுரனைத் தலை வேறு உடல் வேறாக வெட்டி வீழ்த்தினாள் என்பது வல்லத்தில் கூறப்படும் புராணமாகும். இனி விக்கிரம சோழ விண்ணகர் குறித்த சில செய்திகளைச் சிந்திப்போம்.

தஞ்சைக்கு உபகோட்டையாய் விளங்கிய வல்லம் எனும் இத்திருத்தலத்தில் நரசிங்கன் வலாசுரனைப் போரில் மாய்த்தான். வலாசுரனை இங்கே நரசிங்கப் பெருமாள் மாய்த்த காரணத்தால் இத்தலம் வல்லம் என்றழைக்கப்பட்டதாகத் தஞ்சை மாநகரத்தலபுராணம் விளம்புகின்றது. (பராசர க்ஷேத்திர மாகாத்மியம், ப.எண். 33,34) தஞ்சை-திருச்சி மார்கத்தில் தஞ்சையை அடுத்து இலங்கும் வல்லத்தின் சாலையிலேயே ஸ்ரீ மாதவயோக நரசிங்கப்பெருமாள் கோயில் காணக்கிடைக்கின்றது.

நரசிம்மச்சொல் விளக்கம்

ந்ருசப்தேன நர:ப்ரோக்த: சிமோக்த்யா பந்த உச்யதே ।
ஹனனாத் நரபந்தஸ்ய நரசிம்மேதி கீர்த்யதே ॥

என்பது மந்த்ரசாஸ்த்ர சங்கிரஹம் கூறும் விளக்கமாகும். அதாவது மனிதனின் உலக வாழ்க்கை என்னும் கட்டை வெட்டிவிடுவதால் நரசிம்மம் என்று பொருள்படுகிறது. அக்கோயிலில் துண்டுக் கல்வெட்டுகள் பல இருப்பினும் முழுமையான கல்வெட்டொன்று வெள்ளையடிக்கப் பெற்று முழுதுமாய்ப் படிக்க வொண்ணா நிலையில் தெலுங்கு எழுத்து மற்றும் மொழியில் அமைந்திருக் கின்றது. இது பற்றிய குறிப்புகள் தென்னிந்தியக் கோயில் சாஸனங்கள் எனும் நூலில் கிட்டவில்லை. வல்லத்திற்கு 'வல்லபபுரீ' என்ற வரலாற்றுப்பெயரைக் குறிப்பிடும் வல்லம் வரலாற்றுச் சிறப்புகளும் திருக்கோயில்களும் என்ற குறு நூலிலும் இக்கல்வெட்டு பற்றிய செய்தி இடம் பெறவில்லை. ஆகவே பல்லாண்டுகளாக வெளிவராத இக்கல்வெட்டு கிடைத்தவரை அரிதின் முயன்று வெளியிடப்படுகிறது.

தெலுங்கு மொழிக் கல்வெட்டு

1) ......స్థానికీ కోపాతి ంయు మునికలిగిన కమ్మవారు నార్యళ్ళు ఆరూఢకర్మములు సేరి కలముగా 2) ...... యున ఏకాదశీ మణ్డపమును మట్టప్రాకారమును కట్టి 1724 శకాబ్దం వైశాక నెల కుంభాభిషేకం నటిపించినారు 3) చిందీలికుప్పం రఙ్గసామినాయుడు, భీమంచేయు వరదప్ప నాయుడు, మాత్తిల్ల చెట్టి లక్ష్మమ్మా నాయుడు, 4) తోపల్లి వెఙ్కటసామి నాయుడు, మామిడిపల్లి చెల్వపాంయు నాయుడు, తోటిపల్లి అబ్బా నాయడు.

(1) ...... ஸ்தானீகோபாதியி முனிகலிகின கம்மவாரு நார்யள்ளு ஆருடகர்ம்முலு ஸேரி கலமுகா

(2) ..... யன ஏகாதசீ மண்டபமுனு மட்டபிராகாரமுனு கட்டி 1724 சகாப்தம் வைசாக நெல கும்பாபிஷேகம் நடிப்பிஞ்சினாரு

(3) சிந்தீலி குப்பம் ரங்கசாமிநாயுடு, பீமசேயு வரதப்ப நாயுடு, மாத்தில்ல செட்டி லக்ஷ்மம்மா நாயுடு,

(4) தோபல்லி வெங்கடசாமி நாயுடு, மாமிடிபல்லி செல்வபாயி நாயுடு, தோடிபல்லி அப்பாநாயுடு.

இஃது இவ்வாசிரியரால் புகைப்படக்கருவியில் பதிவாக்கப்பட்டது.

கல்வெட்டின் குறிப்புரை :-

வல்லம் உயோக நரசிங்கப் பெருமாள் கோயிலின் திருச்சுற்று-கருவறை வெளிப்புறம் - கீழ்த்திசைச்சுவற்றில் குமுத வரியிலும், ஜகதி வரியிலுமாகக் காணப்படும் தெலுங்கு மொழித் தொடர் கல்வெட்டில் “இத்தலத்தில் ஸ்தானீகர்களாகிய நாயுடுவர்கத்தார்கள் 1724 சகாப்தம் (1724+78=1802 AD. ஆம் ஆண்டு) திருச்சுற்றும், ஏகாதசி மண்டபத்தையும் கட்டி வைகாசி மாதம் கும்பாபிஷேகம் செய்துள்ளார் என்ற 200 ஆண்டுகாலச்செய்தி “குறிக்கப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு உள்ள இடத்திற்கருகில் ப்ராகாரத்தையும், ஏகாதசி மண்டபத்தையும் இன்றும் நம்மால் காணமுடிகிறது.

இத்திருக்கோயிலில் ஸ்ரீமாதவப் பெருமாள் அருள்பாலித்து வருகிறார். தனிக்கோயில் தாயார் திருநாமம்: கமலவல்லி. ஆண்டாள், சக்கரவர்த்தித் திருமகனார் போன்றோர் ஸந்நிதிகளும் இத்திருக் கோயிலில் காணக்கிடைக்கின்றன. நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீபகவத் பாஷ்யகாரர், ஸ்வாமி தேசிகன் ஆகிய ஆழ்வார் ஆசார்யர்களும் அங்கே

எழுந்தருளியுள்ளனர். கௌதம மஹர்ஷி, மற்றும் அகல்யை கல்லாவதற்குக் காரணமான தேவேந்த்ரன் ஆகியோர் கல்யாண மண்டப மேடையில் சிறப்பு வடிவமாகக் காட்சி தருகின்றனர். கோயிலின் கிழக்கே வெளிப்பகுதியில் ச்வேத தீர்த்தம், வெள்ளக்குளம் என்றெல்லாம் அழைக்கப்பெறும் கௌதம தீர்த்தம் உள்ளது. தேவேந்தரன் கௌதம தீர்த்தத்தில் நீராடி சாபம் நீங்கப் பெற்றான் எனவும் கூறப்படுகிறது. மேலுமிங்கே சோழர் காலத்து கோயில்களாக கோட்டை சோழீச்வரர் கோயிலும், அரிகுலஈச்வரமுடையார் கோயிலும் காணக்கிடைக்கின்றன. வல்லத்தில் சோழீச்வரர் கோயிலுக்கு மேற்பாரிசத்தில் இதிருமாலவன் கோயில் இருந்தமையால் சோழர் காலத்தே ஆகி விக்கிரம சோழவிண்ணகர் என்றழைக்கப்படுவதில் மிகையில்லை. வல்லத்தின் நெடுங்காலப் பழமையைப் பறை சாற்றி நிற்கும் வஜ்ர தீர்த்தக் (There is a remarkable tank inside the fort called the vajratirtham(diamond pool) which is supposed to be unfathomable and is held very sacred Indra, after he reduced the sage Gautama's wife. Tanjore District Gazater, Vol.I, P. No. 280) கரையிலமைந்துள்ள கரிகால சோழீச்வரர் எனப்படும் வஜ்ரேச்வரரின் திருக்கோயிலும் புதுப்பிக்கப்பட்டதாய் அறிகின்ற படியால் அவரது சந்நிதிக்கு மேற்பாரிசத்திலிருந்து வல்லத்து தெய்வநாயகப் பெருமாள் உயோகநரசிங்கப் பெருமாள் சந்நிதிக்கு (மாதவ நாமத்துடன்) ஒரு காலத்தில் இடம் பெயர்ந்திருப்பார் போலும். வல்லம் பட்டாபிராமரும் 'தஞ்சை திருக்கோயில்கள்' என்னும் நூலில் " JMS குறிப்பிடுகின்றார். தென்னிந்திய கோயில் சாஸனங்களில் மெக்கன்சியின் குறிப்புக்கு ஒப்ப தெய்வநாயகப் பெருமாள் கோயில் நிலையிலுள்ள சாஸனம் போல் மாதவப் பெருமாள் ஸந்நிதியிலும் ஒரு கல்வெட்டு காணக்கிடைக்கின்றது.

தென்னிந்திய கோயில் சாஸனங்களில் மெக்கன்சியால் குறிப்பிடப்பட்டதும், குறிப்பிடப் படாததும் ஆகிய இருகல்வெட்டுகளை தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் வழியே சிறிது பார்ப்போம்.

1. மெக்கன்ஸியால் குறிப்பிடப்பட்டது (தென்னிந்தியக்கோயில் சாஸனங்கள்)

..............திகள் ராஜேந்திர சோழ தேவர்க்குயாண்டு 5வது கருவுகுல வலத்து ஸ்ரீதெய்வனாயகப்பெருமாளுக்கு இவ்வூர் வாணிய நகரத்தோம் நிச்சயித்தபடி இந்நாயனார்க்கு திரு நந்தாவிளக்கெரிய நாங்கள் நிச்சயித்து இந்நாயனார் திருவாசலில் திருநிலைகாலில் கல்வெட்டிக்கு இந்தப்படி தெய்வநாயகன் நாழிக்கொத்த கன்மி காவளன் ஆமூர்காலே நான் நாழி எண்ணை ......(தஞ்சாவூர் வட்டக்கல்வெட்டுகள் -ப.எண் 57)

2. மெக்கன்சியால் குறிப்பிடப்படாதது (கோயில் த்வஜஸ்தம்பத்தின் அருகில் கற்சாளரத்தில் உள்ளது)

........தெருவில் வாணியர் நகரத்தோம் கல்வெட்டிக்கு அடுத்தபடி இந்நாயனார்குத் திருவெள்ளறையுடையான் ஆழ்வான் பிள்ளை வைக்கிற திருவிளக்குக்கு வேண்டுங்காசு எங்களுக்குத் தந்து நாங்களும் ஊர் வினியோகத்துக்கு உடலாக கைக் கொண்டு முன்பு நாங்கள் திருவிளக்கெண்ணை அளக்கிற தன்மதாவளன் ஆமூர்க்கொள்ளயிலே ஏற்றி நாள் ஒன்றுக்கு அளப்பிடி...னாளெண்ணை எங்களில் முன்னின்றாரும் செக்கிலும் உலாவி எண்ணை விடுப்பார் பக்கலிலு அளப்பித்துக் கொள்ள கடவர்களாகவும் இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் குடுத்தோம். இக்கோயிலுக்கு அகளங்கப்பெருந்தெருவில் வாணிய நகரத்தோ(ம்) (தஞ்சாவூர் வட்டக்கல்வெட்டுகள் ப. எண். 61 மற்றும் 62)

இவ்விரு கல்வெட்டுகளும் ஒரே கருத்தை விளக்குவதாக அமைந்து இவ்விரண்டிலும் வாணிய நகரத்தோ(ம்). இந்நாயனார்க்கு, தன்மதாவளன், ஆமூர், திருநந்தாவிளக்கெரிய = திருவிளக்குக்கு என்றவாறுள்ள சொற்கள் ஒன்றையொன்று ஒத்திருப்பதாலும் வல்லம் யோக நரஸிங்கப் பெருமாள் கோயிலில் ஸேவை ஸாதிக்கும் திருமகள், மண்மகள் உடனயை திருநாராயணன் மாதவப்பெருமாள் அல்ல, மெக்கன்சியால் கல்வெட்டில் கூறியுள்ளபடி கருவுகுல வல்லத்து ஸ்ரீதெய்வநாயகப் பெருமாள்தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வாறு பழைமையைப் பறைசாற்றுவனவாய் கரிகால சோழீச்வரர், அரிகுல ஈச்வரமுடையார், வல்லம் ஏகௌரி அம்மன், வல்லத்து தெய்வநாயகப் பெருமாள், உயோக நரஸிங்கப் பெருமாள், வல்லம் பட்டாபிராமர், ஆகியோரின் ஆறு திருக்கோயில்கள் ஆங்கே அறியப்பெறுகின்றன.

1-16 விட்டோபா அக்ரஹாரத்தில் வீரஆஞ்சநேயர்

கருந்திட்டைக்குடி, பள்ளி அக்ரஹாரத்திற்கும் இடைப்பட்ட பகுதி விண்ணாற்றின் தென்கரை விண்ணாற்றங்கரை ஆகும். இதுவே மராட்டியர்களின் ஆட்சி காலத்தில் சந்தியாமண்டபம் என்றழைக்கப் பட்டிருக்கின்றது. இங்குள்ள அன்னச் சத்திரத்திற்கு அருகில் விட்டோபா ஸர்வமான்யம் அளிக்கப் பெற்றுள்ளது. விட்டோபா அக்ரஹாரமும் இங்கு இருந்தமைக்கு மோடி ஆவணங்கள் (COMC = Collector office Modi documents Catalouge, A4/Bundle No. 12/Modi dacuments Nos. 150-172 வரை) கிடைத்துள்ளன. இவை அனைத்தும்

கி.பி. 1809-1810 ஆம் ஆண்டுகளுக்குச் சேர்ந்தவை ஆகும். இவை தஞ்சை சரசுவதி மகால் மோடிப்பிரிவில் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. அவற்றுள் விட்டோபா அக்ரஹார அனுபோகஸ்தர்கள் என அனுமார்கோயில் பூசை செய்வோர்களாக திருவாளர்கள் அநந்தாச்சாரியர், ராமாச்சாரியர், ரங்கநாதாச்சாரியர், தமணாச்சாரியர், வெங்கடாச்சாரியர், ரங்காச்சாரியர், அப்பணாசாரியர், நாராயணாச்சாரியர், கிருஷ்ணாச்சாரியர், ராமகிருஷ்ண நரசிம்மாச்சாரியர், ஸ்ரீநிவாஸாச்சாரியர், கோபால ஆச்சாரியர், மத்வாச்சாரியார், ஸ்ரீநிவாஸபட் ஆகியோர் குறிப்பிடப் பெறுகின்றனர்.

சந்த்யாமண்டபம் - விட்டோபா கோவில் அக்ரஹாரம், சர்வமான்யம், அனுமார்கோயில் பூசை நைவேத்யம் செய்யும் அனந்தாசார்யர் அனுபோகம் எழுதிக் கொடுத்த சர்வமான்யம் 1219ம் பசலி (+590=1809 AD)யில் அளித்ததும், (COMC-A4/12/150/1-1) கம்பெனி சர்க்காருக்கு அக்கிரஹார அந்தணர்கள் அளித்த விண்ணப்பங்களின் விவரமும் (COMC-A4/12/153,155,159,161,171), சந்தியாமண்டபம் விட்டோபா அக்ரஹார்ஸ்த மகா ஜனங்கள் எழுதிக்கொடுத்த கடித விவரமும் (COMC-A4/12/167/1-1) ஆராயப்படவேண்டிய செய்திகளாக அவற்றுள் அமைந்திருக்கின்றன.

வீர ஆஞ்சநேயர்

தஞ்சை - விண்ணாற்றங்கரை புறவழிச்சாலையின் வடக்கே இடிபாடுள்ள கோயில் மட்டுமே குற்றுயிரும் கொலையுயிருமாக வீர ஆஞ்சனேயர் கருவறைப் பகுதி மட்டும் எஞ்சியிருப்பதாக விளங்கும் காட்சியை நம்மால் காணமுடிகிறது. வீர ஆஞ்சநேயரின் தியானம் கீழ்வருமாறு-

ச்யாமம் வர்ண ஸுவர்ணகுண்டலதரம் கௌபீனமௌஞ்ஜீதரம்-
புச்சம் ச்ரோணிதரம் த்ரிசூலவதனம் யக்ஞோபவீதான்விதம் ।
ஊர்த்வம் தக்ஷிணமுத்ருதாபயகரம் வாமே கரே பங்கஜம்-
லங்காம் ராவணராக்ஷஸஸ்ய ஹனுமத் த்யானம் பஜேத் ஸந்ததம் ॥

(பொ.) கரிய மேனியனாய், பொற்குண்டலங் களையும், கௌபீனம். மௌஞ்சி (முஞ்சிப்பில்லால் செய்யப்படும் மேகலை) ஆகியவற்றைத் தரித்தும், இடுப்புப் பகுதியில் வாலையும், த்ரிசூலாகாரத்தில் முகமும்கொண்டு யக்ஞோபவீதத்தை உடையவராயும், உயரே தூக்கிய நிலையில் வலது கையினை அபய ஹஸ்தமாயும், இடது கையில் தாமரை மலரைப் பெற்றும், ராவணனின் இலங்கையை எரியூட்டியவருமான (வீர) ஆஞ்சநேயரின் தியானத்தை எப்போதும் எண்ணுதல் வேண்டும்.

அந்த வீர ஆஞ்சநேயர் அருள்பாலிக்கும் இடமே விட்டோபா அனுமார் கோயிலாகும். அக்ரஹாரம், அழிந்துவிட்டது. இடிபாடுகளுடன் விளங்கும் விட்டோபா அனுமார் விண்ணாற்றின் வெள்ளத்தி லிருந்து தப்பிப் பிழைத்த ஒரே ஒரு குடும்பத்தினரால் வழிவழியாகப் பூசை செய்யப்படுகிறார். இவர்கள் தஞ்சை வடக்கு ராஜவீதி குருகுல சஞ்சீவி ஆஞ்சநேயரைப் பூசை செய்யும் அர்ச்சகக் குடும்பத்தினராவர்.

விட்டோபா படித்துறை

தஞ்சை சரசுவதி மகாலுக்குச் சேர்ந்த சந்தியா மண்டபத்தின் அன்னசத்திரம் ஸ்ரீஆனந்தவல்லி உடனுறை தஞ்சபுரீ தஞ்சபுரீச்வரர் ஆலயத்திற்கு கிழக்கே உள்ளது. அந்த சிவன் கோயிலின் வாசலில் அமைந்த பெருவழிச் சாலை அன்னசத்திரம் கடைத்தெரு ஆகும். இந்த கடைத் தெருவிற்கு தெற்கே வாழப்பூ வடிகால் அமைந்துள்ளது. அந்த வடிகாலின் கரையில் கிழக்கு நோக்கிச் செல்லும்

புறவழிச்சாலையில் வடக்கே விட்டோபா அனுமார் கோயிலுள்ளது. விண்ணாற்றங்கரை கடைத்தெரு(வில்) விட்டோபாவின் படித்துறைக்கு எதிரில் வடிகால் கால்வாய்க்கு வடகரை மேலிருந்து சாலை அமைக்க ரூபாய் 200 அளித்தமையை மராட்டியர் மோடி ஆவணம் குறிப்பிடுகிறது. ஆதலால் சந்தியா மண்டபம் கடைத்தெருவிற்கு அருகே (புறவழிச்சாலையில்) அமைந்த விட்டோபா அனுமார் கோயிலுக்கு மிக அண்மையில் வடக்கே உள்ள படித்துறையே 'விட்டோபா படித்துறை' என்று அழைக்கப்பட்டது.

விண்ணாற்றங்கரை புறவழிச்சாலையில் அமைந்து அருள்பாலிக்கும் வீரஆஞ்சநேய ஸ்வாமியால் விட்டோபா படித்துறையும், அக்ரஹாரமும் கண்டறியப்பட்டன என்பது திண்ணம்.

1-17 விண்ணாற்றங்கரையில் விளங்கும் விஜயேசர்

தஞ்சாவூர் - கும்பகோணம் பெருவழிச் சாலையில் விண்ணாற்றங்கரை அமைந்துள்ளது. விண்ணாற்றங் கரையில் பற்பல சிவாலயங்களும், விஷ்ணு ஆலயங்களும் காணக்கிடைக்கின்றன. சிங்கப்பெருமாள் கோயில் என்பது பேருந்து நிறுத்தத்தின் பெயர். பேருந்து மார்கத்தின் கிழக்கே மேற்றிசை நோக்கி அமையப் பெற்றது அருள்மிகு தஞ்சபுரீச்வரர் திருக்கோயில். ஸ்ரீஆனந்தவல்லியம்மன் கோயில் என்பதாகவும் இதற்கு மற்றொரு பெயருண்டு. இக்கோயில் சோழர் காலச் சிறப்பு வாய்ந்தது. தஞ்சைப் பெரியகோயில் விளங்கும் பிருகதீச்வர பாணலிங்கம் வடநாட்டிலிருந்து தருவித்து தஞ்சபுரீச்வரர் ஆலயத்தில் பாலாலயமாக நாட்டிப் பின்

விழாக்கோலமாக எடுத்துச் சென்று தற்போது ஆலயமமைந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றது என்று கூறுகிறது பிருகதீச்வர மாகாத்மியம். இத்தகைய புகழையும் பழமையும் கொண்டிலங்கும் தஞ்சபுரீச்வரர் ஆலயம் பண்டொருகால் மணிமுக்தாநதி என்று அழைக்கப்பெறும் வடவாற்றின் தென்புறம் அம்ருதபுஷ்கரிணிக்கருகில் (வம்புலாஞ்சோலைக்கருகில்) அமைந்திருக்கிறது.

இத்திருக்கோயில் குறித்த செய்திகள் சோழசம்பூ, பிருகதீச்வர மாகாத்மியம் போன்ற நூல்களில் விரிவாக விளம்பப்பெற்றுள்ளன. ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பிகை உடனுறை ஸ்ரீதஞ்சபுரீச்வரர் ஆலயத்தில் ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழா சித்திரை பௌர்ணமியில் தேர் வீதியுலக்காட்சியுடன் நிறைவடையும் வண்ணம் சிறப்பாக கொண்டாடப்பெறுகிறது.

தஞ்சபுரீச்வரரின் பெருமை குறித்து சோழசம்பூ, பிருகதீச்வர மாகாத்மியம் தரும் செய்திகளைச் சிறிது பார்ப்போம்.

குலோத்துங்க சோழன் எனப்படும் சிவபக்தன் இத்தலம் மேவி சிவபெருமானைப் போற்றி மகிழ்ந்தான. குலோத்துங்கன் சூரிய வம்சத்தில் தோன்றியவன். மனைவியின் பெயர் கோமளாங்கி என்பதாகும். இருவரும் சீரும் சிறப்புமாய் இல்லறம் நடத்திவர ஒருநாள் இரவில் சிவபெருமான் துறவி வேடத்தில் அவர்களால் பணிடை செய்யப்பெற்றான். அவர்களது பணிவிடையால் மகிழ்ந்த சிவபெருமான் குலோத்துங்கனைக் குபேரனைக் கொண்டு பெருஞ்செல்வந்தனாக்கினான். இதற்காக குபேரர் சிவபெருமான் கட்டளையால் தஞ்சைபுரிக்கு வருகை தந்து (வெண்ணாற்றங்கரை) தஞ்சபுரீச்வரனைத்

தொழுததால் குபேரத்தலம் என்றும், சமீவனம் என்ற மற்றொரு பெயரும் இத்தலத்திற்கு வழங்கப்படுகின்றன. "அனைத்து நலன்களையும் நல்கவல்லது சமீவனம். அங்கு ஆனந்தவல்லி அம்பிகையுடன் தஞ்சபுரீச்வரர் எனும் சிவபெருமான் உலகைக் காத்து வருகிறார். காமவேளை எரித்த இவர் தேவர் தானவர் சென்றிறைஞ்ச அவர்களைக் காத்தவர்" என்று இச்சிவபெருமானின் சிறப்பை தேவர்கள் குலோத்துங்க சோழனுக்கு உரைத்தனர். குலோத்துங்க சோழனுக்கும் போர் பலவற்றில் வெற்றிவாகை சூடக்காரணமாய்த் திகழ்ந்த தஞ்சபுரீசருக்கு "விஜயேசர்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஒரு சமயம் தஞ்சாசுரன் பிரம்மதேவனிடமிருந்து வரம்பெற்று தஞ்சபுரி வாழ் மக்களைத் துன்புறுத்தினான். அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். உலகைக் காக்க சிவபெருமான் ஆனந்தவல்லி அம்பிகையிடம் கூறினார். ஆனந்தவல்லி அம்பிகையும் தனது சக்தியை ஏகவீரா, ஜயந்தீ, மர்தினீ, மகிஷமர்தினீ, மாரி, ரேணுகா காளி, கோடி என்னும் எட்டு சக்திகளாகப் பிரித்துக்கொண்டு எண்டிசையிலிருந்தும் போரிட வந்தாள். தஞ்சாசுரனோ "அமிருதகலசம், அன்னக் கரண்டியுடன் அருள்சுரக்கும் அன்னபூர்ணாம்பிகையே! அனைவரின் துயரை அகற்றுபவளே ! ஆயிரம் செம்பரத்தை பூவால் அலங்கரித்து ஒளிர்பவளே ! அருகில் இருவர் சாமரம் வீச அமர்ந்தருளாசி புரிபவளே !" என்றவாறெல்லாம் ஆனந்தவல்லியம்மனைத் தண்டகம் பாடி மகிழ்வித்தான். தஞ்சகனின் தண்டகத்தால் மகிழ்ந்த ஆனந்தவல்லி அம்பாள் அவனுக்குக் காட்சி நல்கி விரும்பும் வரம் கேட்கப் பணித்தாள். தஞ்சகனும் "நீ எனக்கிங்கே காட்சி தந்ததால் இத்தலம் சிறப்புற்றது. எனக்கு மறுபிறப்பற்ற மோக்ஷத்தையும், விரும்புவோர்க்கு விரும்புவதை அளிக்கும் தேவியாகவும் நீ திகழவேண்டும். இதுவே யான் வேண்டும் வரம்" என்று தெரிவித்தான். அம்பாளும்

தஞ்சகன் விரும்பியதைத் தந்தருள முன்வந்து தஞ்சாசுரன் இங்கு சிவஸாயுஜ்யத்தைப் பெற்றதால் இத்தலத்துறை சிவபெருமானுக்குத் "தஞ்சேசர்" என்றும், இத்தலத்திற்கு "தஞ்சபுரீ" என்பதும் காரணப்பெயராயின.

தஞ்சபுரீசரால் பெருஞ்செல்வந்தனான குலோத்துங்க சோழனும் காவிரிக் கரையிலுள்ள சிவாலயங்களையும் குறிப்பாக ஸ்ரீ கண்டேசர், தாயுமானவர், சுகந்த குந்தலாம்பிகை, மரகதாசலம் போன்ற போன்ற கோயில்களையும் கட்டியுள்ளார். திருவானைக்காவல் அகிலாண்டேசுவரி ஜம்புநாதர் கருவறைக் கோபுரங்கள், திருச்சுற்றுகள், பெருவீதிகள், திருநெய்த்தானம், திருவையாறு ஈச்வரர்களின் கருவறை மற்றும் கோபுரங்கள் திருப்பழனத்தில் திருச்சுற்று ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளார். திருவரங்கன் கோயிலுக்கும் திருப்பணி மேற்கொண்ட குலோத்துங்க சோழன் தஞ்சபுரீச்வரருக்கு திருச்சுற்று கோபுரம், சுதாபுஷ்கரிணி (இது வம்புலாஞ்சோலையிலுள்ள அம்ருதபுஷ்கரிணிக்) கரையில் ஆலயத் திருப்பணியும் செய்தான். தஞ்சபுரீச்வரரின் மேற்கேயமைந்த நீலமேக நரசிம்மாதியரையும் கண்டு போற்றி, கொங்கணேச்வர ருக்கும், குலோத்துங்கன் கோயிலெடுத்தான்-மன்னார்குடி இராஜகோபாலன் திருக்கோயிலுக்குக் குலோத்துங்க சோழவிண்ணகரம் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று. குலோத்துங்கன் தனது வயது முதிர்ந்த பருவத்தில் ஆட்சி பீடத்தில் தன்னுடைய புதல்வன் தேவசோழனுக்குப் பட்டம் கட்ட நினைத்தான். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய தேவசோழனுக்கு உரிய தருணத்தில் அமைச்சர் தேவதத்தனால் நல்லுபதேசம் நிகழ்த்தப்பெற்றது. பின் ஆனந்தவல்லி உடனுறை தஞ்சபுரீச்வரர் ஆலயத்தில் தேவசோழனின் திருமணமும், பட்டாபிஷேகமும் நிறைவேறின.

இவ்வாறு இறைத்தொண்டில் தன்னை ஈடுபடுத்திய குலோத்துங்க சோழன் தன்னுடைய 90 ஆம் வயதில் கையிலாயப் பதவியடைந்தான். பின்னர் அரசுப் பொறுப்பேற்ற குலோத்துங்கனின் மகன் தேவசோழனும் இறைத்தொண்டில் தன்னை ஈடுபடித்தியவனாய் திருவிடைமருதூர், குடந்தை, திருவெண்காடு, ஸ்ரீவாஞ்சியம், மங்களேசம்,குத்தாலம், துர்கேச்வரம் போன்ற தேவாலயத் திருப்பணிகளைத் தொடர்ந்தான். தேவசோழன் அறுபது ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்து கையிலாயப் பதவியைப் பெற்றான்.

குலோத்துங்க சோழனின் ஈடுபாட்டாலும், திருப்பணியாலும் சிறந்த தஞ்சபுரீச்வரர் திருக்கோயில் தஞ்சை மராட்டிய மன்னர் சரபோஜி, சிவாஜி ஆகியோர்களாலும் திருப்பணி செய்யப் பெற்று சிறப்புற்றிலங்குகிறது. சகஜி மன்னர் (1684-1712 = AD) ஆனந்தவல்லி உடனுறை தஞ்சபுரீச்வரரைத் தனது கீர்த்தனையால் பாடிப்பரவசமடைந்துள்ளார். இதோ அந்த கீர்த்தனையைக் காண்போம்.

ராகம் : கனாஸாரீ *தாளம்: மிசரசாபு*

பல்லவி

தஞ்சேஸ்வர பாவ கஜ தேவாதி தேவ
தருணேந்து சேகர (தஞ்சேஸ்வர)

அனுபல்லவி

கஞ்ஜாக்ஷீ ஆனந்தவல்லீநாத கர்ப்பூரதவளாங்க
(தஞ்சேஸ்வர)

சரணம்

நீலகண்ட சிவ நிகமகோசர
காலஹர சங்கர கனகாசலசாப 1

புரதைத்யஹர பவ புஜகபூஷண சங்கர
ஸ்மர கர்வ பஞ்ஜன ஸகலதுரித சமன 2

பவஸாகரதாரக பக்த ஜனபரிபாலக
அவ பஜ த்யாகேச அந்தக மதஹர ஈச 3

(தஞ்சேச்வர)

(சகஜிமன்னர் கீர்த்தனைகள், ப.எண். 349)

(பொருள்) தஞ்சனாய் வந்த கஜேந்திரனுக்கு ஈச்வரனே ! தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனே! வாலிபத் திங்களை தலையிலணிந்தவனே ! தாமரை போன்ற கண்களைப்பெற்ற ஆனந்தவல்லிநாதனே ! கருப்பூரம் போன்ற வெண்மையான உடலுடையவனே ! விடத்தைக் கழுத்தினில் தாங்கிய நீலகண்டசிவனே! மறையால் அறியப்படுபவரே ! எமனை ஒழித்வனே! சங்கரனே! பொன்மலைக்கொத்த வில்லையுடையவனே! திரிபுரம் எரித்தவனே! பாம்பை அணியாகப் பெற்றவனே! காமவேளின் கர்வத்தைக் களைந்தவனே ! பாப மனைத்தையும் போக்கடிப்பவனே ! உலக வாழ்வெனும் கடலைக் கடத்துவிப்பவனே ! பக்த ஜனங்களைப் பாதுகாப்பவனே ! பஜிப்போரைக் காப்பாற்றும் தியாகேசனே ! எமனின் மதத்தைப் போக்கடிக்கும் ஈசனே! என்று தஞ்சபுரீசரை சகஜி மன்னர் கீர்த்தனத்தால் போற்றிப் பாடியுள்ளார். சரபோஜி (1712 - 1728 AD) ஆகியோரின் காலத்து அவைப்புலவர் அனந்தநாராயண சாஸ்திரி தஞ்சபுரியில் அருள்பாலித்து வரும் அம்பிகை ஆனந்தவல்லியின் பேரில் ஆனந்தவல்லி தோத்திரம் என்ற துதிநூலைப் பாடியுள்ளார். ஏகோஜி (1676-1684AD), சகஜி (1684-1712AD), சரபோஜி (1712-1728AD) ஆகியோரிடம் அமைச்சராய் பணியாற்றிய புலவர் அநந்தராயமகி என்பவர் “வித்யாபரிணயம்” என்ற அத்வைத நாடகத்தை இயற்றியுள்ளார். “வித்யாபரிணயம்” தஞ்சபுரீச்வரரின் ஆலயத் திருவிழாவில் நடிக்கப்பெற்றது. முதலாம் சரபோஜி (1676-1684AD) மன்னர் காலத்திய அறிஞர் உமாநந்தநாதர். இவரது இயற்பெயர் ஜகந்நாதர். இவரது

பெற்றோர் பாலகிருஷ்ணன் லக்ஷ்மி தம்பதியினர் ஆவார். உமாநந்தர் என்றழைக்கப் பெறும் ஜகந்நாதர் இயற்றிய "ரதிமன்மதம்" என்கிற நாடகம் தஞ்சபுரீச்வரர் ஆலய வசந்த விழாவில் நடிக்கப்பெற்றது.

விண்ணாற்றங்கரையில் விளங்கும் விஜயேசரான தஞ்சபுரீச்வரர் கோயில் சங்கீத சாஹித்யங்களால் பாடப்பெற்ற பெருமையினையும் பெற்றுள்ளது.

1-18 விண்ணாற்றங்கரையே சந்தியா மண்டபம்

திருமங்கையாழ்வார் திருஉள்ளம் குடிபுகுந்த தஞ்சாவூர், சோப(க?)மதை நீக்கும் சொகுசுள்ள தஞ்சாவூர் (அறம்?) முப்பத்திரண்டும் முதன்மையாய்ச் செய்வித்த் தப்பில்லா போஜராஜன் தங்கிய தஞ்சாவூர் - என்று பழங்காசு இதழ்தரும் தென்னிந்திய ரயில்வே சிந்துவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் வடபகுதியில் தான் சந்தியாமண்டபம் என மற்றோர் பெயர்கொண்ட விண்ணாற்றங்கரை அமைந்து விளங்குகின்றது. இங்கு அருளாசி புரியும் எம்பெருமானை '**தஞ்சைவாழ் நீலமேகர்**' என நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை கூறுகின்றது. அந்த தஞ்சைவாழ் நீலமேகரையே '**கடிமதிள் தஞ்சையானை**' என பராங்குசஸ்தோத்ரம் போற்றுகின்றது. இவ்வெம்பெருமானும் பண்டு வம்புலாஞ்சோலையில் எழுந்தருளியிருந்தார். அப்பகுதியில் ஒரு தெருவின் பெயரை '**வம்புலாஞ் சோலைத்தெரு**' என்றழைக்கப்பட்டதாய் தஞ்சை சரசுவதி மஹால் நூலகத் தமிழ்ச்சுவடிக் (எண். 1009 பாரதம்-மாவிந்தம்) குறிப்பினால் அறிய முடிகின்றது.

சந்தியாமண்டபம்

விண்ணாற்றங்கரை என்பது தஞ்சாவூர் அரண்மனை மோடி ஆவணங்களில் சந்தியாமண்டபம் என்றே

அழைக்கப்படுகிறது. விண்ணாற்றினை சந்தியாமண்டப நதி என்றும், விண்ணாற்றங்கரையினை சந்தியா மண்டபம் எனத்தொன்றுதொட்டு அழைக்கப்பெற்றதை தஞ்சைமராட்டியர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் நூல் குறிப்பிடுகின்றது. விண்ணாற்றங் கரையில் சந்தியாமண்டபம் சுந்தரேசர் திருக்கோயில் கருவரை விமானத்துடன் புல் மண்டிப் பொலிவிழந்து காட்சி தருகிறது. ஒரு காலத்தில் பெரிய கோயிலாகக் கொண்டு சந்தியாமண்டபம் ஸ்ரீசுந்தரேசர் இங்கே சிறப்புறத்திகழ்ந்த காரணத்தால் இந்த விண்ணாற்றங்கரை சந்தியாமண்டபம் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். சந்தியாமண்டபத்தில் துவாதசியில் அன்னதானம் செய்ததற்கு மராத்திமொழி கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது.

துவாதசி கட்டளைக் கல்வெட்டு

।। स्वस्ति श्री नृपशालिवाहनशके १७७९ पिङ्गल-संवत्सरमार्गशीर्ष शुद्ध १२ स्थिर श्रीरि गुजर सुब्बरायमेहन्ताचि स्त्री जयकुबेराबाइ सन्ध्यामण्डप लक्ष्मणनाइकाचे अग्रहारान्त वेङ्कट रायाच्या ठायास पूर्व नदी स दक्षिण रामसामिनाइकाचे पडतो यास पश्चिम रस्थास उत्तर या चतुस्सीमान्त पडतो वगैरे धर्म केला असे त्याठाई द्वादशीकटला चालणेस त्रिवादि तालुका अम्मा अग्रहारान्तील अमुच्या सर्वमान्यापैकि पोणापङ्गु मीनसोडिली आहे येणप्रमाणे धर्म केला असे ।।

॥ ஸ்வஸ்திஸ்ரீ ந்ருபசாலிவாஹன சகே 1779 பிங்கள ஸம்வத்ஸர மார்கசீர்ஷ சுத்த 12 ஸ்திர ச்ரீரி குஜர ஸுப்பராயமெஹந்தாசி ஸ்த்ரீ ஜயகுபேராபாயி ஸந்த்யாமண்டப லக்ஷ்மண நாயிகாசே அக்ரஹாராந்த வெங்கட ராயாச்யா டாயாஸ பூர்வ நதீ ஸ தக்ஷிண ராமஸாமி நாயிகாசே படதொ யாஸ பச்சிம ரஸ்த்தாஸ உத்தர யா சதுஸ்ஸீமாந்த படதொ வகைரெ தர்மகேலா அஸெ த்யாடாயீ துவாதசீ கடலா சாலணெஸ த்ரிவாதி

தாலுகா அம்மா அக்ரஹாராந்தில அமுச்யா ஸர்வமான்யபைகி போனாபங்கு மீனஸோடிலீ ஆஹே யெணப்ரமாணே தர்மகேலா அஸெ ॥

பொருள்: ஸ்வஸ்திஸ்ரீ ந்ருப சாலிவாஹனசகம் 1779 (+78=1857 கி.ப.) பிங்கள ஸம்வத்ஸர மார்கசீர்ஷ சுத்த 12 ஸ்திர ஸ்ரீகுஜலி ஸுப்பராயமேத்தாவின் மனைவி ஜயகுபேரபாய் ஸந்த்யா மண்டபம் - லக்ஷ்மணநாயக்கர் அக்ரஹாரத்தில் வெங்கடராயரின் இடத்திற்கு கிழக்கு, நதிக்குத் தெற்கு, ராமஸாமி நாயக்கர் படித்துறைக்கு மேற்கு, ரஸ்தைக்கு வடக்கு. இந்த நான்கு புறஎல்லைக் குட்பட்டு படித்துறை வகையறா தர்மம் புரிந்தவிடத்தில் துவாதசி கட்டளை செய்வதற்கு திருவையாறு தாலுகா அம்மா(ள்?) அக்கிரஹாரத்தில் எங்களுடைய ஸர்வமான்யத்தில் முக்கால் பங்கு ஜமீன் விட்டுக் கொடுத் துள்ளோம். இந்த மாதிரி தர்மம் செய்துள்ளோம். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் திருவையாறு அம்மாள் அக்ரஹாரத்தின் முழுப்பெயர் ஜெயகுபேராம்பா அக்ரஹாரம் ஆகலாம்.

இக்கல்வெட்டு இவ்வாசிரியரால் நேரில் பார்க்கப்பட்டும், திரு ராஜா என்னும் (விண்ணாற்றங் கரையில் தங்கிப்படித்த) தமிழ் மாணவரின் பெருமுயற்சி யோடும் படியெடுக்கப்பட்டு இங்கே பதிப்பிக்கப் பட்டது. விண்ணாற்றங்கரை என்பது ஒரு காலத்தில் வேதியர்களின் வாழ்விடமாகத் திகழ்ந்துள்ளது. மராட்டிய மன்னர்களின் ஆட்சி காலத்தில் ஓர் அக்ரஹாரம் ஆங்கே நிறுவியமைக்கு மோடி ஆவண ஆதாரங்கள் உள்ளன. இந்நிலையில் அந்திசந்திகளில் ஆதவன் வணக்கம் முதலான தினக்கடன்களைச் செய்வதற்கு உகந்த தலமாகத் திகழ்ந்து வருவதால் விண்ணாற்றங்கரையே சந்தியா மண்டபம் என்றழைக்கப்படுவது மிகவும் பொருத்தமான

ஒன்றாகும். இதற்கு தஞ்சை சரசுவதிமகால் வெளியீடான பராசர க்ஷேத்திர மாகாத்மியத்தின் 66 முதல் 70 வரையிலான பக்கங்களிலும், காவேரி ஸ்துதியின் 56ம் பக்கத்திலும் தமிழில் பிறமொழிச் சான்றுகளுடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

1-19 வேள்வியால் விளங்கும் வியத்தகு க்ஷேத்திரம்

பௌண்டரீகபுரக்ஷேத்ரம் குடந்தை ஒப்பிலியப்பன் கோயிலிலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராய் வாசுதேவப் பெருமாளாகவும், உற்சவமூர்த்தி செண்டு எனும் ஆயுதத்தைக் கைக்கொண்ட செண்டாலங்காரராகவும், மன்னார்குடி ராஜகோபாலனை ஒத்த திருமேனி வடிவமைப்பையும் பெற்று ருக்மிணி சத்யபாமையர் இருமருங்கிலும் புடைசூழ திருவருள் புரிகின்றனர். தனிக்கோயில் நாச்சியார் ஹேமாப்ஜநாயகி. இவருக்குச் செங்கமலவல்லி என்பது தமிழ்த்திருநாமம். ஆண்டாளும் இத்தலத்தில் அருள்பாலிக்க, ஆழ்வாராசார்யர்களின் தனிச் சந்நிதியும் இங்கே காணக்கிடைக்கின்றது. பௌண்டரீகபுரம் என்பது இந்த க்ஷேத்திரத்தின் காரணப்பெயராகும்.

பௌண்டரீகபுரம்

பௌண்டரீகம் என்பது ஒரு வேள்வி. அவ்வேள்வி தஞ்சை(விண்ணாற்றங்கரை) ஸ்ரீசெங்கமலவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீநீலமேகப் பெருமாள் திருக்கோயிலில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் குலகுருவால்

மேற்கொள்ளப்பட்டு அதன் நினைவாக இந்தப் பௌண்டரீகபுரம் என்ற அக்ரஹாரம் தோற்றுவிக்கப்பெற்றிருத்தல் வேண்டும். இன்றைக்குச் சுமார் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாய் விளங்கும் ஸ்ரீபௌண்டரீகபுரத் தோற்றத்திற்குக் காரணமானவர் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் குலகுரு ஸ்ரீஅய்யா குமாரதேசிகன் ஆவார்.

ஸ்ரீஅய்யா குமார தாததேசிகன்

இவர் நாயக்க மன்னரின் குலகுருவாய் இருந்தபோது பாரிஜாதாபஹரணம் என்னும் நாடகநூலை இயற்றி யுள்ளார். அர்ச்சா திருமேனியில் கோயில்கொண்டுள்ள இவரை திருகுடந்தை ஆராவமுதனின் நாயகியார் ஸ்ரீகோமளவல்லி நாச்சியார் திருச்சந்நிதி முன்பு நாம் கண்டு வணங்கலாம். இவருக்குப் பின் இந்த குரு ஸ்தானத்தை அலங்கரித்த ஸ்ரீலக்ஷ்மீநாராயணர் என்பவரால் இத்திருக்கோயில் ஸ்ரீஆராவமுதனின் கீழைக்கோபுரமும் நாயக்கமன்னர்கள் அளித்த நிதியினைக்கொண்டே நிர்மாணித்து ப்ரதிஷ்டை செய்விக்கப் பெற்றது. ஸ்ரீலக்ஷ்மீநாராயணர் அமுதனின் கைங்கர்யமொன்றையே தமது வாழ்நாள் குறிக்கோள் என வாழ்ந்து அவனடிசேர்ந்ததால் ஆண்டுதோறும் அமுதன் அவருக்குத் திருவத்யயன கைங்கர்யம் மேற்கொள்வது (திதி கொடுத்தல்) குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஸ்ரீலக்ஷ்மீ நாராயணர் தமது குருவின் கடாக்ஷத்தால் பேறுபெற்றதை நினைத்து, 'அய்யாகுமாரதாததேசிக சம்பாவனை' 'அய்யாகுமாரதாததேசிக வைபவ பிரகாசிகை' என்ற இரண்டு குறு நூல்களை இயற்றியுள்ளார். அக்குறுநூல்கள் இரண்டும் ஸ்ரீஅய்யா குமாரதாததேசிகன் இயற்றிய பாரிஜாதாபஹரண நாடகத்தின் முன்னுரையில் ஸ்ரீ.உ.வே. நாவல்பாக்கம் எஸ். தேவநாதாசார்யரால் தஞ்சாவூர் சரஸ்வதிமஹால் நூல்

வாயிலாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. நாயக்க மன்னர்களின் உதவியால் ஸ்ரீகுமாரதாததேசிகன் பழுதடைந்த சோழ திவ்யதேசங்களையெல்லாம் புனருத்தாரணம் செய்தார். ஆதலால் ஸ்ரீகுமாரதாத தேசிகனுக்கு ஆலயம் தோறும் முதல் மரியாதையும் தஞ்சை (விண்ணாற்றங்கரை) நீலமேகஸ்வாமி ஸந்நிதிக்கருகில் வசிப்பிடமும் ஏற்படுத்தப்பட்டன.

இவர் ஒவ்வொரு ஆண்டும் வஸந்த ருதுவில் (சித்திரை - வைகாசி மாதங்களில்) ஸாங்கதர்சபூர்ண மாஸம், ஜ்யோதிஷ்டோமம், உக்த்யம், அதிராத்ரம், அப்தோர்யாமம். ஷோடசீவாஜபேயம், அக்னிசித்யம், பௌண்டரீகம் போன்ற யாகங்களைப் புரிந்தார். இவையாவும் தஞ்சை (விண்ணாற்றங்கரை) ஸ்ரீநீலமேகப் பெருமாள்கோயிலிலே நடைபெற்று வந்ததால் ஸ்ரீநீலமேகப்பெருமாள் கண்டருளப் பண்ணிய பிரஸாதத்தையே வேள்விகளுக்கு அவியுணவாக அளித்து மகிழ்ந்தார் ஸ்ரீஅய்யாகுமாரதாததேசிகன். இவரது காலத்தில் பல்வேறு அக்கிரஹாரங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவற்றுள் ரகுநாதபுரம் (இது தஞ்சையை அடுத்துள்ள திட்டை) பௌண்டரீகபுரம், (ஒப்பிலியப்பன் கோயிலுக்கருகிலமைந்த ஏனாதிமங்கலம்) என்பன சோழநாட்டில் திகழ்பவை. ஸ்ரீபௌண்டரீகபுரம் ஸ்வாமி என்பவர் முனித்ரய பரம்பரையில் சிறப்பிடம் பெற்றவர்.

ஸ்ரீபௌண்டரீகபுரம் ஸ்வாமி - இவர் திருவரங்கத்தில் பௌண்டரீகபுரம் ஆச்ரமம் நிறுவி, முனித்ரய பரம்பரையினுள் வரும் ஒருவகைக் கிளையைச் சார்ந்தவர், திருக்குடந்தை - ஒப்பிலியப்பன் ஸந்நிதி நிர்வாகத்தினை முதன் முதலில் பௌண்டரீகபுரத்தார்களே கவனித்து வந்தனர். ஆதலால் பௌண்டரீகபுரத்திற்கும், ஒப்பலியப்பன் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பு

இருந்து வந்தது. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பங்குனித்திருவிழாவில் 8ம் திருநாள் காலை ஸ்ரீபூதேவி ஸமேத ஸ்ரீஒப்பிலியப்பன் பௌண்டரீகபுரம் எழுந்தருளுவது வழக்கம்.

பௌண்டரீகபுரம் ஸ்ரீராஜகோபாலப் பெருமாள் இவரது வரவை எதிர்பார்த்து வரவேற்று, உபசரித்து அனுப்பும் காட்சி அந்நாளில் வாழ்ந்தோருக்குக் கிடைத்த பெரும்பேறு, இரவு குதிரைவாஹனம் பௌண்டரீக புரத்திலிருந்து புறப்பட்டு ஸ்ரீஒப்பிலியப்பன் கோயில் வந்தடையும். இதனால் ஸ்ரீபௌண்டரீகபுரம் ஆண்டவனுக்கும் ஒப்பிலியப்பனிடத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. இந்த ஸ்ரீஸ்வாமி துறவறம் மேற்கொள்ளும் போது தமது பூர்வாச்ரம சொத்தினை ஒப்பிலியப்பன் ஸந்நிதி தேசாந்திரி கட்டளைக்கு அளித்து விட்டார். இவரது திருவடிவாரத்தில் தாம் 33 வருடங்கள் மீமாம்ஸா - வேதாந்த அப்யாஸங்களை மேற்கொண்டதாய் ஸ்ரீ. உ.வே. வித்வான் A.V.கோபாலாசார்யர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீபௌண்டரீகபுரம் ஸ்வாமியும் பலமுறை ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் சாதித்ததும் குறிப்பிடத்தக்கது.

தீர்த்தம்- இத்திருத்தலத்தின் கோயில் கிழக்கு நோக்கி அமைக்கப்பெற்றுள்ளது.கோயிலின் முன்பு புஷ்கரிணி உள்ளது. இதற்கு இரட்டை குளம் என்பது காரணப்பெயர். அதுபோன்று இரு பக்கமும் பல வீடுகளைக் கொண்ட இரட்டை அக்கிரஹாரமுமிதுவாகும். குளத்தைக் கடந்து கோயிலுக்குச் செல்ல குளத்தின் நடுவில் ஒரு பாதை அந்நாளில் அமைக்கப்பட்டிருந்ததால் இரட்டைக்குளம் என்று கோயிலின் முன்புள்ள புஷ்கரிணி அழைக்கப்பட்டு வந்தது. நாட்டாறு, கீர்த்திமான் ஆறு ஆகிய இரு ஆறுகள் இவ்வூரின் அருகில் ஓடுகின்றன. இந்த ஆறுகளின்

பெருமையை திருவாய்மொழி வ்யாக்யானங்கள் பரக்கப் பேசுகின்றன.

தென்திரைப்புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே என்ற திருவாய்மொழி வாக்ய உரையில் ஒப்பிலியப்பன் கோயிலின் தெற்கேயும், பௌண்டரீகபுரத்திற்கு வடக்கேயும் ஒடும் ஆறுகள் விரசையாற்றுக்கு ஒப்பான மதிப்பு அளிக்கப்படுகின்றன. அங்குள்ளவன் (பரமபதத்திலுள்ளவன்) இங்கே வந்து நின்றால் அங்குள்ளவை (பரமபதத்தில் ஓடும் விரசையாறு முதலியன) எல்லாம் இங்கே உண்டாகத் தட்டில்லையே என்பது உரையாசிரியரின் திருவாக்கு - பரமபதநாதன் ஒப்பிலியப்பன் கோயிலில் அர்ச்சை வடிவில் தோற்றம் செய்தால் பரமபதத்திலுள்ள விரஜையாறு நாட்டாறு முதலானவையாய்த் தோன்றிப் பெருகத் தடையேது மில்லையன்றோ! இத்தகைய பெருமைகளை உடைத்தான க்ஷேத்திரத்திற்கருகிலும், தீர்த்தங்களுக் கருகிலும் அமைந்து விளங்குவதுதான் இந்த பௌண்டரீகபுரம் எனும் திருத்தலம். எனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்புறும் பௌண்டரீகபுரத்தலமும், அக்ரஹாரமும் நாயக்க மன்னர்களின் குல குரு ஸ்ரீஅய்யாகுமார தாததேசிகனால் நிறுவியதாதல் வேண்டும்

மேலும் பௌண்டரீகபுரத் தலத்தின் ஆழ்வார் ஸந்நிதி முகப்பு வேலைப்பாடுகள் நாயக்கர் கால கட்டட மரபினைச் சார்ந்தவை. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னன் விஜயராகவன் மன்னாருதாஸன் ஆவான். பௌண்டரீகபுரத்திலும் மன்னார்குடி ராஜகோபாலனே செண்டலங்காரனாகக்கோயில் கொண்டுள்ளான். ஆதலால் தஞ்சை நாயக்க மன்னர்களுக்கும் இக்கோயிலுக்கும் தொடர்பு இருந்திருக்கலாம். இத்தலத்திற்கு அருகாமை

நகரமான திருக்குடந்தையில் ஸ்ரீஅய்யாகுமார தாததேசிகனுக்கும் கோயிலுள்ளது ஈண்டு நினைக்கத் தக்க ஒன்று. நகரவாஸத்தை விரும்பாத இந்த ஸ்ரீஸ்வாமிதஞ்சை விண்ணாற்றங்கரை நீலமேகப் பெருமாள் சந்நிதிக்கருகில் வாஸம் செய்தார். அது போன்று குடந்தைக்கருகே அமைந்த ஸ்ரீபௌண்டரீகபுரத்திலும் ஸ்ரீஅய்யா குமாரதாததேசிகன் வசித்திருக்க வாய்புண்டு. நிற்க, கர்ணன் மகாபாரதயுத்தத்தில் தேர்ச்சக்கரத்தினருகில் விழுந்து கிடக்க, எம்பெருமான் வேதியர் வடிவு பூண்டு, தர்மங்களைத் தானமாக வேண்ட, கர்ணனின் வாய்மொழியாக பாஸகவி கூறும் கர்ணபாரச் செய்தி நினைவில் வருகின்றது.

சிக்ஷா க்ஷயம் கச்சதி காலபர்யயாத்
சுபத்தமூலா: நிபதந்தி பாதபா: |
ஜலம் ஜலஸ்தானகதம் ச சுஷ்யதி
ஹுதம் ச தத்தம் ச ததைவ திஷ்டதி || *(கர்ணபாரம்)*

கல்வியும்கூட காலத்தின் கோலத்தால் அழியலாம். பெரிய ஆலமரம் என்றேனும் ஒருநாள் வீழ்ந்துவிடும். நீரும், நீர்த்தடமும் வற்றி விடலாம். ஆனால் வேள்வி கொடுத்ததும், தானமீந்ததும் என்றும் நிலைத்திருக்கும் என்பது தனது தர்மங்களையே தானமாகக் கொடுக்க முன்வருங்கால் கர்ணன் கூறும் கூற்று, கர்ணனின் வாய்மொழி காரணமாகவே இன்றளவும் நிலையாய் நின்று பௌண்டரீகபுர வேள்வியால் விளங்கும் வியத்தகு க்ஷேத்திரம் ஸ்ரீபௌண்டரீகபுரம் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை.

1-20 வைரமுடித்திருவிழவில் திருநாராயணன்

பிரக்யாதோன்னத யாதவாத்ரிசிகரே திவ்யே விமானோத்தமே
ஸ்ரீநாராயணதிவ்யநாமபகவான் லக்ஷ்மீமுகாப்ஜாம்சுமதின் ।
கல்யாணீ ஸரஸஸ்தடேதிசுபதே பிராசீமுகோபாஸதே
பக்ஷாசாஹித திவ்யவஸ்த்ரமகுடோ தேவோ தினம் ஸேவதே ॥

(அஷ்டோத்தர சதாதி திவ்யதேசநிவரணம் - P.No. 1333)

கோயில் எனப்படும் திருவரங்கமும் திருமலை என்கிற திருப்பதியும், பெருமாள் கோயில் எனப் போற்றப்பெறும் காஞ்சீபுரமும், மேல்கோட்டை என அழைக்கப்பட்டு வரும் திருநாராயணபுரமும் ஸ்ரீவைணவச் சிறப்புடைத் திருத்தலங்களாகும். வைரமுடித் திருவிழாவில் திகழும் திருநாராயணனைக் காண கர்நாடக மாநிலம் மண்டியா மாவட்டத்தில் மேல்கோட்டைத் திருத்தலம் செல்ல வேண்டும். அத்தலம் நிலப்பரப்பிலிருந்து சுமார் 120 அடி உயரத்தில் காட்சி தருவதால் மேல்கோட்டை என்றழைக்கப்பெறுகின்றது. மேல்கோட்டையில் அருள்பாலிக்கும் மூலவர் திருநாமம் திருநாராயணன். உத்ஸவர் - திருநாமம் செல்லப்(வப்) பிள்ளை. தாயார் - யதுகிரி நாச்சியார். கோயிலினுள்ளே ஸ்ரீபாஷ்யகாரர் போன்ற ஆசார்யர்களுக்கும், ஆழ்வார்களுக்கும் தனி ஸந்நிதிகள் உள்ளன. கோயிலின் வெளியே வேதாந்ததேஶிகன், மணவாளமாமுனிகள், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், குலஶேகராழ்வார் ஸந்நிதிகளும் அமைந்துவிளங்குகின்றன.

குலஶேகராழ்வார் ஸந்நிதி முன்பாக அக்கா தங்கைக் குளங்கள் ஆகிய இரண்டும் பெருங்குளமும் சிறு குளமுமாய் எழிலுடன் இணைந்து காட்சியளிக்கின்றன. கோயிலின் தீர்த்தம் கல்யாணி புஷ்கரிணீ. இது மேல்கோட்டை பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ளது. இத்திருக்குளத்தின் கிழக்கே

சுமார் 500 படிக்கட்டுகளுடன் கூடிய மலைக்கோயிலில் ஸ்ரீயோகநரசிங்கன் அருள்பாலிக்கிறார். கல்யாணி தீர்த்தத்தின் கரையில்- ஸ்ரீவராஹப் பெருமாள் ஆலயமும், ஸப்தரிஷி க்ஷேத்ரமும், ஸீதாரண்யமும், கருடன் தன் இரு கைகளுள் வலது திருக்கரத்தில் திருமண் மலையை வைத்துக்கொண்டு வாஹன வடிவில் அமர்ந்து காட்சி நல்கும். தார்க்ஷ்ய க்ஷேத்திரமும், (இது பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் உள்ளது) புவனேச்வரி மண்டபமும், அஹோபிலமடமும் உள்ளன.

இத்தலத்து எம்பெருமானை சக்ரவர்த்தித் திருமகன் ஆராதித்தபடியால் ராமப்ரியன் என்றும், செல்வபிள்ளை என்றும், ஸ்ரீபாஷ்யகாரர் டெல்லி சென்று அங்கிருந்த ஸம்பத் குமாரனை செல்லமாய்க் கூப்பிட எம்பெருமானும் மடிமீது வந்தமர்ந்த பெருமாளாகையால் செல்லப்பிள்ளை என்றும், செல்வநாராயணன் என்றும் அழைப்பர்.

இத்திருத்தலத்திற்கு யதுகுலமன்னர்கள் பூஜித்ததால் யாதவகிரி என்றும், யதிவரரான ராமானுஜர் பிரதிஷ்டை செய்ததால் யதிஶைலம் போன்ற பெயர்களுண்டு. ராமானுஜரும், வேதாந்த தேஶிகனும் இங்கே பல காலம் தங்கி கைங்கர்யம் செய்துள்ளனர். ராமானுஜர் தைப் புனர்வஸு நன்னாளில் கல்யாணிப் புஷ்கரிணிக் கரையில் அமைந்த புதரினுள் ஒளிர்ந்த பெருமானைக் கண்டெடுத்து பிரதிஷ்டை செய்தார். அந்த நினைவுப் பெருவிழா இன்றும் தை மாதம் விமர்சையாகத் திருநாராயணபுரத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏகாதசியன்று எம்பெருமான் திருவேங்கடம் உடையானாகத் திரு அநந்தாழ்வானுக்குக் காட்சி நல்கியதால் மாதமிரு முறை ஏகாதசி நாளில்; விசேஷ திருவாராதனமும், இரவில் நாச்சியார் திருமொழி பாராயணமும் நடைபெற்று வருகின்றன. சித்திரை மாதம் ராமானுஜர் பிறந்தநாள் விழா

10 நாட்கள் கொண்டாடப்பெற்று 10ம் நாள் திருநாராயணன் ராமானுஜருக்குத் தசாவதார ஸேவை தருகின்றார். இவ்வாறு ஆழ்வார் ஆச்சார்யர் உத்ஸவங் களில் திருநாராயணன் உடன் வீதியுலா வருவது சிறப்பு வாய்ந்ததும் குறிப்பிடத்தக்க செய்தியுமாகும். வைகாசி விசாகத்தில் நம்மாழ்வார் பிறந்த நாள் விழாவும், ஆடி மாதம் ஆண்டாள் திருநக்ஷத்ர விழாவும், புரட்டாசியில் தேசிகன் உத்ஸவமும், ஐப்பசியில் மணவாள மாமுனிகள், பிள்ளை லோகாசார்யர் உத்ஸவமும், கார்த்திகையில் கலியன் உத்ஸவமும் பத்து நாட்கள் கொண்ட பெருவிழாகக் கொண்டாடப்பெறுகிறது. மார்கழி மாதம் தொடங்கிய தினத்திலிருந்தே மாதம் முழுதுமாய் திருநாராயணன், யதுகிரி நாச்சியார், மலை யோகநரசிங்கன் ஸந்நிதிகளில் முறையே மூன்று முறை நாலாயிர திவ்யப்ரபந்த பாராயணம் முற்றுமாய் நடைபெறுகிறது. தைமாதம் ராமானுஜர் திருநாரணனை பிரதிஷ்டித்த நாள் விழா கொண்டாடப்பெறுகிறது. வேத புஷ்கரிணிக் கரையில்தான் வெள்ளை சாத்திக்கொண்டு திருநாராயணபுரம் எழுந்தருளிய ராமானுஜர் மீண்டும் துவராடையுடுத்திக் கொண்டார் என்பது வரலாறு. பங்குனி பிரஹ்மோத்ஸவத்தின் நான்காம் திருநாள் வைரமுடி உத்ஸவமும் நடைபெறுகிறது.

வைரமுடி ப்ரஹ்மோத்ஸவம்

விலைமதிப்பற்ற வஜ்ரமகுடத்தை முன்னிட்டே பிரஹ்மோத்ஸவம் நடத்தப் பெறுவதால் வைரமுடித் திருவிழா பெருஞ் சிறப்பு வாய்ந்த ஒன்று. **வஜ்ரமகுடி விலாஸ சம்பூ** என்னும் நூலை திருநாராயணனைக் காலங்காலமாய் பூஜித்துவந்த பெரியோரான ஸ்ரீஅளசிங்கபட்டர் எனத் திருநாமங்கொண்ட ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம வல்லுநர் தனது மேதாவிலாஸத்தால் படைத்தளித்துள்ளார். ஆண்டு தோறும் பங்குனித் திங்கள் புஷ்ய நக்ஷத்திரம் கூடிய

சுபதினத்தின் இரவு வைரமுடித் திருவிழா சீரும் சிறப்புமாய்க் கொண்டாடப்பெறுகிறது. வைரமுடியன்று காலை வைரமுடியும், சாமராஜமுடியுமாக இரண்டும் மண்டியா காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு வழிநடைப் பூஜைகளையும் ஏற்று மாலை திருநாராயணபுரம் வந்தடையும். திருநாராயணபுர எல்லையிலிருந்து பல்லக்கில் வீதி வலம்வந்து திருக்கோயிலினுள் சென்று சேரும். இரவு ஒன்பது மணிக்குத் திருநாராயணன் - வைர முடிப் புறப்பாடு கண்டருளி, மாடவீதிகள் மிகச் சிறியதாயினும் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற இடங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு காட்சி நல்கவேண்டி மெள்ள மெள்ள வீதியுலா காட்சிதந்தும் விடியற்காலை 4 மணியளவில் வாகன மண்டபம் திரும்புவார். வாஹன மண்டபம் சேர்ந்தவுடன் வைரமுடி களைந்து சாமராஜமுடி அணிவிக்கப்பெறும். மற்ற 6 நாட்கள் சாமராஜமுடியுடன் எம்பெருமானை தரிசிக்கலாம். ராஜமுடியை ராஜஉடையாரும், கிருஷ்ண ராஜமுடியை கிருஷ்ணராஜ உடையாரும் செய்து திருநாராயணனுக்குச் சமர்ப்பித்தனர். வைரமுடி கிரீடம் இவ்விரண்டு கிரீடங்களைக் காட்டில் பழமையானது. அதனை யாரால் அளிக்கப்பட்டது என்று கூற இயலாது. அதைக்குறித்து சாஸனங்களோ ரிக்காரடோ எதுவும் இருப்பதாக தெரியவில்லை. விலை மதிப்பற்ற நவரத்தனமயமானதும் ஆன இந்த மூன்று கிரீடங்களை மைசூர் அரண்மனையின் கருவூலத்தில் வைத்து அந்தந்த உத்ஸவ சமயத்தில் அவற்றை மிலிடிரி போலீசாரின் காப்போடு மேல்கோட்டைக்கு அனுப்பி, உத்ஸவம் முடிந்தபின் மைசூர் அரண்மனைக்கு திரும்பப் பெறப்படுவதாய் மேல்கோட்டை தேவஸ்தான மேன்யுவல் (பக்கஎண் 2 & 13ல் கன்னட மொழி) தெரிவிக்கின்றது.

2. சிற்பம்

2-1 அன்னாதிபதி எனும் அசோதை இளஞ்சிங்கம்

தாயாரை அன்னையார் என்றழைப்பது அன்னம் இடுவதால் தானே. அன்னம் என்பது நம் வாழ்நாளில் மிகத்தேவையான ஒன்று. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாகையால் அன்னத்திற்கு அதிபதியான அன்னையை ஆலயத்தில் வைத்துத் தொழலாயினர். அம்மரபினை இன்றும் வைணவாலய மடைப்பள்ளிகளில் நாம் காணலாம். அங்கே மடைப்பள்ளி நாச்சியாரை பிரதிஷ்டை செய்திருப்பார்கள். அன்னபூர்ணேச்வரி யையும் அன்னகோபாலனையும் அன்னாதிபதி என்றே பிரபஞ்சசாரசாரஸங்கிரஹம் என்னும் நூல் கூறுகின்றது. மந்திர சாஸ்த்திரத்திலும், பஞ்சகாலக்ரியா தீபிகையிலும் கூறப்பட்டுள்ள அன்னாதிபதியினைக் காட்டிலும் வேறான ஒரு மூர்த்தியினை ஸ்ரீவைஷ்ணவாகமங்களுள் ஒன்றான ஸ்ரீபாஞ்சராத்திரம் தெரிவிக்கின்றது. அவ்வாகமத்தினை இறைவனே ஐந்து ராத்திரிகளில் சாண்டில்யர், ஒளபகாயநர் போன்றோர்களுக்கு - உபதேசித்ததால் பாஞ்சராத்திரம் எனப் பெயர் பெற்றது. அது ஸாத்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம் போன்ற - நூற்றெட்டுச் சம்ஹிதைகளைப் பெற்றது. அந்த நூற்றெட்டுச் சம்ஹிதைகளுள் ஒன்றான பாத்ம சம்ஹிதையின் இருபத்தெட்டாம் அத்தியாயத்தில் அன்னாதிபதியின் மந்திரம், உருவம் ஆகியவை குறித்து செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இனி ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமம் கூறும் அன்னாதிபதி யினையும் மற்றும் பிற நூல்களில் குறிப்பிடப்பெறும் அசோதை இளஞ்சிங்கத்தையும் ஒருங்கே கண்டு களிப்போம்.

அன்னாதிபதி

பூர்ணேந்து பிம்பமத்யஸ்த்தே ஸிதபத்மே விகஸ்வரே।
ஆஸீனம் தவளாகாரம் நீலகுஞ்சிதமூர்தஜம் ॥

துகூல க்ஷௌமவஸநம் பாலயோக்யவிபூஷணம் ।
கலதௌத மயம் பாத்ரம் பாயஸான்னேன பூரிதம் ॥

பிப்ராணம் தக்ஷிணேஹஸ்தே தத்யோதனமதேதரே ।
த்யாயேத் லக்ஷத்ரயம் தீமாந் ஜபேத் தத்கத மானஸ: ॥

அன்னேன ஜுஹுயாச்சாக்னௌ நியதம் மந்த்ரவித்தம:।
பஹ்வன்னத்வமவாப்னோதி ஸர்வமிஷ்ட்டம் லபேத ச॥

(பாத்மஸம்ஹிதை- 28:21-24)

முழுநிலவின் நடுவில் மலர்ந்த வெண்டாமரையின் மேல் மை வண்ண நறுங்குஞ்சியோடு பாலன்ன திருமேனியுடன் பட்டாடையுடுத்தியவராய் பாலகனுக்குரிய அணிகலன்களோடு வலது கரத்தில் பொன் (அ)வெள்ளிக் கலசத்தில் பாயஸன்னத்தையும், இடது கரத்தில் தயிர்சாதத்தையும் ஏந்தியவராய், பத்மாஸனத்தில் வீற்றிருந்த கோலத்தில் அன்னாதிபதி காட்சி தருகின்றார். அவ்வாறு காட்சி தருகின்றார். அவ்வாறு காட்சி நல்கும் திருமூர்த்தியை நெஞ்சில்கொண்டு அவரது மந்திரத்தை மூன்று லட்சம் முறை ஜபித்து, அன்னத்தால் ஹோமமும் செய்யவேண்டும். அவ்விதம் செய்வதால் நிரம்ப அன்னமும் விரும்பியவை அனைத்தும் கிட்டும் என்று பாத்ம சம்ஹிதை தெரிவிக்கிறது. அன்னாதிபதியின் படம் மன்னார்குடி கும்பாபிஷேக மலர் 1995ல் இடம்பெற்ற திரு. கீ. ஸ்ரீதரன் அவர்களின் அன்னமூர்த்தி கட்டுரை, திருவரங்கம் கோயிலொழுகு ஆகிய நூல்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது.

அன்னாதிபதியின் உலோக சிற்பங்கள்

அன்னபதி, அன்னாதிபதி என்பது இம்மூர்த்தியின் ஆகமப்பெயர்கள். அன்னமூர்த்தி (அன்னாதிபதி) எனும்

பெயரில் இரண்டு உலோக சிற்பங்கள் திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் அருங்காட்சியகத்தில் இருந்ததன் குறிப்பை திருமதி R. சம்பகலக்ஷ்மி அவர்கள், 'தமிழ்நாட்டின் வைஷ்ணவ சிற்பங்கள்' என்கிற தமது ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார். (Vaishnava Iconography in the Tamil Country, by R. Champakalakshmi, year-1981, P.Nos. 190&191, T.M.S.S.M. Library Book No. E. 11255) பெரியதும் சிறியதுமாய் அஂ்து அமைந்துள்ளன. இரண்டு சிற்பங்களுள் பெரிய சிற்பம் முறையே வலது இடது கைகளில் பாயசக் குடுவை, தயிர் சாதங்களையும், சிறிய சிற்பம் முறையே தயிர்சாதம், பாயசக் குடுவைகளையும் பெற்றதாய்க் காணப்படுகிறது. சிறிய சிற்பம் ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமம் -பாத்ம சம்ஹிதை தரும் தியான சுலோகங்களின் கருத்தை அடியொற்றி அமைக்கப்பெற்றிருப்பினும் தயிர்சாதம் பாயஸக்குடுவை அமைப்பதில் சிறிதே வித்யாஸம் தென்படுகிறது. இது போன்ற ஒரு சிற்பம் கர்நாடக மாநிலம்- ஸ்ரீராமசந்த்ர ஸ்வாமி கோயிலின் தூணில் கற்சிற்பமாக அன்னமூர்த்தி அல்லது தன்வந்திரி என்ற பெயரில் அமைக்கப்பெற்றமை விஜயநகர கலைப்பாணியில் சிற்பங்கள். (Sculpture at Vijayanagara Iconography and style. P.No. 320/T.M.S.S.M. Library Book No. UG. 5507) என்னும் நூலில் காணக்கிடைக்கின்றது. குடுவைக்கு பதில் கலசம் என்பதால் இங்கே ததிவாமன மூர்த்தியோ என்ற ஐயப்பாட்டையும் அது தோற்றுவிக்கிறது. ததிவாமன, ததிபக்தஹயக்ரீவ மூர்த்திகளின் தியான விளக்கம் சதுர்விம்சதி மூர்த்தி லக்ஷணம் முதற்பகுதி 51 & 52 ஆகிய பக்கங்களில் உள்ளது. திருவரங்கம்-அரங்கநாதர்- கோயில் அருங்காட்சியக அன்னமூர்த்தி உலோக சிற்பங்களின் காலம் 12 ஆம் நூற்றாண்டாகலாம். 14ம் நூற்றாண்டுகளுக்கு முன்பாக அன்னமூர்த்தி-யினுடைய கோயிலின் மேலுள்ள மாருதிக் கோயிலை இரண்டாம் தேவராயரின் சமகாலத்தவரும்

உத்தமநம்பியின் உடன்பிறப்பாளருமான சக்ரராயர் திருப்பணி செய்துள்ளார் என்பதும் திருமதி R.சம்பகலக்ஷ்மி அவர்களது நூலின்பால் அறியமுடிகிறது.

கல்வெட்டில் அன்னாதிபதி

அன்னாதிபதியைக் குறிப்பிடும் கல்வெட்டொன்று திருவரங்கம் அரங்கநாதர் கோயில் அமைந்துள்ளது. தென்னிந்தியக் கோயில் சாஸனங்கள் தொகுதி 24ல் ப. எண்.490, எண். 507ல் அது பதிவாகியுள்ளது. மடைப்பள்ளி நாச்சியாருக்குப் பதிலாக அமையப் பெறும் அன்னாதிபதிக்கு கல்வெட்டில் 'அன்னாதி எம்பெருமானார்' எனப் பெயரிடப்பட்டுள்ளது

ஒவ்வொரு பிரம்மோத்ஸவத்திலும் முதல் நாள் கொடியேற்றும் போது, கொடியேற்றம் நடந்தபின் பெருமாள் 'அன்னாதி எம்பெருமானார்' கோயிலுக்கு எழுந்தருளி கொடியேற்றுக்கட்டளை தோசை அமுதுபடி செய்வது வழக்கம். கொடியேற்று மண்டபத்தின் பின்புறம் அன்னாதி எம்பெருமானாரின் சிதையுண்ட பழைய திருஉருவம் கல்வெட்டுகள் பொறித்த சுவற்றோடு ஒட்டி காணப்படுகிறது. அன்னாதி எம்பெருமானாரைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் அரங்கனின் ஊஞ்சல் மண்டபத்தில் காணக் கிடைக்கின்றன.

அன்னாதி எம்பெருமானார் கல்வெட்டு

பாண்டியகுலாசனி வளநாட்டு விழாவறாவீதி வளநாட்டு திருவரங்கத் திருப்பதி பெருமாள் ஸ்ரீரங்கநாததேவர் ....திருக்கொடி ஏற்றுக்கட்டளை பெருமாள் அன்னாதி எம்பெருமானார் கோயில் ஏறி அருளி அமுது செய்தருளும் தோசைப்படி பொலிசைக் கல்வெட்டு இது. காலம்: சகம் 1510+78=1588 AD ஆகும்.

தற்போது அற்புதச் சிலை வடிவாய்க் காட்சி தருபவரும் அரங்கனின் மடைப்பள்ளி வாசலிலேயே அருள்பாலிப்பவரும் ஆன அன்னாதி எம்பெருமானார் புது அன்னாதிபதி ஆவார். அன்னாதிபதியின் இடது கரத்தில் தயிர் சாதம் விளங்குவதைக் காண்கின்றபோழ்து ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ள .... வாமே பாணௌ மஸ்ருண கபளம் (10-13-11) என்ற சொற்றொடர் நினைவிற்கு வருகின்றது. ஸ்ரீமத் பாகவதத்தின் நாயகன் ஸ்ரீகிருஷ்ணனான அசோதை இளஞ்சிங்கமன்றோ! அந்த அசோதை இளஞ்சிங்கம் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

அசோதை இளஞ்சிங்கம்

அன்னாதிபதியின் தியான சுலோகத்திலுள்ள பாலயோக்ய விபூஷணம் என்னும் சொற்றொடரை அடிப்படையாகக் கொண்டு லீலாசுகர். ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதத்தின் வாயிலாக அசோதை இளஞ்சிங்கத்தை நம் கண்முன்னே வர வழைக்கும் காட்சி மிகவும் அற்புதமான ஒன்று. கண்ணனின் பால லீலை என்றும் தெவிட்டாதது. அவற்றுள் அவன் பாயஸம் பருகும் பாங்கு பார்ப்போர் கண்களுக்கு விருந்து அவனது லீலையை ஆழ்ந்தனுபவித்த பில்வமங்களர் என்ற லீலாசுகர் (கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) தமது நூலான ஸ்ரீகிருஷ்ணகர்ணாம் ருதத்தில் -

பாணௌ பாயஸ பக்தமாஹிதரஸம் பிப்ரன் முதா தக்ஷிணே
ஸவ்யே சாரத சந்த்ர மண்டல நிபம் ஹைய்யங்கவீநம் ததத் |
கண்டே கல்பித புண்டரீக நகமப்யுத்தாம தீப்திம் வஹன்
தேவோ திவ்ய திகம்பரோ திசது ந: ஸௌக்யம் யசோதா சிசு: ||

(சு-எண்-2.74)

கண்ணன் தன் வலது கரத்தில் பாயஸான்ன பாத்திரத்தையும், இடது கரத்தில் சரத்கால

(ஐப்பசி-கார்த்திகை மாதங்களில் தோன்றும்) திங்களொளிக்கொப்பான வெண்ணெய்யையும் கொண்டவராய்க் கழுத்தில் அணிகலன்களோடும், திசைகளையே ஆடையாகக்கொண்டு (ஆடையற்ற நிலையில்) பாலலீலை புரிந்தான். அந்த அசோதையின் மைந்தன் நமக்கு சௌக்யத்தைக் கொடுக்கட்டும் என்று தோத்தரித்துள்ளார்.

லீலாசுகர் அன்னாதிபதியை கண்ணனாகவே கண்டு போற்றியுள்ளார். ஆகவே அத்திருவுருவம் அன்னாதிபதி என்ற பெயருடன் திகழ்கின்ற போதிலும் ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதத்தின் துணையோடு நோக்கினோமாகில் அவ்வுருவம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் பால லீலையை நினைவில் தருகின்றது.

மண்ணுண்டும் பேய்ச்சிமுலை யுண்டும் ஆற்றாதாய்
வெண்ணெய் விழுங்க வெகுண்டு - ஆய்ச்சி கண்ணிக்
கயிற்றினால் கட்ட தான் கட்டுண்டிருந்தான்
வயிற்றினோடாற்றா மகன். *(நான்முகன் திருவந்தாதி)*

என்கிறபடியே திருமகள் கேள்வனான திருநாராயணன் நல்லோர்களைக் காக்க, தீயோர்களை ஒடுக்க புரிந்த பற்பல அவதாரங்களில் பெரிதும் அனுபவித்து மகிழத்தக்கது ஸ்ரீ கிருஷ்ணாவதாரம். கிருஷ்ணன் சிறிய குழந்தையாய், பாலலீலையாக மண்ணையுண்டு அசோதைக்கு அகில உலகினையும் அவன் வாயில் காண்பித்து, வஞ்சனை செய் பூதனையை மாய்த்தான். பேய்மாய முலையுண்டிவ்வுலகுண்ட பெருவயிற்றாளன் அல்லவா! இன்னமும் போதவில்லை போலும். ஆகவே கோவலனாய் வெண்ணெய்யைக் களவாடி விழுங்கும் அசோதைகண் சிங்கம், ஊரார்களெல்லாரும் காண உரலோடு ஆய்ச்சி கண்ணிக் கயிற்றினால் கட்ட, தான் கட்டுண்டிருந்தான். வெண்ணெய்யைக் களவாடி

உண்ணும் கண்ணனின் திறத்தை அனுபவித்த-ஸ்ரீநாராயணதீர்த்தர், கண்ணனைச் "சோரசிகாமணி" என்றே பரவிப் புகழ்ந்தார்.

பாலகிருஷ்ண தியானம்

தஞ்சை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ள சதுர்விம்சதி மூர்த்தி லக்ஷணம் ப.எண். 48ல் பாலகிருஷ்ண தியானம் கொடுக்கப்பட்டுள்ளது.

(யசோதாம்?) பாலகிருஷ்ணம் ச நீலேந்தீவர ஸந்நிபம் |
ரத்னாபரண ஸந்தீப்தம் த்விபுஜம் நீலகுந்தலம் ||
பாயஸம் நவநீதம் ச கராப்யாம் தததம் ஸ்மரேத் ||

கருநெய்தல் மலரைப் போன்று பிரகாசிப்பவரும், ரத்னாபரணங்களை அணிந்துவிளங்குபவரும், இரு கரங்களுடன் காட்சி தருபவரும் கருங்கூந்தலை உடையவரும், திருக்கண்ணமுது, வெண்ணெய் ஆகியவற்றைத் தனது இரு கைகளில் பெற்றவருமான யசோதை பாலகிருஷ்ணனை மனத்தினால் நினைக்க வேண்டும் என்பது தியான சுலோகத்தின் பொருள்.

இந்த தியானத்தின் அடிப்படையில் அன்னாதிபதியை அசோதை இளஞ்சிங்கம் என்று அழைக்கலாம் என்பது உறுதியாகிறது.

அரிய உருவாம் அன்னாதிபதி எனும் அசோதை இளஞ்சிங்கத்தை அன்னாதி எம்பெருமானார் என்ற பெயரையுடைய சிலாமூர்த்தியை திருவரங்கம், திருவெள்ளறை ஆகிய திவ்யதேசங்களின் மடைப் பள்ளியில் இன்றும் நாம் கண்டு மகிழலாம்

2-2 அரங்கனின் இரத்னாங்கி ஓர் ஆய்வு

திருவரங்கம் அரங்கநாதரின் பல்வேறு விழாக்களுள் ஒன்று அத்யயன உத்ஸவம். மார்கழி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசியை மையமாகக் கொண்டு இவ்வுத்ஸவம் கொண்டாடப்பெறுகிறது. இதில் வைகுண்ட ஏகாதசி யன்று அரங்கநாதர் ரத்னாங்கி சாத்திக் கொண்டு ஸேவை ஸாதிக்கிறார்.

ரத்னாங்கி போன்ற அணிகலன்கள்

சுபமஸ்து ! ஸ்வஸ்தி ஸ்ரீ சகஹாயனே கநிசயே* ஸித்தார்த்தி ஸம்வத்ஸரே
சண்டாம்சாவளி ஸங்கேத புததினே ஸ்ம்சோபிதே சித்ரயா ।
ஸ்ரீமான் முத்தளகாத்ரி பூபதிமணி ஸ்ரீவிச்வநாதான்வயீ
ரங்கேசஸ்ய ரவிப்ரபம் ஸமதனோத் ரத்னாஞ்சிதம் கஞ்சுகம் ॥ 1

ரங்கேசம் மணிகஞ்சுகேன து யதா ரங்கேண துங்கச்ரியா
ஆபாதாம்புஜமௌலி முத்தளகிரி க்ஷோணீச்வரோऽபூஷயத் ।
ஆவிர்பூரி குணைஸ்ததா நிஜயசோ முக்தா கலாபைர் த்ருடை-
ராபாதான விரிஞ்சஸௌதசிகரம் லோகானசேஷானபி ॥ 2

ஹைமச்சத்ரம் (ச) பீடமணி மகுட துரா கஞ்சுகா ஸ்கந்தபீம -
ஹாரோ மாணிக்க வேத்ரம் சுபக- கமயந் நிஷ்கமப்ஜாகிரீடம் ।
கோசோ வ்யாகோச பூதி: ச்ருதிஸமய சுபம் மண்டபம் ம்ருஷ்டமன்னம்
நைவேத்யம் லக்ஷவ்ருக்ஷோபவன கனக ஸ்நான பாத்ரீவிசேஷாம் ॥ 3

ஏதத் ஸர்வ மசேஷலோகவிதிதம் வாதூல சூடாமணே-
ராசார்யஸ்ய மஹாசிஷா ஸமுதயன் ஸ்ரீவிச்வநாதான்வயீ-
ஸ்ரீ முத்தளகாத்ரீ பூபதிமணி: ஸ்ரீரங்கப்ருத்வீபதே:
வ்யாதன்வன் நிஜபூதிபிர் விஜயதேஸாகம் ஸமா: சாச்வதீ: ॥ 4

(AR.No. 31 of 1938-39 & Ins. No. 555 - A.R.No. 27 of 1938-39)
(Ref. South Indian Inscription & Vol. XXIV - P.No. 537-538)

---

*கடபயாதி ஸங்க்யைகொண்டு ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடபயாதி ஸங்க்யைக்கு யதிராஜவிஜயம்(P.No. 43) சரசுவதி மகால் தஞ்சாவூர் வெளியீடு காண்க.

விபவ சம்வத்ஸர சைத்ர பகுளலு ஸ்ரீரங்கநாயகுலகு ஸ்ரீரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயனய்யனவாரி தேவுலைன முத்தம்மகாரு ஸமர்ப்பிஞ்சின க்ரீடராஜ*

அச்சுதப்பநாயக்கரின் கொடைகள்

1. சங்கீத சுதாவில் ரகுநாதநாயக்கனின் குறிப்பு:

ரங்கேசிதுர் திவ்யமஸௌ விமானம்
ஹிரண்மயம் ரத்னமயம் கிரீடம் |
மணிமயம் வர்ம ச நிர்மிமீதே
ஸிம்மாஸனம் ஸ்ம க்ஷிதிபாலஏஷ: || 38

தஸ்யைவ பூர்வோத்தர பச்சிமானி
ஸகோபுராண்ய ப்ரதிம ப்ரபானி |
ப்ராகாரமப்யஷ்டமமாதனிஷ்ட
மகானஸம் சாபி மஹாமகேந்த்ர: || 39

லக்ஷ்ம்யாச்ச ஸர்வாண்யபி மண்டபானி
திவ்யானி ரத்னா பரணான்யதானீத் |
ஆரோகமார்கம் ச மருத்வ்ருதாயாம்
அலங்க்ரியா பாவ முபேயி வாம்ஸம் || 40

ஆராமஸீமாமபி ரங்கபர்த்து:-
கிராமானனேகானபி ஸம்வ்யதானீத் |
தானம் துலாபுருமச்யுதேந்த்ரோ-
ஹிரண்யகர்பம் ப்ரதி வர்ஷமேவ || 41

ஹேமாத்ரி கல்பே கதிதானி ஸம்யக் |

Ref. 1) S 953. P.No. 3, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் நன்றி 2) தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு, P.No. 135.

2. ரகுநாதாப்யுதயத்தில் ராமபத்ராம்பாவின் குறிப்பு:

அபத்யபாவேன தயோரவன்யாம்-
அஜாயதாம்போஜதளாக்ஷ ஏவ |
அநேகஜன்மார்ஜித பாக்ய ராசி:-
ஆகாரவான் அச்யுத பூமிபால: ||

விதாய ஹேம்னா ருசிரம் விமானம்-
ரத்னை சிரத்னைரபிரங்கதாம்ன: ।
கிரீடராஜம் ச க்ருதிம் சகார -
சிம்மாஸனம் சாபி ஸ ராஜசிம்ம: ॥ *(ஆறாம் சர்கம் 12-13)*

3. <u>சாகித்ய ரத்னாகரத்தில் யக்ஞநாராயண தீக்ஷிதரின் குறிப்பு:</u>

அனர்க ரத்னாங்கித மேஷ பூஷணம்-
விதீர்ய ரங்காதிபதேர் விசாம்பதி: ।
அனுத்தமம் ரத்னம் மமுஷ்ய கௌஸ்துபாத்
பரம் ந ஹீதி ப்ரணுனோத துஷ்ப்ரதாம் ॥
ததர்ப்பிதான்யாபரணாணி ஸாதரம்
சயத்வ யேனேவ சகாஸ்தி தர்சயன் ।
கிரீட மஞ்ஜீர முகானி பக்தயோ:
ஸரங்கராட் நாரத ராக்ஷஸேந்த்ரயோ: ॥
அலங்க்ரியா ப்ரேம யதப்தி கன்யகா-
விபோ: ப்ரஸித்தம் ததயம் விசாம்பதி: ।
அமுஷ்ய ரங்காதிபதேஸ் ஸமர்ப்பயன்
அபூரயத் பூரி விபூஷனானி ஸ: ॥
மகாக்ரஹாரான்கலயன் மஹீதலே-
ந்ருபால மௌலிர் நிஜநாம முத்ரிதான் ।
பிரகாச தேஸ்ம ப்ரதி சுக்ரவாஸர-
ப்ரவர்த்தி தாம்போஜ முகீ பரிக்ரஹ: ॥
அஸாவதாஸாதயதச்யுதாதிபோ-
முதா கதாசித் ஸ து மூர்த்தி மாம்பயா ।
நிரந்தர ஸ்யந்தி மரந்த நிர்வ்ருத-
த்விரேபமந்த: புர கோகிலாவனம் ॥

(சர்கம் ல். சு. எண். 47-51)

<u>4&5. ரகுநாதநாயக, நாதாப்யுதயங்களில் காணப்படும் - குறிப்புகள்</u>

நச்யு தேந்த்ருண்டு வாரிகாத்மஜுண்டகுசு
நச்யு துண்டீ தண்டெயனி ஜனுலென்ன
ரங்கதாமுனகு ஸ்ரீரங்கம் புனந்து

பங்காரு ஸஜ்ஜலும் ப்ராகாரமுலனு
ரங்கு மீரு கிரீடராஜம்பு மெளலி
ச்ருங்காரவனமுலும் ஜெலுவொந்தம் ஜேஸி ...

(**4க்கு** - P.No.10& **5க்கு** - P.No. **7**)

6. ராஜகோபால விலாஸத்தில் காணப்படும் குறிப்பு:

ஸ்ரீரங்கபதிகினி ஸிம்மாஸனம்புநும்
ப்ரணவமயம்பகு பஸிண்டிஸஜ்ஜ -
மஷ்டம ப்ராகாரமதுல கோபுரமுலு
ரத்னாங்கத கிரீடராஜமபயஹஸ்த
முன்சைத்ர ரதாரோஹணோத்ஸவம்
பாராமுலனு ம்ருஷ்ட்டான்ன சால
லர்ச்சக கோடிகினி நக்ரஹாரம்புலு
விவித நாட்யமுலு நைவேத்யமுலனு
தானமர்ப்பிஞ்சி தத்ஸந்நிதானமந்து
நதுல முக்தாதுலா ப்ருஷோத்தந வீதத்திம்
ஜேஸேனு ஜகமெல்ல விநுதிநேய சின்ன
செவ்வயயச்யுத க்ஷிதிபருண்டு (Tel-146-S.M.L. P.No-16)

அச்சுதப்ப நாயக்கரின் கொடைகளைப் பற்றிய குறிப்புகளுள் 'மணிமயம் வர்ம ச நிர்மிமீதே' **(ச்லோக. 38)** என்கிற ரகுநாதநாயகனின் ஸங்கீத ஸுதா குறிப்பினைத் தவிர மற்ற ராமபத்திராம்பா இயற்றிய ரகுநாதாப்யுதயம், "அனர்க-ரத்னாங்கித-மேஷ பூஷணம்" என்ற ஸாஹித்ய ரத்னாகரச் சொற்றொடர், தெலுங்கு ஸாஹித்யமான "ரங்குமீரு கிரீடராஜம்பு" என்ற ரகுநாதாப்யுதய, ரகுநாதநாயகாப்யுதயங்களின் சொற்றொடர், "ரத்னாங்கத கிரீடராஜம்" என்ற ராஜகோபால விலாஸ சொற்றொடர் ஆகியவற்றிலும் தஞ்சை அச்சுதப்ப நாயக்கர் கொடையாக திருவரங்கனின் ரத்னாங்கி பேசப்படவில்லை என்பது தெளிவு.

கிரீட-ரத்ன-கவசோஷ்ணீஷாத்யாபரணார்ப்பணை: |
ப்ரீத ரங்கேசகருணா ஸஞ்ஜாத பஹு ஸம்பத: ||

'கிரீடம், ரத்னகவசம், தலைப்பாகை முதலான அணிகலன்களை அரங்கனுக்கு அர்ப்பணித்து, அரங்கேசனின் அருள், கருணை ஆகியவற்றால் செல்வந்தனானவன் என குமாரகிருஷ்ணப்பநாயக்கரின் மெய்கீர்த்தி (காலம் 1522 ஆம் சகம்+78= 1600 ஆம் ஆண்டின் நந்திநாகரிச் செப்பேடு இதுவரை வெளிவராதது) கூறும் துறைசை ஆதீன 'துவரிமான்' நிலதானச் செப்பேட்டுச் சொற்றொடரின் அடிப்படையிலும், 'குமார கிருஷ்ணப்பரும் ராஜ்யம் பண்ணுகையில் ஸ்வாமிக்கு ரத்னாங்கி, ரத்னகிரீடம் முதலானது லக்ஷத்து ஐம்பதினாயிரம் பொன் கைங்கர்யம் அந்த நரஸிம்ஹ தேசிகரைக்கொண்டு ஸமர்ப்பித்தார் என்கிற கோயிலொழுகின் (T.M.S.S.M.Library,Tanjore P.No. 79, T. 10512, புத்தூர் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பதிப்பு, உறையூர், திருச்சி.) ஆதாரத்தினாலும் 1987ல் கோ. முத்துஸ்வாமி I.A.S., ஓய்வு, அவர்கள் எழுதிய 'அரங்கநாதர்கோயில்' என்ற நூலின் 'கிருஷ்ணப்ப நாயக்கரால் ஒரு கிரீடமும், வைரங்கள் பதிக்கப்பெற்ற அங்கியும் அளிக்கப்பெற்றன' என்கிற குறிப்பாலும் மதுரை நாயக்கர் வழிவந்த இவ்வரசரின் கொடையாக திருவரங்கனின் ரத்னாங்கி அமையலாம் என்று முடிவு செய்ய நேர்ந்தது. இந்நிலையில் S.R. பாலசுப்ரமண்யம் அவர்கள் இயற்றிய 'பிற்காலச் சோழர்கோயில்கள்' (T.M.S.S.M Library, Tanjore. E.No. 9180, Later Chola Temples, P.No. 446) என்ற நூலும் அதனுள்ளிருந்த ரத்னாங்கிபடமும் (Pls. 413) தென்பட்டன. பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் பதிவாகியிருந்த திருவரங்கம் - அரங்கநாதர்- ரத்னாங்கியின் பகுதியான கீழ்ப்பகுதி அங்கி - இடுப்புப்பட்டையில் சில சொற்றொடர்கள் காணப் பட்டதால் அது குறித்த ஆய்வே, தீர்வுக்கு வழியென

எண்ணினேன். அதன் ஆய்வுக்கு துணைநின்ற எனது மாணாக்கரும், நண்பருமான திருவாளர் நரேந்திரன் அவர்களுக்கும், T.M.S.S.M.L. Tanjore, துறைசை ஆதீனம், French Institute of Indology ஆகியவற்றிற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவரங்கம் அரங்கநாதர் திருக்கோயில் ரத்னாங்கியின் மேற்பகுதி அங்கி, கீழ்ப்பகுதி அங்கி ஆகியவற்றின் இணைப்பான இடுப்புப் பட்டையில் பொறிக்கப்பட்டுள்ள சொற்றொடர்கள் கீழ்வருமாறு மொத்தம் ஐந்து வரிகளாகக் காணக்கிடைக்கின்றன.

வரி (1) ஸ்ரீராணிமங்கம்மாள் நாளில் செய்த இந்த ரத்ன கவசங்கள் (ஜீர்ணமாயிருந்ததால்?) வரி (2) ஸ்ரீரங்கம் கொவலகுடி சிங்கமய்யங்கார் அவர்கள் த்ரவ்யத்திலும் சில (பக்தர்கள்?) வரி (3) ஸமர்ப்பித்ததையும் சேர்த்து ஷை தேவஸ்தானம் தங்கவேலை மிராசு (ரங்கசாமி ஆசாரியரால்?) வரி (4) புதுதாய்ச் செய்யப்பட்டது. வரி(5) 12.2.1911.

இருப்பினும் சில சொற்கள் முழுமையாகப் படிக்க இயலாது இருக்கும் நிலையில் இந்த செய்தி 2010 ஆம் ஆண்டு வைகுண்ட ஏகாதசியின் மறுநாள் வெளிவந்த ‘நூறாண்டு பழமையான ரத்தின அங்கி’ எனும் பெட்டிக் குறிப்பில் (தினமணி, சனிக்கிழமை, பக்க எண்-4, 18/ 2010) ரத்னாங்கியின் வாசகம் இடம் பெறவில்லை.

ஆனால் அது ஸ்ரீராணி மங்கம்மாள் (கி.பி. 1689- 1706) நாளில் செய்தது என்று அவ்வணிகலனில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தபடியால் ரத்னாங்கியின் வாசகம் பின்வரும் ஆய்வாளர்களுக்குப் பயன்படும் என்ற முடிவோடு அ(றி)ரிய செய்தியாக இங்கே கொடுக்கப்படுகிறது.

2-3 ஆனைக்கருளிய ஆதிமூலம்

(நத்தம் ஆதிமூலப் பெருமாள் திருக்கோயில்)

மூலமே என்ற கரிமுன் வந்திடர் தொலைந்து
நீலமேகம் போல நின்றானை - பாலாய
வேலை நடுவில் துயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதென் வாய்.

(அஷ்டப்பிரபந்தம்-திருவேங்கடமாலை - காப்புச்செய்யுள்)

முதலையின் வாயில் அகப்பட்ட யானை, தன்னைக் காக்குமாறு ஆதிமூலமே என்று அலறி அழைக்க, அதன் வருத்தத்தை நீக்கி அருள் செய்தார் திருமால். இவ்வாறு ஆனைக்கு அருள் புரிந்த தலங்கள் தமிழகத்தில் அனேகம். அவற்றில் மிகச் சிறப்புடன் திகழ்கிறது நத்தம் எனும் தலம். இங்கே, பெருமாள் சயனகோலத்தில், ஆனைக்கு அருள்புரிந்தவராகக் காட்சி அளிப்பது மிகவும் சிறப்பான ஒன்று.

திருச்சி, லால்குடிக்கு அருகே உள்ளது நந்தை அல்லது நத்தம் எனப்படும் சிற்றூர். லால்குடியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. நந்தை என்பதே ஸ்ரீநந்தையூர், நத்தம், நத்தமாங்குடி என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இங்கே பிரவகிக்கும் நந்தியாறு சிறப்பான இடம் வகிக்கின்றது.

நந்தியாறு : இது கங்கைக்கு ஒப்பான புண்ணிய நதி, இதற்கு ஒரு கதையும் உண்டு. பெரம்பலூருக்கு அருகில் தோன்றி, தென்கிழக்காக ஓடிக் கொள்ளிடம் ஆற்றில் சேரும் சிறுநதி நந்தியாறு. பெரம்பலூர் அருகே, ஊட்டத்தூர் என்னும் இடத்தில் இந்த நதி மிகவும் தூய்மையானதாகக் கருதப்பட்டுள்ளது. காவிரி நதியில் எலும்புகளைப் போடுவது போல ஊட்டத்தூரிலுள்ள நந்தியாற்றிலும் போட்டிருக்கிறார்கள். ஒரு முறை

அந்தணர் ஒருவர் எலும்புகளை காசியில்- கங்கை நதியில் விட எடுத்துச்செல்லும்போது, ஊட்டத்தூர் நந்தியாற்றங்கரையில் ஓர் இரவு தங்கினார். மறுநாள் காலை எலும்புகள் அனைத்தும் ஒன்றாகி லிங்க உருவாய் காட்சி தந்தனவாம். அங்கிருந்து சற்று தொலைவு நடந்து சென்று, பின் மீண்டும் பார்த்தபோது அவை முன்னர் இருந்தவாறே எலும்புகளாகப் பிரிந்து இருந்தனவாம். இதன்மூலம் இந்த தலம் மற்றும் நதியின் பெருமை அறிந்து அனைவரும் வழிபட்டனராம்.

நத்தம் மற்றும் மாங்குடி என்ற இரு ஊர்களின் நடுவே பாயும் நந்தியாறு இவ்விரு ஊர்களையும் பிரித்துக் காட்டுவதாக திருச்சி மாவட்ட வரலாறு தெரிவிக்கின்றது. புனிதம் வாய்ந்த இந்த நந்தியாறு பாயும் இடத்தில்தான் ஸ்ரீநந்தை எம்பெருமான் ஆதிமூலப்பெருமாள் அருள்பாலிக்கின்றார்.

ஆதிமூர்த்தி நாயனார் திருக்கோயில் : இக்கோயிலின் பெயர் நத்தம் ஆதிமூலப்பெருமாள் திருக்கோயில். கோயிலில் பள்ளிகொண்டபெருமாள் ஆதிமூலப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார். தாயார் - ஆதிலெக்ஷ்மி. கோயிலின் எதிரே அமைந்துள்ள புஷ்கரிணிக்கு கஜேந்திர தீர்த்தம் அல்லது சக்கரதீர்த்தம் என்று பெயர். ஆறு நந்தியாறு. இக்கோயிலில் ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி தென்கலை மரபைச்சார்ந்து பூஜைகள் நடைபெறுகின்றன. இந்து அறநிலையத்துறையின் கீழ் இயங்கிவரும் இக்கோயிலில் ஊர் அன்பர்கள், உபயதாரர்கள் போன்றோரால் சித்ரா பௌர்ணமி, ஸ்ரீராமநவமி கிருஷ்ணஜெயந்தி, நவராத்திரி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி முதலிய திருவிழாக்களும், மாசிமாத பிரம்மோத்ஸவமும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

திருக்கோயிலுக்கு வெளியே பலிபீடம் உள்ளது. அதைக் கடந்து பெரியதிருவடி கருடாழ்வாரை தரிசித்து, பிறகு உள்ளே சென்றால், நம்மை வரவேற்கிறது ஒரு சிறு கோபுரவாசல். அதற்கு அப்பால் கோயிலின் முன்மண்டபம், அதையும் கடந்து உள்ளே சென்றால் வரலாற்றை விவரிக்கும் கல்வெட்டுகள். அவற்றுள் அங்குள்ள மகாமண்டபத்தை 'தாயிலும் நல்லான் திருமண்டபம்' என அறிமுகப்படுத்தும் கல்வெட்டு ஸ்ரீஆதிமூலப்பெருமாள் கோயில் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவர் வாயிலின் வலப்பக்கம் உள்ளது.

தாயிலும் நல்லான் திருமண்டபம் : கோயிலின் விமானத்தையும் இதன் முன்னுள்ள திருமண்டபத்தையும் பார்ப்பனங்கிழான் செந்தாமரைக் கண்ணனான மழவராயர் கட்டியுள்ளார். அதை 'இந்த ஸ்ரீவிமானமும் தாயிலும் நல்லான் திருமண்டபமும் செய்வித்தான் பார்ப்பனங்கிழான் செந்தாமரைக்கண்ணனான மழவராயன்' என்று கல்வெட்டு எடுத்துரைக்கிறது. எனவே, ஆழ்வார் ஆசார்யர்கள் எழுந்தருளியிருக்கும் திருமண்டபம் 'தாயிலும் நல்லான் திருமண்டபம்' என்று அழைக்கப்பட்டு வந்தது. தாயிலும் நல்லான் என்பது மூன்றாம் குலோத்துங்கனின் பட்டப்பெயர். அதுவே மூன்றாம் ராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் 'செந்தாமரைக் கண்ணன் திருமண்டபம்' எனும் பெயரால் விளங்கிற்று.

நத்தம் ஸ்ரீஆதிமூலப்பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக ஸ்ரீவரதராஜர் உத்ஸவமூர்த்தியாக அருள்பாலிக்கிறார். கருவறையில் சேவை சாதிக்கும் மூலவர் திருநாமம் பள்ளிகொண்ட ஆதிமூலப்பெருமாள்,

பள்ளிகொண்ட ஆதிமூலப்பெருமாள் : கருவரையில் சயனத் திருக்கோலத்தில் தரிசனம் தரும் மூலவர்,

தென்திசை முடியை வைத்து, வடதிசை பாதம் நீட்டி, மேல்திசை பின்பு காட்டி, கீழ்த்திசை முகமாய்க் கொண்டு காட்சி தருகின்றார்.

நாகமூர்த்தி சயனமாக, கிடந்த கோலத்தைத் திருமழிசை ஆழ்வார் **நாகத்தணைக் குடந்தை வெஃகா திருஎவ்வுள் நாகத்தணை அரங்கம் பேரன்பில் - நாகத்தணைப் பாற்கடல் கிடக்கும் ஆதிநெடுமால், அணைப் பார் கருத்தனாவான்** (நா.திருவந்தாதி 36) என்றபடி நான்முகன் திருவந்தாதியில் தொகுத்துப் பாடியது போல திருப்பேர் நகரில் அருள் பாலிக்கும் ஆதிநெடுமாலைப் போன்றே, இங்கும் மேல் நோக்கிய இடது கரம் அபயமுத்திரை காட்டியபடி, ஆதிமூலமே என அழைத்த,

> **"இலையார் மலர்ப்பூம்பொய்கைவாய்**
> **முதலை தன்னால் அடர்ப்புண்டு**
> **கொலையார் வேழம் நடுக்குற்றுக்குலைய**
> **அதனுக்கருள் புரிந்தான்."** (பெரியதிருமொழி 8-6-7)

முதலை கவ்விய யானையினை அருகில்கொண்டு, யானையின் மத்தகத்தில் தன் வலது கையினை வைக்கப் பெற்றவராய், நாகமூர்த்தி சயனமாய் ஆதிமூலப் பெருமாள் கருவறையில் அருளாசி புரிகின்றார். அருமை பல வாய்ந்த இந்தத் திருக்கோலம் கோவிலடி திருப்பேர் நகரில் அருள்பாலிக்கும் அப்பக்குடத்தான் பெருமாளை நம் கண் முன்னே நிறுத்துகின்றது. இந்த ஆதிமூலப் பெருமாளுக்கு விற்ற நிலப்பகுதி ஒன்றின் பெயர் 'ஆதிமூல விளாகம்' என்பதாகும்.

அன்பில் திவ்யதேசத்திலிருந்து வடகிழக்குத் திசையில் நத்தம் ஆதிமூலப்பெருமாள் கோயில் அமைந்திருக்கிறது. அக்கோயிலில் இருந்த

இரண்டாயிரவன் திருமாளிகை எனும் திருநடை மாளிகை சுவடின்றி அழிந்துவிட்டது. என்பதை திருக்கோயில் தல வரலாறு எடுத்துரைக்கிறது.

இந்த நத்தமாங்குடி புள்ளம்பாடியிலிருந்து 7 கி. மீ. தொலைவிலுள்ளது. இவ்வூரை பின்னவாசல், ஆலங்குடி மகாஜனம் வழியாகவும், வளவனூர் வெங்கடாசலபுரம் வழியாகவும் சென்றடையலாம்.

2-4 கண்ணன் காட்சிதந்த கனகதாசர் ஜன்னல் (உடுப்பித் திருத்தலம்)

பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறலடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரலிடை யாப்புண்டு
எத்திரம் உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவே

(நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி).

பக்தர்களின் வேண்டுகோளுக்கு இறங்கிவருபவன் கண்ணன். அவனது பெருமைகளை மேலே கூறப்பட்ட பாடல் நன்கு விளக்குகின்றது. இருப்பினும் அவ்வெம்பெருமானின் அடியவர்க்கு இறங்கும் திறம் எத்தகையது என்பதை பக்த கனகதாசர் என்னும் கண்ணனின் அடியாரைக் கொண்டு நாம் அறிந்து மகிழ்வோம்.

கனகதாசர் என்பவர் கி.பி. 1508-ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த "தார்வாட்" என்னும் மாவட்டத்தில் "பாட" எனப்படும் சிற்றூரில் பிறந்தார். இவரது பெற்றோர் பச்சம்மாள் வீரப்பன் தம்பதியினர்.

கனகதாசரின் இயற்பெயர் திம்மப்பன் ஆகும். தந்தைக்குப்பின் திம்மப்பன் தந்தையார் வகித்த குறுநில மன்னர் பதவியை ஏற்றார்.

அப்போது அவருக்கு கனகாதிகள் (பொன் முதலியன) நிரம்பிய புதையல் ஒன்று கிடைத்தது. புதையல் கண்டெடுத்ததால் திம்மப்பனுக்கு கனகநாயகன் எனப்பெயர் வந்தது. புதையல் மூலம் கிடைத்த பொன் முதலான பொருட்களைக்கொண்டு கனகநாயகன் 'காகிநெலெ' என்னுமிடத்தில் ஆதிகேசவனுக்கு கோவில் ஒன்றை நிறுவினார். அந்த ஆதிகேசவனுக்கு அடிமைத் தொழில் புரிவதும், அவனுடைய திவ்யநாமத்தை ஓதியுகப்பதும் அவரது தலையாய கடமையாய் இருந்தது. அரச இன்பத்தை அறவே மறந்தார். கனகமும் கண்டெடுத்து கண்ணனுக்கே அடிமையும் பூண்டதால் திம்மப்பன் 'கனகதாசர்' என்று அழைக்கப்பட்டார்.

ஆதிகேசவனும் ஒருநாள் கனகதாசரின் கனவில் காட்சி நல்கி 'வியாசராயரின் சீடனாகுக' என்று கட்டளையிட்டார். அம்மொழி கேட்டு வியாசராயரின் சீடராகி அவரது அனுமதியோடு திருத்தலப்பயணத்தையும் மேற்கொள்கிறார். அவர் பயணம் மேற்கொண்ட தலங்களுள் உடுப்பி என்பது மிகச்சிறப்பு வாய்ந்தது.

அடியவர்க்கு இறங்கும் எளிமையன்

கண்ணனின் தலமான உடுப்பிக்கு கனகதாசர் செல்லும் போது அங்கு பீடாதிபதியான வாதிராஜர் வேறுதலத்தை முன்னிட்டு பயணித்திருந்தார். கண்ணனின் தரிசனத்திற்காக கனகதாசர் கோபுரவாயிலை நெருங்கினார். பக்தர்கள் அங்கே பெருந்திரளாய்க் குழுமியிருந்தனர். கனகதாசரும் பொறுமையாய்க்

கண்ணனைக் காண்போம் என்று நின்று கொண்டிருந்தார். அடிவர்களின் கூட்டம் பெருகியவண்ணமே இருந்ததன்றி குறையவே இல்லை. கிருஷ்ணதரிசனத்திற்காக வந்ததால் அவரது மனத்தில் கிருஷ்ண லீலைகள் ஓடத் தொடங்கின. காலங்கழிவதும் அறியாதிருந்த அவருக்கு திடீரென கண்ணனைக் காண்பதில் விரைவும் ஆசையும் அதிகரித்தது.

உடனே அவர் திருக்கோயிலை வலமாகப் பின்புறம் சென்றடைந்து பக்திப்பெருக்கினால் "பாகிலனு தெரது சேவையனு கொடு ஹரியே" (கதவைத் திறந்து காட்சி கொடுப்பா... நாராயணா!) எனக்கதறிப்பாடினார். பக்திக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் பக்தசிகாமணி, அவரது அழைப்பிற்கு இணங்கமாட்டானா ஸ்ரீகிருஷ்ணன் அவன் பக்தவத்ஸலன் (பத்தராவி) அல்லவா? ஆதலால் கனதாசர் பாடிக்கொண்டிருக்கும்போதே கோவிலின் மேற்புறச்சுவரின் ஒரு குறிப்பிட்ட பகுதி இடிந்து விழுந்தது. கனகதாசரின் விருப்பம் நிறைவேறும் வகையில் உடுப்பியில் கண்ணபிரான் தானே திரும்பி நின்று அவருக்கு காட்சி தந்தான். இதனால் எம்பெருமான் "பத்துடை அடியவர்க்கு இறங்கும் எளியவன்" என்பது உறுதிபடுகின்றது.

வாதிராஜரும் தமது தலப்பயணத்தை முடித்து கொண்டு உடுப்பி திரும்பினார். அங்கு கனதாசரைக் கண்டு பெருமகிழ்ச்சியுற்றார். மேலும் கனகதாசரின் பெருமையை உலகிற்கு இன்றளவும் உணர்த்துவதால் ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தவும் உறுதி எடுத்தார். அதன் பயனாய் உடுப்பித் தேவாலயத்தில் மேற்புறம் (மேற்திசையில்) கருங்கற்களால் ஒரு ஜன்னலை ஏற்படுத்தினார். அந்த ஜன்னல் இன்றளவும் 'கனக்னகிண்டி' (கனகன் காட்சிபெற்ற ஜன்னல்)என்று

அழைக்கப்பட்டு வருகிறது. உடுப்பி செல்லும் பக்தர்கள் அனைவரும் அந்த கிண்டியின் (அல்லது அந்த ஜன்னலின்) வழியே ஸ்ரீ கிருஷ்ணதரிசனம் செய்யும் முறையை இன்றும் கையாண்டு வருகின்றனர்.

கனகதாசரின் கண்ணன் மீதான நிலையான காதல் அவரை கவிபுனைய வைத்தது; கவி பாடினார். கண்ணனையும் கண்டார். கனகதாசரின் கவிக்கிறங்கிய கண்ணனையும் கனகதாசர் ஜன்னலையும் உடுப்பியில் கண்டுமகிழ்வோம்.

2-5 சதாசேவையில் பெருமாள் நாயக்கர்

தஞ்சை ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசர் கோயிலில் 198 ஆண்டுகாலப் பழமையான இரு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று தெலுங்கு, மற்றொன்று தமிழ் மொழிகளிலும் காணக்கிடைக்கின்றன. அந்த இரு கலவெட்டுகள் குறித்தும், அதனடிப்படையில் அக்கோயிலில் இன்றளவும் புரியாத புதிராகக் காட்சி தந்த 'சதா சேவையில் பெருமாள் நாயக்கர்' பற்றியும் சிறிது சிந்திப்போம்.

அ. தெலுங்கு மொழிக் கல்வெட்டு

(வரி 1) பினி சுபேதார பெரு .. (வரி 2) நாயனவாரிதர்ம...(வரி 3) கருட திருவடி...

இந்த தெலுங்கு எழுத்து & மொழிக்கல்வெட்டு கீழே கொடுக்கப் பெறும் தமிழ்க் கல்வெட்டுபோல் அமையவேண்டும். ஆயினும் அது அழிந்து, கிடைத்தவை மட்டுமிங்கே பதிவிடப்பட்டது.

ஆ. தமிழ்மொழிக் கல்வெட்டு

(வரி 1) ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேசப் பெருமாள் கோ*(வரி 2)*வில் கெருட கம்ப மண்டபம், திருவடி கோவி *(வரி 3)*லும் செங்கல்பட்டிலிருக்கும் முத்து செட்டி *(வரி 4)* யாற குமாறா கும்பினிசுபேதாற பெருமாள் *(வரி 5)* னாயககற தருமம். சதாசேவா சாலியவாகனம்.... *(1742+78=1820* A.D.*)* தஞ்சைமராட்டியர் கல்வெட்டுகள், முன்னுரை, பக்க எண்-12*)*.

இந்த கல்வெட்டில் கருட கம்ப மண்டபம், திருவடி கோவில் ஆகிய இரண்டு திருப்பணிகள் பேசப் படுகின்றன. திருவடி இணைகளை முன்னிட்ட கருடாழ்வார் சந்நிதியும் கொடிக்கம்பத்தின் அருகிலேயே பெருமாளை நோக்கி அமைந்திருப்பதை தஞ்சை சகாநாயக்கன் தெரு - பூலோக கிருஷ்ணன் சந்நிதிக் கருகில் ஸ்ரீயஜ்ஞமூர்த்தி திருக்கோயிலில் நாம் காண்கிறோம். அந்த ஐயம் இங்கே எழாமல் இருக்கவே கருடமண்டபம், பெரிய திருவடி எனக் குறிப்பிடாமல் கருட கம்ப மண்டபம், திருவடி கோவில் ஆகிய சொற்களை பொறித்துள்ளனர். ஆகவேதான் கிழக்கு நோக்கிய அந்தக் கோயிலில் கருடமண்டபத் திருப்பணி கூறும் தெலுங்கு, தமிழ் கல்வெட்டுகளை நீண்ட சதுரத்தில் வடித்து அவற்றை முறையே கிழக்கிலிருந்து மேற்காக கருட கம்ப மண்டபத்திலேயே தென் திசை படிக்கட்டாகப் பொருத்தி யுள்ளனர். கருடன், ஆஞ்சநேயர் போன்றோரோடு சதா (எப்போதும்) எம்பெருமானைச் சேவித்து நிற்கும் ஒரு நபரையும் அருகில் நிறுவியுள்ளனர். கருட கம்ப மண்டப ஆஞ்சநேயர் சந்நிதி பற்றிய குறிப்பு இன்மையால் அச்சந்நிதி பிற்காலத்தது.

சதா சேவையில் பெருமாள் நாயக்கர்

ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் திருக்கோவிலில் எம்பெருமானுக்கு எதிரில் கருடன்,

ஆஞ்ஜநேயர் போன்றோருடன் கல்வெட்டு கூறும் சதா சேவை என்ற சொல்லிற்கிலக்காய் என்றும் தொழுதகரத்தோடு ஒரு நபர் காணக்கிடைக்கின்றார். கல்வெட்டுச் சாஸனப்படி பார்க்கும்போது அநநபர் செங்கல்பட்டிலிருக்கும் முத்து செட்டியார் குமாரர் 'பெருமாள் நாயக்கர்' என்பதும், தஞ்சை மராட்டியர் ஆட்சியில் 'கும்பினி சுபேதார்' ஆகப் பணி செய்தவர் இவர் என்பதும் புலனாகிறது.

கும்பினி சுபேதார்

ஆங்கிலேயரின் இடையீடு 18 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கியது. தஞ்சை மராட்டியர் மன்னர்களுள் ஒருவரான இரண்டாம் துளஜா 18.12.1763 அன்று பட்டத்திற்கு வந்தார். 17.9.1773 தஞ்சைக் கோட்டையைக் கும்பினியார் கைப்பற்றினர். துளஜாவையும் அமைச்சர் மானாஜியையும் கும்பினியார் சிறை பிடித்தனர். அவர்களே மீண்டும் துளஜாவை அரசு கட்டிலில் அமர்த்தினர். அப்போது கும்பினியாருக்கும் துளஜாவிற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இப்படியாக கிழக்கிந்திய கம்பெனியுடன் மூன்றுமுறை இரண்டாம் துளஜாவும் (1765-1787A.D.) அவருக்குப்பின் அமர்சிங்கும் (1778-1799A.D.) ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஒப்பந்தங்களின்படி கும்பினியாருக்கு பல லக்ஷம் வராகன் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. அமரசிங்கர் 7.4.1787 பராபவ ஆண்டு பங்குனி மாதம் 28 ஆம் நாள் சனிக்கிழமை பட்டம் எய்தினார். அரசரானது முதல் ஸ்ரீ வைத்தீச்வரன் கோயிலுக்கு ஆண்டுதோறும் நன்கொடை அளித்ததோடு அனந்தய்யங்காருக்கு திருமங்கலக்குடியில் 16 வேலி நிலம், வெங்கட தீக்ஷிதருக்கு திருவையாற்றில் ஒரு வீடு, பெருமாள் நாயிக் என்பவருக்கு திருவாரூரைச் சேர்ந்த உட்கிடையூரான நடகாட்டாங்குடி நஞ்சை 2

வேலிப்பகுதி ஆகியவற்றை தானமாக ஈந்தமை ஈண்டு சிந்திக்கத்தக்கது.

சுபேதாரும் அவரது பொறுப்புகளும்

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சியில் அரசரே ஆட்சித் தலைவர். அவர்களது ஆட்சிக்குரிய நிலப்பகுதி பட்டுக்கோட்டை, மன்னார்குடி, மாயூரம், கும்பகோணம், திருவையாறு என 5 சுபாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அமல்தார், பதக்தார், சிரஸ்தேதார் போன்ற பல அலுவலர்களுள் சுபேதாரும் ஒருவர். சுபாக்களின் அரசியல் அதிகாரி சுபேதார். இவருக்கு சேனத் தலைமைப் பொறுப்பும், ஜமாபந்தி பொறுப்பும் உண்டு. ஜமாபந்தி என்பது கிராமத்துக்குடிகள் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைக் குறித்து ஆண்டு இறுதியில் முடிவு செய்யும் பணி ஆகும்.

இப்படியாக தஞ்சைக் கோட்டை கும்பினியாருக்கு உரியதாய் 18&19 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தபோதிலும் மராட்டிய மன்னர் நேர்ப்பார்வையில் அலுவலர்கள் வழி தஞ்சையின் ஆட்சிப் பொறுப்பைப்பெற்றிருந்தனர். இதனையும் தஞ்சை ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசப்பெருமாள் கோவிலில் குறிப்பிட்ட கல்வெட்டு அமைவிடமான கருட மண்டபத்தின் தென்திசைப் படிக்கட்டுகள், அடியாரின் தோற்றம், அவரது சிற்பத்தின் இருப்பிடம் ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு ஆராயும்போது தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜியின் (1798-1832A.D.) ஆட்சி காலத்தில் மேற்படி கல்வெட்டில் குறிக்கப்பெறுபவரும் சதா சேவையில் நின்று காட்சிநல்கும் கும்பினி சுபேதார் பெருமாள்நாயக்கர் ஆகலாம் எனத்தோன்றுகிறது.

2-6 சரித்திரத்தை விளக்கும் சக்கரத்தாழ்வார் சிற்பம்

சிங்கப்பெருமாள் கோயில் எனப்படும் தஞ்சையாளி (விண்ணாற்றங்கரை) வீரநரசிங்கன் சன்னதியின் முகமண்டபத்துள் பற்பல சிற்பங்கள் தென்படுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பு வாய்ந்தது சக்கரத்தாழ்வார் சிற்பம். அரவணைத்துயிலும் அரங்கநகர் அப்பனுக்கும், அருளைப் பொழியும் வரதராஜனுக்கும் இடைப்பட்ட பகுதியில் காணப்படுபவரே சிறப்பு வாய்ந்த சக்கரத் தெம்பெருமான், நாற்புறமும் சுவாலைகளுடன் அமைந்து அருளாசி நல்கும் ஆழி இறையவனின் வடிவில் அற்புதத்தைத் தற்போது பார்ப்போம்.

ஆழி இறைவன் சிற்பம்

ஆழி என்னும் சொல் சக்கரத்தைக் குறிக்கும். ஆழி இறைவன் என்றால் சக்கரத்தாழ்வாரான சுதர்சனமூர்த்தி என்பது பொருள். சக்கரத்தாழ்வார் என்றதும் எட்டுத் தளமுள்ள தாமரையில் அறுகோணத்தில் எட்டுவிதமான படைக்கலன்களைக் கொண்டு ஆழி இறையவன் (சுதர்சனப்பெருமாள்) அருள்புரிவதும், பின்பக்கம் ஆளரி (நரங்கலந்த சிங்கம்) உயோகநிலையில் அமர்ந்து அருள்பாலிப்பதும் ஆன வடிவம் நம்மனதில் தோன்றுவது இயற்கை. ஆனால் (விண்ணாற்றங்கரையில்) அருள்புரியும் ஆழி இறைவனின் சிறப்பு எங்கும் காண அரிதான ஒன்று. விண்ணாற்றங்கரை சிங்கப்பெருமாள் கோயிலில் வீரநரசிங்கப்பெருமாள் கிழக்குத்திசைநோக்கி அருள்பாலித்துவருவதால் ஆழி இறையவனாம் சக்கரத்தாழ்வாரிலும் ஆளரியை கிழக்குமுகமாக நிறுவியுள்ளார்கள். ஆழியின் நடுவே ஆளரி உயோகநிலையில் அருள்பாலிக்கிறார். அவரது இடப்புறம் பொன்பெயரோனும் (ஹிரண்யகசிபும்) வலப்புறம் பிரகலாதாழ்வானும் நின்ற கோலத்தில் உயோக நரசிங்கனைக் கரங்கூப்பித்தொழுகின்றனர்.

மேற்கு முகம் சென்று வணங்கினால் அங்குமோர் அற்புதக் காட்சி. ஆழிப்பிரான் இருக்கவேண்டிய இடத்தில் ஆனைக்கருள்பவன் அருள்பாலிக்கிறான். ஆனைக்கருள்பவன் என்பதை உணர்த்திடும் வண்ணம் அவனது கீழ்வலக்கை யானையின் மத்தகத்தில் உள்ளது. கீழ் இடக்கை இடுப்பில் வைக்கப்பட்டுள்ளது. மேலிருகைகளில் முறையே ஆழியும் சங்கும் உள்ளன. அவ்வெம்பெருமானின் இடப்புறம் குறுவாளுடனும் கூப்பியகரத்துடனும் கிரீடமும் கொண்டு இறைவனை ஏதுகின்றார் ஒரு அரசர். வலப்புறம் அமைந்த யானையும் தன் துதிக்கையை தூக்கியதின்றி தழையப்பரமனடி பணிந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வரிய சிற்பம் கஜேந்திரமோட்சத்தையும், தஞ்சையாளிநகர், தலபுராணத் தையும் தன்னகத்தே பெற்றுத்திகழ்கின்றது.

ஒரு சமயம் தேவலன் என்பவன் நீராட ஒரு பொய்கைக்குச் சென்றான். நீரினுள் இருந்த ஹூ ஹூ என்ற கந்தர்வன் தேவலனின் காலைப் பற்றி இழுத்தான், ‘முதலை போல் கவ்வும் நீ முதலையாகக் கடவாய்’ என்பது தேவலன் கந்தர்வனுக்கு இட்ட விடுசாபம்.

இது ஒரு புறம் இருக்க, இந்திரத்துயும்னன் என்னும் அரசன் மலயமலையில் திருமாலைக்குறித்து தவம் செய்யும்போது முனிவர் ஒருவர் வந்தார். முனிவரைக் கவனியாது யானைபோல் மதங்கொண்டிருந்ததை கண்ட முனிவர் இந்திரத்துயும்னனை ‘யானையாகக் கடவாய்’ என சபித்துவிடுகிறார். சாப உருவேற்ற யானையும் முன் செய்த நல்வினையால் போதோடு புனல்தூவும் புண்ணியப்பணியை நாள்தோறும் தொடர்ந்து வந்தது.

இந்நிலையில் தேவலனின் சாபவயப்பட்ட கந்தர்வன் கிடந்த பொய்கையின்பால் ஆனை முதலையால் கால் கவ்வப்பெற்றது. யானையும்

ஆதிமூலமே என்று அலறியது. அமலனும் அரவப்பகை ஊர்தியில் ஏறி அங்கே வந்திறங்கினான். யானையின் துயரம்தீரப் புள்ளூர்ந்து வந்த எம்பெருமான் முதலில் யானையைத் தன் வலது கரத்தால் தடவிக்கொடுத்தான். யானையும் சாபம் நீங்கப்பெற்று சுயஉரு எடுக்கின்றது. சுய உருவில் இந்த்ரத்யுமனன் எம்பெருமானை வழிபடுகின்றான். இதுவே ஸ்ரீமத்பாகவதம் கூறும் கஜேந்திரமோக்ஷம் அக்கருத்தினை அடிப்படையாய்க் கொண்டமைந்த சிற்பமாயினும் தஞ்சையாளி நகர்த் தலபுராணத்தையும் இது பறைசாற்றுகிறது.

வைகுந்தநாதர்போல் காட்சி

இத்திருத் தலத்தில் முதன்முதலாய்க் காட்சி தந்தவர் நீலமேகப் பெருமாள். அவருடன் தஞ்சகன் தண்டகன் தாரகன் முதலானோர் போர்புரிய, தஞ்சகன் தன்னை யானை வடிவாய் மாற்றிக்கொண்டு போரிட்டான்.

திருமாலும் விலங்கு வடிவானத் தஞ்சகனை எதிர்கொள்ள சிங்க உருவில் வந்தார். முடிவில் தஞ்சகனின் வேண்டுகோளால் தஞ்சகனூர் தஞ்சாவூர் ஆயிற்று. பாகவதத்திலும் சாபம் நீங்கிய இந்த்ரத்யுமனன் எம்பெருமானைத் தொழுவது குறிப்பிடத்தக்கது. அதுபோன்று தஞ்சகனும் தன் இறுதி நிலையில் எம்பெருமானை அனுபவித்து மகிழ்ந்ததால் இத்தலத்துறை எம்பெருமான் சிங்க உருவில் திருமகளுடன் புடைசூழ வைகுந்தநாதன்போலவே காட்சி தருகின்றான். ஆதலால் இத்தலத்திற்கு மோட்ச தலம் என்ற பெயரும் உண்டு. கல்லும் கதை சொல்லும் என்பதற்குச் சான்றாக ஒரு குறிப்பிட்ட பகுதியினுள் எம்பெருமான் உயர்வானிலிருந்து கீழிறங்கி வந்து அருள் செய்யும் காட்சியினையும் வாயெடுத்தலறி கூவும்

நிலைதனை யானையின் முகத்தில் தோன்றச்செய்தும், எம்பெருமான் கைத்தலம்பட்டு துதிக்கையைத் தழைத்து அடிபணியும் காட்சியினையும், இறைவனைத்தொழுது நிற்கும் இந்திரத்துயும்னனையும் இடம்பெறச்செய்திருக்கின்றார் சிற்பி. இதுவே சரித்திரத்தை விளக்கும் சக்கரத்தாழ்வார் சிற்பமாகும்.

2-7 சிற்பத்தால் சிறப்புறும் சிறுவிரம்பூர்

தஞ்சையில் பள்ளி ஏரியையும், லக்ஷ்மீராஜபுர அக்கிரஹாரத்தையும் இணைக்கின்ற பெருவழிச்சாலை பேருந்து நிறுத்தத்திற்குப் பெயராக அமைந்ததுதான் பள்ளிஅக்கிரஹாரம். தஞ்சை - கும்பகோணம் சாலையில் பள்ளிஅக்கிரஹாரத்திற்கும் நிடாருக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளது சிறுவிரம்பூர். இச்சிற்றூரின் குறிப்பு தற்போது காணக்கிடைப்பதில்லை. 1906ஆம் ஆண்டு வெளிவந்த சென்னை மாகாணம், வட்ட, மாவட்டங்களின் கிராமப்பெயர்களுள் பள்ளிஅக்கிரஹாரம், நரசநாயகபுரம், ராமாபுரம், தோட்டக்காடு ஆகிய ஊர்களின் குறிப்புகள் உள்ளன.

வரைபடங்கள்

திருவையாறு தாலுகா வரைபடம் தரும் கிராமக்குறிப்பினுள் (20) பள்ளி அக்கிரஹாரம் (21) நரசநாயகபுரம், (22) திருவேதுகுடி, (23) மானாங்கோரை, (24) நிடார், (25) மாத்தூர், (26) தண்டாங்கோரை (நெல்லிச்சேரி), (27) தோட்டக்காடு, (28) கொண்டவிட்டான் திடல்,(29) ராமாபுரம், (30) திட்டை முதலிய ஊர்களின் பெயர்கள் உள்ளன. கிழக்கிந்தியக் கம்பெனியின் புவியியல் அறிஞர் ஜான்வாகர் 1894ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள வரைபடத்தில் பள்ளி

அக்கிரஹாரம், திட்டை, வயலூர்,நெடார், நெல்லிச்சேரி ஆகிய குறிப்புகள் தென்படுகின்றன.

ஆட்சியர் அலுவலகமோடி ஆவண விவரப்பட்டியல்

தஞ்சை மராட்டியர் ஆட்சிக்காலத்தில் நிலஅளவை செய்த, ஆட்சியர் அலுவலக மோடி ஆவணங்களின் விவரப்பட்டியல் வழி (பசலி-1238+590=) கி.பி. 1828 ஆம் ஆண்டு திருவையாறு தாலுகா இராசேந்திரம் (அம்மன்பேட்டை) என்ற பேரூரில் 47/315 சாரப்பள்ளம், 47/316 நரசநாயகிபுரம், 47/317 குருவாடி, 47/318 பள்ளிஅக்கிரஹாரம், 47/319 வயலூர், 47/326 ராமாபுரம் ஆகிய சிற்றூர்களின் குறிப்புகள் காணப்படுகின்றன.

தஞ்சை மேலவீதி-கொங்கணேச்வரர் கோயில் செப்பேடு

இரண்டாம் ஏகோஜியின் ஆட்சிக்காலத்தில் (1735 A.D.) ஆறுகரைக்காரர்களும், கொட்டயக்காரரும் சேர்ந்து கொங்கணேச்வரர், ஞானாம்பா, அன்னபூர்ணேச்வரி ஆகியோர்களுக்கு அர்த்தஜாமக் கட்டளைக்காக 'தருமசாஸன முறி' செப்பேட்டு சாஸனமாக எழுதிக் கொடுத்துள்ளனர். அதன் காலம் 27-11-1735 A.D. ஆகும். அதில் குடவாசல், இரும்புதலை, மிரட்டூர், ஒன்பத்துவேலி, தேவங்குடி, நடுக்கரை எனபனவாய் ஆறுகரை ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதல்கரை குடவாசல், இலையூர், திருக்குடி ஆகிய ஊர்களையும், இரண்டாம்கரை இரும்புதலை, முல்லைமணக்குடி, நென்மெலி, களக்குடி, செம்பங்குடி ஆகிய ஊர்களையும், மூன்றாம்கரை மிரட்டூர், குருங்களூர், அன்னப்பன்பேட்டை ஆகிய ஊர்களையும், நான்காம்கரை ஒன்பத்துவேலி மானியத்திடல் ஆகிய ஊர்களையும், ஐந்தாம்கரை தேவங்குடி, ஆளவஞ்சேரி, உள்ளூர், வழுத்தூர், நெடுந்தெரு, வயலூர், சிறுபிறம்பூர்,

தோட்டக்காடு, சேங்காலிபுரம், அத்திக்கடை ஆகிய ஊர்களையும், ஆறாம்கரை நடுக்கரை, ஊருகுடி, பாச்சக்கடை, உறத்தூர், வையகளத்தூர், தீவு நகர்ப்பேட்டை, உடையார் கோயில் ஆகிய ஊர்களையும் பெற்றுள்ளன. அச்செப்பேட்டில் தேவங்குடி கரைக்காரர் களாக தத்தம் ஊர்ப்பெயர்களோடு குறிப்பிடப் பட்டவர்களுள் வயலூர் ரங்கப்பநாயக்கர், தோட்டக்காடு சவரியா பிள்ளை, சிறுபிறம்பூர் குமாரசாமியா பிள்ளை ஆகிய மூவர் திருவையாறு தாலுகாவைச் சேர்ந்தவர்கள்.

அரசு ஆவணங்கள்

தஞ்சை-மராட்டிய மன்னர் முதலாம் துளஜா *(1731-1732.AD.)* அவர்களின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை மாவட்டம் திருவாதி, கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி என நான்கு சுபாக்களாகப் பிரிக்கப்பட்டு, திருவாதி சுபாவின் 15 சிறுபகுதியினுள் 14 என குறிக்கப்பெற்ற சாலியமங்கலப் பதக்கினுள் திகழும் ஒரு சிற்றூர் 'செர்பெரம்பூர்' ஆகும். இக்குறிப்பு தஞ்சை சரசுவதி மகால் நூலகப் பருவஇதழில் காணக்கிடைக்கிறது.

கல்வெட்டுகள்

சிறுவரம்பூர் அமையும் பகுதியினை ஆய்வுசெய்ய திட்டை வசிஷ்டேசுவரர் கோயில் கல்வெட்டும், ஊர்ப்பெயராய்வின் பொருட்டு உடையார் கோயில் கல்வெட்டும் இங்கே எடுத்துகொள்ளப்படுகின்றன.

திட்டை வசிஷ்ட்டேசுவரர்கோயில் கல்வெட்டு : 1

இவ்வூரின் அருகே 1.9 கிலோமீட்டரில் அமைந்துள்ள திட்டை வசிஷ்ட்டேசுவரர் கோயிலில் வெளிப்பிராகார மதிளின் மேற்குச் சுவரில் கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று (வரி)1.

கோமாற பன்ம (ரான)திரிபுவன சக்கர (வரி)2. வத்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு (வரி)3. அஞ்சாவது கும்பநாயற்று அப(ரபக்)க (வரி)4த்து பஞ்சமியும் சனிக்கிழமையும் (வரி)5. ..த்த நாள் நித்தவினோத வள... (வரி)6...க்கூற்றத்து மாத்தூர் (அகர) (வரி)7... இவ்வாறு பொறிக்கப்பட்டுள்ளது. (தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள், பக்க எண். 22) இந்த ஏழுவரிகளுடன் கூடிய மாத்தூர் குறிப்பினைத்தரும் கல்வெட்டும், இவ்வூரும் அமைந்துள்ள பகுதி நித்யவினோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்துள் விளங்குகின்றது என்பதை உறுதிபடுத்துகின்றது.

உடையார்கோவில் கல்வெட்டு :

தென்னிந்தியக்கோயில் சாஸனங்கள் பகுதி: 7/ எண்:1041 / ARE 408/1902, & தொல்லியல்நோக்கில் தமிழகம் - தில்லை கோவிந்தராஜன் அவர்களின் 'உடையார்கோவில் கல்வெட்டில் சுதைச்சிற்பம்' எனும் கட்டுரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஊரின் குறிப்பு ..வரம்பூர் என்று மட்டுமே காணக்கிடைக்கிறது. "....நாயனார் திருகிளா உடையார் உலகுடைய பெருமாளுக்கு நன்றாய் பூஜை கொண்டருளுகின்ற நாயனார் சுதையாலே பீடமாய் இருந்தமையால் என்றும் ஆண்டுதோறும் ஜீர்ணோத்தாரணம் செய்ய வேண்டியதால் மணலூர் வாதுலன் ஆராவமுது மாதேவரான விக்கிரம சோழப்பிரம்மராயரிடம் சைவாசாரியம் செய்யும் சதாசிவபட்டர் வேண்டுகோளுக்கிணங்க கணித சக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழ கணிதாதிராயரும் இட்டநாளில் விக்கிரமசோழப்பிரம்மராயரிடமிருந்து ஆயிரங்காசுகொண்டு நொடியூர் (புதுக்கோட்டைக் கருகிலுள்ளது) பட்டணத்திலுள்ள கிள்ளியூரிலிருந்து

(கிள்ளுக்கோட்டையிலிருந்து) சிலை கொண்டுவந்து சாத்திரதர்மப்படி சிலை அமைக்கையில் ஆசாரியர்கள் நிலைநிறுத்தாததினால் தச்சாசாரியும் நித்தவினோத வளநாட்டு கிழார்க்கூற்றத்து .... வரம்பூர் உடையான் தேவனான உதயதிவாகர ஆசாரியன் ......" என்றபடி சுதை சிற்பத் திருப்பணி ...வரம்பூர் உடையான் தேவனான உதய திவாகர ஆசாரிக்கு அளிக்கப்பட்டதோடு புத்தத்தூர் ஆன திரிபுவன மாதேவி சதுர்வேதிமங்கலத்தில் நிலமும் வழங்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இது மூன்றாம் குலோத்துங்கசோழனின் 18வது ஆட்சி ஆண்டில் நாட்டப்பெற்றதாகையால் இக்கல்வெட்டின் காலம் *(1178+18=)1196* AD. ஆகும். இவ்விரண்டு கல்வெட்டுகளும் இந்த ஊர் அமைவினையும், ஊரின் பெயரையும் ஒருவாறு தெரிவிக்கின்றன. இனி ஊர் தரும் சிற்பக்குறிப்பினை சிறிது பார்ப்போம்.

ராமாபுரம் தரும் சிற்பக்குறிப்பு

ராமாபுரம் என்பது தமிழ்நாடு-தஞ்சைமாவட்டம் மற்றும் தஞ்சாவூர் வட்டத்தில் தஞ்சைக்கு 6 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். இதன் அருகே அமைந்துள்ள சிற்றூர்களாக 1.2 கிலோமீட்டரில் தோட்டக்காடும், 1.6 கிலோ மீட்டரில் நரசநாயகிபுரமும் 1.9 கிலோமீட்டரில் திட்டையும், 2 கிலோமீட்டரில் மானாங்கோரையும், 2.7 கிலோமீட்டரில் திருவேதிகுடியும் விளங்குபவை அறியப்பெறுகின்றன.

ராமாபுரத்தில் ஸ்ரீவேங்கடாசலபதி ஆலயம் உள்ளது. இத்திருக்கோயிலில் மூலவர், உற்சவர்கள் திருமகள் புடைசூழ எழுந்தருளியுள்ளனர் .நின்ற திருக்கோலம். மூலவிமானத்துடன் கீழ்த்திசை நோக்கிய ராமாபுரம் கோயிலில் அர்த்தமண்டப முகமண்டபாதி

களும் அமைந்து, கருடன் ஆஞ்சநேயர்களும் காட்சி தருகின்றனர். கோயிலின் தென்மேற்கில் விசாலமான புஷ்கரிணி உள்ளது. இவ்வூருக்கு அருகாமையிலே வயலூர் இரட்டை வீராஞ்சநேயர், நரசநாயக்கபுரம் பெரிய திருக்குளத்தின் கரையில் அமைந்த ஸ்ரீதேவி பூமிதேவி உடனுறை வரதராஜர் கோயில்கள் கண்டு போற்றத் தக்கவை. ராமாபுரம் உற்சவமூர்த்தி வேங்கடாசலபதியின் பீடத்தில் மட்டும் ‘சிறுவிரமபூரவெங்கடாசலபதி’ என எழுதப்பட்டுள்ளது. இக்குறிப்பு குறித்துஆய்வு செய்யும்போது இந்த படிமத்திற்கும் இச்சிற்றூரின் பெயருக்கும் உள்ள தொடர்பு தெரியவந்தது. இச்சிற்பத்திலுள்ள எழுத்துகளில் மெய்யெழுத்துகளுக்கு புள்ளியில்லை. ர கரத்திற்கும் நெடிலின் அடையாள எழுத்திற்கும் உள்ள வேறுபாடும் விளங்குவதில்லை. ப கரத்தையும், வ கரத்தையும் மிக சிரமப்பட்டுதான் புரிந்துகொள்ளமுடிகிறது.

‘சாளுவ நரசிம்மன் தெற்கேயுள்ள சோழ தேசத்தின் மீது படையெடுத்து வந்தான். அப்போது அவனுக்கு உதவி புரிந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் நால்வராவர். ஆரவீடு புக்கர், அவரது புதல்வர் ராமன், ஈச்வரநாயக்கர் மற்றும் அவருடைய மகன் நரசநாயக்கர் ஆகியோர். தென்திசைவந்த நரசநாயக்கர் காவிரிக்கரையில் தன் எதிரிக்காகக் காத்திருந்தார். எதிரியான சோழமன்னனும் நரசநாயக்கரின் அறிவுரையை கேழ்க்கவில்லை. ஆதலால் சோழமன்னருடன் போருக்கு ஆயத்தமானார். கடும்போர் நடக்கிறது. போரில் நரசநாயக்கர் சோழமன்னரைச் சிறைபிடித்துத் தலைநகருள் புகுகின்றார்’ என்ற செய்தி விஜயநகர வரலாற்றின் மூலகாரணங்கள் (Sources of Vijayanagar History) என்னும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. அந்நூலின் அடிக்குறிப்பில் ‘யார் இந்த

சோழன்? அவனது தலைநகரம் எங்கு அமைக்கப்பட்டது? என்பதை யாம் அறிகின்றிலோம்' என்றும், 'எப்படியாயினும் தஞ்சாவூரில் இருந்தவனாய் பல சோழ மாவட்டங்களை ஆட்சிபுரிந்த தலைவன் என்பது மட்டும் புலனாகிறது' என்கிறார் நூலாசிரியர்.

சோழந்ருபாலன் எனக் குறிப்பிடப்பெறுபவர் கோனேரிராயன் ஆவார். இக்கருத்தை சோழமண்டல 'வரலாற்று நாயக்கர்களும் சிற்பங்களும்' என்ற நூல் தெரிவிக்கின்றது. மேலும் கி.பி. 1496ல் கோனேரிமை கொண்டான் எனப் பெயர்கொண்ட 'கோனேட்டி ராஜசோழன்' தஞ்சையை ஆட்சி செய்துள்ளான்' என்றும், இந்த காலகட்டத்தில் 'விஜயநகர நாயக்க மன்னன் நரசநாயக்கன் என்பவன் மதுரை, திருச்சி, தஞ்சையை வென்று விஜயநகர அரசிற்கு திறை கட்டுமாறு செய்தான். அப்போது விஜயநகரப் பேரரசை அச்சுதராயர் ஆண்டுவந்தார். விஜயநகர ஆட்சிக்குள் கொண்டுவந்த தஞ்சையை வீரசேகரசோழன் ஆண்டுவர, அது சமயம் விச்வநாத நாயக்கரை ஆங்கே சிலகாலம் தமது பிரதிநிதி யாக்கி அவரை மதுரைக்கு அனுப்பிவிட்டு, பிறகு தஞ்சைக்கு செவ்வப்பநாயக்கரை பிரதிநிதியாக்கினார்' என்பதாகவும், தஞ்சை மன்னரும் சரசுவதி மகால் நூலகமும் என்ற நூல் குறிப்பிடுகின்றது. எனவே கி.பி. 1535 வரையிலான வீரசேகரசோழ மன்னனின் ஆட்சியோடு தஞ்சையில் சோழமன்னர்களின் ஆட்சி நிறைவினைத் தழுவியது என்பதனையும் இந்நூல் தகுந்த ஆதாரங் களுடன் எடுத்துரைக்கின்றது.

முடிவுரை

ராமாபுரத்தில் ஸ்ரீவேங்கடாசலபதி ஆலய உற்சவ மூர்த்தியின் பீடத்தில் மட்டும் காணப்பெறும் எழுத்துப்

பொறிப்புகளால் இந்த படிமத்திற்கும் இச்சிற்றூரின் பெயருக்கும் உள்ள தொடர்பு தெரியவந்தது. சென்னை மாநிலம் - வட்டமாவட்டங்களின் ஆங்கில கிராமப் பெயர்கள் அகராதிநூல், வரைபடங்கள், மோடி ஆவணவிவரப் பட்டியல், செப்பேடு, அரசு ஆவணங்கள்(Rajrecords) எனும் ஆங்கிலக் கட்டுரை, இரண்டு கல்வெட்டுகள், ஸ்ரீவேங்கடாசலபதி பெருமாள் சிற்பக்குறிப்பு முதலியவற்றைக் குறித்து சீரிய ஆய்வுமேற்கொள்ளப்பட்டது.

இதனால் இவ்வூர் நித்யவினோதவளநாட்டு கிழார்க் கூற்றத்துள் திகழ்வதென்பது 13ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த திட்டைக்கோயில் கல்வெட்டால் உறுதிசெய்யப்பட்டது. கி.பி. 1196ல் சோழர்காலக் கல்வெட்டில் ..வரம்பூர் என முழுமையற்றதாய்க் காணக்கிடைக்கும் இவ்வூர் (சிறு)வரம்பூர் என்பதில் ஐயமில்லை. சிறுவரம்பூர், சிறுவிரம்பூர் ஆகி மராட்டியர் ஆட்சிக் காலங்களில் முறையே 1732, 1735 ஆம் ஆண்டுகளில் செர்பெரம்பூர், சிறுபிறம்பூர் எனவழைக்கப்பட்டு, பிறகு 'ராமாபுரம்' எனப் பெயர்மாற்றம் பெற்றுள்ளது. எந்த காலத்தில் மாற்றம் பெற்றது என்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. 1828 ஆம் ஆண்டு நிலஅளவு செய்த காலத்தில் இவ்வூர் ராமாபுரம் என்று குறிக்கப்பெற்றுள்ளது. இந்த மாற்றம் குறித்து ஆய்வுசெய்ய 'நரசநாயக்கபுரம்' குறித்தும் சற்று ஆராய வேண்டிவந்தது. அதன் விளைவாக தஞ்சைச்சோழனுடன் நரசநாயக்கர் செய்தபோரும் திரு. வ. வேணுகோபாலன் இயற்றிய 'தஞ்சை மன்னரும் சரசுவதிமகால் நூலகமும்' என்ற நூலால் அறிய முடிந்தது. தஞ்சையின் எல்லைப் பகுதியில் நரசநாயக்கபுரமும், ராமாபுரமும் அமைந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்க ஒன்று.

நரவசநாயக்கருக்கும் கோனேரிராயனுக்கும் இங்கே போர் நடந்திருக்கலாம். போரில் வெற்றிவாகை சூடியதால் ஆரவீடி புக்கரின் புதல்வர் ராமராயர் மற்றும் ஈச்வரநாயக்கரின் மகன் நரசநாயக்கர் ஆகியோர்களின் பெயரால் இச்சிற்றூர்கள் அன்று முதல் 'ராமாபுரம்' 'நரசநாயக்கபுரம்' என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கக் கூடும்.

இந்த சிற்றூரின் பெயர் 'ராமாபுரம்' என்றவாறு மாற்றத்தைத் தழுவியபோதிலும் ஸ்ரீவேங்கடாசலபதிப் பெருமாளின் விக்கிரஹபீடத்தில் காணப்பெறும் **'சிறுவிரம்பூர் வெங்கடாசலபதி'** எனும் எழுத்துப் பொறிப்பு இவ்வூர் சோழர்காலப் பழைமையைப் பறைசாற்றுகிறது. இதுவே மறைந்துபோன இவ்வூரின் தொன்மைப்பெயர் சிறுவிரம்பூர் என்று முடிவு செய்வதற்கும் சிறந்த அடிப்படையாய்த் திகழ்ந்து வருகின்றது.

2-8 ஸ்ரீ ஜனார்த்தன வாசுதேவர்

தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தைச் சார்ந்த திருக்கோயில்களுள் ஜனார்தன வாசுதேவப்பெருமாள் கோயில் என்பது ஒன்று. இந்த திருக்கோயிலின் பெயரிலும், மூர்த்திகளின் அமைப்பினாலும் ஸ்ரீவைகானஸம், ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமங்கள் எந்த அளவு இங்கே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெளிவாய் அறியமுடிகின்றது. ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமங்களிலும், ஸ்ரீவைகானஸ ஆகமத்திலும் ஜனார்தனப்பெருமாள் (சதுர்விம்சதி மூர்த்தி லக்ஷணம் பகுதி-2, பக்க எண்கள் 43 & 59) குறிப்பிடப்படுகின்றார். ஆகமங்களின் வழி அமைந்த ஜனார்தனவாசுதேவப் பெருமாள் குறித்துச் சிறிது பார்ப்போம்.

ஜனார்தனன்

ஸ்ரீ ஜனார்தனப்பெருமாள் உபயநாச்சியார்களுடன் எல்லையம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் கிழக்குநோக்கி மேல்சரகில் கோயில் கொண்டுள்ளார். இக்கோயில் தஞ்சை எல்லையம்மன் கோயில் தெருவில் அமைந்திருக்கின்றது. தனிக்கோயில் நாச்சியார் திருநாமம் ஸ்ரீகமலவல்லி. விட்டோபா, நவநீதகிருஷ்ணன், ஸ்ரீவரதராஜன் லக்ஷ்மீநாராயணன், ஆண்டாள், ஸேனைமுதல்வர், திருமங்கைஆழ்வார், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் ஆகியோர் அர்த்தமண்டபத்தை அடுத்த முகமண்டபத்தில் அருள்பாலிக்கின்றனர். இக்கோயிலின் திருச்சுற்றில் பின்புறம் வீரஅனுமன் சந்நிதி உள்ளது. அவரது பீடத்தில் எழுத்துப் பொறிப்புகளும் உள்ளன.

சங்கு, சக்கரம், தண்டு, தாமரைகளைப் பெற்று ஸர்வாலங்காரத்துடன் கூடிய திருமகள்கேள்வனான திருநாராயணனின் பெயர் ஜனார்தனன் என்று ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமமான பராசரஸம்ஹிதை நூல் கூறுகின்றது. ஆழி சங்கம் தண்டு தாமரைகளை முறையே தரித்துள்ளவரை ஜனார்தனனாக நினைக்கவேண்டும். (சங்க்க-சக்ர-கதா-பத்மதாரிணம் ஸ்ரீபதிம் ஹரிம்! ஸர்வாலங்கார ஸம்யுக்தம் தம் நமாமி ஜனார்தனம் !! (பராசரஸம்ஹிதா-XIII) "சக்ர-சங்க்க-கதா-பத்மதாரீ சிந்த்யோ ஜனார்தன:") எனக் குறிப்பிடும் 'சதுர்விம்சதிமூர்த்தி லக்ஷணம்' நூலில் கூறியுள்ளபடி கருவறைமூர்த்தி உபயநாச்சியாருடன் தன்னுடைய வலது மேற்கையில் சக்கரமும், இடது மேற்கையில் சங்கமும், இடது கீழ்க்கையில் கதையும், வலது கீழ்க்கையில் தாமரை மலரையும் பெற்று விளங்கு கின்றார். இதனால் இவர் ஸ்ரீகுருவாயூர் அப்பனையும் ஈண்டு காட்சிப்படுத்து கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீவாசுதேவ தியானம்

ஸ்ரீ வாசுதேவமூர்த்தியின் வலது மேற்கையில் ஆழியினையும், வலது கீழ்க்கையில் தாமரையினையும், இடது மேற்கையில் சங்கத்தினையும், இடது கீழ்க்கையில் தண்டினையும், தேவிகளாக ஸ்ரீயை வலப்பக்கத்திலும், இடப்பக்கத்தில் புஷ்டியையோ அல்லது துஷ்டியையோ நிறுவலாம் என்னும் இவரது உருவ அமைதியை விளக்கும் சுலோகம் (அஸ்ய தக்ஷிணஹஸ்தாக்ரே சக்ரம் சாதஸ்திதோம்புஜம் ! வாமோர்த்வ சங்க்கமன்யஸ்மின் கதா ஸ்யாச்சாப்யதோ முகம் !! ச்ரியம் து தக்ஷிணே பார்ச்வே வாமே புஷ்டிம் து வின்யஸேத் ! துஷ்டிம் வா வாமபார்ச்வே து காரயேன் முனிஸத்தம !!) ஸ்ரீவிஷ்வக்ஸேன ஸம்ஹிதையின் பதினோராம் அத்தியாயத்தில் (சதுர்விம்சதிமூர்த்தி லக்ஷணம் - தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு P.No. 62ஆம் பக்த்தில்) கூறப்பட்டுள்ளது. இங்கே சக்கரம், தாமரைமலர், சங்கம், கதை ஆகியவற்றை ஜனார்தனனின் வடிவுக்கு ஒப்பாக நிறுவக் கூறுவதோடு சிறப்பாக கீழ்முகமாக கதையை ஸ்ரீவாசுதேவனுக்கு பொறுத்துவதும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாஞ்சஜன்ய: ஸ்ம்ருத: சங்க்க: யம் பிபர்த்தி ஜனார்தன: |
கரேஸ்ऽய கமலம் ப்ரோக்தம் ததா த்ரைலோக்ய ஸம்ஞிதம் ||

ஸ்ரீ ஜனார்த்தனப் பெருமாள் கையில் இலங்கும் சங்கத்தின் பெயர் பாஞ்சஜன்யம் என்றும், உலகையே உயர்த்தவல்ல நிலையில் நாளத்தினைத் தன் கைவிரல்களின் நடுவேவருமாறு செய்து, தாமரையை உயர்த்துவது போன்றும் அமைத்துள்ள தாமரைக்கு ‘த்ரைலோக்யம்.’ என்னும் பெயரை ‘விஷ்ணு தர்மோத்தர புராணம்’ கூறுகிறது.

கருவறை மூர்த்தி போன்றே நின்ற கோலத்தில் விளங்கும் உற்சவமூர்த்தி தன் இடது கீழ்க்கையினை கதையின்றி இடுப்புக்கருகில் வைத்துள்ளார். நாம் சிரத்தையாய் மேற்கொள்கின்ற செயல்கள் அனைத்தையும் எல்லாமான இறைவன் ஸ்ரீஜனார்தனன் மகிழ்ச்சிகொள்ளட்டும் (ஸர்வாகாரோ பகவான் ஸ்ரீஜனார்தன: ப்ரீயதாம்) என்று கூறி இறைவனுக்கு அர்ப்பணம் பண்ணுகிற அளவில், நாம் அளிப்பதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக எம்பெருமான் தாமே உகந்து, கேட்டுப்பெற்று, விரைவில் நம்மைப் பயன் அடையச் செய்வார் போல தன் வலது கீழ்க்கையைக் குழிவாக வைத்துக்கொண்டுள்ளார் எனத் தோன்றுகிறது. ஜனார்தனன் என்ற சொல் (ஜனான் அர்தயதி இதி ஜனார்தன:) ஜனங்களைக் கொடுக்குமாறு கேட்கிறான் என்ற பொருளை விரித்துணர்த்துகின்றது. இத்தகைய காட்சி அற்புதமானது. இதனால் ஜனார்தனன் என்னும் சொல்லின் பொருள் ஆனவர் புறப்பாடு கண்டருளும் மூர்த்தி. ஜனார்தனமூர்த்தியின் வடிவ அமைதியோடு அமைந்தவர் கருவறைமூர்த்தி. ஆகையால்தான் இத்திருக்கோயில் புறப்பாடு கண்டருளும் மூர்த்தியின் திருப்பெயர் ஸ்ரீஜனார்தனன். கருவறைமூர்த்தி ஜனார்தனனைப்போலவே அமைவார் என்ற காரணத்தால் இத்திருக்கோயிலுக்கு ஸ்ரீஜனார்தன வாசுதேவப் பெருமாள் கோயில் என்ற பெயர் மிகவும் பொருத்த மானது. தஞ்சை சரசுவதி மகாலில் இடம் பெற்றுள்ள அரசர்களின் சேகரிப்பு பிரதிகளுள் (ஸப்தமீ ச்ராார்த்த பிரயோகம்) ஸப்தமீ நாளன்று இறந்தோர்களைக் குறித்துச் செய்யும் பித்ருக்கடன் (பிரதி ஸாம்வத்ஸரிக ச்ராத்தாங்க திலதர்ப்பண பிரயோகம்) ஒவ்வோர் ஆண்டும் இறந்தோர்களைக் குறித்துச் செய்யும் பித்ருக்கடனுக்கான எள்ளு நீர் இறைத்தல்முறை (பிரதி ஸாம்வத்ஸரிக ச்ராார்த்த பிரயோகம்) ஒவ்வோர் ஆண்டும் இறந்தோர்களைக்

குறித்துச் செய்யும் பித்ருக்கடன் செய்யும்முறை ஆகிய நூல்களில் இறுதியில் (அனேன .... பகவான் ஸர்வாத்மக: பித்ரு ஸ்வரூபி ஜனார்தன வாசுதேவ: ப்ரீயதாம்) இதனால் .... அனைவர்க்கும் உள்ளுறைபவனும் பித்ருஸ்வரூபியும் ஆன ஜனார்தன வாசுதேவன் மகிழ்ச்சி அடையட்டும்' என்று எழுதப் பட்டுள்ளது. இந்த பித்ருக்கடன் செய்யும் முறைகள் மராட்டிய மன்னர்களால் அனுஷ்டிக்கப்பட்டவையும், இக்கோயில் தஞ்சை அரண்மனையைச் சார்ந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பிரயோகதர்ப்பணம் கூறும் ஸ்ரீநாராயண பட்டர் இயற்றிய (அந்தயேஷ்டி-உதகும்ப ச்ராத்தபிரயோகத்தில்) இறுதி வேள்வியின் நீர்க்குடம் வைத்து மேற்கொள்ளப் பெறும் பித்ருக்கடன் செய்யும் முறையில் இந்த நீர்க்குடம் வைத்து, சிரத்தையுடன் மேற்கொள்ளப்பெறும் பித்ருக்கடனால் எந்தை தந்தை தந்தையும் பித்ரு உருவினனுமான ஜனார்தனவாசுதேவன் மகிழ்ச்சி கொள்ளட்டும் (அனேன உதகும்ப சிராத்தேன பித்ரு-பிதாமஹ-பிரபிதாமஹ ஸ்வரூபீ ஜனார்தன வாசுதேவ: ப்ரீயதாம்) என குறிப்பிடப்பட்டுள்ளது. ருக்வேத தர்சசிராத்த பிரயோகத்தில் (Coll. MSS. No. 1069 (a)/ P.No. 18, T.M.S.S.M. Library) அனேன மம பிது: தர்ச யக்ஞீய பிராம்மண போஜனேன பகவான் பித்ராதி ஸ்வரூபீ ஜனார்தன வாசுதேவ: ப்ரீயதாம், ந மம இதனால் என் தந்தையினுடைய நினைவாய் அமாவாசை வேள்வியாக அந்தணருக்கு அன்னம் பாலித்ததால் பித்ருக்களின் உருவினனான ஜனார்தன வாசுதேவ பகவான் மகிழ்ச்சியடையட்டும், எனதென்பதொன்றுமில்லை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

தஞ்சை ஸ்ரீஜனார்தனப்பெருமாளையொத்த கருவறை மூர்த்தியை மைசூர்-சாமராஜநகரம்-ஸ்ரீலக்ஷ்மீநாராயண தேவஸ்தானத்தில் கண்டு

போற்றலாம். பித்ருக்கள் போன்ற மூதாதையர் மகிழ்வுற வேண்டும் என்று நினைத்தால் ஸ்ரீஜனார்தனப்பெருமாள் கோயிலுக்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை ஏத்தி வணங்குதல் சாலச்சிறந்தது.

ஜனார்தனன் உள்ளிட்ட சதுர்விம்சதி மூர்த்திகளை திருச்சி-திருவரங்கம் அரங்கநாதரின் நான்முகன் கோபுரத்திலும், சந்திரபுஷ்கரிணிகரையின் மேல்விதானத்திலும் (சதுர்விம்சதி மூர்த்திலக்ஷணம், பாகம் இரண்டு, பக்க எண்கள் 62 முதல் 95 வரை தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டிலும்) நாம் கண்டுகொள்ளலாம்.

2-9 தாயினும் நல்ல சங்கரனும், ரங்கக்க திரிசிரபுரத்தின் வரதராஜனும்

பல்லவர் காலம் தொடங்கி புகழ்பெற்றுவரும் இந்த மலை அருட்பெருமலை, சிராமலை, பொன்மலை, திருமலை என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. சிராமலை அந்தாதியில் சிராப்பள்ளி எனவும் அழைக்கப்பட்டதாய் திரு என்னுமடைவோடு "திருச்சிராப்பள்ளி" ஆகத் திகழ்கிறது. சிரா என்ற முனிவர் தவம் மேற்கொண்டதால் சிராமலையாயிற்று எனவும் கூறுவர்.

திரிசிரகிரி

திருச்சிராப்பள்ளி வடமொழியில் திரிசிரகிரி என்றழைக்கப்படுகிறது.

சேஷேண சிரஸாம் மத்யே சிர: கிஞ்சிதுதம்சிதம் |
தத்ரந்த்ரமார்கத: பிராப்யா தரஸோ மாருதோ பலீ ||

ச்ருங்கத்ரயம் ஸமுத்தாய தத்கால த்வனிபீஷணம் |
ஸததா பிரதிசிக்ஷேப தக்ஷிணாயாம் திசி வ்ரதம் ||

விஜயோத்ஸாஹ ஸம்யுக்தோ பிரசண்டோ மாருதஸ்ததா ।
பின்னாயைகைகசோ மார்கே ச்ருங்காணி த்ரீணி தானி ச ॥
குருலாகவத: பேது: த்ரிஷு ஸ்த்தானேஷு ஸுவ்ரத ।
பிரதமம் காளஹஸ்த்யாக்யம் த்விதீயம் த்ரிசிரோ கிரி: ।
த்ருதீயம் து த்ரிகோணாக்யம் இதி க்யாதானி தானி ஹ ॥

படங்கள் பலவுமுடைப் பாம்பரையன் படர் பூமியைத் தாங்கிக் கிடக்கின்ற போழ்து ஆதிசேஷனின் தலைகளுள் மூன்று மட்டும் சிறிதே மேலெழும்ப, அதன்பாலேற்படும் இடைவெளியில் பெருங்காற்று புகுந்து, முக்கொம்புகளாய் முளைத்து, காளஹஸ்தி மலை. திரிசிரமலை, திரிகோணமலைகளாயின. இச்செய்தியை தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் சம்ஸ்க்ருதத்துறையில் இடம் பெற்றுள்ள (பர்னல் காகிதச்சுவடி எண் 1880) திரிசிரகிரி மாகாத்மியம் என்னும் சுவடிநூல் கூறுகிறது.

தாயினும் நல்ல சங்கரன்

திரிசிரகிரி எனப்படும் திருச்சிராப்பள்ளியில் அருள்பாலிக்கும் சிவபெருமான் தாயுமானவர். இவரை வடமொழியில் மாத்ருபூதேச்வரர் என்றழைப்பர். வாக்கேயகாரர்களுள் ஒருவராம் கவி மாத்ருபூதர் ‘திரிசிரகிரி’ என்னும் முத்திரையோடு பல கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். (வாக்கேயகார சரிதம், ஆசிரியர், T.S. பார்த்தசாரதி, ப.எண். 23/எண். 20)இந்த சிவபெருமானை தாயுமானவர் என்றழைக்க ஒரு கதையுண்டு.

காவிரிப்பூம்பட்டிணத்தில் இருக்கும் அரதனகுத்தனுக்கு ஒரு பெண் பிறந்தது. அந்த பெண்ணைத் திருச்சிராப்பள்ளியில் தனகுத்தனுக்கு விவாகம் செய்வித்து தந்தை இறந்தனன். தனகுத்தனும் அவனது மனைவியும் திருச்சிராப்பள்ளியில் இருக்குங்கால்

மகப்பேறு காலம் வந்தது. இதையறிந்த பெண்ணின் தாய் மகளைக் காணவர காவிரியில் வெள்ளப்பெருக்கினால் அதன் அக்கரையிலே நின்றுவிட்டனள். பெண்ணும் தன் தாய் வரவில்லையே என்று வருந்தினாள். பெண்ணின் தாய் சிவபெருமானைத் துதித்து வணங்கினாள். சிவபெருமானும் அவரிடம் இரக்கம்கொண்டு தாய்போல் திருமேனி தாங்கி மருந்தெண்ணெய் முதலியன கொண்டுவந்து அப்பெண்ணிற்கு பிரசவம் பார்த்தார். பிரசவமானபின் ஏழாம்நாள் குழந்தையைத் தொட்டிலில் இட்டனர். ஆற்றின் வெள்ளம் வற்றியது. பெண்ணின் தாயார் வருத்தத்துடன் பெண்ணைக்காணவர, தாயுமான சிவபெருமான் மறைந்து இடபாரூடராய்க் காட்சிதந்தார். (அபிதானசிந்தாமணி) பெருமைமிக்க இந்த சிவபெருமானின் செய்கையை நினைந்தே தேவாரத் திருப்பதிகங்களில் இவர் "தாயினும் நல்ல தயாபரன்", "தாயினும் நல்ல தலைவர்", "தாயினும் நல்ல சங்கரன்" எனப் போற்றப்படுகின்றார்.

தாய் மகனுக்காகச் செய்த தியாகம் என்பதற்கு தன்னுயிரை மாய்த்துத் தன் சவத்தின் மேலிருந்து ஜபித்தால் சித்தி கிடைக்கும் என்ற சிந்தாமணி மந்திர சித்தியைத் தன் மகன் ஸ்ரீஹர்ஷனுக்களித்த வரலாறு ஆன நைஷதம் இயற்றியவரின் கவி சரிதம் ஈண்டு குறிப்பிடத்தக்க ஒன்றுமாகும். (Jl. T.M.S.S.M.L., Thanjavur, Vol. XLIX P.No. -43)

ரங்கக்க திரிசிரபுரம்

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையின் அடிவாரத்திலுள்ள தெப்பக்குளம் மதுரையை ஆண்ட நாயக்கமன்னர் விச்வநாத நாயக்கரின் ஆட்சிகாலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (கோயிலொழுகு - பகுதி- P.No. 18-19) மதுரை ஸம்ஸ்தானம் 72 பாளையக்காரர்களைக் கொண்ட பகுதியுடன் கூடியது. அதற்கு சேர்ந்த இந்த

உசாவடிக்கு மற்றொரு பெயரான திருச்சிராப்பள்ளியை ஸ்ரீ விஜயரங்கசொக்கநாதர் ஆண்டுவந்தார். அவரது காலம் கி.பி. 1706-1732 வரையிலாகும். இவர் ஸகலகுண ஸம்பன்னர். லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவர். நிலத்தேவர்களின் வாழ்த்துக்களை நிரந்தரம் பெற்றவர். அறிஞர்களை காப்பவர். நித்யான்னதானம் புரிந்தவர். நீதிகார்ய துரந்தரர். தேவபிராம்மண விச்வாசி. பற்பல பிரம்ம விஷ்ணு சிவாலயங்களையும், மண்டபம், பிராகாரம், தடாகம், தோட்டம் போன்றவற்றையும் நிறுவிய அறநெறிச்செல்வர். திருப்பணிகள் பலவும் தானங்களும் திருவரங்கநாதனுக்கு இவர் செய்துள்ளார். மகாமேருவிற்குச் சமமான தீரபுருஷர். இவரது காலத்தில் ஏகபோக சாஸனமாக எழுதிக் கொடுத்தசெப்பேடு மற்றும் ஓலைச்சுவடிகள் ஏறத்தாழ 300 ஆண்டுகள் பழைமையைப் பறைசாற்றுவதோடு திரிசிரபுரம் ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயிலின் தொன்மையினையும் எடுத்தியம்புகின்றது.

திரிசிரபுரம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயிலின் அர்ச்சகர் ஸ்ரீகஸ்தூரிரங்கய்யன். இவருக்கு ஸர்வமான்யமாக கி.பி. 1712ல் பதினோருவகை குறிப்புகளுடன் கூடிய தானசாஸனம் தாமிர சாஸனமாகத் (சாலிவாகன சகாப்தம் 1634, கல்யப்தம் 4813, பிரபவாதி சகாப்தம் (பிரபவம் முதலான 60 தமிழ் வருடங்களுள்) 25 ததுபரி நந்தன நாமஸம்வத்ஸரம், உத்தராயணமுன்னு, வசந்தருதுவுன்னு, சைத்ர சுத்த பஞ்சமீ, பானுவாரம், மிருகசீர்ஷ நக்ஷத்ரம், சோபன நாமயோகம், பாலவகரணம், இடுவண்டி பஞ்சாங்க சுத்திகூடின சுபயோக சுபதினத்தில் தானமளித்தமை தெலுங்கு மொழியில் எழுதியளிக்கப்பட்டுள்ளது.

கஸ்தூரி ரங்கய்யன்

ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயில் செப்பேட்டில் ‘அர்ச்சகம் கஸ்தூரி ரங்கய்யகாரு’ என இரண்டு முறையும்,

'ரங்கக்க கஸ்தூரி ரங்கய்யகாரு' என்றும் இவர் குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும் இவர் ஸ்ரீவிஜயரங்க சொக்கநாதர் (கி.பி. 1706-1732) அவர்களின் அந்தப்புர கர்த்தர். ரங்கக்க திரிசிரபுரத்திலுள்ள ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் கைங்கர்யகர்த்தர். ஸ்ரீபிரசன்னவேங்கடேசப்பெருமாளை ஸ்ரீகஸ்தூரி ரங்கய்யன் தன் சொந்தசெலவில் அரசரின் அனுமதியோடு நிறுவியவர். இவரது தந்தை வெங்கட அய்யங்கார். பாட்டனார் பெயர் தாத்தமய்யங்கார். இந்த ஸ்ரீவரதராஜப்பெருமாள்கோயில் தாமிர சாஸனம் அளித்த அதே ஆண்டான கி.பி. 1712ல் மற்றோர் தான சாஸனத்தில் (History of the Nayakas of Madura, R. Satynatha Iyer Annamalai University, chidambaram-1980) 'குமார தளவாய் கஸ்தூரி ரங்கய்யன்' என ஒருவர் குறிப்பிடப்பெறுகிறார். ஆகவே இருவரும் ஒருவரே ஆகலாம் என்றெண்ணத் தோன்றுகிறது. மேலும் 'ரங்கக்க திரிசிரபுரத்தில் உள்ள வரதராஜப்பெருமாள் கோயில்' என்று இத்திருக் கோயிலும், 'ரங்கக்க கஸ்தூரி ரங்கய்யகாரு' என இத்திருக்கோயிலின் அர்ச்சகரும் குறிப்பிடப் படுகின்றதால் திருச்சி மலைக்கோட்டை பெரியகடை வீதியில் அமைந்த இக்கோயிற்பகுதியின் பெயர் 'ரங்கக்க திரிசிரபுரம்' என்பது உறுதியாகின்றது . இதுவே ஸ்ரீவிஜயரங்க சொக்கநாத நாயக்கரின் அந்தபுரமும் ஆகலாம் என்றும் நினைக்கமுடிகிறது.

ஸ்ரீவரதராஜன்

திரிசிரபுரம் வரதராஜப்பெருமாள் கோயில் திருச்சி மலைக்கோட்டை பெரியகடைவீதி வரதராஜப்பெருமாள் கோயில்தெருவில் தகட்டிலே அழுத்தின மாணிக்கம் போலே நடுநாயகமாக ஸ்ரீவைஷ்ணவ இலச்சினை களுடன் மேற்றிசையைப்பார்த்தவாறே வெளித் திருச்சுற்று, உள்திருச்சுற்று, கருவறைவிமானம்

ஆகியவற்றோடு காட்சிதருகிறது. இத்திருக்கோயிலில் திருமங்கை, நிலமங்கை உடனுறை ஸ்ரீபிரசன்ன வேங்கடேசரும், தனிக்கோயில் நாச்சியார் பத்மாவதித் தாயாரும் மேற்றிசைநோக்கி அருள்பாலிக்கின்றனர். முகமண்டபத்தில் தென்சிறகில் திருமகள், மண்மகள் உடனாய ஸ்ரீவரதராஜபெருமாள் வடக்கு நோக்கி கோயில் கொண்டுள்ளார். இந்த வரதராஜப் பெருமாளின் ஜடிபந்தனத்தில் (பீடப்பகுதியில்) மேலிருந்தவாறே நம் கண்களுக்கும் புலப்படும் வகையில் விக்ரஹத்தைச் சுற்றிவலமாக 'திருச்சிராப்பள்ளி வரதராஜப்பெருமாள் பெருந்தேவி .. ஆமெ கொடுத்த நாச்சியாரும் க்ருஷ்ணன், வெங்கட அப்பர் புத்திரன் கஸ்தூரி நம்பி உபயம் . சகாப்தம் 1629 ஸர்வஜித் வருஷம்' எனத் தமிழும் கிரந்தமுமான எழுத்தில் இம்மூர்த்தியின் உபயதாரர் பெயர், ஆண்டு ஆகியன குடைந்தெழுதப்பெற்றுள்ளன. ஆதலால் இந்த வரதராஜப்பெருமாளை நிறுவியகாலம் சாலிவாகன சகம் 1629க்கு நேர் ஆங்கில ஆண்டு 1707AD. என்றறியப் படுகிறது. மேலும் வைணவக்கோயில் அர்ச்சகரை நம்பி என்றழைப்பதும் கல்வெட்டு கூறும் ஆலய வழிபாட்டால் (மன்னார்குடி கும்பாபிஷேக மலர் 1995,P.No.100) அறிய முடிகிறது. வடக்கே திருமுகமண்டலமாக தென்புறச் சுவர்கோஷ்ட்டத்தில் ஆஞ்சநேயர், இராமானுஜர், நம்மாழ்வார், வீராஞ்சநேயர் ஆகியோரும், தெற்கே திருமுகமண்டலமாக வடபுறச்சுவர்க்கோஷ்ட்டத்தில் கருடன், விகனஸாசார்யர், விஷ்வக்சேனர், நாகராஜர் போன்றோரும் பக்த பிம்பங்களாகப்பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளனர். ஸ்ரீவைகானஸ ஆகமமுறைப்படி பூசையும், தென்னாசார்யசம்பிரதாய அனுஷ்டானமும் இக்கோயிலில் கடைபிடிக்கப்படுகின்றன. கோயில் விழாக்களாக அக்ஷயதிருதீயை, ஆவணிமாத சிரவணத்தில்

ஸ்ரீவிகனஸாசார்யரின் அவதார உற்சவம், நவராத்திரி, தனுர்மாதபூசை முதலியன இங்கே நடைபெறுகின்றன.

இத்திருக்கோயிலின் பிரதான வாயிலைக் கட ந்த உடன் வாயிலினருகே கருப்பண்ணசாமி அருள்பாலிக்கிறார். முன்மண்டபம் நாயுடுவர்கத்தார் ஒருவரால் அமைத்துக்கொடுத்தமை காரணமாக அவர்களின் திருமேனிகள் பெயர்க்குறிப்போடு வர்ண கலாபமாக அம்மண்டபத்தின் மேலே தென்சிறகில் வடக்குநோக்கி அமைக்கப்பெற்றுள்ளன. மேலும் ஆங்கே சில சிதையுண்ட அரசர்களின் சிலைகளும் காணப் படுகின்றன.

'தாயினும் நல்ல சங்கரனும் ரங்கக்க திரிசிரபுரத்தின் வரதராஜனும்' என்ற தலைப்பில் செய்திகளை அறிந்த நாம் வாய்ப்பேற்படின் தாயுமானவரையும் வரலாற்றுப் பின்னணியில் விளங்கும் வரதராஜனையும் கண்டு தரிசிப்போமாக.

2-10 திருமண் கருடனும் திருநாராயணபுரத்தில் உடையாரும்

திருநாராயணபுரம் அல்லது மேல்கோட்டை என்று அழைக்கப்படும் திருத்தலம் கர்நாடக மாநிலம்-மண்டியா மாவட்டத்தில் பாண்டவபுரத்திலிருந்து நாகமங்கலம் செல்லும் மார்கத்தின் அருகே உள்ளது. ஊரை நெருங்கும்போதே சுமார் 500 படிக்கட்டு களைக்கொண்டு மலையுச்சியில் அருள்பாலிக்கும் யோக நரஸிம்மனின் சன்னிதானம் கண்களுக்கு விருந்தாகின்றது. அந்த நரசிம்மப்பெருமாள், சுற்றியுள்ள பல கிராமங்களின் குலதெய்வமாயும், வரப்பிரசாதியாகவும் விளங்கு கின்றார். உயோகநரசிம்மனையும், திருநாராயணனையும்

ஒருங்கே நினைவில் தரும் வண்ணம் மைசூர் தொட்டசாமராஜஉடையாரின் குமாரர் ராஜஉடையார் 'முத்திகரை' மற்றும் 10 உபகிராமங்கள் அடங்கிய பகுதியை 'நரசிம்மபுரம்' என்று நாமகரணம் செய்து, அதனை மொத்தம் 50 பங்குகளாக் கி அதில் 49 பங்குகளை மேல்கோட்டை (திருநாராயணபுரம்) வாழ் 28 அந்தணருக்குத் தானமாகக்கொடுத்தார். மீதமுள்ள 1 பங்கினை திருநாராயணபுரம் ஸ்ரீசெல்வநாராயணனின் கருட வாகனோத்ஸவத்திற்காக அளித்தார் என்று ஒரு சாஸனம் தெரிவிக்கிறது. கருடனைச் சிறப்பித்துக்கூறும் தார்க்ஷ்ய க்ஷேத்திரமும் இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று. மகாவிஷ்ணுவின் கட்டளையால் கருடன் சுவேத த்வீபத்திலிருந்து வெண்மையான மண்ணினை இத்தலத்தினில் கொண்டு வந்து சேர்த்தார். ஆதலால் இந்த கருடக்ஷேத்திரத்தில் காணப்பெறும் கருடபகவான் வாகன உருவாய்க் கையினில் (வலது கரத்தில்) திருமண் உருண்டையைக் கொண்டுஅமைக்கப்பெற்றுள்ளார். மேல்கோட்டை கல்யாணி தீர்த்தத்திலிருந்து சற்று தொலைவில் மேற்றிசையில் சென்றால் அரியதான இந்த கருட பகவானின் சிற்பத்தைக்கண்டு மகிழலாம்.

நரசிம்மபுரம் என்ற மற்றொரு பெயர்கொண்ட 'முத்திகரை' ஸ்ரீரங்கபட்டணம் தாலுகா குருவங்கநாடு ஹொபளியில் உள்ளது. இதனை விஜயநகர அரசனான வெங்கடபதிராஜன் ராஜஉடையாருக்கு அளித்ததையும் மேற்கூறிய சாஸனத்தில் (கி.பி. 1614 ஆம் ஆண்டு - Melkote Devasthana manual, P.No.390/9ல்) குறிக்கப்பெற்றுள்ளது. திருநாராயணபுரம் - மேல்கோட்டை உயோகநரசிம்மப் பெருமாளுக்கு ஒரு தங்கக்கிரீடம் கிருஷ்ணராஜ உடையார் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய சாஸனக்குறிப்பை மேல்கோட்டை தேவஸ்தான மேன்யுவல் பக்களண் 391/12ல் காணமுடிகிறது. அந்த தங்ககிரீடத்தின் மேலே 'சாலிவாகன சகம் 1765 +78=1843)

சுபகிருது ஸம்வத்ஸரம், மார்கசிர, சுத்த 1ம்தேதி, சுக்ரவாரம் மேல்கோட்டை ஸ்ரீயோகநரசிம்ம ஸ்வாமிக்கு மைசூர் ஸம்ஸ்தானத்தினுடைய கிருஷ்ணராஜ உடையாரின் தர்மபத்னீ கிருஷ்ண விலாஸத்தின் லிங்காஜம்மணி அவர்களின் ஸ்வர்ணகிரீட சேவை' என்று கன்னடமொழியில் எழுதப்பட்டுள்ளது.

அந்த யோகநரசிம்மப்பெருமாள் கோயிலின் மலை அடிவாரத்தில் பெரிய ஒரு நீர்நிலை உள்ளது அது 'கல்யாணி புஷ்கரிணீ' என்றழைக்கப்படுகிறது. கல்யாணிப்புஷ்கரிணீ மற்றும் அதன் நாற்புறமும் அமைந்துள்ள மண்டபங்கள் கருங்கல் வேலைப் பாட்டுடன் விளங்குகின்றன. அவற்றுள் மிக அழகாக அமைந்ததொரு மண்டபம் 'புவனேச்வரி மண்டபம்' ஆகும். இம்மண்டபம் கி.பி. 1817ல் மைசூர் ஸ்ரீகிருஷ்ணராஜஉடையாரால் கட்டப்பெற்றது. (Melkote Devasthana manual, P.No.390)

கண்கவர் மண்டப வேலைப்பாடுகளோடு திகழும் கல்யாணி புஷ்கரிணியில் திருநாராயணபுரத்தின் செல்வப்பிள்ளை தெப்போத்ஸவம் கண்டருளுகிறார். பங்குனிமாதப் பிரம்மோற்சவத்தில் நான்காம் நாள் வைரமுடிசேவையில் திருநாராயணன் காட்சி தருகிறார். வைரமுடிசேவைப்பற்றி விரிவாக அரிய இந்நூலில் (வைரமுடித் திருவிழாவில் திருநாராயணன் என்ற கட்டுரையினைப் பார்க்கவும்) வைரமுடியைப் (கிரீடத்தைப்) போலவே இன்னொரு விலை மதிப்பற்ற ரத்தினங்களால் புதிதாகக் கிரீடத்தைச் செய்து ஸ்ரீசெல்வநாராய்ணஸ்வாமிக்கு சமர்ப்பித்தனர். அதனை ராஜமுடி என்றழைப்பர். அது கிருஷ்ணராஜ உடையாரால் அளிக்கப்பட்டதின் காரணமாக 'கிருஷ்ணராஜமுடி' என்ற

பெயரோடும் திகழ்கின்றது. மேல்கோட்டை திருநாராயணன் சந்நிதியில் அஷ்டதீர்த்த உற்சவம் கொண்டாடப்பெறுகிறது. உற்சவத்தின் கடைசிநாள் கல்யாணி, தொட்லமுடகு (ஓர் அருவிச்சுனை) பத்மதீர்த்தம் முதலான மேல்கோட்டை மலையைச்சுற்றி அமைந்த எட்டு தீர்த்தங்களில் எம்பெருமானின் ஸ்ரீசடகோபத்தை எழுந்தருளச்செய்து தீர்த்தோத்ஸவம் நடத்தப்பெறுகிறது. அந்த அஷ்டதீர்த்த உற்சவத்தின் நான்காம் நாள் கிருஷ்ணராஜ முடியினைத் தரித்து எம்பெருமான் வீதியுலாக் காட்சி தருகிறார். அது சமயம் கிருஷ்ணராஜமுடி எனும் அந்த கிரீடம் மைசூர் அரண்மனைக் கருவூலத்திலிருந்து வரவழைக்கப்பட்டு எம்பெருமானுக்கு அணிவித்து அந்த உற்சவம் முடிந்த பின்னர் மைசூர் அரண்மனை வசம் அனுப்பி வைக்கப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணராஜஉடையார் இந்த ஸ்ரீகிராமத்தில் பல அக்கிரஹாரங்களை ஏற்படுத்தி வீடுகள் தானம் செய்து கொடுத்து, தேவதா கைங்கர்யத்திற்கு மிகவும் ஊக்கமளித்தார். அதையெல்லாம் நினைவுகூறும் வகையில் ஸ்ரீகிருஷ்ண ராஜஉடையாரின் திருவுருவம் மேல்கோட்டை திருநாராயணன் சந்நிதி முன்பாக உள்ள நவரங்க மண்டபத்தில் (திருநாராயணன் கிழக்குமுகமாகக் கோயில் கொண்டுள்ளார். அவருக்குத்) தென்புறத்தில் (உற்சவமூர்த்தி) செல்வப்பிள்ளை வடக்கு நோக்கி காட்சி தருகிறார். செல்வப்பிள்ளையின் நேர் வடகிழக்கில் அமைந்த ஒரு கம்பத்தில் எம்பெருமானை தொழுதேத்தும்படியாய் தென்புறம் பார்த்தவாறு சிற்பமாக நாட்டப்பெற்றுள்ளது. ஆங்கே சிற்ப உருவில் திகழும் ஸ்ரீகிருஷ்ணராஜஉடையாருக்கு பகலிராப் பொழுதில், சாற்றுமறை நேரத்தில் மாலை மரியாதை செய்வதனை இன்றும் வழக்கமாகக் கடைபிடித்து

வருகின்றனர். மைசூருக்கு அருகே இயற்கை வனப்போடு அமைந்த சிற்றூரான இந்த மேல்கோட்டையில் திருமண் கருடனையும், திருப் பணிகளால் விளங்கும் சிற்பவடிவான ஸ்ரீகிருஷ்ணராஜ உடையாரையும் கண்டு மகிழ்வோம்.

2-11 பூவுலகத் தோற்றமுரைக்கும் புருஷோத்தமன்

ஸ்ரீமுஷ்ணம் க்ஷேத்ரராஜன்யம் தக்ஷிணாபிமுகம் ஹரிம் ।
வராஹவபுஷம் ச்வேதம் வந்தே த்விபுஜமச்யுதம் ॥

(அர்ச்சாவதார ஸ்தலவைபவம், ப.எண்.-27)

ஸ்ரீமுஷ்ணம் ஆதிவராஹஸ்வாமி திருக்கோயில் தமிழகத்தின் கடலூர் மாவட்டம்-சிதம்பரம் தாலுகாவில் உள்ளது. அத்திருக்கோயில் அம்புஜவல்லி உடனுறை யக்ஞவராஹமூர்த்தி, ஆதிவராஹத்திருத்தலம், அச்வத்தநாராயண விருக்ஷம், நித்யபுஷ்கரிணீ, ஆழ்வார், ஆசார்யர்கள் உள்ளிட்ட அனைத்துச் சிறப்பையுங்கொண்டு அரியதொரு சிற்பக்களஞ்சியமாகவும் திகழ்ந்து வருகின்றது. மேற்றிசை நோக்கும் நெடிதுயர்ந்த ராஜகோபுரம். அதைக் கண்டபின் கீழே குனிந்தால் இடதுஓரம் இனிதே நமக்கு நல்வரவுதரும் ஒரே ஜான் அளவுள்ள இராமலக்ஷ்மணர்களின் சிற்பங்கள். உட்புறம் ராஜகோபுரத்தை அண்ணாந்து பார்த்தால் மகாலக்ஷ்மியின் காட்சி. மேலும் எண்ணற்கரிய கண்கவர் சிற்பங்கள். ராஜகோபுரத்தின் நடுவிலோ கண்ணால்பருகக் கல்லிலே கலைவண்ணம் கற்பிக்கும் தோரணம். தோரணமங்கை களின் சிற்பங்கள். அதில் எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாஸனுக்கு நூற்றுக்கால் மண்டபத்தில் அமையப்

பெற்ற கருடகம்பத்துடன் இளங்கோயில். (இந்த ஸ்ரீநிவாஸனைத்தொழுதபின்பே ஆதி வராஹப் பெருமாளைத் தொழவேண்டும் என்பது மரபு.) அக்கோபுரத்தின் அண்மையிலே அமைந்துவிளங்குவது நூற்றூக்கால் மண்டபம். அதிலேயும் சிற்பச்செழிப்போடு காட்சி தருகின்றது புருஷசூக்தமண்டபம்.

புருஷசூக்த மண்டபம்

நூற்றுக்கால்மண்டபத்தின் கீழ்ப்பகுதி மையத்தில் அரிய அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு ஒரு மண்டபம் காணக்கிடைக்கின்றது. அது ஸ்ரீயக்ஞவராஹ மூர்த்தியின் நீராட்டுமண்டபம். நீராட்டம் நடைபெறும் போது அருமறையோர் ஆங்கே மறையுள் சிறந்ததான புருஷசூக்தத்தை ஓதுகின்றனர். புருஷசூக்தம் பதினாறு (அ) பதினெட்டு ருக்குகளை (அ)மந்திரங்களைக் கொண்டது. ஆதலால் பதினாறுகால் மண்டபம் ‘புருஷசூக்தமண்டபம்’ என பெயர்பெற்றது. ஆங்கே இன்றளவும் ஆண்டவனை ‘ஸதாசேவை’ என சேவித்து நிற்போர் மற்றும் அச்சுதப்பநாயக்கனின் குடும்பத்தார் சிலைகள் மிக அழகுவாய்ந்தவை. அக்கால பாரம்பரியத்தை அவை அழகுறப்பறைசாற்றுபவை. பாரதம், பாகவதம்,புராணம் மற்றும் பல்வேறுவகைச் சிற்பங்கள். மண்டபச்சுற்று வரிசையில் காணப்படும் நாட்டிய கரணங்கள் தெவிட்டாத இன்பம்பயப்பன.

அச்சுதப்பநாயக்கர் அவர்கள் ஸ்ரீமுஷ்ணம் ஆதிவராஹஸ்வாமி கோயிலில் சிறப்பான கைங்கர்யங்களைச் செய்துள்ளார். அக்கோயிலுள்ள புருஷசூக்தமண்டபம் மற்றும் சில சிறிய சந்நிதிகள் அச்சுதப்பநாயக்கரால் நிறுவப்பெற்றவை. ஒரு காலத்தில் கோயிலின் கருவூலக் கண்காணிப்பையும், நிர்வாகப் பொறுப்பையும் அச்சுதப்பரே ஏற்று நடத்திவந்தார். அக்கோயிலுக்காகப் பற்பல கிராமங்களையும்

தானமளித்துள்ளார். மேலும் விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்ட தஞ்சையை ஆண்ட மன்னர் அச்சுதப்ப நாயக்கரின் பிரதிநிதிகளான ஆனந்தன், கோவிந்தன், கொண்டலு என்ற மூன்று உடன்பிறப்பாளர்களும் இணைந்து இந்த பதினாறுகால் (புருஷசூக்த) மண்டபத்தினை வடிவமைத்ததாக தென்னார்க்காடு கெஸட்டியர் கூறுகிறது. இம்மூவரையும் தூண் சிற்பமாக ஸ்ரீமுஷ்ணம்-புருஷசூக்த மண்டபத்தில் காணலாம்.

பூவுலகத் தோற்றமுறைக்கும் புருஷோத்தமன்

புருஷசூக்தமண்டபத்துள் அமைந்த அரியசிற்பங்களுள் ஒன்றே ‘பூவுலகத்தோற்றமுறைக்கும் புருஷோத்தமன்’ எனும் தூண்புடைப்புச்சிற்பம் ஆகும். இதனை கருடன் சன்னதியை ஒட்டியே வலப்பக்கத்தில் அமைந்துள்ள தூணில் கிழக்கு நோக்கியவண்ணம் நின்ற கோலத்தில் நிறுவியுள்ளனர். அம்மூர்த்தியின் வலது இடது கீழிருகரங்களில் முறையே வரம்தரும் கையினையும், அச்சமகற்றும் முத்திரையினையும், வலது இடது மேலிருகரங்களில் முறையே திருவாழித்திருச் சங்கங்களையும் காணமுடிகிறது. அவரது இடுப்பின் கீழ்ப்பகுதியில் தென்பாதி பெண்குதிரை வடிவும், வடபாதி பெண்மாட்டின்வடிவும் காணக்கிடைக்கின்றன. பெண்மாட்டின் சுரப்பிகளில் பெருகும் பாலை அருந்தும் நிலையில் சதுர்முகப் பிரம்மா தன் கீழ்ப்பகுதியை குதிரைவடிவோடு நிறுவப்பெற்றுள்ளார். அக்குதிரையின் கால்களுக்குக் கீழே ஜடாமுடி தாங்கிய ஒருவர் அஞ்சலிமுத்திரையோடு அமர்ந்தநிலையில் காட்சி கொடுக்கிறார்.

சிற்ப விளக்கம்

இந்த சிற்பம் உலகின்தோற்றத்தை விளக்கும் ஓர் உன்னத படைப்பாகும். வேதத்துள் சிறந்த புருஷசூக்தம்

மற்றும் பாகவத மகாபுராணத்தின் அடிப்படையில் இவ்வரிய சிற்பம் அமைந்து விளங்குகின்றது. வராஹன் பாதி புருஷன் பாதியாக விளங்கும் ஸ்ரீமுஷ்ணம் ஆதிவராஹப்பெருமாள் கோயிலில் வாசுதேவனே புருஷன், பிரம்மா முதல் மற்ற உலகமெல்லாம் பெண்வடிவமென்று பேசும் ந்ருஸிம்மபுராணக் கூற்று போலே புருஷன் பாதி பூவுலகம்பாதி எனும் உயர் தத்துவம் நிலைநாட்ட உரிய இடம் புருஷசூக்தமண்டபம் என்றால் அது மிகையல்ல.

எம்பெருமானின் ஸ்ருஷ்டியில் பிரம்மாதிதேவர்கள், பூமி, பூமியிலிருந்து கிடைத்த பொருட்களைக்கொண்டு தேவர்கள் புரியும்வேள்வி, (தஸ்மாத் அச்வா: அஜாயந்த, காவோ ஹ ஜக்ஞிரோ தஸ்மாத்) அதிலிருந்து குதிரைகள் தோன்றின. ஆநிரைகள் முதலானவற்றை எம்பெருமான் அதிலிருந்தே தோன்றச்செய்தார் எனக்கூறும் புருஷசூக்தம் ஈண்டு நினைக்கத்தக்கது.

ஆயிரம்தலைகள், ஆயிரம்கண்கள், ஆயிரம்கால்கள் கொண்ட விராட் புருஷனின் தோற்றம், எம்பெருமான் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்தல், பிறகு பிரம்மதேவர் தம் மனத்திலிருந்து ஸனகர், ஸநந்தனர் முதலான பிறவித்துறவிகளைத் தோற்றுவித்து ஜகத்ஸ்ருஷ்டி மேற்கொள்ளப் பணிக்க, அம்முயற்சி பலிதமின்றி அவர்களும் தியானதவங்களில் ஆழ்ந்துபட, பிரம்மதேவர் தம் புருவத்திலிருந்து உருத்திரரைத் தோன்றச்செய்து உலகுபடைக்கக் கோருகிறார். அவரது படைப்பில் திருப்தி அடையாத பிரம்மதேவர் இறுதியாகத் தன்னையே ஸ்வாயம்புவ மனுவாகிற ஆணுமாகவும், சதரூபை எனும் பெண்ணுமாகவும் பிரித்துக்கொண்டு பிராகிருதம் (சத்வம், ரஜஸ், தமஸ் முதலான குணாதி), வைகிருதம் (நிற்பன மற்றும் நடப்பன), தேவம் (வானவர் உலகம்) என மூன்று பிரிவுகளில் 10 வகையாக உலகைப் படைக்கின்றார்.

ஆயினும் ஜடாமுடியுடன் தொழுதகையோடு அமர்ந்தநிலையில் கீழே ஒரு நபரைக் காண்கின்றபோழ்து ஸனகர் முதலான நான்கு முனிவர்கள், உருத்திரர் போன்றோரின் தோற்றத்தை ஆங்கே நினைக்கச்செய்கின்றது. ஒரு நபரே ஆதலால் அவர் உருத்திரரே என்பதும் உறுதிபடுகின்றது. மேலும் ஸமஷ்டி ஸ்ருஷ்டிக்கு (சுவர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய பரந்த உலகத்தோற்றத்திற்கு) அதிபதியாக ஸ்ரீமந்நாராயணன் தானே உலகு படைத்ததையும், பிரம்மதேவர் முதலானோரைக் கொண்டு அனைவருக்கும் உள்ளுறைபவனாக இருந்து தானே இந்த வியஷ்டி ஸ்ருஷ்டியையும் (அதிலிருந்து பூவுலகத் தோற்றத்தையும்) புரிந்ததை எடுத்துரைக்கின்றது.

பிரம்மதேவரின் படைப்புத்தொழில் ஒருவாறு நிறைவேற,தோன்றிய இனங்களுக்கு வாழ்விடம் ஏற்படுத்தும் தமது கோரிக்கையினை ஸ்வாயம்புவ மனுவும், சதரூபையும் அவரிடம் தெரிவிக்கின்றனர். வாழ்விடமான பூவுலகம் கடலில் மூழ்கிக் கிடப்பதை யறிந்து அதனை வெளிக்கொணர பிரம்மதேவர் தம்மூக்கின் வழியாக வராஹவதாரத்தைத் தோற்றுவித்து, தடையான ஹிரண்யாக்ஷனை கொல்லச்செய்து, கடலிலிருந்து பூவுலகை மீட்டுவரச்செய்தார். பிரம்மதேவரின் நூறு ஆண்டுக்கால ஆயுள்நிறைவுற்ற நிலையில் அதனை அடுத்து பேசப்படுவதும் தற்போது நடைமுறையில் இருப்பதும்தான் ஸ்ரீசுவேத வராஹகல்பம் என்பதும் ஈண்டு நினைக்கத்தக்கது.

பூவுலகத் தோற்றமுறைக்கும் புருஷோத்தமன் அமைந்த இடமாகிற பதினாறுகால் மண்டபம் வேள்விபுரிந்த யாகவேதிகையோ என வியக்க வைக்கிறது. பகவான் பிரம்மதேவரால் தோன்றச்செய்த வராஹ அவதாரமும் இங்கே நினைத்து போற்றத்தக்கது.

மேலும் தாராசுரம், சிதம்பரம், திருவரங்கம்-சேஷராயர் மண்டபச் சிற்பங்களில் முழு யானையும், முழு மாட்டினையும் ஒன்றிலேயே இணைத்துப் பின்னியிருக்கக் கண்டிருக்கிறோம். யானை மாடு இணைச்சிற்பத்தைக் காட்டிலும் வித்தியாஸமான படைப்பாக மேல்பாதி திரு வாழித்திருச்சங்கங்களுடன் கூடிய திருநாராயணனையும் (இடுப்புவரை) கீழ்ப்பாதி முன்புறம் ஒரு பெண்குதிரையின் பின்பாதியினையும், பின்புறம் ஒரு பசுமாட்டின் பின்பாதியினையும் தற்போது காண்கிறோம். ஒரே மிருகம் போல் தோன்றச்செய்யுமளவு இரு மிருகங்களின் இணைப்பாகிறது இந்த சிற்பம். இதைக் கண்டவர்கள் எங்குமே காணவரிதான இந்த கலைப் படைப் பினைப்(இதை அமைத்த சிற்பியினைப்) பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த படைப்பிற்கு ஆதாரமாகலாம் என எண்ணும் வகையில் மிகப் பழமையான கின்னரர் உருவம் பொறித்த மரச்சிற்பம் ஒன்று கிடைத்துள்ளது. அதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும். அந்த சிற்பத்தில் கின்னரர் என்ன இவர் மனிதரோ ? என எண்ணும்படி முன்பாதி மனித உருவம் பின்பாதி மிருகத்தின் வடிவும் காட்டப்பெற்றுள்ளது.

(**Kinnara Sculpture** : The balustrade that surrounds mahabodhi temple at bodhgaya in Bihar imitates wooden trellis work and parts of it date back to the 2nd century B.C. The flower medallions contain a variety of motifs, including this Kinnara, the Indian century. Ancient India from the origins to XIII century AD, UG 5411, P.No. 160, T.M.S.S.M. Library, Tanjore).

மேலும் நாராயணோபனிஷதம் கூறுகின்ற முறையில் அமையும் (புருஷோத்தமன்) "முதலாம் திரு உருவம் மூன்றென்பர் ஒன்றே முதலாகும் மூன்றுக்கு" மென்பர் எனும் பாசுரப்படி எம்பெருமான் எல்லாருடைய உள்ளக்கோயில்களிலும் தானே எழுந்தருளி உலகைப் படைக்கின்றார்.

இத்தகைய ஆழ்பொருளை அறிவிக்கும்முகமாக நாரணன்பெருமையை நாடெல்லாமறிய புருஷசூக்த மண்டபத்தில் அமைந்த அரிய சிற்பங்களுள் ஒன்றாய் 'பூவுலகத்தோற்றமுறைக்கும் புருஷோத்தமன்' சிற்பத்தை நாட்டினார் போலும்.

****

2-12 ரங்கராஜஸ்தவத்தில் சிற்பம்

இராமானுஜரின் பிரிய சிஷ்யர் கூரத்தாழ்வான். அவரது புதல்வர் ஸ்ரீபராசரபட்டர். அவர் இயற்றிய நூல்களுள் ஸ்ரீரங்கராஜஸ்தவம் என்பது திருவரங்கம் அரங்கநாதனைப் பற்றிய துதி நூலாகும். ஆயினும் இலக்கணசாஸ்திர பிரயோகங்கள் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் மலிந்து காணப்படும். ஸ்ரீபராசரபட்டர் திருவரங்க நாதனின் தரிசனத்தை நம் கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகிறார். இதனால் சிற்பம் சார்ந்த சில செய்திகளை உட்பொருத்தி கவிதையாக அளித்தமை இந்நூலில் காணக்கிடைக்கிறது.

ஸ்ரீரங்க திவ்யபவனம் புவி கோபுராணாம்
பிராகாரிதேன நிகரேண கருத்ம தேவ |
பார்ச்வப்ரஸாரித பதத்ரபுடனே பக்த்யா
நாநா தனுரபிருபகூடமுபக்னயாம: || 34

என்கிறபடி திருவரங்கனின் ஆலய அமைப்பை இருபக்கவாட்டிலும் சிறகுகள் படர அமர்ந்த கருடனைப் போலே அமைந்திருக்கின்றது எனச் சித்திரிக்கின்றார் ஸ்ரீபராசரபட்டர். திருவரங்கமானது எழுகடல்கள் சூழ்ந்த மகாமேரு பர்வதம் போலே ஏழுதிருவீதிகளுடன் விளங்குகின்றது. முதலில் ஸ்ரீபராசரபட்டர்

ஸ்மேரானாக்ஷி கமலைர் நமத: புனானாம்
தம்ஷ்ட்ரா கதா ப்ருகுடிபி: த்விஷதோ துனானாம் ।
சண்ட: ப்ரசண்டமுகத: பிரணமாமி 50
ரங்க துவாராவளீஷு சதஸ்ருஷ்வதிகாரபாஜ: ॥ 37

என்கிறபடி சண்டபிரசண்டர்களை கிழக்கு வாசலிலும், பத்திரசுபத்திரர்களை தெற்குவாசலிலும், ஜயவிஜயர்களை மேற்குவாசலிலும், தாத்ரு விதாத்ருக்களை வடக்கு வாசலிலும், மனத்தினால் வணங்கி கோயிலினுள்ளே நுழைந்து பராங்குச பரகாலயதிவராதிகளை நமஸ்கரிக்கின்றார். பிறகு திருக்கோயிலை வலம்வந்து ஆயிரங்கால் மண்டபத்தை குறிப்பிட்டு, அதைத் தொடர்ந்து முறையே ஒன்றன் மேல் ஒன்றாக பிரைகிருதிமண்டலம், கூர்மம், ஆதிசேஷன், பூமி, சமுத்ரம், அஷ்டதளபத்மம், அதன்மேலுள்ள ஸ்ரீரங்க விமானம் ஆகியவற்றைத் துதிக்கக் காட்டுகிறார். இந்த வடிவமைதியைப்பெற்று விளங்குகிறது ஸ்ரீரங்கம் கோரதம் என்னும் சிறுதேர். அப்படியே தெற்குஉத்திரவீதி திருக்கோபுரத்தைத் தரிசித்து,

வியாபி ரூபமபி கோஷ்பதயித்வா -
பக்தவத்ஸலதயோஜ்ஜித வேலம் ।
தத்விஷந்தப ந்ருகேஸரி ரூபம்
கோபுரோபரி விஜ்ஜிரும்பிதமீடே ॥ 46

என்றவாறு ஆங்கே காட்சிதரும் பல கைகளுள்ள நரசிம்மரை "வியாபி ரூபம்" என்பதாலும் பசுமாட்டுக் காலின் குளம்பளவான இடத்தில் விளங்கும் ஸ்தம்போத்பவ நரசிம்மரை "கோஷ்பதம்" என்ற சொல்லாலும் குறிப்பிட்டு வணங்குகின்றார்.

விததது சுகம் விஷ்வக்ஸேனஸ்ய தே பிரதமே படா:-
கரிமுகஜயத்ஸேனௌ காலாஹ்வசிம்மமுகௌ ச ய: |
ஜகதி பஜதாம் தத்தத்ப்ரத்யூஹ தூல தவானலா:
திசிதிசி திவாராத்ரம் ஸ்ரீரங்கபாலன கர்மடா: || 52

எனும் இச்சுலோகத்தால் விஷ்வக்ஸேனருக்கும் கரிமுகன் (விநாயகன்) ஜயத்ஸேனருக்கும், வணக்கம் செலுத்தி 53ம் சுலோகத்தால் ஸ்ரீரங்கசாயியை போற்றித்துதிக்கிறார். 54ம் சுலோகத்தினால் ருத்ரா சுகீர்த்திஸமேதரான கருட வந்தனமும், 55ம் சுலோகத்தால் ஆள்காட்டிவிரலால் 'ஒலி எழுப்பாதே' என்றுரைக்கும் கருவறைத் துவார பாலகர்களுக்கு வணக்கமும் செய்யப்படுகிறது. பிறகு வைகுந்தநாததியானமும், அமர்ந்தகோல கருட தரிசனமும் உரைக்கப்படுகின்றது. இதனை பஞ்சகால க்ரியா தீபிகைவழி சிறிது பார்ப்போம்.

வைகுந்தநாதன் தியானம்

ஆதிசேஷன் குடைபிடிக்கின்றதான அரவு ஆசனத்திலே அமர்ந்தருளும் பகவான் நாராயணனை தாமரைக்கண் நெடியபிரானை, ஹாரம், கேயூரம், கடகம் முதலான அணிகலன்களோடு விளங்குபவரை வலது காலை மடக்கிக்கொண்டு, இடது காலை தொங்கவிடப் பட்டவாரகவும், வலதுகையினை முழங்காற்பகுதியில் வைத்து படரவிட்ட விரல்களை உடையவரும், இடது கையினை ஆஸனமாகிற அரவின் மீது வைத்தவரும், மேலிரண்டு வலதிடது கைகளில் முறையே திருவாழித் திருச்சங்கங்களைப் பெற்றவரும் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய செயல்கள் அனைத்திற்கும் காரணமானவரும், மைபோன்ற கரியமேனியை உடையவரும், கௌத்துவத்தோடு விளங்குபவரும் ஆன வைகுந்தநாதனை பஞ்சோபநிஷன் மந்திரத்தால் தியானிக்க வேண்டும். வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன்,

அநிருத்தன், நாராயணன் ஆகிய ஐவரை அவர்களது பீஜாக்ஷரங்களுடன் வணங்கும் முறையை தெரிவிப்பது பஞ்சோபநிஷன் மந்திரமாகும். வைகுந்தநாதனின் வடிவு குறித்தறிய "சென்றால் குடையாம்" என்ற திவ்விய பிரபந்த பாசுரம் துணை நிற்கும்.

திவ்யபிரபந்தத்தில் வைகுந்தநாதன்

> **சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்**
> **நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்**
> **புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்**
> **அணையாம் திருமாற்கரவு.** (முதல் திருவந்தாதி - 53)

திருமகள் கேள்வனான திருநாரணன் உலாவரும் போது அரவாகிற ஆதிசேஷன், நடந்தால் திருக்குடையாகவும், வீற்றிருக்குங்கால் அரியணையாகவும், நிற்கும்பொழுது மரவடியாகவும், கடல் வெள்ளத் தெப்பமாகவும், உறக்கம்பேண மெத்தையாகவும், இருள் நீக்கும் மணிவிளக்காகவும் பணிவிடை புரிகின்றான்.

ஆதிசேஷனின் அத்தகைய அருந்தொண்டினை நினைவுகூறும் வகையில் அற்புதமான அழகு வாய்ந்த வண்ண ஓவியம் மேல்கோட்டை-திருநாராயணபுரம் சம்ஸ்க்ருத ஆய்வு நிறுவனத்திலுள்ளது.

எம்பெருமானின் தொங்கவிட்டுள்ள இடது திருவடி கீழ் ஒரு சிறு பாம்பும் ஓவியமாய்த்தீட்டப்பெற்றுள்ளன. ஓம்காரவடிவமாய்க் காட்சிதரும் ஆதிசேஷன் மீது மேலிரு கரங்களில் திருவாழித்திருச்சங்கத்துடன் எம்பெருமான் வைகுந்தநாதனாகக் காட்சி தருகின்றார். அதோடு மட்டுமல்ல இந்த ஓவியத்தில் ஆதிசேஷனின் உடலாலேயே எம்பெருமானின் திருவடிக்குக்கீழ்ப் பகுதியில் 'வாசு' ('వాసు') என்ற இரண்டு தெலுங்கு

எழுத்துக்களை எழுதி இவரை வாசுதேவன் என்றே சுட்டிக்காட்டியுள்ளார் அந்த ஓவியர். மரவடியாக அமைந்த பாம்பு சு(ஸு)என்ற எழுத்தின் தலைக்கட்டுமாகும்.

சென்றால் குடையாம் என்ற பாடலுடன் "ஓம்கார வட்டத்து மாசுணப்பாயில்" என்கிற அஷ்டபிரபந்தத்தின் (திருவரங்கத்துமாலை, பா-102) சொற்றொடர் ஈண்டு நினைக்கத்தோன்றுகிறது.

இவ்வாறாக தியானித்து எம்பெருமானுக்கு நல்வரவு நல்கி, ஆராதனம் நிறைவுறும் வரை இங்கே எழுந்தருளியிருக்க பிரார்த்திக்க வேண்டும். அதைத் தொடர்ந்து, 'ஓம் ஸ்ரீ சுதர்சனாய ஹேதிராஜாய நம:' என்று கூறி எம்பெருமானைப் பார்த்தவாறே அவரைக் காண்கையாலடைந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டும் முகபாவத்தோடு பகவானின் சக்கரத்தைத் தலையில் தாங்கியவரும் (செந்நிறம், செங்கண்களைக்கொண்டு இருகையால் எம்பெருமானைத் தொழுதவடிவினரும் கோபாலதேசிகன் ஆஹ்னிகம்) ஆன சுதர்சனரை வலப்பார்சுவத்தில் வணங்கி, அங்கேயே 'ஓம் நந்தகாய கட்காதிபதயே நம:' என்றுகூறி பகவானுடைய கத்தியை தலையில் தாங்கிய நந்தகனை வணங்கி, அங்கேயே 'ஓம் பத்மாய நம:' என்று சொல்லி, பகவானுடைய பத்மத்தை தலையில் தாங்கிய பத்மனை வணங்கி, அங்கேயே 'ஓம் பாஞ்சஜன்யாய சங்க்காதிபதயே நம:' என்றுகூறி வெண்மைநிறம், செங்கண்கள் ஆகியவற்றோடு எம்பெருமானைத் தொழுத வடிவினரும் சங்கத்தைத் தலையில் தாங்கியவரும் ஆன சங்க்க புருஷனை இடப்பார்சுவத்தில் வணங்கி அங்கேயே 'ஓம் சார்ங்க சாபாதிபதயே நம:' என்று சொல்லி அம்புக்கதிபதியான

சார்ங்கனை வணங்கி 'ஓம் ஸர்வேப்யோ பகவத் திவ்யாயுதேப்யோ நம:' என்று கூறிபகவானின் அனைத்து ஆயுதங்களைச் சுற்றிலும் வணங்கி .... (ஆயுதங்களின் விளக்கம் விஹகேந்திர சம்ஹிதை பாகம்-1,2 தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு பக்கம்-264 மற்றும் சதுர்விம்சதி மூர்த்தி லக்ஷணம், பாகம் -2, தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு, பக்கம். 139-141 ஆகியவற்றில் கண்டுகொள்க) பின்னர் எம்பெருமானுக்குப் பணிவிடை புரியும் நாகராஜர் போன்றோருக்கு நமஸ்காரம் செய்து 'ஓம் வைம் வைனதேயாய நம:' என்று சொல்லி கருட பகவானை அமர்ந்த கோலத்தில் இருகரங்கூப்பி இறைவனை நோக்கித் தொழுமவராய் ருத்ரா, சுகீர்த்தியாகிற தேவியருடன் கூடியவராய் நினைத்து வணங்கவேண்டும்.

இப்படி அமர்ந்த கோலக் கருட தரிசனத்திற்குப் பின்பு அரங்கநாதனின் வடிவழகைக் குறிப்பிட்டு ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பராசரபட்டர்

ஆயத்கிரீடமணிகோல்லஸதூர்த்வ புண்ட்ரம்-
ஆகர்ணலோசனமனங்குச கர்ணபாசம் ।
உத்புல்லவக்ஷ ஸமுதாயுத பாஹுமர்ஹன்
நீவீம் ச ரங்கபதிமப்ஜபதம் பஜாம: ॥ 73

வண்டுகள் மொய்ப்பதாகிற கூந்தலைப் பெற்றவரும் நீண்ட திருமுடியைத் தாங்கியவரும், ஊர்த்தவ புண்ட்ரத்துடன் விளங்குபவரும், காதுவரை நீண்ட கண்களையுடையவரும், கர்ணபாசமுடையவரும், எடுப்பான வக்ஷஸ்தலத்துடன் கைகளில் ஆயுதங்களைப் பெற்றவரும், அழகியதான இடுப்புப் பகுதியை

உடையவரும், தாமரைக் கொப்பான பாதங்களை உடையவருமான ரங்கபதியை வணங்குவோம் என்று வருணிக்கிறார்.

ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் கூறும் சிற்பச்செய்திகள், ஸ்ரீவைணவ தினசரி கூறும் சிற்பச்செய்திகள் ஆகியவற்றை ஒருங்கே அமைப்பதின் பயனாக அமர்ந்த, சயன கோலத்தில் காட்சிதரும் திருமால்களுக்கு எதிரே அமையும் கருடமூர்த்திகளை அமர்ந்த கோலத்தில் அமைக்க வேண்டும் என்பது தெளிவு. இக்கருத்து ஒரு சில இடங்களில் மாறுபடலாம். அமர்ந்த கருடனை முன்னே நிறுவிய சயன கோலங்களுக்கு பூலோகவைகுந்தம் எனப்போற்றப்படும் திருவரங்கத்தையும், குடந்தைக் கருகே அமைந்த 'உண்டவில்லி அனந்தசாயி கிருஷ்ண க்ஷேத்திரம்' (ARE 100 of 1931 - 32) எனும் திருவெள்ளியங்குடி யையும், அமர்ந்த கோலங்களுக்கு தஞ்சை நீலமேக மணிபர்வத வீரநரசிம்ம ஸ்வாமிகளின் திருக்கோயில் களையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

திருவரங்கத்தின் அமர்ந்த கருடனைப் போன்றே வடிவமைக்கப்பெற்றவர் தஞ்சை நீலமேகப்பெருமாள் கோயிலிலுள்ள கருடாழ்வார் என்பது தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்று. தஞ்சை பள்ளியக்கிரஹாரத்திற்கும் நெடாருக்கும் இடையே அமைந்ததும் சோழர் காலத்தில் சிறுவிரம்பூர் என்றழைக்கப்பட்டு தற்போது இராமாபுரம் ஆகியுள்ள சிற்றூரில் வேங்கடாசலபதிக்கு முன்னே பறவைகளின் கால்கள் போன்றே அமைக்கப்பட்ட கருடபகவானையும் நம்மால் காணமுடிகிறது.

2-13 வலவெந்தை நரசிங்கர்கள்

ஸ்ரீலக்ஷ்மிநரசிம்மன் என்று சொன்னால் லக்ஷ்மியைத் தன் இடதுபக்கம் அமர்த்திய கோலம்தான் நம்முடைய நினைவிற்கு வரும். ஆனால் தஞ்சை மாமணிக்கோயில் ஸ்ரீநீலமேகப்பெருமாள் சந்நிதிக்கு வடகிழக்குப் பகுதியின் முகமண்டப வடமேற்குமூலையில் லக்ஷ்மியைத் தன் வலத்தொடையில் அமர்த்தியுள்ள அற்புதமான நரசிங்கனை நம்மால் காணமுடிகிறது. அவரது மேலிருகரங்கள் திருவாழிச் திருச்சங்கங்களை முறையே பெற்றும் கீழிருகரங்களில் வலதுகை பிராட்டியை அணைத்தவாறும் இடது கீழ்க்கையினைத் தன்தொடைமீது இருத்தியும் அமைக்கப்பெற்றுள்ளன. அவரது வலத் தொடைமீதமர்ந்த திருக்கோலத்தில் விளங்குகிறாள் அன்னை மகாலக்ஷ்மி. மகாலக்ஷ்மியின் கரங்கள் அஞ்சலி முத்திரையுடன் அமைக்கப்பெற்றுள்ளன. மகாலக்ஷ்மியின் இருகால்களும் தொங்கவிடப்பட்டுள்ளன.

ஸ்ரீந்ருசிம்மமூர்த்தியின் வலது பார்ச்வத்தில் ‘பிரபோ! கோபம் உபஸம்ஹர ! ...... தக்ஷிணே பிராஞ்சலி க்ருதாம் ச்ரியம் தேவீம் வந்தமானம் த்விஹஸ்தம் என்கிறபடி நரசிம்மஸ்வாமியின் சினத்தைத் தணித்துக்கொள்ள அவரிடம் பணிந்து வேண்டுபவளாய் இரு கைகளுடன் அஞ்சலி முத்திரையோடு லக்ஷ்மியை நிறுவுதல் ஸ்ரீவைகானஸம்-காஸ்யப ஞானகாண்டத்தின் ந்ருஸிம்மாவதார கட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தின் அடிப்படையில் தணிந்தது நீள் சினமே என்ற சொற்றொடரை உட்கொண்ட ஒரு பாசுரம் அஷ்ட பிரபந்தம்- திருவரங்கத்துமாலையில் முப்பத்து இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது. ‘சிங்கப்பிரான் இரணியனை மார்புகீண்டு அழித்தபின்பும் கோபம் தணியாமல் உக்கிரம் மேலிட்டிருக்க அந்த பெருங் கோபத்தைக்கண்டு பிரகலாதன் பணிந்து பிரார்த்தித்த-

தினாலும், இலக்குமி சமீபித்ததினாலும் சினம் தணிந்தனன் என்ற வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் உரை ஈண்டு சிந்திக்கத்தக்கது.

தஞ்சையாளிநகர் சிங்கப்பெருமாள் கோயிலின் உள்ளே சென்று திருச்சுற்றில் வேதசுந்தர விமானத்தின் (மூலவர் விமானத்தின்) இடுப்பு பகுதியான தென்மேற்கு மூலையில் (உச்சிஷ்டகணபதிக்கு மேற்கே) மங்கையோடு மனமகிழும் மா நரசிங்கனைச் சேவித்து மகிழலாம்.

விண்ணாற்றங்கரை நரசிங்கப்பெருமாள் கோயிலில் தென்திசை நோக்கிய திருமுக மண்டலத்தின் அமர்ந்த கோலத்தில் காட்சிதரும் இவரது வலத்தொடை மீது அமர்ந்த திருக்கோலத்தில் விளங்குகிறாள் மகாலக்ஷ்மி. அவரது இடது கரம் மேலே நிமிர்த்திய நிலையில் தாமரை மலரைத் தாங்கியும் வலதுகரம் கீழே தொங்கவிடப் பட்டுள்ள நிலையிலும் அமைக்கப்பெற்றுள்ளது. தேவியின் இருகால்களும் தொங்கவிடப்பட்டுள்ளன. நரசிங்கனும் தன் வலது காலை மடக்கி இடது காலை தொங்கவிட்டபடி அமர்ந்து வீராஸனத்தில் காட்சி நல்குவதோடு மேலிருகரத்தில் சங்குசக்கரங்களைப் பெற்றும் இடது கையினைத் தன்தொடைமீது நிறுத்தியும் வலது கீழ்க்கையால் திருமகளின் தோளை அணைத்தவாறும் விளங்குகின்றார். இத்திருவுருவம் காண்பதற்கரிதான ஒன்று. வலவெந்தை நரசிம்மர்களாக இதுவரை அறியப்பட்டவர்களுள் இவர் வித்தியாஸமான தோற்றத்தில் காட்சி கொடுக்கிறார். மங்கையோடு மனமகிழும் மாநரசிம்மர் ஆதலால் இவர் கல்யாணநரசிம்மர் என்றழைக்கப்படுகிறார்.

வலவெந்தை நரசிம்மரது தியான சுலோகம் ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமத்தின் அஹிர்புத்ன்ய ஸம்ஹிதையில் குறிப்பிடப்பெற்றுள்ளது. தியான

சுலோகம் மற்றும் அதன் பயன்களை தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்டுள்ள பராசரக்ஷேத்திர மாகாத்மியத்தில் விரிவாகக் காணலாம். ஆகம அடிப்படையில் அமைந்துள்ள வலவெந்தை நரசிம்மர்களை விண்ணாற்றங்கரைதனிலும், திருவாலி, சிங்கரிகோயில் காவலகுடி, படவேடு, ஆலங்குடி (அபயவரதராஜப் பெருமாள்) கோயில்களிலும் கண்டு போற்றலாம்.

வலவெந்தை நரசிம்மமூர்த்தியின் படங்கள் குமுதம் பக்தி ஸ்பெஷல், தினத்தந்தி, தினமலர் போன்ற வற்றிலிருந்து சேகரிக்கப்பெற்றன.

2-14 விண்ணாற்றங்கரை பெருமாள்கோயில் சிற்பங்கள்

தஞ்சை விண்ணாற்றங்கரையில் உள்ள சிங்கப் பெருமாள் கோயிலில் மற்றும் தஞ்சை மாமணிக்கோயில் சிற்பச்சிறப்புகளை இப்போது நாம் அறிந்து கொள்வோம்.

சிங்கப்பெருமாள்கோவிலின் முகப்பு வாயிலைக் (அரசகோபுரம் என்னும் கட்டை கோபுரத்தை) கடந்த உடனே நம் கண்ணில் முதலாகப்படுவது துவஜஸ்தம்பம் என்ற கொடி மரம், அதற்குச் சற்று முன்பாக ஒரு தீபஸ்தம்பம் உள்ளது. அந்த தீபஸ்தம்பத்தில் கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய திசைகளில் மட்டும் சிற்பங்கள் தென்படுகின்றன. அவற்றுள் வடக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் கோதண்டராமன் காட்சி தருகின்றார். தென்திசை நோக்கி நின்ற வண்ணம் அருள்பாலிப்பவர் புள்ளரையன் எனப்படும் கருடாழ்வார். கிழக்கு நோக்கி அருள்பாலிப்பவர் அயோத்தியர் கோமான்.

கனி உண்ணும் ராமபிரான்

இந்த சிற்பம் ராமபிரான் என்று அறிந்திட முடியா வண்ணம் அமர்ந்த கோலத்தில் அவரது வலக்கையில் கண்ணபிரானின் கையில் காணப்படும் வெண்ணை போன்ற வடிவு காணக்கிடைக்கின்றது. அமர்ந்த கோலத்தில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு மிடுக்காய்க் காட்சி தரும் அவ்வெம்பெருமானின் அடியை வருடி அரும்பணி செய்யும் அனுமனின் உருவத்தைப் பார்க்கும்போது வெண்ணை உண்ணும் கண்ணன் என்று இச்சிற்பத்தைக் கூறவே முடியாது. இத்திருக்கோயிலின் அர்த்தமண்டபத்தின் வடகிழக்கு மூலையில் கால்மேல் கால்போட்டுக் கொண்டு ஒய்யாரமாய் தென்திசைப் பார்த்து இரு மருங்கிலும் அனுமன், லக்குமணன் புடைசூழ அமர்ந்து அருளாசி புரிவதைக் காணமுடியும்

இவ்விதமாக வீரநரசிங்கப்பெருமாள்கோயிலில் காணப்பெறும் தீபஸ்தம்பத்தின் அமர்ந்த கோலத்தில் அருள் புரியும் எம்பெருமான் அயோத்தியர் கோமான்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்வூரிலேயே மற்ற இடங்களில் காட்சிதரும் ராமபிரானைக் காட்டிலும் சற்று வித்தியாசமுடையவர்தான் இவர் என்பதும் தெரிய வருகிறது. மேற்கூறிய வகையில் சிற்ப அமைதியையும் வைத்துப் பார்த்தால் கனகம் மேவிய அயோத்தியர் கோமானைச் சந்தித்த அனுமன் அவருக்கு அருங்கனி தந்து அடிவருடிப் பணி செய்கின்ற காட்சியை அறிய முடிகிறது.

அச்சுதப்பநாயக்கர்

தஞ்சகன் என்னும் அசுரனின் காரணமாய் ஏற்பட்ட தஞ்சை ஆளி நகரின் (விண்ணாற்றங்கரை சிங்கப் பெருமாள் கோவிலின்) திருப்பணியை அச்சுதப்ப

நாயக்கர் மேற்கொண்டார் எனத்தெரியவருகிறது. செவ்வப்பநாயக்கரும் அவர்தம் புதல்வர் அச்சுதப்ப நாயக்கரும் இணைந்து தஞ்சையை ஆண்டு வருகையில் விண்ணாற்றங்கரை சிங்கப்பெருமாள் கோவிலுக்கு 'புதலூர்' என்னும் சிற்றூரைத் திருப்பணிக்காக அளித் துள்ளார். இச்செய்தியினை ஆழிக்கல் சாசனமொன்று தெரிவிக்கின்றது. 'ஆழி' என்றால் சக்ரம் என்பது பொருள். உச்சியில் சக்கர வடிவத்துடன் நிறைகுடம் போன்ற மங்கலச்சின்னத்துடன் வரலாற்றுச்செய்தியையும் கல் எழுத்துக்களால் பொறிக்கப்பெற்று நடப்படும் கல்லே ஆழிக்கல் ஆகும். அது தஞ்சாவூர் மேற்குப்பகுதி "சக்ரசாமம்" என்னும் சிற்றூரில் இருந்து கிடைத்தமையால் விண்ணாற்றங்கரை விண்ணகரங்கள் பண்டொருகால் தஞ்சையின் மேற்கே விளங்கியமை அறிய முடிகிறது. விண்ணாற்றங்கரை வீரநரசிங்கப்பெருமாள் கோவிலின் தாயார் சன்னதி முன் மண்டப நுழைவாயிலின் படிகளுக்கு வடப்புறம் சுவற்றில் அதிஷ்டான வர்கத்தில் ஒரு அடி உயரமுள்ள ஒரு மன்னரின் சிலை காணப்படுகிறது. நின்ற திருக்கோலத்தில் அரசருக்குரிய அம்சங்களோடும், நாயக்க மன்னர்களுக்குரியதான அளகபாரத்துடன் (கூந்தலால் ஆன சாயக்கொண்டையுடனும்) திகழும் அவ்வுருவத்தினர் ஆழிக்கல் சாஸனவரிகளால் அறியப்பெறுகின்றவரும், சிங்கப்பெருமாள் கோவிலைத் திருப்பணி செய்துவித்த அரசப்பெருந்தகை அச்சுதப்பநாயக்கரே ஆவார். ஆகவேதான் அச்சுதப்ப நாயக்கரின் சிற்றுருவச் சிலைதனை குறிப்பிட்ட இடத்தில் பொருத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது. இந்த சிற்றுவச் சிலை குறித்த அரிய செய்திகள் தஞ்சாவூர், தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு, தஞ்சை சரசுவதி மகால் வெளியீடான பராசரக்ஷேத்திர மாகாத்மியம் ஆகிய நூல்களில் காணக்கிடைக்கின்றன.

தஞ்சையாளிநகர் சிங்கப்பெருமாள் கோயிலின் பாலமைந்த பற்பல சிற்பங்களைப் போலவே தஞ்சை மாமணிக்கோயில்-நீலமேகப்பெருமாள் கோயிலிலும் வலாவந்தை நரசிங்கன் அசோகவனத்தில் சீதை, சுக்ரீவசக்யம், சஞ்ஜீவி ஆஞ்சநேயர், வால்கோட்டை ஆஞ்சநேயர், திருவரங்கம்-அரங்கநாதர் கோயில் கருடமண்டபத்தில் காட்சி தரும் அமர்ந்த நிலை கருடனின் திருஉருவ அமைதிக்கேற்ப தஞ்சை நீலமேகப்பெருமாள் சந்நிதி கருட மண்டபத்தில் வீற்றிருந்த நிலையில் கருடாழ்வாரும் ஆழ்வார் ஆசார்யர்களின் வழியே அமையும் பவிஷ்யத் ஆசார்ய மூர்த்தங்களும் (நம்மாழ்வார் பீடத்தில் ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீபாஷ்யகாரர் பீடத்தில் ஸ்வாமிதேசிகன் போன்றவை) காணப்படுகின்றன. மேலும் ஆங்கே தல வரலாறு உரைக்கும் வராகப் பெருமாள் அருள்புரிகின்றார்.

வரலாறு கூறும் வராகப்பெருமாள்

தண்டகன் ஸம்ஹாரம்செய்யப்பட்டு வீழ்ந்த இடம் தஞ்சைமாமணிக்கோயில் ஆனதால் இந்த க்ஷேத்திரம் வராகக்ஷேத்திரம் எனப்பெயர் பெற்று விளங்குகிறது. இதுதான் இப்போதுள்ள வெண்ணாற்றங்கரை என வழங்கும் ஸ்தலம். எம்பெருமான் வராகத்திருமேனியுடன் நின்று ஒரு பெருமூச்சுவிட அதன் வேகத்தினால் தண்டகன் மாய்ந்துவிட்டான். பிறகு தண்டகனின் தாயாரான ஜில்லிகை தனது கதியை உணர்ந்து வராகப்பிரானைத் தொழுது பிரார்த்தித்தாள். அவள் ஹிரண்யாக்ஷனின் மகளாயினும் தெய்வவசத்தாலும், ஜன்மாந்திர பாக்கியத்தாலும், பக்தியுடன் எம்பெருமானைக் குறித்துத் தவமியற்றி அனுக்கிரஹம் பெற்றாள். ஜில்லிகை மகள்களான சுவேதா, கிருஷ்ணா ஆகிய இருவரும் எம்பெருமானிடம் பக்திபண்ணி அனுக்கிரஹம் பெற்றனர். எம்பெருமானும்

தண்டகனுக்கு நற்கதியை அளித்தான். ஜில்லிகையின் பிரார்த்தனையால் அங்ஙனம் தண்டகாவனம்என வழங்கும்படி பகவான் அனுக்கிரஹித்தார் என்பதை ஸ்ரீமுஷ்ணமாகாத்மிய நூல் விளக்குகின்றது.

இவ்வாறு வரலாற்றினைப் போதிக்கின்ற வராகப் பெருமாளின் மற்றும் பல செய்திகள் பராசரக்ஷேத்திர மாகாத்மிய நூலில் விளக்கப்பட்டுள்ளன. இம்மூர்த்தியை தஞ்சை-விண்ணாற்றங்கரை-நீலமேகப்பெருமாள்கோயிலின் முகமண்டபத்தில் சேனைமுதல்வர், ஆண்டாள், ஆளரி ஆகியோருக்கருகில் இன்றைக்கும் நாம் கண்டு போற்றலாம்

தனிக்கோயில் நாச்சியார்- ஸ்ரீசெங்கமலவல்லித்தாயார் சந்நிதியின் முகமண்டபத்தில் நுழைந்தவுடன் நமக்கு வலப்புறம்வரும் முதல் தூணில் ராமாயணச் சிற்பங்கள் நிரம்ப உள்ளன. வாலிசுக்ரீவயுத்தம், அங்கதனை வாலி சுக்ரீவனிடம் ஒப்புவித்தல், வீர ஆஞ்நேயர் ஆகியவை தவிர அத்தூணிலேயே உயோகநரசிங்கன், புள்ளின்வாய்கீண்டான் முதலிய சிற்பங்களும் அமைந்திருக்கின்றன. விண்ணாற்றங்கரைப் பெருமாள்கோயில் சிற்பங்களுள் இன்னும் பல்வகையான சிற்பங்களையும் எட்டுவகை நரசிம்மர்களையும் நாம் கண்டு மகிழலாம்.

2-15 விளங்குடியில் விளங்கும் வேங்கடரமணன்

நவீன நீரதச்யாமம் நீலேந்தீவர லோசனம்
வல்லவீ நந்தனம் வந்தே க்ருஷ்ணன் கோபாலரூபிணம்
(நாரதபாஞ்சராத்ரே - ஞானாமிருதஸாரே கோபாலஸ்தோத்ரம் - 11)
சதுர்புஜம் சிதாநந்தம் சாணூர மல்லமர்தனம்
சராசரகதம் தேவம் தம் வந்தே சக்ரதாரிணம்
(ஸ்ரீஹரிநாமமாலா ஸ்தோத்ரம் - 10)

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ-
யுண்டவாயன், என்னுள்ளங் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

(அமலனாதிபிரான் -10)

திருமகள் கேள்வனான திருநாராயணன் தான் இன்புறம் விளையாட்டின் கருவியாக இவ்வுலகை ஏற்படுத்தி அதிலும் மானிடவர்கத்தை கடைத்தேற்ற விருப்புற்றுப் பற்பல அவதாரங்களைப் புரிந்தருளினான். அவைகளைத் தொகுத்து "பரவ்யூஹ விபவாந்தர்யாம்யர்ச்சா ஸ்வரூபிணே" என்றவாறு ஐவகை நிலைகளாகப் பேசப்படுகின்றது.

பரம் என்பதால் பரமபத நாதனையும் வியூஹம் என்பதால் உறங்கும்போது நிகழும் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரியம் முதலிய அவஸ்த்தைகளின் அதிபதிகளான் ஸங்கர்ஷணானிருந்த பிரத்யும்ன வாஸுதேவாதிகளையும், விபவம் என்பதால் மத்ஸ்யம், கூர்மம் போன்ற அவதாரங்களையும், அர்ச்சையென்பதால் திருவுருவ வழிபாட்டுமூர்த்தியாக விளங்கும் திவ்ய மங்களவிக்ரஹத்தையும் குறிக்கின்றது. மேற்கூறிய ஐவகை நிலைகளுள் அர்ச்சாவதாரமே சிறந்தது. ஏனெனில் அந்நிலையே பிற்பாடர் இழவு தீரும்படி பின்னானார் வணங்கும் சோதியாகத் திகழ்கின்றது.

அர்ச்சாவதாரம்

அவதாரம் என்ற சொல்லிற்கு (அவதரதி இத்யவதாரம், அவதரணம் இறங்குகை) இறங்குவது என்று பொருள். அர்ச்சையாகிற இந்நிலைக்கு நாம் அவதாரம் என்ற சொல்லையும் கூட்டி அழைக்கின்ற போழ்தே அவ்வெம்பெருமான்கள் பேரின்பம் பயக்கும்-

மேலுலகத்திலிருந்து படிப்படியாக இறங்கி இப்பூவுலகில் அடியார்களைக் காக்கும் கருத்துடையவனாகத் திகழ்கின்றான் என்பதில் ஐயமில்லை.

அர்ச்சையின் பிரிவுகள்

திருவுருவ வழிபாட்டினை விளக்கும் அர்ச்சாவதாரம் ஸ்தாபனார்ச்சை, கர்மார்ச்சை என இரு வகைப்படும். ஸ்தாபனார்ச்சை என்பது கருவறையினுள் நவரத்தின நியாஸம் செய்து சிலா அல்லது கதைமூர்த்தியை எழுந்தருளச் செய்வதாகும். கர்மாச்சையென்பது பொதுவாக உலோக வகையில் செய்யப்படுகின்ற மூர்த்தியைக் குறிக்கும். கருவறை மூர்த்திக்கும் உற்சவமூர்த்திக்கும் முறையே நான்கு திருக்கரங்கள் அமைப்பதையும், நான்கு கரங்கள் கொண்ட கருவறை மூர்த்திக்கு இருகரங்களுள்ள உற்சவமூர்த்தியை நிறுவிப்பதையும் ஆகமநூல் கூறுகின்றது.

அவ்வகையில் விளங்கவனம் எம்பெருமான்களைப் பற்றிச் சிறிது அனுபவிப்போம்.

ஸ்தாபனார்ச்சை

இத்திருத்தலத்தில் கருவறைமூர்த்தியான ஸ்ரீவேங்கடரமண ஸ்வாமி உபயநாச்சிமார்களுடன் தமது நாற்கரங்களில் முறையே திருவாழித் திருச்சங்கு களுடனும், அபயம் கடிஹஸ்தங்களுடஸஸஸனும் காட்சி தருகின்றார். அவரது வலக்கரத்தில் இலங்கும் திருவாழி நண்பகற்கதிரவனின் வெம்மைக்கு நிகரானது. திருமாலின் ஆயுதங்களிலேயே முதன்மையிடத்தைப் பெற்று வீரமாய்த் திகழுவதால இதன் மூலமாக எழுந்த எம்பெருமானைச் சக்கரத்தண்ணல் என்று சிறப்பித்துள்ளார் நம்மாழ்வார். சக்கரத்தைப் பற்றி உரையெழுதுகையில் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையவர்கள் -

"பிரதிகூலரை ஆண்மையாலே கொல்லும் - அநுகூலரை அழகாலே கொல்லும்" என்று அழகாக விவரித்துள்ளார். இடக்கரத்தில் இலங்கும் வெண்சங்கம் திருப்பாற்கடல் கடையும்போது மேற்கொணரப்பட்டது. அதனோசையைக் கேட்டாலே அரக்கர்கள் அஞ்சி நடுங்குவார்கள். மேலும் அவன் அடியார்களைக் காக்கும் விரதம் பூண்டவனாகையால் தனது இடதுகையை இடுப்பில் வைத்து (विखनसोत्पत्तिचरित्रे-दैविकवासुदेवस्वरूपः- Green No. 1047 चतुर्भुजधरंदेवं शङ्खंचक्रधरंपरम् । अभयंदक्षिणंहस्तं वामं कट्यवलम्बितम् ।। (Palm leaf No. 4th A 4th Line) காக்கும் தொழிலுக்கு உறுதியளிப்பது போல்வும், மற்றொரு கையால் அச்சம் களையும் (அபய) முத்திரையையும் தாங்கியுள்ளான். அதனாலறியப் பெறும் அபயதானத்தைப் பற்றி பாஸகவி இயற்றிய பாலசரிதத்தில் ஒரு நிகழ்ச்சி உண்டு. ஒரு சமயம் ஸ்ரீகிருஷ்ணன், நந்த கோகுலத்தில் குழந்தையாய் இருக்கும் தருணத்தில் எருதொன்று இவனெதிரில் வந்து, "என்னுடைய வருகையைக் கண்டால் கர்பமே கலைந்துவிடும்" என்று தற்பெருமை பேசியது. அதனைச் செவிமடுத்த ஸ்ரீகிருஷ்ணன், "ஓ! அரிஷ்டாசுரா இறுமாப்படையாதே!! உனது திறனைக் காட்டிலும் பன்மடங்கு வலிமை பொருந்தியவன் நானிருக்க உனக்கேனிந்த கர்வம்" என்று கூறினான். அப்போது அரிஷ்டாசுரன், "நீ குழந்தையல்ல, மிகுந்த வலிமை பொருந்தியவன், ஏனெனில்; என்னைப் பார்த்த உனக்குச் சிறிதும் அச்சமேற்படவில்லையே" என்று கூறினான். அதற்கு ஸ்ரீகிருஷ்ணன், "என்ன சொன்னாய் .... நான் இதுவரை கேள்வியுற்றிராத பயம் என்ற சொல் இன்றே உனது மொழியால் செவிமடுக்கப் பெற்றது. பயம் என்பார்களின் பயத்தைப் போக்கி அபயம் அளிக்கவே நான் பூவுலகில் அவதரித்துள்ளேன்" என்று மறுமொழி கூறினான். இவ்விதமாக சதுர்புஜங்களைக்கொண்ட

ஸ்ரீவேங்கடரமணனுக்கு இணையாக இந்த க்ஷேத்திரத்தில்-விளங்குகின்றவர் ஸ்ரீநவநீத கிருஷ்ணஸ்வாமி.

கர்மார்ச்சை

கர்மார்ச்சையென்பது உற்சவாதிகளைச் சிறப்புறக் கொண்டாடும் வகையில் எழுந்தருளச் செய்யப்பெறும் உற்சவமூர்த்தியினைக் குறிக்கும்.

அவ்விதம் விளங்குடியில் விளங்கும் நவநீதகிருஷ்ணனை ஆகமத்தில் கூறியுள்ளபடியே அமைத்துள்ளனர்.

பொதுவாக நவநீத கிருஷ்ணனை அமைக்கும்போது அவனது வலது பாதத்தைச் சிறிது உயரே தூக்கியவாறும் இடது காலை பூமியில் தாங்கி நிற்குமாறும் செய்வர். அதனை அத்ரி மகர்ஷி,

குஞ்சிதம் தக்ஷிணம் பாதம் கிஞ்சிதுத்ருத்ய வை புன: |
கிஞ்சித் குஞ்சித வாமேன ஸ்தித்வா ந்ருத்யந்த்தமேவ தம் ||

என்று குறிப்பிட்டுள்ளார். எம்பெருமானின் இடதுகரத்தை "காரயேத் வாமஹஸ்தம் து சுபுகாந்த சமூச்ரயம்" என்றபடி இடது மோவாய்க் கட்டைக்கு நேராக வருமாறு - அமைக்க வேண்டும் என்பதை பாத்மசம்ஹிதை (கிரியாபாதம்-8) பகர்கின்றது. ஸ்வாமியின் வலது கரத்தை அமைப்பதில் சில மதபேதங்கள் காணப் படுகின்றன.

"அபீதிதம் தக்ஷிணேன வரதம் வா யதாருசி" என்று பாத்ம ஸம்ஹிதையிலும், அபயம் தக்ஷிணம் ஹஸ்தம் நவநீதயுதம் து வா" என்று அத்ரி ஸம்ஹிதையிலும் கூறப்பட்டுள்ள படியால் நவநீத கிருஷ்ணனின் வலதுகரத்தை காளீயநர்த்தனம் போல் அபயஹஸ்தத்துடனும், வரமளிக்கும் வரதஹஸ்தத்துடன் மற்றும் விசேஷமாக

நவநீதத்தை (வெண்ணெய்யை) வைத்துக் கொண்டிருக்கும் ஹஸ்தத்துடனும் அமைக்கலாம். நவநீத நடனம், ராசக்ரீடை போன்ற பாலலீலைகளையெல்லாம் கண்டுகளித்தவர்கள் கோபியர்கள். ஆகையாலே கோபியர்களை அவனருகில் ஸ்தாபிப்பதையும் தியான முக்தாவளியில் "கோபிம் ச வாமத: குர்யாந் மதிதம் ச மகோததி" என்று ஒன்பதாம் ஸ்தபகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இந்த கபித்தவன க்ஷேத்திரத்தில்கோபியருடன் கூடிய பாலகிருஷ்ணனை நவநீத கிருஷ்ணனாக நிறுவியுள்ளார்.

மேலும் இந்த க்ஷேத்திரத்தில் அருள்பாலித்துவரும் எம்பெருமானை வழிபடும்போது தினமும் அனுஸந்தானம் செய்யும் வகையில் மிக அழகான முறையில் பொருட்செறிவுடன் கூடியதும், நவநீத கிருஷ்ணனின் திருஉருவ அமைப்பை விளக்கவல்லது மான ஒரு சுலோகம் தியான முக்தாவளியில் இடம் பெற்றுள்ளது. அச்சுலோகம் கீழ்வருமாறு-

தியாயாம்யுத்ருத தக்ஷிணாங்க்ரி மவநௌ லீக்ஷிப்த பாதாந்த்ரம்-
பாஹூம் வாமம்ருஜூம் விதத்ய-தததம் ஹையங்கவீனம் கரே ।
உன்மீலன் மணிகிங்கிணீ கணகணந் மத்யம் கிசோராகிருதம்-
க்ருஷ்ணம் காஞ்சன நூபுராஞ்சிதபதம் மந்தஸ்மிதாலங்க்ருதம் ॥

(நவநீத கிருஷ்ண தியானம் -தியானமுக்தாவளி-9:60)

இவ்வாறாக விளங்குடி என்ற கபித்தவனத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களைப் பற்றிச் சிறிது விளக்கப்பட்டது.

இக்கட்டுரையின் பால் அறியப்பெறும்-த்யான சுலோகத்தைத் தினமும் அனுஸந்தானம் செய்து கபித்தவனமெனும் விளங்குடியில் விளங்கும் வேங்கடரமணனை போற்றிப் பயன்பெறுவோமாக.

3. இலக்கியம்

3-1 அரங்கனின் அரிய ஆனைவாகனக்காட்சி

திருச்சிராப்பள்ளி - அரங்கமாநகரமர்ந்தானின் அரிய ஆனைவாகனகாட்சியினை உத்ஸவம், பிரம்மோத்ஸவம், ஆனைவாகனம் என்ற வழியில் நாமறிந்து மகிழ்வோம்.

உத்ஸவம் : காலோத்ஸவம், சிரத்தோத்ஸவம், நிமித்தோத்ஸவம் என உத்ஸவம் மூவகைப்படும். ஆண்டு தோறும் வழக்கமாகக் கொண்டாடப்பெறும் விழா காலோத்ஸவம் என்றும், மிக்க ஈடுபாட்டுடன் மேற்கொள்ளும் விழாவினை சிரத்தோத்ஸவம் எனவும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட சாந்திக்காகச் செயல்படும் விழாவானது நிமித்த உத்ஸவம் எனப் பெயரிட்டும் அழைக்கப் பெறுகின்றது.

பிரம்மோத்ஸவம் : தேவாலயங்களில் கொண்டாடப் பெறும் பிரம்மோத்ஸவம் - காலோத்ஸவ வகையினையே சாரும். பிரம்மாதி தேவர்களையெல்லாம் (பேரீதாடனம்) பேரிவாத்யம் முழங்கி அழைத்து செய்யப்படும் விழா பிரம்மோத்ஸவமாகின்றது. இதனை 21,14,9,7 நாட்களில் நடத்துவர். அக்காலங்களில் கிளி, அன்னம், சிம்மம், யாளி, அனுமன், பிரபை, கற்பக மரம், சேஷன், கருடன், சந்திரபிரபை, யானை போன்ற வாகனங்களில் எம்பெருமான் திருவீதி உலாவருதல் காணத்தக்கதாகும். பின் புஷ்பயாகம் 22ம் நாளிலோ, தீர்த்தவாரியிலிருந்து இரண்டாம் நாளோ செய்வர். இதில் அல்லி, அரளி, தாமரை, மல்லிகை, மகிழம், மாதவி, செண்பகம் போன்ற மலர்களால் எம்பெருமானின் கழுத்துவரை உதிரிப்பூக்களைச் சேர்ப்பது வழக்கம். இந்த உத்ஸவாதி களை நடத்துபவர் எண்ணியவை எண்ணியாங்கு பெற்று விஷ்ணு சாயுஜ்யத்தைப் பெறுவர் எனக் கூறுகின்றது

ஆகமம். திங்களும் நாளும் விழாவறாத திருவரங்கத்திலோ புரட்டாசி மாதத்திலும் ஒரு பிரம்மோத்ஸவம் நடந்த குறிப்பினைக் கோயிலொழுகு நமக்குத் தெரிவிக்கிறது.

பிரம்மோத்ஸவத்திற்கு எடுத்துக்காட்டாக மட்டும் 'ஸ்ரீரங்கராஜசரிதம்' எனப்படும் பாண நாடகத்திலிருந்து ஒரு சுலோகம் இங்கே இணைத்துக்காட்டப்படுகிறது.

பௌஷே த்வாம் ப்ரதமம் துவஜோத்ஸவதினே பூமா ஸமேதம் ததோ-
ஹம்ஸோத்தம்ஸ-ம்ருகேந்த்ர-தார்க்ஷ்ய-ஹனுமன்-நாகேந்த்ர
வாஹம் க்ரமாத் ।
தேவீப்யாம் அத சூர்ணஸேகரஸிகம் ரங்கம் துரங்கோத்ஸவம்-
ஸ்ரீபூப்யாம் ரதயாயினம் ச தனயா ஸம்வீக்ஷ்ய மே மோக்ஷிதா ॥

(ஸ்ரீரங்கராஜ சரித பாணம் - பக். 64/சுலோ. 111)

தைமாதம் பூபதித்திருநாள் எனும் பிரம்மோத்ஸவத்தில் குறிப்பாகக் கொடுக்கின்ற ஒரு சில வாகனங்களாக அன்னம், சிம்மம், கருடன், அனுமன், ஆனை, குதிரை, தேர் ஆகியவை அறியப்படுகின்றன. இன்னும் பல வாகனங்கள் இம்மாதமே பயன்படுத்தவும் பெறுகின்றன.

தென்தேசங்களில் இந்திரவிமானம், பிரபை, சேஷன், கருடன், அனுமன், ஆனை, குதிரை, தேர் ஆகிய வாகனோத்ஸவங்களை மேற்கொள்ளும் வகைக்கு ஸ்ரீபிரச்னம்சம்ஹிதையின்

உத்ஸவே தேவதேவஸ்ய வாகனானி ச்ருணுஷ்வ மே ।
விமானோ பாஸ்கர: சேஷ: ஸிம்ஹோ கருட ஏவ ச ॥
கஜோ ரதோ ஹயஸ்ச்சாபி த்ரும: கல்பகஸம்ஞ்க: ।
ஹம்ஸ: சந்த்ர: ஸுமேருஸ்ச சிபிகா பத்ர பீடிகா ॥
ஏவம் விதானி திவ்யானி வாகனானி மனஸ்விபி: ॥

என்கிற ஆகம சுலாகங்களும் 2009 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கநாதபாதுகா பத்திரிகையில் வெளிவந்துள்ள 'தளிமண் படுக்க வாரீர்' எனும் பிரம்மோத்ஸவம் குறித்த கட்டுரையும் சான்றாகின்றன.

வடக்கே ஏழாம் நாள் தேர். தெற்கே திருவரங்கத்தில் ஏழாம் நாள் பூந்தேர். சூர்ணாபிஷேகம் காணும் தென்தேசத்தில் எட்டாம் நாள் திருவரங்கம் போலே குதிரை வாகனம், ஒன்பதாம் நாள் தேர் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனை வாகனம் : நாகேந்திரன் - கஜேந்திரன் என்று சொல்லக்கூடிய ஆனை, அதன் மேல் பவனிவரும் ஆனை வாகனக்காட்சி ஒவ்வோர் பிரம்மோத்ஸவத்திலும் ஆறாம் நாள் நடைபெறுகிறது. வாகனத்தில் முன்பாக இறைவனை வைத்து அலங்கரிப்பர். அதே ஆனைவாகனத்தில் எம்பெருமானைப் பிடித்துக்கொண்டவாறே பின்பு ஒரு ஆசாரியரும், அவருக்குப்பின் அர்ச்சகர் ஒருவர் அந்த ஆனை வாகனத்திலே அமர்ந்து அணி அரங்கனுக்கு திருமுத்துக்குடை சமர்ப்பிப்பதும் அரியதொரு காட்சியாகும். அதனை ஸ்ரீவைகானஸாகமம் - ப்ருகுப்ரோக்த கிரியாதிகாரத்தில்-

ஆரோஹேண கஜேந்த்ரஸ்ய தேவ தேவம் விசேஷத:
வஸ்த்ராபரண புஷ்பாத்யை: அலங்கருத்ய யதாக்ரமம்
தேவேசம் பூர்வமாரோப்ய ப்ருஷ்ட்ட பார்ச்வே கஜஸ்ய து
ஆதாயாங்குசமாசார்ய: கஜப்ருஷ்ட்டே நிஷீததி
அர்ச்சக: ச்சத்ரமாதாய முக்தாலங்காரபூஷிதம்

(TTD.Edn. P.No. 175 & 176)

எனக்கூறியுள்ளபடி ஸ்ரீவைகானஸ ஆகமத்தைப் பின்பற்றும் ஆலயங்களிலும் இக்காட்சி காணவரிது.

ஒருவர் மட்டும் அரச வேடத்தில் அமர்ந்து எம்பெருமானுக்குக் குடை சமர்ப்பிப்பது திருவல்லிக்கேணி போன்ற ஒரு சில இடங்களில் மட்டுமே காணமுடிகிறது. ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமத்தின் வழி பூசை கண்டருளும் அரங்கன் அவ்வாறு அரிய காட்சியினைக் கொடுத்தருளுகின்றான். அதைப்போலவே மற்ற சில வாகனங்களில் எம்பெருமானுடைய இருமருங்கிலும் பட்டாச்சாரியர்கள் அமர்ந்து அடியார்களுக்கு சடாரி, பிரசாதங்களை வழங்குவர். இவ்வாறு செய்கைக்கு ப்ருகுப்ரோக்த கிரியாதிகாரத்தில்

கருடாதிஷு யானேஷு சிபிகாஸு ததைவ ச |
ஆஸீந: பூர்வபாகே தக்ஷிணே தேசிகோத்தம: ||

(V: 53. TTD. Edn. P.No.175 ,176) என்றும்,

பட்டாசார்ய: பீடபாகே ஸாதகோ வாமபார்ச்வக: |
ஆகதேப்யஸ்ச பக்தேப்ய: தத்யாத் சிரஸி பாதுகாம் ||

என ஸ்ரீபாஞ்சராத்திராகமம் - ஸ்ரீபிரச்னஸம்ஹிதை 35-ம் அத்யாயத்திலும் ஆதாரம் கூறப்பட்டுள்ளது.

உத்தமமாகக் கூறப்படும் 21 நாட்கள் கொண்ட பிரம்மோத்ஸவத்தில் 9-ம் நாள் மற்றும் 21-ம் நாள் மாலை புறப்பாடு நீங்கலாக சுமார் 35க்கு மேற்பட்ட வாகனங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சில குறிப்பிட்ட வாகனங்களை மட்டும் தேர்ந்தெடுத்து இந்நாட்களில் பிரம்மோத்ஸவம் ஒன்பது நாட்களாகத் திருவரங்கம் முதலான அனைத்து திவ்யதேசங்களிலும் கொண்டாடப் பட்டு வருகிறது. கிரியாதிகார அமைப்பின்படி நிகழும் ஆனைவாகனக் காட்சி எங்குமே காணமுடியாத தனிச்சிறப்புவாய்ந்த ஒன்று எனில் மிகையில்லை.

3-2 ஆகமத்தில் பெருஉடையார் கோயில்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பூஜை முறைகள் யாவும் சைவாகமத்தின் 28 சம்ஹிதைகளுள் ஒன்றான மகுடாகமத்தின் வழியில்நடைபெறுகின்றன.

காரயாமாஸ ந்ருபதி: பிருஹதீசஸ்ய சூலின: ।
மகுடாகம வாக்யேன சக்ரே கும்பாபிஷேசனம்: ॥

என்கிற பெருவுடையர்கோயில் தலப்பெருமை உரைக்கும் சுலோகமும் இக்கருத்திற்கு வலிமை ஊட்டுகிறது.

காமிகம் யோகஜம் சிந்த்யம் காரணம் த்வஜிதம் ததா ।
தீப்தம் சூக்ஷமம் ஸஹஸ்ரம் ச அம்சுமான் ஸுப்ரபேதகம் ॥
விஜயம் சைவ நிச்வாஸம் ஸ்வாயம்புவம் அத அனலம் ।
வீரம் ச ரௌரவம் சைவ மகுடம் விமலம் ததா ॥
சந்த்ரஞானம் ச பிம்பம் ச ப்ரோத்கீதம் லலிதம் ததா ।
ஸித்தம் ஸந்தானஸம்க்ஞம் ச சர்வோக்தம் பாரமேச்வரம் ॥
கிரணம் வாதுலம் சைவாப்யஷ்டாவிம்சதி ஸங்க்யகா: ॥

ஆகிய இருபத்தெட்டுவகை சைவாகமங்களுள் மகுடாகமம் குறிப்பிடப்பெற்றிருப்பதை நாம் காணலாம். மகுடாகம ஓலைச்சுவடி தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் பதிவாகியுள்ளது.

ஏதேஷாம் பூர்வதசகம் சிவபேதம் பிரகீர்த்திதம் ॥
ததாபராஷ்டசதகம் ருத்ரபேதம் து நாமத: ।
சிவருத்ராத்மகம் தந்த்ரம் அஷ்டாவிம்சதி ஸங்க்யகம் ॥

என்றபடி 28 வகை சைவாகமங்களுள் முதல்பத்து ஆகமங்கள் சிவஸம்ஹிதை என்றும், அதனைத் தொடர்ந்து அமையும் பதினெட்டு ஆகமங்கள் ருத்திர ஸம்ஹிதை என்றும் அழைக்கப்பெறுகின்றன. இவை யாவும் சிவபெருமானின் அங்கங்கள். உருத்திர ஸம்ஹிதையின்

கீழ்வரும் மகுடாகமம் சிவபெருமானின் மகுடமாகவே போற்றப்பெறுகின்றது. இவ்வாகமத்துள் மகுடம், மகுடோத்தரம் என்ற இரு பிரிவுகள் உள்ளன. மகுடாகமம் கூறும் ஆவரணபூஜையில் "கர்பவிதா கணேசஸ்ச லோகேசாஸ்த்ராணி பஞ்சகம்" என்றபடி ஐந்து திருச்சுற்றுகளும், ஆங்கே வேறோர் இடத்தில் சௌராவரணமான ஆறாவது ஆவரணமும் குறிக்கப் பெற்றுள்ளன. ஆகமத்தில் கூறப்பட்ட ஆவரணதேவதா மூர்த்திகளுள் கணேசாவரணத்தில் வடக்கில் கௌரி, கிழக்கில் நந்தி எம்பெருமான், வடகிழக்கில் சண்டிகேச்வரர், லோகேசாவரணத்தில் எண்டிசைக் காப்பாளர்கள், சௌராவரணத்தில் சூரியன், மஹாசாஸ்தா முதல் க்ஷேத்திரபாலர் வரையிலான தேவதாமூர்த்திகள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

கணேச - லோகேசாவரணத்தின் நடுவே எழுவகை மாதர்களைப்பூசிக்கக் கூறுகிறது மகுடாகமம்.

பிராஹ்மீ மாஹேச்வரீ சைவ கௌமாரீ வைஷ்ணவீ ததா।
வாராஹீ ச ததேந்த்ராணீ சாமுண்டா ஸப்தமாதர: ॥

என எழுவகை மாதர்களின் பெயர்களை குறிக்கிறது அமரகோசம். கணேசாவரணத்திலும் தெற்கில் கணேசருக்கு பூஜை கூறப்பட்டுள்ளது.

ஆகமமுறைப்படி இன்றும் நாம் தஞ்சை பெரியகோயில் திருச்சுற்றில் வடக்கில் கௌரி, கிழக்கில் நந்தியெம்பெருமான், அந்த நந்தி எம்பெருமானுக்கு இடதுபக்கம் அல்லது தெற்கில் ஸ்ரீவராஹீஅம்பாள், வடகிழக்கில் சண்டிகேச்வரர் ஆகியோர்களின் சன்னிதானங்களைக் காணலாம். மேலும் ஏழு அரண்களைக் கொண்ட திருவரங்கம் பெரியகோயிலைப்

போன்று தஞ்சை பெருவுடையார் கோயிலை உத்தமவகையாக அமைக்கத் திட்டம் தீட்டியுள்ளான் மன்னன் இராஜராஜசோழன். இதனால்தஞ்சை பெருவுடையார் கோயிலும் மூர்த்தியும் " உத்தமவாலயத் துறை பெருவுடையாய்" என்று சரபேந்திர பூபாலக் குறவஞ்சியிலும் "உயர் தஞ்சைப் பின்னற்சடையான் பெருவுடையான்" என்றுபெருவுடையார் உலாவிலும் போற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்கீத மேதைகளுள் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதர் தஞ்சைப்பெருஉடையாரை-

ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

(பல்லவி)

பிருஹதீஸ்வராய நமஸ்தே ஸ்ரீ
பிரம்மானந்த பலேச்வராய

(அனுபல்லவி)

பிருஹந்நாயகி மனோல்லாஸாய
பாஸமான சர்மாம்பரதராய

(சரணம்)

சாருசந்த்ர சேகரவராய சாருஸ்மித ஸரஸீருஹபதாய
சரசராத்மக பிரபஞ்சகாய ஸத்குருகுஹஸஹிதஸதாசிவாய
கருணாரஸ பூரிதாய கைவல்ய ஹரிஹயாத்யமரவந்திதாய
வர்ண சோபித ஆகாராய.

பொருள்: பிருஹதீச்வரருக்கு வணக்கம். ஸ்ரீபிரம்மானந்தப் பயன் விளைக்கும் ஈச்வரருக்கு வணக்கம்.

பிருஹந்நாயகியோடு உல்லாசம் புரிபவரும், (புலித்)தோலையே ஆடையாகக் கொண்டு திகழ்பவரும் ஆன பிருஹதீச்வரருக்கு வணக்கம்.

அழகிய திங்களைத் தன் திருமுடியிலணிந்து விளங்குபவரும் புன்முறுவல் பூத்த முகத்தோடு பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், சராசர பிரபஞ்சமாய்த் திகழ்பவரும், ஸத்குரு முருகப்பெருமான் உடன் விளங்கும் சதாசிவரும், கருணைரசம் நிரம்பியவரும், கைவல்யம் அருள்பவரும், அரி, அயன், அமரர்களால் வணங்கப் பட்டவரும், நிறமுயர் கோலத்தால் திகழும் மேனியை உடையவரும் ஆன பிருகதீச்வரருக்கு என்து வணக்கம் என்று தமது கீர்த்தனத்தால் போற்றினார் என்பது தஞ்சாவூர் இசைப் பாரம்பரியம் (Tanjore Music Tradition, P.No.201/67, T.M.S.S.M. Library, UG - 4523) என்னும் நூலால் அறிய வருகின்றது.

3-3 குடந்தைக்கிடந்தானும் கோனேரிதாஸ்யையும்

சார்ங்கீ கோமளநாயிகா ஸஹசர: ஸ்ரீகும்பகோணத்புதே-
திவ்யம் வேதவிமானமத்ரஸரஸீ நாம்னா ச ஹேமாப்ஜிநீ ।
தத்தாம்னோப்யயன த்வயே ச நியதம் த்வாரத்வயம் ப்ராங்முகோ-
ப்ரத்யக்ஷோபவதத்ர ஹேமமுனயே சேஷாங்கசாயீ ஹரி: ॥

(அஷ்டோத்தரசதாதி திவ்யதேச விவரணம், ச.ம.நூலகம்,தஞ்சாவூர். த.பு.எண். 10683)

குடந்தைக்கிடந்தான்

குடமூக்கு எனப்படும் கும்பகோணத்தில் கோமளவல்லிநாயிகா உடனுறை ஸ்ரீசார்ங்கபாணி வைதிக விமானத்தின் அடியில் அருள்பாலித்து வருகிறார். அங்கே நாம் பொற்றாமரைப் புஷ்கரிணியைக் காண்கிறோம். ஸ்ரீசார்ங்கபாணி கோயிலில் அரவணைமேல் குணதிசை நோக்கியவராய் பள்ளிகொண்டருளும் எம்பெருமானே அபர்யாப்தாம்ருதன் என்னும் ஆராவமுதன். ஹேம மகரிஷிக்குக் காட்சி தந்த அவ்வெம்பெருமானைத்தொழ

அமுதன் சந்நிதிக்குச் சென்றால் உத்தராயண தக்ஷிணாயன வாசல்கள் நம்மை வழிப்படுத்திச் செல்லும்.

ஸ்ரீசார்ங்கபாணி திருக்கோயில் தேர்வடிவாகவே காட்சி தரும் மற்றொரு சிறப்பையும் உடையது. எனவேதான் திருமங்கை ஆழ்வார் தேர்பந்தத்தில் திருவெழுக்கூற்றிருக்கை என்னும் பிரபந்தத்தால் குடந்தைக் கிடந்தானை மங்களாசாஸனம் செய்தார்.

ஸ்ரீநாராயணமுனி என்பவரோ அமுதனுடைய தேர் எட்டுச் சக்கரங்களைப் பெற்றது என்றும் அதிலிருந்து அவரோகணம் புரிய எம்பெருமானுக்கு அமைந்த வாயில்களை, நாம் சென்று அவனைக் கண்டனுபவிக்க உதவும் மோக்ஷ துவாரங்களாகச் சித்திரிக்கின்றார்.

ஸ்வசேஷாசேஷ தத்வாய ஸ்வர்க துவாரோதிதாத்மனே |
தத்தாபவர்க மார்காய மங்களம் சார்ங்க பாணயே ||

என்கிறபடி அனைத்துப் பொருட்களுக்கும் தான் அடிப்படையாய் சார்ங்கபாணியாகத் திகழும் மூல தத்துவத்தைச் சென்றடைய, சென்றனுபவிக்க தேவயான-பித்ருயான மார்கங்களாய் விளங்குபவை அந்த சந்நிதானத்தின் வாயில்கள். அவற்றை சுவர்க்கத் துவாரங்கள் என்றார் முதலடியில். "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்ற ஸ்ரீகிருஷ்ண பகவானின் உபதேசப்படி புண்ணியத்தின் அளவேதான் சுவர்க்கத்தில் வாஸம் என்பதால் திரும்புகையற்றதான அபுனராவ்ருத்தி மார்க்கமாக அவற்றை அடுத்த அடியில் அபவர்கம் எனப்படும் மோக்ஷத்தின் வழிகள் என்று அறுதியிட்டார் போலும். தேரில் ஏறப்படிகள் அமைத்தால் இவர் வைகுந்தம் புக வழி வகுத்தராகிறார். "ஆராவமுதே" எனத்தொடங்கும் பாட்டில் 'நெடுமால்' என்னும் சொல்லிற்கு மால் என்பதால் லீலாவிபூதியாகிற இம்மையும், நெடுமால் என்று நித்யவிபூதியாகிற

மறுமையையும் சுட்டுவதாய் உரையாசிரியர்கள் உரை கண்டிருக்கும் பாங்கு ஈண்டு நினைக்கத்தக்கது. அருமையாக அமைந்த நாராயண முனிவரின் அபர்யாப்தாம்ருதாஷ்டகத்தை நாம் இனி பார்ப்போம்.

ஸ்வசேஷாசேஷ தத்வாய ஸ்வர்க துவாரோதிதாத்மனே |
தத்தாபவர்கமார்காய மங்களம் சார்ங்கபாணயே || 1

கும்பகோண நிவாஸாய ஸ்வபக்த சுலபாங்க்ரயே |
அபர்யாப்தம்ருதாயாஸ்து மங்களம் சார்ங்கபாணயே || 2

ஹேமாப்ஜினீ தடஸ்த்தாய காவேரீ தீரசாரிணே |
அஷ்டசக்ர ரதோத்தாய மங்களம் சார்ங்கபாணயே || 3

ஸஞ்சிதே ஸாதுசப்தௌகை: மந்தமாருத பூரிதை: |
போகிபோகே சயானாய மங்களம் சார்ங்கபாணயே || 4

நிரஸ்தாகில தோஷாய ஸமஸ்தகுணபூமயே |
ஸர்வபிரசஸ்த ரூபாய மங்களம் சார்ங்கபாணயே || 5

வீசித்ர ஸ்ரக்வீபூஷாய நானா சித்ராம்பராயதே |
வ்ருத்ரசத்ரு ஸ்துதாயாஸ்து சார்ங்கஹஸ்தாய மங்களம் || 6

ஆனந்த பாஷ்பஸம்ஸக்த புளகாலங்க்ருதாங்ககை: |
ஸாத்விகை: நித்யஸேவ்யாய சார்ங்கஹஸ்தாய மங்களம் || 7

பராங்குச யதீந்த்ராதி ஸ்வச்சமானஸ வாஸினே |
மங்களானாம் மங்களாய சார்ங்க ஹஸ்தாய மங்களம் || 8

நாராயண முனிப்ரோக்தம் அபர்யாப்தாம்ருதாஷ்டகம் |
பக்த்யா படன் பவேன் நித்யம் அபர்யாப்தாம்ருதப்ரிய: || 9

என்றவாறு தோத்திரப்பயன் விளம்பி நிறைவுறும் இந்த அபர்யாப்தாம்ருத மங்களாசாஸனாஷ்டகம் அவர்தம் அனுபவப்பெருக்கின் சாரம் என்பதில் ஐயமில்லை.

குடந்தைக்கிடந்தானின் மகிமை பவிஷ்யோத்தர புராணத்தில் நாரத பிரம்ம ஸம்வாதமாகக் காணப்படுகிறது.

ஸர்வேஷாமபி க்ஷேத்ராணாம் பூமிஸ்த்தானாம் விசேஷத: |
உத்தமம் கும்பகோணாக்யம் இதி யத் பிரவதந்தி ஹி ||

என்பதாய் 'திருக்குடந்தை திவ்யதேசம் பூலோகத் தலங்களுள் சிறந்தது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹேமமகரிஷியின் தவம், கோமளவல்லியின் தவம் ஆகியன அந்த புராணத்தில் காணக்கிடைக்கின்றன. நாரதர் இத்தலத்தின் மகிமை பற்றி கேட்க, பிரம்மதேவர் இத்தலத்துறை நாயகியான கோமளவல்லியை -

"பராசக்தி: பராநந்தா பரதேஜோऽதிகா ரமா |"
பராத்பரதரா தேவீ பரமானந்த விக்ரஹா ||

மம மாதா ஜகன்மாதா விஷ்ணோரானந்ததாயினீ |
மங்களாநந்த ரூபாட்யா ஸதா ஜயதி மங்களா ||

இதி தேவீம் ப்ரஸாத்யைவ வாங்மனாஹ்லாத காரிணீம் |
ப்ரணம்ய கோமளாம்பாம் தாம் சார்ங்கபாணே ரதிப்ரியாம் ||

என்கிறபடியே வணங்கிப் பின் மாகாத்மியம் உரைக்க முற்படுகிறார். தலத்துறை நாதனும் -

சார்ங்கபாணி: பரஞ்ஜோதி: சிதாநந்தைக விக்ரஹ: |
பராத்பரதர: ஸ்ரீமான் பூர்ண ஷாட்குண்ய விக்ரஹ: ||

நீலஜீமூத ஸங்காச: பத்மஜானந்ததாயக: |
சங்க்க சக்ர கதாபத்ம சார்ங்காத்யாயுத ஸேவித: ||

ஸமஸ்த குணஸௌந்தர்ய: பரமானந்த விக்ரஹ: |

என்று கும்பகோண மாகாத்மியத்தில் போற்றப் படுகின்றார். அத்யத்புதமான குடந்தை ஸ்ரீசார்ங்கபாணி ஸ்தோத்திரம் நாகரி, தமிழ்வரிவடிவம், தமிழ் பொழிப்புரை ஆகியவற்றுடன் தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்ட 'நந்திபுரமாகாத்மியம்' எனும் நாதன் கோயில் தலபுராணத்தின் பின் இணைப்பாகக் காணக்கிடைக் கின்றது.

ஸ்ரீகோனேரிதாஸ்யை

ஸ்ரீஆராவமுதன் ஏழு ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றவர். பகவத் விஷயம் எனப் போற்றப்படும் திருவாய் மொழியுள் "ஆராவமுத" எனத்தொடங்கும் பதிகம் திருகுடந்தை ஆராவமுதனைப் பற்றியது. "திராவிடவேதஸாகரம்" எனப்படும் நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழிப் பாடல்களில் "அர்த்த பஞ்சகம்" பொதிந்து கிடக்கின்றது. 1) பிராப்யம் (இறைநிலை=பரமாத்மா) 2) பிராபகம் (உயிர்நிலை= ஜீவாத்மா) 3) விரோதி (தடையாகிய ஊழ்வினை) 4) உபாயம் (தக்கநெறி) 5) பலம் (வாழ்வினை) ஆகியவற்றைக்குறிக்கும் உயர்வற உயர்நலமுடையவன், அயர்வறும் அமரர்கள் அதிபதி என்பதால் இறை நிலையும், என்மனனே என்பதால் அதிகாரியாகிய (ஜீவான்மாவும்) உயிர்நிலையும், மயர்வென்பதால் (விரோதியும்) தடையும், அருளினன் என்பதால் தக்கநெறியான உபாயமும், துயரறு துன்பம் தொலைத்த(பேரின்பத்தால் விரோதி நிரஸனமும்) வாழ்வினையும் (பயனும்) ஆக அர்த்த பஞ்சகங்களை முதற்பாட்டில் தனியன் எனும் பாயிரத்தில் அடக்கிவிடுவது போன்று நம்மாழ்வாரின் ஏனைய திருவாய் மொழிப்பாடல்களையும் "உயர்வற" என்னும் பாட்டிலேயே அடங்கிப் பொருள்படும் எனத் திருக்கோனேரி தாஸ்யை தமது நூலான திருவாய்மொழி வாசகமாலையில் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீபாஷ்யத்திற்கு 'சுருதப்ரகாசிகை' போல் பகவத் விஷயத்திற்குத் திருவாய்மொழி வாசகமாலை என்றால் அது மிகை யாகாது. நூலாசிரியரான கோனேரிதாஸ்யை என்பவர், தான் காலக்ஷேபம் கேட்ட செய்திகளைத் தொகுத்து பிற்காலச் சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் ஓலைச்சுவடியில் பதியச்செய்தமையும், சரசுவதி மகால் நூலகம் அதனைப் பதிப்பித்துள்ளமையும், கண்டு

அனுபவிக்கத்தக்கது. இந்த திருவாய்மொழி வாசகமாலை நூல்வடிவம்பெற திருவாய்மொழி உரையான ஸ்ரீவடக்குத்திருவீதிப்பிள்ளை இற்றியருளிய ஈடு முப்பத்தாராயிரப்படி ஒரு காரணம் என்று அந்நூலில் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அந்நூலில் "உயர்வற உயர்நலமுடையவன் எவனவன்" என்ற திருவாய்மொழி முதற்பாட்டைக்கொண்டே அதனுரையாக மற்ற பிறபாடல்களையும் ஒருங்கவிடலாம் என்பது கோனேரிதாஸ்யையின் தனிப்பெருங்குறிக்கோள். இதனை நிலைநாட்டிச்சென்ற நூலாசிரியர் ஆங்கிரஸ வருஷம், மார்கழி மாதம், 26ம்தேதி "உயர்வற உயர்நல முடைய" என்கிற முதல்பாட்டின் விவரண சதகம் என்று திருநாமமான வாசகமாலையை அபர்யாப்தன் திருவடிகளிலே ஸந்தர்ப்பமான மாலையைச்செய்து அடிமைசெய்தாள் கோனேரிதாஸ்யை (P.No. 334) என்பதால் குடந்தைக்கிடந்தானிடம் மிகுந்த அன்பு பூண்டவர் என்பது உறுதிபெறுகின்றது. அதற்குச் சான்றாக ஆராவமுதே எனத்தொடங்கும் பதிகத்தில் கிடந்த திருக்கோலத்தில் ஆராவமுதனையும், நம்மாழ்வாரையும், உரலோடு கட்டுண்ட கண்ணபிரானையும் சுவடியில் கீரல் ஓவியமாய்க் காணமுடிகிறது.

ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே!
நீராயலைந்து கரையை உருக்குகின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே.

(திருவாய்மொழி-5-8-1)

என்கிற பாசுரத்தைக்கொண்டு-

உயர்வற உயர்நலமுடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே.

(திருவாய்மொழி-1-1-1)

என்ற பாடலுடன் ஒருங்கவிட்டு உரைகூறும் உன்னத பாங்கினை கோனேரிதாஸ்யையின் வாசகமாலை கொண்டு ஒரு சிறு குறிப்பாக அறிந்து மகிழ்வோம்.

நம்மாழ்வார் எம்பெருமானின் திருவடிகளில் விழுந்து கூப்பிட்டாலும் கண்டுங்காணாததுமான எம்பெருமானுடைய போக்கினைக் கண்டு வருந்தி இன்னும் எத்தனை இடம் ஏறி இறங்க வேண்டுமோ அவனருள் கிட்ட என்ற அங்கலாய்ப்புடன் நிறைவடைய ாதவராய் "ஆராவமுதே" என்ற இப்பதிகத் தினைப்பாட முற்படுகிறார். அந்த நம்மாழ்வாரின் 'உயர்வற உயர்நலம் என்கிற பாட்டை ஆராவமுதே விவரிக்கிறது' என்கிறார் வாசகமாலையின் ஆசிரியர். உயர்வற உயர்நல முடையவன் எவன் அவன் **ஆராவமுதே** என்கிறவன். **அடியேன் உடலம்** மயர்வற மதிநல மருளிய பக்திரூபாபன்ன ஞானத்தைப் பெற்ற உயிரு முடலும் உருகினபடி **நின்பாலன்பாயே** உயிர்ப்பொருள் உயிரற்ற பொருள் ஒன்றையும் விடாது உருக்கும் மதிநலமருளின நின்பால் கொண்ட அன்பே, **நீராய் அலைந்து** மதிநலம் பெருகி அலையெறிந்த கடலலை போல அலைந்து **கரைய** நீர் தன் பக்கல் அகப்பட்டதைத் தான் கரையாமலே கரைப்பது போல் **உருக்குகின்ற நெடுமாலே** அழிப்பாள னாகிறவன் ஆபரணாதிகள் என்று பாராதே உருக்கி அழிக்குமாப்போலே ஆழ்வாருக்குள்ள உடலை உருக்கி அழிக்கும் நெடுமாலே, நித்யவிபூதிக்கும் லீலாவிபூதிக்கும் (நித்யவிபூதி=விண்ணுலகம், லீலாவிபூதி= மண்ணுலகம்) நாயகனே **சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை** அமரர்கள், செழுநீரான நாங்கள் பரிசர்யை பண்ண அதிதியாய்த் திருக்குடந்தையிலே கண் வளர்ந்தருளுகிற

ஸௌகுமார்யத்துக்குப் போரும்படி ஜலஸம்ருத்தியை உடைத்தான திருக்குடந்தையிலே ஏரார்கோலம் அனுபவித்ததுபோதும் என்று தெவிட்டாத வகையில் அண்டியவன் எழுந்து பேசு என்ன எழுந்திருக்க முற்படும் அந்த உத்யோக சயனத்தில் **திகழக்கிடந்தாய்** தேரோடே வந்து சாய்ந்தருளின கோலமாகையாலே மந்திர த்ரயமும் (திருமந்திரம், துவயம், சரமச்லோகம்) பிரகாசிக்கின்ற கோலம் கிடந்தாய் **கண்டேன்** திருவநந்தாழ்வான் ஆகிற படுக்கையில் திருமார்பில் நாச்சியாரோடே கூட ஏரார்கோலம் திகழக்கிடந்தாயைக் கண்டேன் **எம்மானே** பிரம்மாதிகள் சூழ்ந்து ஸேவிக்கக் கண் வளருகிறவன் எவன் இப்படி ஸாக்ஷாத்கரித்தவன் அவன் எம்மான் இறைநிலை (பிராப்யன்=அடையத் தகுந்தவன்)யும் மெய்யாமுயிர்நிலை (பிராபகன் = அடையச் செய்பவன்)யும் தானே ஆன எம்மானை துயரறு சுடரடி தொழுதேழு என் மனனே! "அபசாரான் இமான் ஸர்வான் க்ஷமஸ்வ! புருஷோத்தம!" என்று அஞ்சலி செய்து வணங்கிப் பெருவாழ்வினைப் பெறுவாயாக என் மனனே என்று பெருக்காற்றிலழிவர் துணை தேடுமாப்போலே நெஞ்சையும் கூட்டிக்கொண்டு விழிகிறார். இவ்வாறு "ஏரார் கோலம் திகழக்கிடந்த அம்மானைத் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே" என்று நிறைவு செய்பவராய் நம்மாழ்வாரின் திருவாய்மொழி முழுதினையும் உயர்வற என்ற முதற் பாட்டின் உரையாய் அனுபவித்துத் தலைக்கூட்டினர் திருக்கோனேரிதாஸ்யை.

3-4 குடந்தை தேசிகன் தொழுத கும்பகோணக் கோயில்கள்

திருக்குடந்தை தேசிகன் என்று போற்றப்பெறும் ஸ்ரீகோபாலார்ய மகாதேசிகன் திருக்குடந்தை எம்பெருமானிடம் மாளாக்காதல் கொண்டவர். ஆதலால் ஸ்ரீகோபாலார்ய மகாதேசிகனுக்கு திருக்குடந்தை தேசிகன் என்ற மற்றொரு திருநாமமும் அறியப்படுகிறது. இதனால் இவர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்த திருக்குடந்தைக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. திருக்குடந்தை தேசிகன் மங்களாசாஸனம் செய்த வழியாக குடந்தை தேசிகன் தொழுத கும்பகோணக் கோயில்கள் பற்றிச் சிறிது பார்ப்போம்.

கும்பகோணமிதி க்யாதம் க்ஷேத்ராணாம் உத்தமோத்தமம் |
லக்ஷ்மீஸரோவரம் நாம யத்ர திஷ்ட்டதி ஸம்ப்ரதி ||

நிர்மிதம் தபஸா தேவ்யா சுத்தாந்தமனஸா ததா |
ஆதாவபி ச யத்க்ஷேத்ரம் தேவர்ஷிகணஸேவிதம் ||

தர்ம வ்ருந்திகரம்க்ஷேத்ரம் கும்பகோணம் விதுர்புதா: |
புண்ய க்ஷேத்ராணி ஸர்வாணி தீர்த்தானி ஸுமஹாந்தி ச ||

வஸந்தி தத்ர வை ஸோமஹ்யநிசம் புண்யகாங்க்ஷயா ||
தஸ்ய வை ஸத்ருசம் நாஸ்தி த்ரிஷு லோகேஷு ஸாம்ப்ரதம் ||

அன்யக்ஷேத்ரே க்ருதம் பாபம் புண்யக்ஷேத்ரே வினச்யதி |
புண்யக்ஷேத்ரே க்ருதம் பாபம் வாராணச்யாம் வினச்யதி ||

வாராணஸ்யாம் க்ருதம் பாபம் கும்பகோணே வினச்யதி |
கும்பகோணே க்ருதம் பாபம் கும்பகோணே வினச்யதி ||

பிரம்மவித்யாதயோ கோரா மஹாபாதகராசய: |
கும்பகோணே சயானஸ்ய விஷ்ணோர் நச்யந்தி தர்சனாத் |

யோ நர: கும்கோணேSஸ்மின் க்ஷணார்தமபி திஷ்ட்டதி |
கரஸ்த்தம் தஸ்ய கைவல்யம் கிமுதான்யா விபூதய: ||

(முனித்ரய குருபரம்பரா பிரபாவம் ப. எண். 30)

கும்பகோணம் என்று புகழப்பட்ட க்ஷேத்திரம் க்ஷேத்ரங்களுக்குள்ளேயே தலைசிறந்தது. அங்குள்ள லக்ஷ்மீஸரோவரத்தை (பொற்றாமரைக் குளத்தை) தன் சுத்தமான மனதாலும் தவவலிமையாலும் ஏற்படுத்தினார். முற்காலத்திலும்கூட இந்த க்ஷேத்திரம் தேவரிஷி கணங்களால் பூசிக்கப்பட்டது. அறிஞர்கள் இதனை அறம் வளர்க்கவல்ல க்ஷேத்திரம் என்றே அறிதியிட்டனர். புண்யக்ஷேத்ரங்கள் தீர்த்தங்கள் அனேகம் இருப்பினும் ஆங்கே ஸோமன் புண்ணியம் பெறவேண்டி எப்போதும் வசிக்கின்றான். அந்த க்ஷேத்திரத்திற்கு ஒப்பு மூவுலகிலும் கிடையாது. வேறு க்ஷேத்திரத்தில் செய்த பாபம் புண்ய க்ஷேத்திரத்தில் கழியும். புண்யக்ஷேத்திரத்தில் செய்ததோ வாரணாசியில் நசிக்கும். வாராணாசியில் செய்த பாபம் கும்பகோணத்தில் ஒழியும். கும்பகோணத்தில் செய்த பாபம் கும்பகோணத்திலேயே தீர்ந்துவிடும். மேலும் சிறப்பெனில்; கும்பகோணத்தில் அரவணைத் துயிலும் விஷ்ணுவைக் கண்டக்கால் பிரம்மஹத்தி போன்ற கோரமான மகாபாதகாதிகளும் ஒழிந்துபோகும். அதோடல்ல; யாவனொருவன் கும்பகோணத்தில் அரைக்ஷணம் நிற்பானோ அவனுக்கு கைமேல் பலனான கைவல்யம் கிடைக்கும்போது மற்றைச் செல்வங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ.

கும்பகோணம் திருமழிசை ஆழ்வாரின் யோகஸ்தலமும், முக்தியடைந்த தலமும் ஆகும். இத்தலம் கீழ்த்திருவரங்கம் எனப் போற்றப்படுகிறது. கும்பகோணம் சார்ந்த புராணக்கதை கும்பகோண மாகாத்மியத்திலும், ஸ்ரீரங்கமாகாத்மியத்திலும் சேஷ தர்மத்திலும் கூறப்பட்டுள்ளது.

திருக்குடந்தை தேசிகன் இத்தலத்திற்கு தொலைவிலிருந்தே

இதோ விஷ்ணுபதோல்லாஸி நாளிகேர வனோபரி |
த்ருச்யதே கோபுரம் சைவ கும்பகோணபுரீ துரீ ||

என்கிறபடி தென்னங்காட்டினுள்ளே கோபுரங்களுடன் விளங்காநின்றுள்ளது கும்பகோணம். அதில் எம்பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். என்றவாறே திருக்கோபுரநாயினாருக்கு தொலைவி லிருந்தே வணக்கம் செலுத்தி திருக்குடந்தையுள் பிரவேசிக்கின்றார்.

குடந்தையில் காவிரியில் சக்ர தீர்த்தத்தில் நீராடி தினக்கடன்களை நிறைவேற்றி ஸ்ரீவிஜயவல்லீ ஸமேத திருவாழி ஆழ்வானையும், ஸ்ரீவராகநயினாரையும், திருமழிசையாழ்வாரின் பிருந்தாவனத்தையும் தொழுத பின்பு பெரிய திருவீதி (பெரிய கடைத்தெரு) வழியாக சார்ங்கபாணி திருக்கோயிலின் முன்புள்ள திருமங்கை ஆழ்வார் கைங்கர்யமான பெரியதிருத்தேரை தண்டம் சமர்ப்பித்து லக்ஷ்மீநாராயணஸ்வாமி கைங்கர்யமான பெரிய திருக்கோபுர நயினாரைச் சேவித்து (தை) மாதப் பிறப்பிற்கான (பொங்கல்) திருத்தேரை வணங்கி, முறையே சக்கரவர்த்தித் திருமகன், சரநாராயணன், கூரத்தாழ்வான், ஸ்ரீபாஷ்யகாரர், திருமங்கைமன்னன் ஆகியோர்களை மங்களாசாசனம் செய்து

நிர்மிதம் தபஸா தேவ்யா சுத்தாந்த ஹ்ருதயா ததா |
லக்ஷ்மீஸரோவரம் நாம .... ||
கங்காதிஸர்வ தீர்த்தானி ஸங்க்ருஹ்ய ச புரா ரமா |
நிர்மமே ஸர்வ ரக்ஷார்த்தம் பாவனம் தத்ஸரோவரம் ||
வர்ஷே வர்ஷே ஸமாயாந்தி பிரம்மாத்யா ஸர்வதேவதா: |
ஸ்நாத்வா முனிவராஸ்ஸர்வே யாந்தி ஸ்தானம் ஸ்வகம் ஸ்வகம் ||
தினமேகம் து ய: குர்யாத் ஸ்நானம் தத்ர ஸுதாகர |
பிராப்னோதி விஷ்ணுலோகம் ஸ ஸர்வபாபவிவர்ஜித : ||

என்கிறபடி லக்ஷ்மீ ஸரோவரமான பொற்றாமரைக்கு வந்து, 'இந்த தீர்த்தம் கங்காதி ஸர்வதீர்த்தங்களையும்

ஒருங்கே கொணர்ந்து இங்கே மகாலக்ஷ்மியால் நிறுவப்பட்டது. அனைவரையும் காக்கும் சுத்தமான இந்த தீர்த்தத்திற்கு பிரம்மாதி முனிவர்கள் அனைவரும் வந்து நீராடித் தன் இருப்பிடம் செல்கின்றனர். அத்தகைய திருக்குளத்தில் ஒருநாள் நீராடியவன் பாபங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டு விஷ்ணுலோகத்தை அடைகிறான்' என்றுரைக்கிறார்.

இத்தனை பெருமைவாய்ந்த இந்த லக்ஷ்மீ ஸரோவரத்தை (பொற்றாமரையை) வலம் வந்து, தீர்த்தமும் எடுத்துக்கொண்டு ஸ்ரீசார்ங்கபாணித் திருக்கோயிலின் மேலைக்கோபுரத்தின் வழியாக கோயிலுக்குள் நுழைகின்றார். வலமாகச் சென்ற அவர் வடவண்டைத் திருச்சுற்றில் பெரியாழ்வாரையும், கோதாதேவியையும் சேவித்து சிறிய கோபுரத்தின் வழியாய்க் கிழக்கே கொடிமரத்தினை வலம் வந்து, திருக்கச்சிநம்பி, முதலாழ்வார், நாதமுனிகள், நிகமாந்த மகாதேசிகன் ஆகியோரை வணங்கி, மடைப்பள்ளியையும் நாச்சியாரையும் கண்டு போற்றி பெரிய திருமண்டபத்தே கோயில் கொண்டுள்ள இராமகிருஷ்ணாதியரைச் சேவித்து, நாழிகை வட்டில் வாசலில் ஜயவிஜயர்களுக்கு தெண்டம் சமர்ப்பித்து அவர்கள் அனுமதியோடு எம்பெருமான் சார்ங்கபாணியை மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளுகிறார்.

ஸ்ரீகோமளவல்லித் தாயாரைக்கண்டு -

ஹேமர்ஷிவம்ச கலசார்ணவ கல்பவல்லீ-
சார்ங்கிப்ரியே ! ஜனனி ! கோமளவல்லி தேஹி I
பூய: பலான்யதுலிதானி பதாச்ரிதானாம்
ஹஸ்தாபசேய ஸுபலே ஜகதாம் ஸவித்ரீ II

என்றபடி ஹேமரிஷியின் குலக்கடலில் தோன்றிய கல்பகக் கொடியே ! சார்ங்கனின் நாயகியே ! தாயே ! கோமளவல்லியே ! (அழகியதான கொடியே) இருகை கொண்டு துதிப்போர்க்கு பயன்தரும் உலக நாயகியே ; நீ உனது திருவடிகளைப் பற்றினார்க்கு ஒப்பற்ற நற்பயன்களை நிரம்ப அளித்து மகிழ்விப்பாயாக என்று போற்றியருளினார். அப்படியே வலமாக எழுந்தருளி பாதாள ஸ்ரீநிவாஸன், தீராவினை தீர்க்கும் பெருமாள், சக்கரவர்த்தித் திருமகன், சேனை முதல்வர் ஆகியோரைச் சேவித்து கிணற்றருகே வந்து வைதிக விமானராஜனைத் தொழுகின்றார். பரமபத சோபானத்திலே விவேகம், நிர்வேதம் முதலான படிகளைக் குறிக்கின்ற வகையில் ஷ படிகளைக் கடந்து கருவறை மூர்த்தியான அமுதனை தொழச்செல்கின்றார். திருமாமணி மண்டபத்தில் பெரிய திருவடி நயினாரைப் போற்றி திருமஞ்சனப் பலகை யருகே 12 முறை தண்டனிட்டு வணங்கி அங்குள்ள வாயிற்காப்பாளர்களின் அனுமதியோடு உள்ளே சென்று நம்மாழ்வார் அருளிச்செய்த "ஆராவமுதே" என்கிற பதிகத்தாலும் 'ஆவியே அமுதே' எனும் பாசுரத்தாலும் மங்களாசாஸனம் செய்து அபர்யாப்தாம்ருதசோபானத்தை திருவடி முதல் திருமுடி பர்யந்தமாக அனுபவித்து அருளிச் செய்கின்றார்.

திருக்குடந்தை தேசிகன் என்றே போற்றப்பெற்ற இவரது குடந்தை நகரப் பிரவேசம், எம்பெருமானை தொழுதமுறை ஆகியவற்றின் அடிப்படையில் 'குடந்தை தேசிகன் தொழுத கும்பகோணக் கோயில்கள்' சில இங்கே குறிப்பிடப்பெற்றன.

3-5 சேஷ அய்யங்கார் கீர்த்தனைகளில் சில திருத்தலங்கள்

தஞ்சை சரசுவதி மகால் நூலகப் பதிப்பான சேஷஅய்யங்கார் கீர்த்தனைகளிலிருந்து திருத்தலங்கள் குறித்த ஆறு கீர்த்தனைகள் மட்டும் இங்கே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இந்நூலின் ஆசிரியரான மார்கதர்சீ சேஷ அய்யங்கார் (1869 AD) ஒரு ஸ்ரீவைஷ்ணவர். இவர் சம்ஸ்க்ருதத்திலும், சங்கீதத்திலும் புலமை பெற்றவர். திருவரங்கம் அரங்கனின் பக்தரும் ஆவார். அயோத்தியிலிருந்து வந்ததால் இவர் 'கோஸலம்' என்ற முத்திரையைத் தனது பாட்டில் வைத்தார். ஆதலால் இவரது கீர்த்தனங்களின் இறுதியில் 'சேஷ அய்யங்கார் கீர்த்தனாலு' அல்லது 'கோஸலம் கீர்த்தனாலு ஸம்பூர்ணம்' என்ற குறிப்பு காணப்படும். ஒரு சமயம் சேஷஅய்யங்கார் கீர்த்தனைகள் அனைத்தும் அரங்கனின் ஒப்புதலைப்பெற வேண்டி அர்த்தசாமபூசையில் அரங்கனின் முன்னே வைக்கப்பட்டன. மறுநாள் காலை வந்து பார்க்குங்கால் 60 கீர்த்தனைகள் மட்டும் அரங்கனால் அங்கீகரிக்கப் பட்டவை அறியவந்தது. அரங்கனின் அங்கீகாரம் பெற்ற அவரது கீர்த்தனைகள் 31னை தஞ்சை சரசுவதி மகால் நூலகம் பரிசோதித்து வெளியிட்டுள்ளது. அதற்கு அடிப்படையாய் அமைந்த சுவடி மதுரை அனந்தகோபால் பாகவதரிடமிருந்து திரு. T. R. தாமோதரன் அவர்களால் சேகரித்தளிக்கப்பெற்று தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 1662 (02)/D 36074 Catalogue .27/P.No.430) என்ற எண்ணில் பதிவிடப்பட்டுள்ளது. சேஷஅய்யங்கார் கீர்த்தனைகள் சமஸ்கிருத மொழியில் அமைந்திருப்பதால் தமிழ் பொழிப்புரை கொடுக்கப்பட்டு பயன்பாட்டிற்கு உகந்ததாய் செய்யப்பட்டுள்ளது.

திருமண்டங்குடி - தொண்டரடிப்பொடியாழ்வார்

ராகம் : தோடி

நாதவானஸ்மின் விப்ரநாராயணே - ரங்க
நாத கைங்கர்யரசன் பாராயணே ॥ ப ॥

தினதின ப்ரவர்தித துலஸீவன
கன ஸுமதரள ஸ்ரீகாமிதானேன
வனமாலிகாம்சா ப்ரபாவேனாதீத
நிகமேன சாந்தி நிதானேன ॥ 1

சரணாகத ரக்ஷக ரங்கேச்வர
விரசித விஸ்மயகர தௌதேன
ஹரிபக்த சோளநரவர வந்தித பத
ஸரஸீஜன புதஸம்ஸ்துதேன ॥ 2

அதுலித ஸ்ரீமாலிகாதி த்ராவிட
ச்ருதிரசனேன தாரித லோகேன
அதி விசித்ர மால்ய ஸமர்ப்பண
ஹர்ஷித கோசலநகரீ நாயகேன ॥ 3

(பொருள்) நாதன் நான். நாளுமிந்த திருமாலைப் பணிசெய்யும் விப்ரநாராயணனிடத்தில் நாதன் நான்.

நாளும் வளர்க்கப்பட்ட துளசீவனத்தையும் ஆங்கே உயர்ந்த நறுமண பூக்களை விளைவித்து எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்கும் பணிவிடையே செல்வமாக விரும்புதலும், வனமாலிகாம்சமாய்த் தோன்றி, தன் பிரபாவத்தால் வேதம் மற்றும் சாந்தி முறைகளை அறிந்திருக்கின்ற இந்த விப்ரநாராயண னிடத்தில் நாதன் நான். 1.

சோழநாட்டில் கோயில்கொண்டு ஹரிபக்த ஜனங்களால் வணங்கப்பெற்ற திருவடிகளை உடையவரும், பிரம்மதேவர் போன்ற அறிஞர்களால்

தோத்தரிக்கப்பெற்றவரும், அண்டியவரைக் காப்பவரும் ஆன அந்த அரங்கேசனுக்கு அத்யாச்சர்யமான மாலை தொடுக்கும் கைங்கர்யத்தை சுத்தமாகத் தன் திருக்கரத்தாலே மேற்கொள்ளும் இந்த விப்ரநாராயணனிடத்தில் நாதன் நான். 2

ஒப்பற்ற திருமலை, திருப்பள்ளியெழுச்சி ஆகிய தமிழ்மறை திவ்யப்பிரபந்தங்களை இயற்றி உலக மக்களை உயர்த்தியதாலும், பூமாலையினும் விசித்திரமான பாமாலையைச் சமர்ப்பித்து மகிழ்ந்ததாலும் கோசல நகர நாயகனாலும் வணங்கப்பட்ட யான் இந்த விப்ரநாராயணனிடத்தில் நாதன் நான். 3

திருவரங்கம்–

ராகம் : தன்யாஸி **தாளம்: ஜம்ப**

ஸ்ரீரங்கசாயினம் ஸகலசுபதாயினம்
சிந்தயேஹம் ஸதா ஹ்ருதயே
காருண்ய ஸௌசீல்ய சௌர்ய(லப்ய?)வாத்ஸல்யாதி
கல்யாணகுண ஜலநிதிம் - தேவதேவம் ॥ ப ॥

க்ஷீரஸாகர ஸமுத்தித விமானாந்தரம்
ஸ்ரீபூஸதீ: பாஸிதம்
ஸுூரிப்ருந்த ஸுநந்தந்த ஜயவிஜயாதி
பூரிபரிஜன ஸேவிதம்
சரணோரக ஸித்தஸாத்ய கந்தர்வகண
ஸனகாதிமுனி ஸன்னுதம்
ஸாரஸோத்பவ முகாமரபாலனப்ராப்த
சத்யலோகாதி வஸிதம் - தேவதேவம் ॥ 1

பரமபக்தேக்ஷ்வாகு மஹித புண்யவிசேஷ
தரணீதல ஸமாகதம்
ஸுரயூநதீதீர விரசிதஹிரண்மயா-
வரண ஸுவிமானஸ்த்திதம்

குருதபோநிதி வஸிஷ்டாதி ஸுமந்த்ர
நிகர பரிவேஷ்டிதம்
தரணிகுல ராஜன்யாதி ததி
க்ருதோத்ஸவ சோபிதம் - தேவதேவம் ॥ 2

நிருபம கவேரஜா ஸுக்ருதாதிசய தனுஜவர
விபிஷண வசகதம்
சிரகால க்ருதாவாஸ முனிஸாந்த்ரசந்த்ர
புஷ்கரிணீதடஸுஸ்திதம்
வரதர்மவர்ம நிர்மித பர்மமய
ஸப்தவப்ராந்தர விராஜிதம்
ஸுரஸேவ்யமான கோஸலபுரீச்வரமகில
நரலோக பரிபூஜிதம் - தேவதேவம் ॥ 3

(பொருள்) ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டவனை அனைவருக்கும் நலமருள்பவனை எப்பொழுதும் என் மனத்தில் நினைக்கின்றேன். காருண்யம் , கௌசீல்யம், சௌர்யம், வாத்ஸல்யம் போன்ற கல்யாண குண ஜலநிதியாகிற தேவதேவனை (ஸ்ரீரங்கத்தில்+ நினைக்கின்றேன்.)

பாற்கடலில் எழுந்த விமானத்தின் நடுவே திருமகள் மண்மகளோடு விளங்குபவரும், நந்தசுநந்தாதி நித்யசூரிகளின் கூட்டத்தோடு ஜயவிஜயாதிகளால் நிரம்பப்பணிவிடை செய்யப்பட்டவரும், ஆதிசேஷன் ஸித்தர், ஸாத்யர், கந்தர்வகணங்கள் சனகாதி முனிவர்கள் போன்றோரால் வணங்கப்பெற்ற திருவடிகளை உடையவரும், பிரம்மாதி தேவர்களை காக்க எண்ணி ஸத்யம் முதலான லோகங்களில் வசிப்பவரும் ஆன தேவதேவனை (ஸ்ரீரங்கத்தில்+நினைக்கின்றேன்.) 1

பரமபக்தரான இக்ஷ்வாகுவின் புண்ணிய விசேஷத்தால் பூவுலகை அடைந்தவரும், சரயூ

நதிக்கரையில் பொன்னாலான திருச்சுற்றுகளின் நடுவே நல்விமானத்தின் கீழ் திகழ்பவரும், குருக்கள், தவசிரேஷ்டர்கள், வசிஷ்டர் போன்ற முனிவர்கள், சுமந்திரர் ஆகியோரால் சூழப்பெற்றவரும், பூவுலக மன்னர் குழாங்களால் ஏற்படுத்தப்பட்ட திருவிழாக்களையுடையவரும் ஆன தேவதேவனை ஸ்ரீரங்கத்தில் + நினைக்கின்றேன்.) 2

ஒப்பற்ற கவேரன் மகளான காவிரியால் பணிவிடை செய்யப்பெற்றவரும், அதிசயப்பிறவியும், அரக்கர்களில் ஒருவருமான விபீஷணனை வசப்படுத்தியவரும், பல காலம் முனிவர்களால் வாசம் செய்யப்பட்டதும், சந்திர புஷ்கரிணிக்கரையில் கோயில்கொண்டுள்ளவரும், தர்மவர்மாதிகளால் நிர்மாணிக்கப்பெற்ற ஏழு திருச்சுற்றுகளுள் எழுந்தருளியிருப்பவரும், அனைத்தமரர் தொழுதேத்தும் கோசலபுரி மன்னராலும், மக்களாலும் பூசிக்கப்பட்டவருமான தேவதேவனை (ஸ்ரீரங்கத்தில்+ நினைக்கின்றேன்.) 3

திருக்குருகூர்- நம்மாழ்வார்

ராகம் : முகாரி

வந்தே வகுளாபரணம்
சடவைரிணம் ஜிதகாரணம் ॥

பஜனாநந்திதாதிநாதம்
தமசமகுண மந்திரம்
ஸுஜன வந்தித சரணம் ॥ ப ॥

பாவன கீர்த்திஸமேதம் - ஸம்
பாதித விசிஷ்டாத்வைதம்
ஸகலஜனாவபோத ஸஞ்ஜீவனவர
பாஷாவேத விரசிதோர்விபூதம் ॥ 1

ஸ்வர்ணாம்பர பக்தவார்யம்
ஸ்ரீவைஷ்ணவ பரமாசார்யம்
தருஸத்கீர்ண வரதாம்ரபர்ணீதீரம்
தீன்னகதம் புதவர்ணிதாசார்யம் ॥ 2

வீதராகமதமானம்
ப்ருத்வீகத விஷ்வக்ஸேனம்
அதிவிக்யாத குருதிந்திரிணீ தருமூல-நி
கேதனம் சுபகுணஜாத நிதானம் ॥ 3

த்ராஸித குமுத ஸமாஜம்
சின்முத்ராஞ்சித ஹஸ்தாம்போஜம் - அர்ச்சித
கோஸலநகரநிவாஸ மமிதஜன
தாஸஜனம் பத்மாஸனபாஜம் ॥ 4

மகிழ்மாலைமார்பினரை, சடவாயுவின் எதிரியை, உலக வாழ்க்கைக்கு மாறுபட்டு, அதனை வெல்லக் காரணமானவரை வணங்குகிறேன். திருக்குருகூர் ஆதிநாதரை தம் பஜனத்தால் மகிழ்வித்தவரும் தமசம குணங்களின் கோயிலானவரும், நல்லோர் நமஸ்கரித்த திருவடிகளை உடையவருமான (மகிழ்மாலை+ வணங்குகின்றேன்.)

கலங்கலில்லா புகழுடையவரும், விசிஷ்டாத்வைதக் கொள்கையை நிலைநாட்டியவரும், அனைவரும் அறிந்துய்ய அருமருந்தாம் அருந்தமிழ்மறையை உருவாக்கிட பூதலத்தில் தோன்றியவரும் ஆன (மகிழ்மாலை+ வணங்குகின்றேன்.) 1

பட்டுத்துணியுடுத்தி பக்தர்களின் துயர்களைபவரும், ஸ்ரீவைஷ்ணவத்தின் பரமாச்சார்யரும், மரங்கள் நிறைய வளர்ந்த தாமிரபரணி ஆற்றங்கரையில் உயோகத்தில்

அமர்ந்தருள்பவரும், அறிஞர்களால் ஆசார்யராய் வர்ணிக்கப்பட்டவரும் ஆன (மகிழ்மாலை+ வணங்குகின்றேன்.) 2

ஆசை, மதம் ஆகியவற்றைக் களைந்து சந்தோஷத்தையே மானமாக உடையவரும், பூமிக்கு வந்த விஷ்வக்ஸேனரும், மிகச்சிறப்புவாய்ந்த குருகையில் புளியமரத்தின் அடியைத் தன் வாழ்விடமாகக் கொண்டவரும், சுபகுணதோற்றத்திற்கு காரணகாரணரும் ஆன (மகிழ்மாலை+ வணங்குகின்றேன்.) 3

இரவாகிற ஆம்பல் கூட்டத்தை ஒழிப்பவரும், சின்முத்திரைகளுடன் கூடிய கைத்தாமரைகளை யுடையவரும் கோஸலம் போன்ற நகரவாசிகளால் அர்ச்சிக்கப்பட்டவரும், அளவற்ற ஜனங்களால் அடிமைப்பணி செய்யப்பெற்றவரும் பத்மாஸனத்தில் விளங்குபவரும் ஆன (மகிழ்மாலை+ வணங்குகின்றேன்.)

திருவானைக்காவல் கொண்டயம்பேட்டை கோவிந்தராஜன்

ராகம் : சங்கராபரணம்

வந்தே கோவிந்தராஜம்
ஸதா வனஜஸுரவரராஜம் - அவிரத
மிந்திர ஸுமந்திராய தோரா
ஸ்கந்தரார்த நந்தனாதி பாஜம் (ப)

பாதிதார்த ஜனசோகம்
குருபாப ஹாரி புண்யச்லோகம்
ஸந்ததத்யேய ஸகலலோகம்
பத்மாதரேசம் மௌனிப்ரவேசம்
சுபதாராதிகாளிபோதகரதுரிதம்
நாதகாரநாதிகாவலோகம் ॥ 1

சாந்தானந்த குணபோத்யம்
விச்வாமிதாசேஷ வேத்யம்
வேதாந்தச்சாயா ப்ரதிபாத்யம்
ஞானானந்தாச்ரயமாத்யம்
கனகஸபாந்தர நிரந்தராதம்சம்
சாந்தராகாந்தராதி வேத்யம் ॥ 2

பூரிசுபகுணஜாலம்
ஜம்புநா தமயதிவ்யசேலம்
கணஸாரகீலகீட நிடிவம்
கோஸலநகரீ வரபாலம்
மௌனிமனோருஜாபஹாரஜாபதம்
வந்தாருஜப பாரிஜாதஸாலம் ॥ 3

கோவிந்தராஜனை வணங்குகின்றேன். என்றும் தாமரையில் தோன்றிய பிரம்மதேவருக்கு தலைவரும், எப்போதும் திருவை மார்பில்குடிகொள்ளச் செயதவரும், குதிரை வாகனத்தில் துரித கதியில் செல்பவரும் நந்தனாதிகளால் வணங்கப்பெற்றவரும் ஆன (கோவிந்த+ வணங்குகின்றேன்.)

அண்டிய மனிதர்களின் வருத்தத்தைப் போக்கடித்தவரும், பெரும்பாவத்தை ஒழிக்கும் புண்யச்லோகரும், எப்போதும் அனைவராலும் நினைக்கத் தக்கவரும், பத்மம் தரித்த பத்மாவதிக்கு ஈச்வரரும், மௌனிகளின் (முனிவர்களின்)மனதில் பிரவேசிப்பவரும், துரிதமொழித்து சுபாதி வசனங்களை வண்டுகளின் ஒலியால் போதிப்பவரும், நாதகாரர்களால் அதிகமாகப் பார்க்கப்பட்டவரும் ஆன (கோவிந்த+ வணங்குகிறேன்.) 1

சாந்தம், ஆனந்தம் போன்ற குணங்களைப் போதிப்பவரும், உலகின் ஆசேஷஜனங்களால்

அறியப்படுபவரும்,வேதாந்த வித்யையால் பிரதி பாதிக்கப்படுபவரும், ஞானானந்தங்களுக்கு ஆச்ரய மாயும், ஆதியாயும், கனகசபையின் நடுவே நிரந்தரமாய் விளங்குபவரும், சாந்தராகாந்தரங்களால் அறிப்படு பவரும் ஆன (கோவிந்த+வணங்குகிறேன்.) 2

சுபகுணங்கள் நிரம்பியவரும், ஜம்புநாத க்ஷேத்திரத்தின் சுற்றுப்பகுதியில் கோயிகொண்டவரும், உயர்ந்ததான பச்சைக்கர்ப்பூரத்தை திலகமாகச் சாற்றியுள்ளவரும், கோசல நகரத்திலுள்ளாரைக் காப்பவரும், மௌனிகளின் மனத்தில் எழும் ரோகம், அபகாரங்களுக்கு ஆபத்தை விளைவிப்பவரும், ஜபத்தால் மகிழ்வித்து வணங்வோருக்கு பயன்தரும் பாரிஜாத (கற்பக)மரம் போன்றவரும் ஆன (கோவிந்த+ வணங்குகிறேன்.) 3

ஸ்ரீபெரும்பூர்- இராமானுஜர்

ராகம் : கல்யாணி

ரே மானஸ சிந்தய மௌனீந்த்ரம்
ராமானுஜ மதிகருணாஸாந்த்ரம்
த்ருதகாஷாய வஸன த்ரிதண்டம் - ஸ்ரீ
பதிமத ஸம்ஸ்தாபன சௌண்டம் ॥ (ப)

அதிகதயாமுன்முனி ஸம்ப்ரதாயம்
அமிததுரிதஹர நிஜநாமதேயம்
கோஷ்டீபூர்ணகுரு தயாபாத்ரம்
குருதரகலயாவநிஜனிகோத்ரம் ॥ 1

மானுஷவேஷாபகதானந்தம்
மாதவபதயுக நிஹிதாசாந்தம்
பரவாதி மஹாகஜம்ருகராஜம்
ஸரஸஹ்ருதய புதஜனரஜம் ॥ 2

த்வயமந்த்ர விதரணைகதுரீணம்
வாக்வாதகத வேதசாஸ்த்ரபுராணம்
உபவீத சிகா விராஜமானம்
உல்லஸிதோர்த்வ த்ரிபுண்ட்ரவிதானம் ॥ 3

விதித ஸ்ரீபாஷ்யாதி விரசனம்
வேததுல்ய மஹிமோஜ்வலவசனம்
கோஸலபுரவர பக்தாவதம்ஸம்
குடிலமதமஹாந்த தமஸாபஹம்ஸம் ॥ 4

முனிவர்களுக்குள் சிறந்தவரும், கனிவு, கருணை போன்ற குணங்கள் நிரம்பியவரும் ஆன இராமானுசரை நெஞ்சே நினைத்து போற்றுவாயாக. துவராடையுடுத்தி முக்கோல் பிடித்து, திருமகள்கேள்வனின் கொள்கையை நிலைநாட்டுவதில் முனைந்தவரும் ஆன இராமானுசரை (நெஞ்சே+ போற்றுவாயாக)

யாமுன முனிவரின் சம்பிரதாயத்தை அறிநதவரும், இராமானுசர் எனும் தன் திருநாமத்தால் அளவற்ற பாபத்தைப் போக்குபவரும், கோஷ்டிபூர்ண குருவின் கருணைக்கு இலக்கானவரும், பெரும்புண்யத்தால் பூமியில் பிறப்பெடுத்தவரும் ஆன எம்பெருமானாரை (நெஞ்சே+ போற்றுவாயாக) 1

மானிடவேடம் களைந்து அதனால் உண்டான மகிழ்ச்சியையுடையவரும், மாதவனின் அடியிணைகளில் மனதை சமர்ப்பித்த சாந்தரும், பிறமதம் எனும் பெரும் யானைக்கு சிங்கம் போன்றவரும், நல்ல திறனுடைய அறிஞர்களுக்கு அரசரும் ஆன இராமானுசரை (நெஞ்சே+ போற்றுவாயாக) 2

துவயமந்திரத்தினை உபதேசிக்க வல்லவரும் உபவீதம், சிகை ஆகியவற்றுடன் விளங்குபவரும்,

ஊர்த்வபுண்ட்ரங்களுடன் திகழ்பவரும் ஆன ராமானுஜரை (நெஞ்சே+ போற்றுவாயாக) 3

அறிவுத்திறமையால் ஸ்ரீபாஷ்யம் முதலான நூற்களை இயற்றியவரும், வேதத்திற்குச் சமமான உயர்ந்த வாக்கைப் பெற்றவரும் சிரேஷ்டமான கோசலபுர மக்களின் பக்தியால் வணங்கப்பட்டவரும், குதர்க்கமான மதத்திற்கு மகாவிரதஹாஸ ஹம்சமாய் விளங்குபவரும் ஆன இராமானுசரை (நெஞ்சே+ போற்றுவாயாக.) 4

காஞ்சீ வரதராஜர் - கருடசேவை

ராகம் : ஜுஜாவந்தி

வந்தேஹம் கரிசைல நிவாஸம்
வரதராஜம் அதஸீஸுமபாஸம்
பூர்ணேந்துபிம்ப ஸௌந்தர்யவிடம்பனம்-நி
புணவசனம் அரவிந்தவிகாஸம் ॥ (ப)

ஸ்ரீவேகவதீதுங்கதரங்கம்
சீகரப்ருந்தநீலஜனிதாஹ்லாதம்
பாவனபுண்யகோடி ஸௌதாந்தம்
பத்மாக்ருத லீலாஸம்வதம் ॥ 1

ஸகல சேதனாசேதன பாலனம் - ஸம்
ச்ரிதானந்த ஸரஸிதீரம்
அகுடிலபக்தபூர்ணகாஞ்சீபுரம்
ஆகர்ணநீய ஸுவ்யாகரம் ॥ 2

நிரதிசாயன நிஜாவிர்பாவம்
நீரஜஸம்பவம் அஜநிர்மோக்ஷம்
கருடாரோஹ மஹோத்ஸவமதுலித
கண்யமஹிம கோஸலபுரநாதம் ॥ 3

ஆனைமலையில் உறைபவரும், காயாம்பூ வண்ணமும் கொண்ட வரதராஜரை நான் வணங்குகிறேன். அதஸீ புஷ்பத்தால் விளங்குபவரும், நிறைமதி வடிவின் அழகினை பழிப்பதாய் விளங்குபவரும், சிறந்தமொழி பயிற்றுபவரும், தாமரைபோல் முகமலர்ச்சி உடையவருமான (வரத+ வணங்குகிறேன்.)

ஸ்ரீவேகவதி ஆற்றங்கரையில் அலைகளால் அடிவருடப் பள்ளிகொண்டவரும், குளிர்ந்த மேகக் கூட்டத்தால் நீலமாகி மகிழ்ச்சியை தோற்றுவிப்பவரும், புண்யகோடி விமானமமைந்த உயர் மாளிகையுள் உறைகின்றவரும், திருமகளோடு லீலா ஸம்வாத்தில் மகிழ்பவரும் ஆன (வரத+வணங்குகிறேன்.) 1

இயங்கும் நிலை இயங்காநிலைஆகிய அனைத்து உயிரினங்களைக் காப்பவரும், அண்டியவர்களுக்கு அனந்த ஸரஸ்ஸின் (அனந்த புஷ்கரிணியின்) கரைபோன்றவரும், நல்ல பக்தர்களால் நிரம்பிய காஞ்சீபுரத்தில் உறைபவரும், கேட்கவேண்டுமதாகிய பெருமை உடையவரும் ஆன (வரத+வணங்கு கிறேன்.)

அதிசய உருவாய் (அயமேதவேள்வியில்) ஆவிர்பவித்தவரும், தாமரை மேல் தோன்றிய பிரம்ம தேவருக்கு மோக்ஷமளித்தவரும், கருடன் மேல் பவனிவரும் ஒப்பற்ற மகோத்ஸவத்தால் மகிழ்பவரும், மதிப்பும், பெருமையும் பொருந்திய கோஸலபுராதிபனுக்கு நாதனும் ஆன (வரத+வணங்கு கிறேன்.)

3-6 நீலமேகப்பெருமாள் கீர்த்தனைகள்

தஞ்சை மாமணிக்கோயில் என்றுபோற்றப்பெறும் ஸ்ரீவைணவதிவ்யதேசம் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் மூன்றாவது ஆகும். ஸ்ரீநீலமேக மணிபர்வத வீரநரசிம்மஸ்வாமிகள் சேர்ந்த மூன்று கோயில் ஒரே திவ்ய தேசமாக விளங்குவதை இங்கன்றி வேறு எங்கும் காணமுடியாது. ஆழ்வார்களாலும், ஆசார்யர்களாலும், போற்றப்பட்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றாலும் சிறந்து விளங்கும் இத்தலத்துறைநாதனான ஸ்ரீநீலமேகப் பெருமாளைக் குறித்த கீர்த்தனைகள் தற்போது கொடுக்கப்படுகின்றன.

காயமு ஸதமனி காங்க்ஷதி ஜேஸியு
பாயக வக்துலு பலிமனி ஜேரிரி (மாத)

தரணிலோன தஞ்ஜக தண்டக தாரக
துஷ்டுனி வலாஸுர துன்மார்க்குலு
ஏமி ஜேயுதுன் இக யேவகாதுனோ யிக
ராம பக்துனிக ரக்ஷிம்பவே வேத (மாத)

டோரா

ஒக தினம்புன வேதகரமுன
ஒகநர பராசர முனீந்த்ருடு
யொப்புக தானு யம்ருதமுதேனு
யெகெனுயிந்த்ரு நீ தடகுனு (வினரய்ய)

பத்யம்

பாலமுனேல மோபி பயபக்துலதோட நமஸ்கரிஞ்சி
பாகமாஸண்டு கரபத்மமுலன் முகனிஞ்சி
நேடு நா பாலிஷ்ட தேவ வேடிதியோ
பாவனமூர்த்தி புண்யமூர்த்தி ஈவேளகு நீ வச்சிதிவி
விவேக விபூஷண திவ்ய பூஷணா

டோரா

வச்சின விப்ருனி அடிகேனு ஏமி
பணிபடி வச்சிரி ஜெப்புமனி
பாகுகதோ நே மாடலு ஜெப்பனு
மருத்வன் னம்ருதமு காவலனு (வினரய்ய)

ஸ்ரீநீலமேக ச்யாமனுனி யாசென்
செங்கமலவல்லி தர்சனமுலனு
ஸேவ ஜேயுபு யுண்டவலனு
பய்யக ராக்ஷஸ ஹிம்ஸ வேகனு (வினரய்ய)

டோரா

பராசரமுனியிடு ப்ரார்த்தன் ஜேஸெனு
பரமசக்திகல யா ப்ரஹ்மனு
பாரிவச்சி த்ரிமூர்த்தி ஸ்வரூபதோனு
ஸ்ரீநீலமேகப்பெருமாள் கீர்த்தனலு
ஸ்ரீநீலமேகச்யாமனுனி சரித்ரமு.

டோரா

வினரய்ய வினரய்ய வினரய்ய வினரய்ய
ஸ்ரீலக்கு நெலவுனு ஸ்ரீராஜதானியகு
ஸ்ரீதஞ்ஜபுரி ஜேரி யலருனட்டி
ஸ்ரீநீலமேக ச்யாமனுனி பக்தி
ஸ்திரமுக கொலதுனு ஜெந்த மூர்த்தி (வினரய்ய)

அயாரகம்பீருடு மரிஹாவீரத ரக்ஷக தீருடு
ஆத்யந்த்யமுலேனிவாடு அந்தர்யாமியை யுண்டுவாடு
அதனி மஹிம கொனியாட தரமா
அந்தரிகினி அதி தீரமா (வினரய்ய)

ஆ ஸௌந்தராங்குனி யத்புத மஹிமல
ஆத்மலோ தலசக யுண்டகுமா (வினரய்ய)

கீர்த்தன

நீலமேக ச்யாமன நின்னு நிரதமுக நா மதினி தலதுனு (நீலமேக)
வெலயு தஞ்ஜபுரி நிவாஸ வேதவேத்ய மஹா உல்லாஸ (நீலமேக)

பரமபுருஷ பவ்யதேஜா பராசர நித்யபூஜா
பக்தபோஷ பக்தபோஷ பக்தபோஷ
சால காலமு நின்னு நம்மினவாடைன
நாராயணதாஸுனி மேலுகோ ஸ்வாமி (நீலமேக)

ஸுக்ஷேத்ரம்புன சுப தினமந்துன
சூடவேயு கன்னுலு காவலனே
ஸக்ஷமமுகானே பராசர தீர்த்தமனி
சூடக வாரே நிர்மிஞ்சிரி (வினரய்ய)

கீர்த்தனம்: ராகம்-பைரவி

மாதவ நன்னேல ஸேதன ஜேஸேவோ
ஸாமஜ யுனுமாபி ஸாமனி வேடிதி (மாதவ)
பாகுக ஜெப்பே கோபாலு தோனு (வினரய்ய)

டோரா

அதிகோபிதோ யந்தர ஜூடக
யதபதி பாமமு வாரிபை படக
மதமுனு செந்தின யா ராக்ஷஸுலு
மாயக போயிரி வேமுக (வினரய்ய)

போயி இத்தருவத்த போராடிரி
பல வலாஸுருனி தத்தமு ஜேஸிரி
மிகுவனீ முவ்வருனு மாதவ சேதுலார
மடிஸிரி யமபுரமு ஜேரிரி (வினரய்ய)

டோரா

பகு ஸந்தஸமுன தேவுலப்புடு
புஷ்பவர்ஷமுலு குரிஸிரி
பராசர முனியந்து வச்சி நாராயணுடு (வினரய்ய)
ப்ரத்யக்ஷமை நிலிசிரி.

கீர்த்தன: ராகம்-சங்கராபரணம்

நாது மனவி வினவனேல நீலமேக ச்யாமள
பந்தமு பராகேல பாபனலேல பாலமேலலே (நாதுமனவி)

சரணம்

பராசர முனீந்த்ரு கொறகு பரக கருடவாஹனமுனே
பரம பக்துலு நின்னுபொகட பரமஸேவனிச்சினட்டி (நாதுமனவி)
ஸ்ரீவெலயு தஞ்ஜபுரிலோ சுக்லபக்ஷமா ச்ரவண நக்ஷத்ர
சுபதினமு நீதுவைபவ செப்பதரமா னெவரிகைன (நாதுமனவி)
வாசகானு நாது மனோவரம்பு லிச்சி ப்ரோவுமா
த்வாதசாழ்வாரு நாராயணதாஸுு கான ஜேயுமா (நாதுமனவி)

வேறு

கண்ணா மணிவண்ணா மன்னவனே தேவா
மண்மேலுந்தன் பாதமறவேன் மாதவனே ஸ்ரீதரனே தேவா
அடியேனடியேன் தேவா அற்புதமாய் நின்றோனே
கடையன் கடையன் மாசிலாதோனே தேவாவிடிவே
விடிவேனோ யானுன் பதத்தை வீணே கம்பீரனே தேவா (கண்ணா)
சித்தர் முக்தர்கள் தொழும் சீதாமனோஹரனே
பக்தர்களுகனுகூலனே பத்மநாபனே ஸ்ரீநிவாஸனே
சக்திஸஹோதரனே சாமராஜனே தேவா (கண்ணா)
தருணமிதுவே காரும் தாமோதர நந்தனே
கருணாகர ஸ்ரீதரனென்று உம்மைச் சேவித்தேன்
ஆசைகொண்டு உன்பாதம் நாடினேன்
பரிபூரணமாய் நின்ற பரமபுருஷனே தேவா
பாலகிருஷ்ணசீலனே பாலகோபாலனே
மேலான சுந்தரனே ஸ்ரீ நீலமேக சியாமளனே
ஸ்தூல ஸக்ஷ்மாதீதனே பரமபாவனனே
பாலன் குறைகள் தீர்க்கும் பக்தலோலனே தேவா (கண்ணா)
ஆதிநாராயணனே தேவா ஆண்டவனே தாண்டவனே
நீதிநிராமயனே ஸ்வாமி நீலமேக சியாமளனே (ஆதி)
சோதிப்பதேனையனே தேவசுந்தர புருஷோத்தமனே
வாதுகள் ஏனையனே தேவ வாருமையா ஸ்ரீநீலமேகசியாமளனே
நாராயணதாசனுக்கு ராஜனே தேவ
பாலன்முறை கேளாததேனோ சாலா துதித்தேனையா தேவ
சௌரி என்மேல் கோபமேனோ (ஆதி)

ராகம்-ஹிந்துஸ்தானி கவாய் : ஆதி தாளம்

ஸ்ரீவீரராகவா சிந்தலு தீர்ச்சவா
நீவே திக்கன்னானே தேவா தேவா
ஸ்ரீவைகுண்ட நகர நிவாஸா
வராலிவ்வரா மஹானுபாவா (ஸ்ரீ)
ஸ்ரீநீலமேகஸ்வாமி ராரா நின்னே கோரினானுரா
நம்மிதி நாராயண தேவா வரத மன்னிஞ்சி
ப்ரோவரா நன்னு ரக்ஷிஞ்சரா
கன்னைய ஸ்ரீ கருணாகரா
ஆதிநாதிக ஜேஸி க்யாதி ஜெந்தினதி
நீதி ஸ்ரீபதி ஸீதாபதி
பீதி நொந்ததிதி மதிதுல எருக க்ஷிதி
தாதா வேதா ஸ்ரீஸதா (ஸ்ரீ)
ஸ்ரீரா நாராயணதாஸுனி காபாட ஜாலமேலய்யா
யீலாண்டி ஹிம்ஸலு நெனோர்வலேனய்யா
ஈமா ஓ ஜகதீசா (ஸ்ரீ)

ஹிந்துஸ்தானி கீர்த்தனம்

ஸ்ரீநீலமேகசந்த்ர ஸ்ரீ லக்ஷ்மீ ராகவேந்த்ர
தீரா ச்ருங்கார க்ஷீராப்தி சயன ரார
வீராதி வீரா வரமீரா ஜார சோர
நீரஜாக்ஷனே நீறு பாயலேரா வராலீரா
வந்தனமை கைகொனரா (ஸ்ரீ)
நந்தகுமார ரார நவநீத சோர ரார
நாபை ஸந்தேஹமேலரா நாராயன ரார
நந்தினி கோரிகெலன்னி பராத்பர
அந்து யுந்து யெந்து பொந்தி யுந்துவோ
ஆதிசேஷுனிபை பவ்வளிந்துவோ (ஸ்ரீ)
நாகராஜுனிபை நடனஜேயு மூர்த்தி
நாகசயன ஓம் நமோ நாராயண தேவ
பாகுக பாடின நாடின வேடினரா

ஆஹமு வினுமு பரிபூரண ஆதிமூலமைன
ஜகத்காரணா நாரணா தேவா (ஸ்ரீ)

நாராயணதாஸுனி ப்ரோவரா பலமீவரமீயரா
காலானுகால ஸம்ஹாரா கன்னுல ஜூடவே ராரா
சாலா பாதலோர்வசால சாரி கோபால தேவா
க்ருபாநிதி ஏமோ நாது ஸஞ்சித கர்ம பாபமே.

இந்துஸ்தானி

ஸ்ரீநீலமேக ச்யாமள ப்ரேமதோ நீ நாமமே தலதுனே
நாகராஜசயன நாராயண நாகராஜசயன (ஸ்ரீ)
கன்னடயேல நன்னு ப்ரோவ சின்னிக்ருஷ்ணபந்துகா
மன்னுமிந்த கொல்சினட்டி மாதவா தயராதுகா (ஸ்ரீ)
தாடகி ஸம்ஹார ரார தானிபால ப்ரோவ ரார
பேடியைன பாலராமசந்த்ர திவ்ய ஸுந்தர ராம (ஸ்ரீ)
வரகவி நாராயண தாஸுனி சால கருணஜூடரா
கருணஜூடு கமலனேச காமஜனக ஸ்ரீநிவாஸ (ஸ்ரீ)

சஞ்சேறடி (?) ராகம் ஸுல்வ (?)தாளம்

கமலநயன வாஸுதேவ கருணராதா நாமீத

அனுபல்லவி

விமலயோகி ஹ்ருதய ஸதன விஹராட்மன வாமன (கம)

எந்தவேடு கொந்தனீ கிந்த பந்தமேலரா
சந்த ராவதேர ஸ்ரீகந்த தந்திராஜ வரதா (கம)
பன்னகேந்த்ர சயன ஆபன்ன ஜன சரண்யனே
நின்னுபாஸி தான ஜால நீலவர்ண ஜாலமேல (கம)
வேதவேத்ய மீ திவ்யபாதகமல ஸேவகுடனு
பேதமெஞ்சனேல நன்னாதரிம்ப ரா வாத (கம)

தஞ்ஜபுரநகரவாஸ நீகிஞ்சுகைனயாதி லேத
பஞ்சசரினி கன்னதண்ட்ரி பரமபுருஷ தேவராஜ (கம)

நோட்

ஸ்ரீநீலமேக நன்னு ப்ரோவ சீக்ரமே ராரா
சீக்ரமே ராரா சிருலிவ்வ வேமிரா
ஹ்ருதயசுகி யிந்து மநோஹர
ஜ்ஞானஹீனுடனு த்யான ஹீனுடனு (ஸ்ரீ)

ஸ்ரீநிவாஸ லோலவால மாதவ நன்னேல
ஸாதுலோல பரிபால ஸுசீல ஸ்வாமி கோபால
பாலக்ருஷ்ண கருணாகர பரிபூர்ண
நீலமேக நின்னே மருவ சாலக னுன்னே (ஸ்ரீ)

வேறு கீர்த்தனை

நீலமேக ராமசந்த்ர ராகவ ராஜேந்த்ர ரார
ஆகமவினுத ஹரி ஆதரிஞ்சவேமிரா (நீ)

நாகசயன ரார நாமொராலிஞ்சவேர
ஸாதம்ச சயனதீர ஸ்வாமி பராகேலர (நீ)

கோவிந்த தாமோதர கோபால தராதரா
பாவம்புலோனே ஸதா பஜன ஸேதுனோ ஸ்ரீதரா
நாராயணதாஸுஜன பரமஜனார்த்தனா
ஸ்ரீலக்ஷ்மீலோல சிருலிவ்வுமு நாராயண

ஸுட்ட(?) ராகம் அடதாளம்

தெலியனி வாடனுர நீ மஹிமனு (தெலி)

அனுபல்லவி

தெலியனிவாடனு செலிமிதோ மீபாது
தலமுலந்து பக்திவதலகுண்டு கதி

சரணம்

ஸுந்தராங்கநீ மந்தஹாஸமு
மந்தமுக கனுகொனுமார்க்கமிட்லனி (தெலி)

நீநாம ஸங்கீர்த்தனமு நித்யமு யொந்த
கானரூபசேத கனுதிஞ்சு மார்க்கமு

தஞ்ஜபுரிவாஸநீ செந்தஜேர தகுனு
அந்தரங்க பக்தியமர ஜேயுகதி (தெலி)

மோஹனராகம் : அடதாளம்

பல்லவி

ராவய்ய ஸ்ரீநீலமேகசந்த்ர நன்னு
காவவய்ய கீர்த்தி ஸாந்த்ர

அனுபல்லவி

ஸேவகுடனு நன்னு ப்ரோவவய்ய வேக (ராவ)

சரணம்

ஸுந்த்ராங்க நீ மந்தஹாஸமு
மந்தமு கனுகொந்து ஜூபவய்ய (ராவ)
மந்தகமன நாயந்து நீ தயனுஞ்சி
அந்தெலு பதமுல பெந்துக ம்ரொயக (ராவ)
ஜாலிஜெந்தி பதிமாலினி வினவேல
நீலவர்ண நீபாலபடுதீனிக (ராவ)
கட்டி மனஸுசேத யிட்லு நீவுண்டுட
குட்டிகாதுனே ரட்டுஜேஸெதனய்ய
மஞ்சிதினமுசேதமனு ஜெப்புகொண்டி
தஞ்ஜபுரவாஸ நன்னு வஞ்சனஸேயக (ராவ)

தெலுகு ஸீஸபத்யம்

தஞ்ஜ நீலமேகஸ்ய நாமமு ச்ருங்கார வர்ணன
ஸகல சாஸ்த்ர விவேக ஸாதனம்பு
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமமு ச்ருங்கார
ஸகல தான விசேஷ ஸங்க்ரஹம்பு
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமமு ச்ருங்கார த்யானம்பு
ஸகல தீர்த்தாசரண ஸத்பலம்பு
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமமு ச்ருங்கார சிந்தன
ஸகல மந்த்ர ரஹஸ்ய ஸம்மதம்பு

அனுக ப்ரம்ஹாதி ஸுருலெல்ல அனுதினம்பு
பக்திதோ ஸ்ரீநீலமேகஸ்ய மந்தரம்பு படன ஜேஸி
ம்ரொக்கி ஸேவிஞ்சி ஜெந்திரி மோக்ஷபதவி
தஞ்ஜஸ்ரீ நீலமேகஸ்ய ராஜதனயா

தெலகு ஸீஸ பத்யம்

மது ஸர்க்கர க்ஷீர ததி அம்ருதம்புலகண்டே
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமாம்ருதரஸமு தீபு
கதலிகா மகரந்த கர்ஜூர பனஸ ஜம்பூ
திராக்ஷ பலரஸம்புலகண்டே
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமாம்ருதரஸமு தீபு
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமாம்ருதரஸமு தீபு
நவஸுதா பராமான்ன நவநீதமுல கண்டே
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமாம்ருதரஸமு தீபு
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமம்புனகு னேமி ஸாடி ராது
தஞ்ஜ நீலமேகஸ்ய நாமம்பு ஸேவிஞ்சி நாரதுண்டு
ப்ரஹ்மருஷியய்யே இஹமந்து பதவினொந்து
தஞ்ஜ நீலமேகஸ்ய ராஜதனயா

தெலுகு ஸீஸபத்யம்

ஓ தஞ்ஜ நீலமேகஸ்யாயுனி ஒக ஸாரி தலசிதே
து:க ஆபதமுலன்னியு தொலகிபோவு
ஓ நரரெண்டவஸாரி ஓ தஞ்ஜ நீலமேக சயனன
பஹு போக பாக்ய ஸம்பதலு கலகு
செலிகி முடவஸாரி தஞ்ஜநீலமேகச்யாமளனு
முகத்துடை வைகுண்டமுன வஸிஞ்சு
ரமண நால்கவஸாரி தஞ்ஜ நீலமேக ச்யாமளன
ஸ்திதினிச்சி ருணஸ்துடவய்ய நீவு
அல்ப ஸந்தோஷ ஸுலபுடு வாருதுவைய
யெலமி மா ஜீவ பர்யந்தமு மரவமிம்மு
தலஞ்சுவாரிகி நீ பலமு தொரகுடனு
தஞ்ஜ ஸ்ரீ நீலமேகஸ்ய ராஜதனயா

இந்த கீர்த்தனைகளுள் ஸ்ரீபராசரதீர்த்தம் என்ற வம்புலாஞ்சோலையின் பெருமையும், தஞ்சகன், தண்டகன், தாரகன், வலாசுரன் போன்றோரின் கொடுமையும், அமைதி நிலவ பராசரமுனிவர் தவம் செய்து எம்பெருமானைக் காண்பதும், அவரது வேண்டுகோளுக்கும், தவத்திற்கும் மெச்சி எம்பெருமான் 12 கருடசேவை விழாவில் ஆண்டாளுடன் காட்சி கொடுத்தலும், நீலமேகநாமத்தின் பெருமையும் விளக்கப்படுகின்றன.

இவை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பள்ளியக்கிரஹாரம் துவாதசகருடாழ்வார் தாஸர் R.V.V.நாராயணசுவாமி ராஜு என்பவரால் இயற்றப் பெற்றவை. இந்த ஸ்ரீ நீலமேகப்பெருமாள் கீர்த்தனைகள் மோக்ஷதலபுராணம் என்ற நூலிலிருந்து தொகுத்தவை ஆகும். மோக்ஷதலபுராணம் தஞ்சைமாநகரம் மகாராஜா அவர்களின் சரசுவதிமகாலிலுள்ள பூர்வீக கிரந்தங்களைக் கொண்டு இயற்றப்பட்டது. இந்த நீலமேகப்பெருமாள் கீர்த்தனைகள் டாக்டர் B.M.சுந்தரம் என்னும் சங்கீத வல்லுனரால் பிழைநீக்கி செப்பம் செய்தளிக்கப்பெற்றது.

******

3-7 பங்குனி உத்திரமும் அரங்கனின் பல்வேறு விழாக்களும்

ஸ்ரீரங்கராஜ சரித பாணம் கௌண்டின்ய குலத்தில் உதித்தவரான வரதகுருவின்புதல்வர் ஸ்ரீநிவாஸவிபுதர் என்பவரால் இயற்றப்பட்டது. இதனை பாண வியாயோகம் என்றே கவி குறிப்பிடுகிறார். 'பங்குனி உத்திரமும் அரங்கனின் பல்வேறு விழாக்களும்' என்ற தலைப்பில் அமையும் இக்கட்டுரையில் ஸ்ரீரங்கராஜ சரித பாணம் தரும் அரங்கனின் பல்வேறு விழாக்களைக் குறித்த அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. கவியின் காவிய சாமர்த்தியமும் உணரப்படுகிறது. திங்களும் நாளும்

விழாவறாத திருவரங்கம் என்றே அப்பதியின் பெருமை போற்றலாம். அவ்வண்ணம் ஆண்டு முழுவதும் கொண்டாடப்பெறும் உத்ஸவங்களும், உத்ஸவாதிகளில் தொன்றுதொட்டுத் திகழும் அரிய நிகழ்வுகளும் இந்த பாணநாடகத்தில் இடம்பெற்றுள்ளன.

பங்குனி உத்திரம்

ஸ்ரீரங்கராஜ சரித பாணம் திருவரங்கம் ஸ்ரீரங்கநாதனின் பங்குனி (பால்குன) மாதம் நடைபெறும் ஆதிபிரம்மோற்சவத்தில் குழுமியிருக்கும் பண்டிதர்களின் சபையில் அரங்கேறியது. இந்த பிரம்மோத்ஸவம் பங்குனி உத்திரநன்னாளை குறித்து கொண்டாடப்படுகிறது. ஸ்ரீரங்கராஜ சரிதபாணம் எனும் ஓரங்க நாடகத்தில் பங்குனி உத்திர நாள் விழாக்குறிப்பு காணக்கிடைக்கிறது. பங்குனி பிரம்மோத்ஸவத்தில் ஓர் நாள் அகண்ட காவிரியின் அருகிலுள்ள மகாமண்டபத்தில் அரங்கன் எழுந்தருளியிருந்தார். இது ஜீயர்புரம் எழுந்தருளும் குறிப்பாகலாம். அப்போது உயர்ந்த குடைகொடி போன்றவை சூழ, கர்னாட- திரமிட- ஆந்திர- கூர்ஜரதேசத்துமன்னர்கள் யானைகளோடும் குதிரை களோடும் உன்னைக் காண வந்தனர். உறையூர் சோழராஜாவான தர்மவர்மாவும் தன் மகள் நிசுளா தேவியுடன் உன்னைத் தொழுவதற்காக ஆங்கே வந்திருந்தார். நிசுளா தேவியோவெனில்; வாலிபப் பருவத்துடன் விளங்கும் தர்மவர்மாவின் அழகு மங்கையாவாள். அரங்கனைக் கண்ட அன்றிலிருந்து அவரைத் தன் மணாளனாக்கிக்கொள்ள அவர்பால் ஆதரத்தை பெருக்கிக்கொண்டாள். காலமும் வந்தது. காதலும் கனிந்தது. அவளது எண்ணமும் கைகூடிற்று. இதனை அறிந்த ஒருவர் பாண நாடகத்தில் நிசுளையைப் பார்த்து இதன்மேல் என்ன நிகழ்வு ? என்று வினவ,

பதிலாக நிசுளாதேவி தன் மனோரதப் பூர்த்தியைக் குறித்து அரைகுறையாகக் கூறி அதற்குமேல் நாணம் பூரித்த அவளால் யாதும் கூற முடியாமல் தவித்துப் போனாள். அவளுக்கும் அரங்கனுக்கும் உறையூரிலே ஆறாம் திருநாள் நடந்த திருமணத்திலேதான் அரங்கனின் பெருமைகள் கூற, பங்குனிஉத்திரநாளும் சேருகின்றது. ஆதிபிரம்மோத்ஸவத்தின் ஒன்பதாம் திருநாள் அவளே, 'இன்று பங்குனி உத்திரமன்றோ! ஸ்ரீரங்கநாச்சியாரின் அவதார நக்ஷத்திரமல்லவா இது' என்று கூற, அரங்கனும் தன் உபய நாச்சிமார்களை கருவறையிலேயே வீற்றிருக்கச் செய்துவிட்டு, ஸ்ரீரங்கநாச்சியார் மேல் கருணையுடன் அவரது சந்நிதியை (இருப்பிடத்தை) அடைந்து, போகமனுபவிக்கப் புறப்படுகின்றார். பிரணயகலகமும் நம்மாழ்வார் எழுந்தருளி அரங்கனுக்கும், நாச்சியாருக்கும் சமாதானம் செய்து வைத்தல் ஆகியன முடிந்து திருவரங்கனும் ஸ்ரீரங்கநாச்சியாரும் ஏகாசனத்தில் சேர்த்தி சேவையில் காட்சி தருகின்றனர். அதையும் உறையூரில் இருந்து வந்த நிசுளாதேவி கண்ணுற்று அரங்கனின் அருகே அமரும் பாக்யம் அதாவது அவளோடு சுகபோகம் துய்க்கும் அனுபவம் தமக்குக் கிடைக்காதா ? என ஏங்குகின்றார்ப் போலே அவளது மனப்போக்கினை கவி ஸ்ரீரங்கராஜசரித பாணத்தில் அமைத்திருக்கின்றார்.

அரங்கனின் பல்வேறு விழாக்கள்

ஸ்ரீரங்கராஜசரித பாண நாடகத்தின் கருப்பொருள் சிருங்கார சிகாமணி ரங்கேஸ்வர நாயகனுக்கும் தர்மவர்மாவின் புதல்வியான நிசுளாநாயகிக்கும் (உறையூர் வல்லிக்கும்) நடக்கின்ற திருமணமே ஆகும். சிருங்காரம் நிரம்பியதான இந்த ஓரங்க நாடகத்தில் ஒருவரே தன் உள்ளக் கருத்துகளைத் தெரிவிப்பது போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. திருவரங்கநாதன்

அம்ருதவல்லீ, பாலசந்திரிகா, வாஸந்தீ, ஸரஸீஜவல்லீ, குணமஞ்சரீ, ஆமுக்தமால்யதா என மற்றொரு பெயர்கொண்ட ஸத்யபாமா, காவேரீ, நிசுளா ஆகிய எட்டுமஹிஷிகளுடன் உல்லாஸம் புரிவதை விளக்குவதோடு எட்டாவது நாயகியான நிசுளா தேவியை திருவரங்கநாதன் திருமணம் செய்துகொள்ளும் போது அரங்கனின் விலாசங்கள் (உற்சவங்கள்) விரிவாகக் கூறப்படுகின்றன. இனி உற்சவங்கள் குறித்து சிறிது பார்போம்.

1. <u>ஆடிப்பெருக்கு உத்ஸவம்</u>

ஆஷாடே தசகோத்தராஷ்ட்டம தினே பிரௌட
பிரவாஹாஞ்சிதசம்
சஞ்சத் கங்கண வீசிபாஹு லலிதாம் ஸஹ்யாத்மஜாம் ஸாதரம் ।
சாம ஹாடக பூஷணாதி மஹிதாம் ஸம்பாவ்ய தத்தீரகம்
த்வாமாலோக்ய ததாதிசித்தம் அனயா ந்யஸ்தம் பவத்யத்புதம் ॥
(P.No. 59/V. 98)

(பொ.) ஆடிமாதம் (10+8 ஆம்)நாள் பதினெட்டாம்பேர் (அல்லது 28ம் நாள்) பெரும் பிரவாகமாகவும், ஜொலிக்கின்ற கங்கணம், அலைகளையே கையாகக்கொண்டு விளங்கும் ஸஹ்யாத்மஜையை (காவிரியை) ஆடிப்பெருக்கன்று அன்போடு வஸ்திரம், பொன், அணிகலன் ஆகியவற்றால் சன்மானித்துவிட்டு (யானைமீது மாலை, தாலிப்பொட்டு ஆகியன சமர்ப்பித்து) கரைக்கு வருங்கால் அரங்கனைக் கண்ட நிசுளா அப்போதிலிருந்தே உன்னிடம் நெஞ்சைப் பறிகொடுத்துவிட்டாள். அவளே ஆவணிமாதம் தேவர்குழாம் (3x100+60) 360 ஆராதனங்களால் பூசிக்கப்பட்ட அரங்கனின் அத்புதமான பவித்ரோத்ஸவ மண்டபம் அடைந்து, (ஒன்பது நாட்கள் சுக்ல தசமி

தொடங்கி நடைபெறும் உத்ஸவத்தில்) அவனை கண்ணால்பருகி சித்தத்தை அவன்பால் செலுத்தி மகிழ்ந்தாள்.

புரட்டாசி மாதம் நவராத்ரி மஹோத்ஸவத்தில் லக்ஷ்மீ (ரங்கநாயகி) அர்ச்சிக்கப்பட்டதையும் அரங்கன் விஜயதசமி நன்னாளில் பெருங்குதிரை வாகனமேறி (காட்டழகியசிங்கர் சந்நிதியின் பக்கத்திலுள்ள தோப்புக்கு எழுந்தருளி) வன்னிமரத்தில் அம்பு போடச்செல்லும் காட்சியையும் பார்த்து நிசுளா சஞ்சலிக்கும் மனதுள்ள பாலிகை(சிறுமி)யைப் போலானாள்.

ஐப்பசி மாதம் சிங்காரிக்கப்பட்ட ரத்தினமயமான ஊஞ்சல்சேவை 9 நாட்கள் கண்டருளுகிறார் அரங்கநாதன். அவ்வூஞ்சல் அழகழகாய் அசைந்தாட இருமருங்கிலும் அமர்ந்துள்ள உபய நாச்சிமார்களைக் கண்ட நிசுளாதேவி தானும் அவ்வாறே அனுபவிக்க வேண்டும் என நினைத்தாள்.

கார்த்திகை பௌர்ணமியில் சுமார் 10க்குமேல் 15 அடிகளுக்கு குறையாமல் ஒரு தென்னைமரத்தை நட்டு அதைச்சுற்றிலும் முழுப்பனைகளை உயரமாகச் செய்யப்பட்ட கிருத்திகா தீபத்தைக் (சொக்க பனையைக்)கண்டு பிறகு சந்தனுமண்டபம் எழுந்தருளிய அரங்கன் மகிழ்ச்சியுடன் கலியனுடைய பாட்டை அரையர் வழி சேவிக்கக்கேட்டு அவரையும் கௌரவித்து, தன் இருப்பிடம் சென்று சேர்ந்த அரங்கனைக் கண்டு, காலமுழுதும் நினைத்துக்கொண்டே புளகித மடைந்த அவள் உறக்கத்திற்கே விடை கொடுத்து விட்டாள் போலும். அதே மாதம் அந்த நிசுளா தேக ரக்ஷணத்திற்காக வைத்துக்கொண்ட சித்ரபடர்களை குறிப்பிட்ட இடத்தில் இருக்க நியமித்து, கைசிகபுராண படனத்தைக் கேட்க

ஸபைக்கு வந்தாள். கைசிக ஏகாதசி புறப்பாடு, சந்தனு மண்டபத்தில் திருமஞ்சனம், அர்ஜுனமண்டபத்தில் ஆஸ்தானம், புராணபடனம், உதயத்திற்குமுன் பச்சைக்கற்பூரம் கலந்த மலர்கள் தூவ படியேற்றம் ஆகியன கண்டு அதிலேயே மூழ்கியதால் புராணமோ புறப்பாடோ எல்லாமே அவளுக்கு புதிதுபுதிதாய்க் காணப்பட்டது.

2. மார்கழி மாதம் - மோகினி அலங்காரம்

மார்கே மாஸி பராங்குசாதி முனிபி: சித்ரே மஹாமண்டபே
பட்டேசாதி வசஸ்ஸுதாம் ப்ரதிதினம் பீத்வா தசம்யாம் ஸ்வயம் ।
ஸர்வேஷாமபி தாம் ஸுதாம் விதரிதும் தன்மோஹிநீ ரூபிணம்-
த்வாமாலோக்ய விமோஹிதா கதமியம் தன்வீ ப்ருசம் லஜ்ஜிதா ॥

(P.No. 62/V. 107)

(பொ.) மார்கழி மாதத்தில் பராங்குசாதி முனிவர்களால் சூழப்பெற்ற விசித்திரமான மஹாமண்டபத்தில் பட்டர்பிரான் முதலிய ஆழ்வார்களின் அருளிச்செயலான திவ்யபிரபந்தாம்ருதங்களைத் தாம்பருகிப் பத்தாம் நாள் அந்த அம்ருதத்தை எல்லாருக்கும் அளிப்பதற்காக மோஹனாவதாரம் எடுத்த உன்னைப் பார்த்து, மோகித்து இந்த நிசுளா எப்படி இந்நிலை தனக்குண்டானது என எண்ணி வெட்கமும் அடைந்தாள்.

3. மார்கழி மாதம் - இராப்பத்து

ஆரப்ய ஸ்வதினம் பவான் தசதினான் ஆபாத்ய முக்தோத்கதிம்
பக்தநானந்தக்ருதே கதோ தசசதஸ்தம்பம் மஹாமண்டபம் ।
ஸா சடவாகம்ருதம் நிபீய வகுளாலங்காரவல்யா மஹா-
னந்தம் யத் விததார தாத்ருசமியம் சீலம் ஸ்வயம் காயதி ॥

(P.No. 62&63/V. 108)

(பொ.) எம்பெருமான் விஷ்ணுதினம் என்கிற தன்னுடைய தினத்தில் ஆரம்பித்து பத்துதினங்கள் பக்தர்களுக்கு ஆனந்தம் அளிக்கும் வகையில் அவர்களை உய்விக்க எண்ணி ஆயிரம்(10x100=1000)கால் மண்டபமெனும் திருமாமணி மண்டபத்தில் காட்சி தருகிறார். ஆங்கே சடகோபருடைய சூக்தியமுதத்தைப் பருகினார் அரங்கன். அமுதம் அளித்த மோஹினியான (மோஹினி வடிவாய் அலங்கரிக்கப்பட்ட) நம்மாழ்வாருக்கு எவ்வாறு (இராப்பத்தில் ஏழாம் திருநாள் கைத்தல)ஸேவை கொடுத்து அரங்கன் ஆனந்தம் அளித்தாரோ அவ்வாறே தமக்கும் வழங்கட்டும் என்று தாமும் (நிசுளாவும்) ஆழ்வாரைப் போலே பாடுகின்றாள்.

4. <u>இராப்பத்து - எட்டாம்நாள் - வேடுபறி</u>

அத்ரைவாஷ்டமவாஸரே த்ருதகதிம் துங்கம் துரங்கம் ஜவாத்-
ஆருஹ்ய த்வயி மண்டலீ விததிபி: தாராபி: ஆக்ரீடதி !
ஆவ்ருத்ய ஸ்வபடைர் ஹடாத் கலிஜிதா ஸர்வாபஹாரே க்ருதே-
ப்யஸ்மை தத்தவரஸ்ய தே ஸுமுகதாமாலோக்ய ஹ்ருஷ்டா ஸுதா ॥

(P.No. 63/V. 109)

(பொ.) இராப்பத்து உற்சவத்திலேயே எட்டாம் நாள் உயர்ந்ததான அதிவேகம் கொண்ட குதிரையின் மேல் ஆரோகணித்து வையாளிக்காட்சி நல்குகிறார். அது சமயம் கலிவைரியான திருமங்கை ஆழ்வார் தன் படர்களுடன் வந்து பொருட்களையெல்லாம் அபஹரிக்கிறார். அப்போது கோபங்கொண்டு அவரை சிக்ஷிக்காமல் ஆழ்வாருக்கு அனுக்ரஹம் புரிந்ததைக் கண்ட தர்மவர்மாவின் மகள் ஆனந்தப் பரவசமடைந்தாள். இந்த வேடுபறி நாளில்தான் திருமங்கை ஆழ்வார் மனம் திருந்தி ஞானம் பெற்றார் என்றறியப்படுகிறது.

திருமாமணி மண்டபத்திலிருந்து மூலஸ்த்தானம் சேரும்போது அரங்கராஜா அங்குள்ள மௌனிகளால் சங்கீதம் பாட (வீணாகானத்துடன்) மெள்ளமெள்ள மதங்கொண்ட யானை போல் பரிஜனங்கள் சூழ படியேற்றம் கண்டருளினார். அதைக்கண்ட நிசுளா வியப்பெய்தி சிலைபோலவே தம்பகமாய் நின்றுவிட்டாளாம்.

5. <u>தைமாதம் - பிரம்மோத்ஸவம்</u>

பௌஷே த்வாம் ப்ரதமம் த்வஜோத்ஸவதினே பூமா ஸமேதம் ததோ
ஹம்ஸோத்தம்ஸ
ம்ருகேந்த்ர-தார்க்ஷ்ய-ஹனுமன்-நகேந்த்ரவாஹம் க்ரமாத் ।
தேவீப்யாம் அத சூர்ணஸேகரஸிகம் ரங்கம் துரங்கோத்ஸுகம்
ஸ்ரீபூப்யாம் ரதயாயினம் ச தனயா ஸம்வீக்ஷ்ய மே மோஹிதா ॥

(P.No. 64/V.No. 111)

(பொ.) பௌஷம் என்கிற தை மாதம் நடைபெறும் பூபதித்திருநாளின் முதல் நாள் கொடியேற்று தினத்தில் உபயநாச்சிமார் சமேதராகக் கண்டாள். பிறகு உயர்ந்த அன்னம், சிம்மம், கருடன், அனுமன், யானை, தேவியர்களுடன் சூர்ணோத்ஸவம், குதிரை, ஸ்ரீதேவி பூமிதேவியுடன் ரதயாத்திரை ஆகியன கண்டருளும் உன்னைக் கண்டு தர்மவர்மாவான என் மகள் மோஹித்தாள் என்கிறார். தை மாதம் இரண்டாம் நாள் கனுமண்டபம் எழுந்தருளி மாலை ம்ருகயோத்ஸவம் (பாரிவேட்டை குதிரைவாஹனஸேவை) கண்டு மகிழ்ந்தாள்.

மகிழ், மா போன்ற மரங்கள் எல்லாம் துளிர்க்கின்ற சிசிர ருதுவான மாசிமாதம் தெப்போத்ஸவத்தின் எட்டாம் நாள் உபய நாச்சிமாருடன் கூடிய அரங்கன் சிறப்பான ப்லவரதத்தில் (தெப்பத்தில்) விஹரிக்கின்றார். தெப்பத்தில்

குதிரைவாகனமும் வைக்கப்படுகிறது. அந்த வைபவத்தில் உன்னைக்கண்ட நிசுளாதேவி உன்னோடு ஆங்கே விஹரிப்பதையும் விரும்புகின்றாள் எனத்தெரிவிக்கிறாள்.

சித்திரை மாதம் துவஜாரோகண மகோத்ஸவத்தில் பற்பல அலங்காரம் கொண்டு ஆடல் மகளிர்கள் வரிசை வரிசையாக அந்தந்த அழகான மண்டபத்தில் அரங்கனை கொலுவீற்றிருக்கச்செய்து சிறப்புடை நடனத்தால் நடனமாடி மகிழ்வித்தனர். தத்யோதனம், புளியோஹரை போன்ற பக்ஷ்யவர்கங்களோடு நிவேதனமும் செய்வித்தனர். அதுகண்டு தர்மவர்மாவின் மகள் தானும் அப்படியே செய்ய முயற்சிக்கின்றாள். இதே சித்திரை மாதத்தில் காச்மீரத்திலிருந்து வந்த சந்தனரஸம் கஸ்தூரி வாசனை திரவ்யங்களாலும் அலங்கரிக்கப்பட்டார் அரங்கன். நன்கு மலர்ந்த மல்லிப் பூக்களாலான மாலைகளாலும் அரங்கனை அணிவித்து மகிழ்கின்ற சைத்யோபசார (பூச்சாற்று) உத்ஸவத்தில் அருமையான சர்க்கரைப்பொங்கல் நிவேதனம் போன்றவை கண்டு மகிழ்ந்தாள் நிசுளா.

வைகாசி மாதத்தில் குளிர்ந்த தண்ணீர் நிரப்பப்பெற்ற அகழியாகிற சுற்று ரேகையால் அலங்கரிக்கப்பெற்ற வஸந்தமண்டபத்தில் ஊஞ்சலில் தேவியரோடு விளங்குபவரும், வஸந்த கேளிக்கையில் ஈடுபட்டு ஆடல்புரியும் ஆடல்மகளிர்களால் சூழப் பெற்றவரும் ஆன உம்மைக்கண்டு களவளப் பட்டவளான இந்த பெண்மணி (நிசுளா) உம்மருகிலுள்ள உபயநாச்சிமார்களின் இடத்தைப் பிடிக்க விழைகின்றாள்.

6. <u>தீர்த்தோத்ஸவம்</u>

ஸேயம் சந்த்ர ஸரோவரே ப்ரதிமஹம் தீர்த்தோத்ஸ்வானந்திதா
ஸாசந்தந்நவமோத்தரேபி ச தினே ஸ்ரீபுஷ்பயாகாத் பரம் ।
வீத்யாந்தே வலனம் யதீந்த்ரபவனதுவாரே க்ருத்ஞக்ரியாம்
ஆலோக்ய துவஜஸங்க்ரஹம் ஸ்துதிகரம் ஸானந்தபாஷ்பா ஸ்த்திதா ॥

(P.No. 67/V. 120)

(பொ.) ஒவ்வொரு ஆண்டிலும் சந்திர புஷ்கரிணியில் (சித்திரை விருப்பன் திருநாளில் இங்கு) தீர்த்தவாரி நடைபெறுமதனையும் கண்டு மகிழ்ந்தாள். சைத்ரோத்ஸவத்தின் பத்தாம் நாள் புஷ்பயாகத்திற்குப் பிறகு சந்தனாதி வாசனைத்திரவியம் அணிந்தவராய் அரங்கன் திருவீதி வலம்வருதல், யதீந்த்ரரின் (இராமானுசரின்) சந்நிதிக்கு எதிரே நன்றியறிதலுக்காக ஒரு செயலைப் புரிந்து (ஸப்தாவரண வீதிவலம்வந்தபின்னர் இராமானுஜர் ஸந்நிதிக்கு எழுந்தருளி இளநீர் அமுதுபடி மற்றும் அவருக்கு மரியாதை செய்வதும் வழக்கத்தில் உள்ளது. பிறகு) துவஜாவரோகணம், துவஜஸங்க்ரஹணம் ஆகியவற்றையும் பார்த்த நிசுளா அப்படியே ஆனந்தபாஷ்பம் பெருக நின்றாள்.

7. <u>நெல்லளவை</u>

ப்ரத்யுத்ஸவம் ஸப்தம வாஸராந்தே-
பத்மா மஹிப்யாம் ஸஹ தான்யமானம் ।
பரீக்ஷ்ய தத்வக்துமிவாதிலக்ஷ்ம்யை
தத்ராகதம் த்வாம் இயம் ஈஹதே ஸ்ம ॥ (P.No. 67/V. 121)

(பொ.) ஒவ்வோர் உற்சவத்திலும் ஏழாம் நாள் மாலையில் உபயநாச்சிமார்களுடன் (கொட்டாரம்) எழுந்தருளி தான்யத்தை அளப்பதும் (நெல்லளவை) பரீக்ஷை செய்து அதனைக்கூற அங்கு வந்திருப்பவளான ஆதிலக்ஷ்மியான உன்னைக் கண்டு, அந்த இடத்தைப் பிடிக்கவும் இவள் (நிசுளை) எண்ணுகின்றாள்.

ஒவ்வோர் பங்குனி உத்ஸவத்திலும் எட்டாம் நாள் எல்லைக்கரை மண்டபத்திற்கு (திருவானைக்காவிற்கும் திருவரங்கத்திற்கும் உள்ள எல்லைப்பிரிவின் காரணமாக அதனைப் பார்வையிட)எழுந்தருளி ஆங்கே நடைபெறும் சிறப்பு பூஜைகளை அரங்கன் ஏற்றுக்கொள்ளுகிறார். இவ்வுத்ஸவத்திலும் மற்றெப்போதும் எட்டாம் நாள் இரவு தங்கக்குதிரை வாஹனமேறி அரங்கன் திருவீதி உலா வருகின்றார். விமானத்தில் வருகிறார் என்ற சொல்லால் வெட்டிவேர் சப்பரத்தில் சைத்ரோத்ஸவம் எட்டாம் நாள் காலை வெள்ளிக்குதிரை வாஹன உலாவை எடுத்துக்கொள்ளலாம். அன்றைக்கு மட்டுமே அது சிறப்பு. அவ்வாறே எழுந்தருளிய உம்மை இந்த நிசுளாதேவி கவேரகன்யையாகிற காவிரியின் மணற்பிரதேசத்தில் தேடுகின்றாளாம்.

8. <u>உத்ஸவத்தில் காப்பு கட்டுதல்</u>

ப்ரத்யுத்ஸவம் பிரதமவாஸர ராத்ரிகாலே
நிர்கத்ய யாகபவனாதபி மூலநாதம் ।
ஸ்தித்வா த்ருதபிரதிஸரம் ஸஹஸோத்திதம் த்வாம்
ஆலோக்ய ஸேயமதிவிஸ்மயம் ஆப தன்யா ॥ (P.No. 68/V. 123)

(பொ.) ஒவ்வோர் உற்சவத்திலும் முதல் நாள் இரவுப் பொழுதில் யாகசாலையிலிருந்து கிளம்பி மூலநாதரான (கருவறையில்) உன்னுடன் இருந்து பிரதிஸரம் (காப்பு நாண்) கட்டி உடன் எழுந்து வரும் உன்னைப்பார்த்து இந்த நிசுளை பெருவியப்பை அடைந்தாள்.

9. <u>தீபாராதனை</u>

உத்யன் மத்தள தாள காஹளரவைருத்தாம வந்திஸ்தவை:
நீரந்த்ராஞ்ஜலி ஸம்புடாஞ்சிதஜனாம் நீராஜனாம் பச்யதம் ।
சஞ்சச்சாமர மத்ய கஸ்ய பவத: சத்ரச்ரியா ஸம்வ்ருதம்
வக்த்ராம்போஜமுதாரஹாஸமஸக்ருத் த்ருஷ்ட்வாப்யத்ருப்தா ஸுதா ॥
(P.No. 68/V. 124)

(பொ.) தினமும் தீபஹாரதி காட்டும்போது மத்தள, தாள, காஹளம் முதலான வாத்யங்கள் ஒலிக்கின்றன. உயர்ந்த தோத்திரத்தால் அரங்கனைத் தோத்திரமும் செய்யப்படுகிறது. தலைக்கு மேல் இருகை கூப்பி அஞ்சலி முத்திரையோடு உமது நீராஜன வைபவத்தைக்காணும் மனிதர்கள் சாமரம் வீசுகை, வெண்முத்துக்குடை போன்றவற்றின் நடுவே விளங்கும் உதாரமான புன்முறுவல்பூத்த உனது முககமலத்தை அடிக்கடி பார்த்தும் தர்மவர்மாவின் பெண் நிசுளா திருப்தி அடைந்தாளில்லை. எவ்வளவுமுறை பார்த்தாலும் தெவிட்டாத இன்பம் பயப்பதென்பது கருத்து.

ஐப்பசி மாதம் நரக சதுர்தசி நாளான தீபாவளியன்று சந்தனு மண்டபத்தை அடைந்த அரங்கன் சிறப்பு அபிஷேகம் போன்றவற்றால் பூசிக்கப்படுகின்றார். சடஜித் (நம்மாழ்வார்) போன்ற முனிவரர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். அடுத்த க்ஷணமே இச்சிறுமி அரங்கன் அருகே சென்று அவரோடு ஒன்றி அதைக்குறித்து வியந்து பாடுகின்றாளாம். என்னே! அவளது சாகஸம் எனப்புகழப்படுகிறது.

ஸங்க்ராந்தி (மாதப்பிறப்பு) முதலான தினங்களில் ரத்னமயமான ஸ்நானபீடத்தில் ஸஹஸ்ரதாரையால் நீராட்டுவிக்கப்பெற்றவரும், நீளமான கண்டசரம் முதலான அணிகலன்களோடு ஸர்வோபசாரத்தையும் ஏற்று, சந்தனக்குழம்பைப் பூசிய சரீரம் உள்ள உன்னைப்பார்த்து (உன் வடிவழகில் மயங்கி) கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்திடவேண்டும் என முயற்சித்து நிற்பாள் போலே இந்த நிசுளை விளங்குகிறாள்.

இவ்வாறு நிசுளா தேவிக்கு உரைக்கின்றதும் அவளது அனுபவத்தையும் வெளியிடுவதாய் அமைந்த அரங்கனின்

உற்சவக்குறிப்புகள் மிகப்பழமையான கையடக்கப்பிரதி கிரந்த எழுத்தில் பதிப்பிக்கப்பெற்ற நூல் (நூல் அன்பளிப்பு: ஜோஸ்யம் ஸ்ரீ. ரெங்கநாதய்யர், பண்டிதர், தொறநாடு) கொண்டு சேகரிக்கப்பெற்றன.

'பங்குனி உத்திரமும் அரங்கனின் பல்வேறு விழாக்களும்' என்ற இக்கட்டுரையில் குறிப்பிடப்பெறும் நிசுளாதேவியான உறையூர்வல்லிக்கும் அரங்கனுக்கும் பங்குனி மாத பிரம்மோத்ஸவத்தில் திருமணவைபவம் சீரும் சிறப்புமாய் தர்மவர்மா நடத்தி வைத்ததாக ஸ்ரீரங்கராஜசரிதபாணம் தெரிவிக்கின்றது.

3-8 பட்டீசுவரத்தில் கோவிந்ததீக்ஷிதர் நந்தவனம்

பட்டீசுவரம் என்ற நகரம் சோழப்பேரரசின் தலைநகரங்களில் ஒன்றாகவும், சோழ அரச குடும்பத்தினர் வாழ்ந்த இடமாகவும் இருந்த பெருமையும் தொன்மையும் கொண்டது. காமதேனுவின் கன்றாகிய பட்டி வழிபட்டு பேறுபெற்றதால் இத்தலம் பட்டீசுவரம் எனப்பெயர் பெற்றது. இத்தலத்திலுள்ள நாதர்: பட்டீசுவரர், தேனுபுரீசுவரர். அம்பிகை: பல்வளைநாயகி. தீர்த்தம் : ஞானதீர்த்தம். இத்தலத்தில் உள்ள நந்தவனத்திற்கு கோவிந்ததீக்ஷிதர் நந்தவனம் என்பது பெயர். அது குறித்துச் சிறிது பார்ப்போம்.

கோவிந்ததீக்ஷிதர்

விஜய நகர அரசனான திம்மனின் மகன் சின்ன செவ்வன் என்பவர் மிகுந்த பராக்ரமமுடையவர். வரலாறுகளில் இவர் "மகாயோதர்" என்றழைக்கப் படுகிறார். இவரது மனைவி திருமலாம்பாவின்

தங்கையான மூர்த்தாம்பாள் ஆவார். மூர்த்தாம்பிகையின் சீதனமாகத் தஞ்சையைப்பெற்று சின்னசெவ்வன் என்ற செவ்வப்பநாயக்கர் ஆண்டு வந்தார். ஆதலால் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களுள் இவரே முதன்மையானவர். இவர் கி.பி. 1535 முதல் 1561 வரையிலும் இவருக்குப்பின் அச்சுதப்ப நாயக்கர் கி.பி. 1561 முதல் 1614 வரையிலும், பிறகு இரகுநாத நாயக்கர் கி.பி. 1614 முதல் 1633 வரையிலும், விஜயராகவ நாயக்கர் கி.பி. 1633 முதல் 1673 வரையிலும் தஞ்சையை ஆட்சி செய்தனர்.

கோவிந்த தீக்ஷிதர் என்பவர் நாயக்க மன்னர்களில் முதல் மூவருக்கு மந்திரியாகத் திகழ்ந்தவர். இவர் வசிஷ்ட்ட கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவரது துணைவியார் நாகாம்பாள் ஆவார். கோவிந்த தீக்ஷிதருக்கு 8 புதல்வர்களும், ஒரு புதல்வியும் உண்டு. இவர் வாழ்ந்து வந்த இடங்களுள் சிறந்தவை திருநாகேசுவரமும், பட்டீசுவரமுமாகும். இவரது பெருமையை செவ்வப்ப நாயக்கர் தனது இறுதிக்காலத்தில் தமது பிள்ளை, பேரன், மந்திரி ஆகியோரை அருகில் அமர்த்திக்கொண்டு நாம் விஜய நகர அரசனான அச்சுத தேவராயனின் அபிமானத்தாலும் கோவிந்த தீக்ஷிதர் உதவியாலும் பெரியவர்களாகி நாயக்கர் என்ற பெயரினால் பிரசித்தியடைந்திருக்கிறோம். எந்த ஒரு நேரத்திலும் கோவிந்த தீக்ஷிதரை முன் வைத்துக்கொள்ளாமல் எச்செயலையும் புரியாதீர்கள். நமது குலகுரு மற்றும் குலமந்திரியுமான தீக்ஷிதரின் எண்ணத்திற்கு யாரும் விரோதமாக நடக்கக்கூடாது. அறிவு மற்றும் வயதிலும் முதிர்ந்தவரான அந்த பெரியோரை நம்முடைய குலதெய்வம் என நினைத்து அவர் சொற்படி நடப்பதே புகழ் தரவல்லது" என்றும் கூறியுள்ளார்.

மேலும் தோஹூர் யுத்தத்தில் ஜக்கராயரைத் தோற்கடித்த இரகுநாத நாயக்கர் விஜயநகர அரியணையில்

தம்மிடம் யாசம நாயக்கர் ஒப்பித்த ராமராயரைப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். அதன் நினைவாக நாயக்கர்களின் ராஜதானியாய்ச் சிலகாலம் விளங்கிய கும்பகோணத்தில் ஒரு கோயிலெடுத்து அதில் பட்டாபிஷேக கோலத்தில் இராமபிரானைப் பிரதிஷ்டை செய்தார் என்பதும் நமக்குத் தெரியவருகிறது. இப்படிப்பட்ட செயல்களுக்கெல்லாம் உறுதுணையாய் நின்று விஜயநகர அரசபரம்பரையை காப்பாற்றிய பெருமை கோவிந்ததீக்ஷிதரையே சாரும். நாயக்க மன்னர்கள் இவரை "அய்யா" என்று மரியாதையுடன் அழைத்து வரலாயினர். இவரது பெயரில் தஞ்சாவூர்-கும்பகோணம் மார்க்கத்திலுள்ள அய்யம்பேட்டை என்ற ஊரும், அய்யங்குளமும், கொள்ளிடம் ஆற்றின் இடப்பக்கம் பாயும் அய்யன் வாய்க்காலும் இவர் பெருமை போற்றும் வரலாற்றுச் சின்னங்களாகத் திகழ்கின்றன. கோவிந்த தீக்ஷிதர் ஸாக்னிசித்யம், ஸர்வதோமுகம், அதிராத்ரம், அப்தோர்யாமம், வாஜபேயம் முதலிய வேள்விகளைப் புரிந்தார். கோவிந்த தீக்ஷிதர் பட்டீசுவரம் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். அம்மன் கோயில் அர்த்த மண்டபத்தில் துணைவியாருடன் கூடிய ஸ்ரீ கோவிந்ததீக்ஷிதர் திருஉருவச்சிலை அஞ்சலி ஹஸ்தத்துடன் காணப் படுகிறது. இரண்டாம் கோபுர நுழைவாயிலில் உள்ள ஒரு கல்வெட்டு இவரை 'கோவிந்ததீக்ஷித சுவாமி' எனக் குறிப்பிடுகிறது. இந்த கல்வெட்டு கி.பி. 1634 ஆம் ஆண்டுக்குரியதாகும். இவரது நந்தவனப்பணி பற்றிய சிறப்புடைய செய்திகள் சரசுவதிமகால் நூலகத்தில் உள்ளன.

நந்தவனம்

கோவிந்த தீக்ஷிதர் எண்ணற்ற அறச்செயல்களையும் மாபெரும் வேள்விகளையும் புரிந்து தனது முதிர்ந்த

பருவத்தில் பொறுப்புகளனைத்தையும் தனது புதல்வர்களிடேயே ஒப்படைத்துவிட்டு ஆன்ம சிந்தனையில் காலங்களைக் கடத்தி வந்தார். அவரது வீட்டில் நம்பிக்கைக்குரிய பணியாளர் ஒருவர் இருந்தார். அவர் தீக்ஷிதர் வீட்டிலுள்ள பசுக்களைப் பேணிப் பாதுகாத்தும், நிலபுலன்கலை மேற்பார்வை யிடுவதமாகிய பணிகளைப் புரிந்தும் வந்தார். அவருக்கு நிறைய புதல்வர்கள் இருந்தனர். கடைசி காலம் நெருங்கியதால் தீக்ஷிதரின் பணியாளர் இறந்தார். இறந்து ஆறுமாத காலங்களும் கடந்துவிட்டன, ஒருநாள் கோவிந்த தீக்ஷிதர் தனது பகலுணவை முடித்துக்கொண்டு புழக்கடை சென்று கை கழுவினார். அப்போது இறந்துபோன அவரது பணியாளர் புழக்கடை கடைசி வாயிலில் வந்து நிற்கக்கண்டார். அக்காட்சி அவரை பெரும் வியப்பிலாழ்த்தியது. இந்த நபர் இறந்து ஆறு திங்களாகிவிட்டதே ! எப்படி இவர் இங்கே வரமுடியும்? என்று குழம்பியவராய் உள்ளே சென்று ஆசமனம் செய்துவிட்டு மறுபடியும் வந்து பார்க்கும்போது அவர் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். கோவிந்த தீக்ஷிதரும், "யாரப்பா நீ ? எங்கே வந்தாய்"? என்று வினவினார். அதற்கு அப்பணியாளர் "ஐயா, நான் உங்களுக்குத் தொண்டுபுரிந்தவன். நான் இறந்தபின் யமதூதுவர்கள் என்னை யம உலகிற்கு அழைத்துச் சென்றார்கள். யமனின் முன்னிலையில் நிறுத்தி பூவுலகில் நான் தங்களிடம் தன்னலம் கருதாது உழைத்தமையை யமனிடம் விளக்கினார்கள். அதோடு மட்டுமின்றி யமதர்மராஜா-விற்கு வணக்கம் செலுத்தவும் கோரினர். அப்படியே நானும் வணக்கம் செலுத்திவிட்டு பணிவோடு நின்றிருந்தேன். உடனே யமதர்மராஜன் தனது குமாஸ்தாவான சித்திரகுப்தனை அழைத்து ஆயுள் கணக்குப் புத்தகத்தினை எடுத்துவரக் கூறினார். அதனைப் புரட்டிப்பார்த்து நடுவிலிருந்து ஒரு பக்கத்தை எடுத்து, நீ

கோவிந்ததீக்ஷிதரிடம் ஆயுட்காலம் வரை நீதியாகவும், நேர்மையாகவும் உழைத்திருக்கிறாய் என்று எழுதப் பட்டிருக்கிறது. ஆதலால் நீ இனிமேல் சித்திரகுப்தனுக்கு உதவியாளராகப் பணிபுரிய வேண்டும் என்று கூறி அவரிடம் அனுப்பிவிட்டார். நானும் தாங்களிடம் உழைத்த நல்லுழைப்பின் பயனாக யமலோகத்தில் பணிபுரிந்து கொண்டு நலமாக உள்ளேன்" என்று கூறினார். இப்படியேயிருக்க ஒருநாள் சித்திரகுப்தனின் கட்டளையால் இந்திரலோகம் சென்று இந்திரனைச் சந்திக்க வாய்ப்புக்கேட்டு வாயிலில் காத்திருந்தேன். அப்போது பூவுலகிலுள்ளோர் சிலரைப்பற்றிய விசாரணை அங்கு நடந்து கொண்டிருந்தது. அதற்கிடையில் இந்திரன், "கோவிந்த தீக்ஷிதர் செய்யாத தர்மங்களே இல்லை" என்றான். அதுசமயம் முனிவர் ஒருவர் எழுந்திருந்து "பல அறச்செயல்கள் புரிந்த கோவிந்த தீக்ஷிதர் நந்தவன கைங்கரியம் மேற்கொள்ள வில்லையே" என்று தெரிவித்து மௌனமானார். இச்செய்தியினை தங்களிடம் தெரிவிக்கவேண்டுமென்று எனக்கு மிகவும் ஆவலாய் இருந்தது. ஆகவே கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தங்களிடம் கூறிச்செல்லலாமென வந்தேன். உத்திரவு கொடுத்தால் புறப்படுவேன் என்று புறப்பட ஆயத்தமானான்.

அவர் கூறிய மொழிகளால் தீக்ஷிதருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆதலால் வந்திருந்த யமலோகவாசி யிடம் நம்பத் தகுந்த குறிப்புகள் ஏதாவது கூற இயலுமா? என்று வினவினார். அதற்கு யமலோகவாசி, "இதோ கூறுகின்றேன். என்று தொடங்கியவராய் இன்று மாலை ஆறுமணி அளவில் மோகனாசாரி என்ற சிற்பி கோபுரத்திலிருந்து வீழ்ந்திறப்பார். அவரைக்கொண்டு செல்லவே நான் வந்துள்ளேன்" என்றார். அப்படிச் சொன்னபோதிலும் தீக்ஷிதருக்கு அவரிடம் முழுமையான

நம்பிக்கை ஏற்படவில்லை. இருப்பினும் அதனைப் பரிசீலிக்க எண்ணியவராய் "எனக்கு பூவுலக வாழ்க்கை எத்தனை நாட்கள்" என்று வினவ, அதற்கு யமலோகவாசி, "இன்னும் ஆறு மாதங்கள்" என பதிலளித்தார். இதைச் செவிமடுத்தபின் அவரிடம் தீக்ஷிதருக்குச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. உடன் மோகனாசாரியைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் அவரை ஓர் அறையில் இட்டுப் பூட்டி வைத்தார். திருக்கோயிலின் கோபுரத்தில் சிற்பி மோகனாசாரியைத் தவிர ஏனையோர்கள் பணிபுரிந்துகொண்டிருந்தனர். அவ்வமயம் கோபுர வேலையில் சிக்கல் ஒன்று ஏற்பட அதனை மோகனாசாரி என்பவரால் மட்டுமே சரிசெய்ய இயலும் என்ற சூழ்நிலையில் தீக்ஷிதர் அவரைக் காப்பாற்ற நினைத்ததையே மறந்து சிற்பி மோகனாசாரியை அழைத்துச் செல்ல உத்தரவளித்துவிட்டார்.

அந்தோ! விதியின் கொடுமை என்ன செய்ய முடியும்? மோகனாசாரியும் தீக்ஷிதரின் உத்தரவினை ஏற்றுத் திருக்கோயிலின் கோபுரத்தில் ஏறி கல்லொன்றை இடமாற்றம் செய்து சரிபடுத்தமுயன்றபோது கால் இடறி கீழே விழுந்தார். அதனைக்கண்ட ஊர்மக்கள் அனைவரும் கூடி மோகனாசாரிக்கு முதலுதவிகளைச் செய்தனர். ஆயினும் அது பலனளிக்காமல் அவரது ஆவி பிரிந்தது. இச்செய்தியைச் செவியுற்ற தீக்ஷிதருக்கு அப்போதுதான் மோகனாசாரியை காப்பாற்றுவதற்காகக் கைக்கொண்ட உபாயம் நினைவிற்கு வந்தது. இதனால் யமலோகவாசி கூறிய மொழிகளும் தீக்ஷிதர் மனதில் நன்கு பதிந்து விட்டன. பிறகு யமலோகவாசி கூறிய வண்ணம் நந்தவனப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அவரால் நிறுவப்பெற்ற நந்தவனத்தை இன்றும் நாம் பட்டீசுவரம் கோயிலருகில் காணலாம். கோவிந்த தீக்ஷிதரால் நிறுவப்பெற்ற அந்நந்தவனம் அவரது பெயராலேயே இன்றும் அழைக்கப்பட்டு வருவதோடு

அது பட்டீசுவரம் தேவஸ்தானத்திற்கு உடைமை யாக்கவும் பெற்றது. இந்த கட்டுரையினை எழுத C.வெங்கட்ரமண சாஸ்திரி அவர்களின் 'தமிழ்நாடின கர்நாடகமந்திரி' என்கிற கன்னட நாவலும் (நஞ்சன்கூடு, 1928), ஸ்ரீ வேங்கடேசபண்டுலு எழுதிய 'கோவிந்த தீக்ஷிதர்' எனும் ஆங்கிலகட்டுரையும் பெரிதும் துணை நின்றன.

3-9 யக்ஞமூர்த்தியும், பூலோககிருஷ்ணனும்

தஞ்சாவூர் அரண்மனையைச் சுற்றி நான்கு இராஜவீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மேல இராஜவீதியினையும், எல்லையம்மன் கோயில் தெருவையும் இணைக்கின்ற கொங்கணேச்வரன் கோயிலுக்கு நேராக மேற்கிலிருந்து கிழக்காகச் செல்லும் தெருவிற்குப் பெயர் சகாநாயக்கன் தெரு என்பது. 'சகாநாயக்' என்பவர் தஞ்சையில் பெருஞ்செல்வந்தர். கலைப்போஷகர். இவருக்கு கிருஷ்ணசாமி நாயக் என்ற மற்றொரு பெயரும் உண்டு. என்பதை 'கதாகாலக்ஷேபக் கலையும் கலைஞர்களும்' பற்றிய நூல் கூறுகின்றது. சகாநாயக்கன் தெருவில் தென்திசை நோக்கியவாறு காணக்கிடைப்பது யக்ஞமூர்த்தியின் திருக்கோயில் ஆகும்.

யக்ஞமூர்த்தி

இந்த எம்பெருமானான யக்ஞமூர்த்தியின் திருக்கோயில் பழுதடைந்த இராஜகோபுரத்தையும், அழகிய சுதைவேலைப்பாடுகள் மிகுந்த நெடிதுயர்ந்த மூலவர் விமான கோபுரத்தையும் பெற்றுள்ளது. அரச கோபுரத்தின் கீழ் மேற்றிசைகளிலும், வடமேற்கு மூலையிலும்

படிகளுடன் கூடிய நாயக்கர் கால கூம்பு மண்டபங்கள் காணக்கிடைக்கின்றன. கருடன் சந்நிதி, திருவடி கோயிலும் ஒரே இடத்தில் யக்ஞமூர்த்தியின் சந்நிதி முன்பாக அமைக்கப்பெற்றுள்ளது. முகமண்டபம்- அதன் மேற்கு மூலையில் அம்ருதகலச கருடன், அனுமார், திருக்கச்சி நம்பிகள், ராமானுஜர் போன்றோர் அருளாசி புரிகின்றனர். அவர்களின் அருகே பீடபாகத்தில் எழுத்துப் பொறிப்போடுகூடிய வாயிற்காப்பாளர்களை நாம் காண்கிறோம். உள்ளே மூலமூர்த்தியாகத் தென்திசை நோக்கி யக்ஞமூர்த்தி அருள்பாலிக்கிறார். எம்பெருமான் ஆங்கே ஆழிக்கையோடும், சங்கம் பிடிக்கும் தடக்கையுடனும், இடுப்பிலே வைத்தருளும் இடது கீழ்க்கை, வரந்தரும் வலது கீழ்க்கை ஆகிய அமைப்போடு அருகில் திருமங்கையும், அவனியாளும் புடைசூழ நிறுவப்பெற்றுள்ளார். இக்கோயிலின் கருவறைக்கு அடுத்த கீழ்ப்பகுதியில் வடக்குநோக்கி ‘பரமபதவாசல்’ அமைக்கப்பட்டுள்ளது. யக்ஞ மூர்த்தியின் திருக்கோயில் உள்ள முகமண்டபத்தில் இருந்தே கீழ்த்திசையின் சிறு சாளரத்தின் வாயிலாகவே மேற்றிசை நோக்கியவாறு தனிக்கோயில்கொண்டு, இருமருங்கிலும் ருக்மினி சத்யபாமையருடன் அனைவரையும் மயக்கத்தில் ஆட்படுத்தும் ஸ்ரீவேணுகான கிருஷ்ணமூர்த்தியை நாம் காணலாம்.

பூலோககிருஷ்ணன்

யக்ஞமூர்த்தியின் சாளரத்தின் வழி நாம் கண்ட ஸ்ரீவேணுகான கிருஷ்ணமூர்த்தியே பூலோககிருஷ்ணன் என்று அழைக்கப்படுகிறார். இவ்வெம்பெருமானின் சந்நிதி யக்ஞமூர்த்தியின் திருச்சுற்றில் கிழக்கில் அமைந்துள்ளது. பெரியாழ்வார் தாமே நேரில்காணும் பேறுபெற்றதை மூன்றாம்பத்து ஆறாம் திருமொழி

"நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கையீர்கள் ஈதோர் அற்புதம் கேளீர்" எனத்தொடங்கும் பதிகத்தின் வாயிலாக கண்ணனின் குழலூதும் சிறப்பை வெளியிடுகிறார்.

கண்ணன் குழலூதுதல்

"சிறுவிரல்கள் தடவிப்பரிமாறச் செங்கண் கொடச்செய்யவாய்
கொப்பளிப்ப,
குறுவெயர்ப் புருவம் கூடலிப்ப,கோவிந்தன் குழல்கொடூதின போது,
பறவையின் கணங்கள் கூடு துறந்து வந்துசூழ்ந்து படுகாடுகிடப்ப,
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டு, கவிழ்ந்திறங்கிச்
செவியாட்டகில்லாவே"

அதே பதிகத்தின் ஏழாம் பாசுரத்தில் கண்ணனின் குழலூதும் சிறப்பை பெரியாழ்வார் தாமே நேரிலே கண்டு படம்பிடித்துக்காட்டுவதாய் "புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர்" என்ற பாசுரத்தால் அறியமுடிகின்றது.

பாடலும் பாடலின் பொருளும்

புவியுள்ல நான் கண்டதோர் அற்புதம் கேளீர் பூணிமேய்க்கு
மிளங்கோவலர் கூட்டத்-
தவையுள் நாகத்தணையான் குழலூத அமரலோகத்தளவும்
சென்றிசைப்ப
அவியுணா மறந்து வானவரெல்லாம் ஆயர்பாடி நிறையப்புகுந்தீண்டி
செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து கோவிந்தனைத்
தொடர்ந்தென்றும் விடாரே

பூவுலகில் ஆநிரைமேய்க்கும் இளங்கோவலர்களின் நடுவே பாம்பணையில் கண்துயிலும் கண்ணன் குழலூது கின்றான், அவனது குழலோசை வானவர் உலகம் வரை கேட்கிறது. அதைக் கேட்ட வானவர்களெல்லாரும் தத்தம் உணவுகளை மறந்து ஆயர்பாடியிலே புகுந்து நிறைந்தனராய் காதார கண்ணன் குழலினினோசையைச் செவிமடுத்தின்புற்று விடாமல் கோவிந்தனைத் தொடர்கின்றனர்.

இவ்வாறு ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளிய சந்தமிகு தமிழ்மறையின் அடிப்படையில், அதிலும் சிறப்பாக பெரியாழ்வார் பூவுலகில் தான்கண்ட ஸ்ரீ கிருஷ்ணனின் வேணுகானத்தை விளக்கிடுமாறு அமையும் தஞ்சை சகாநாயக்கன் தெரு ஸ்ரீவேணுகான கிருஷ்ணன் திருகோயிலுக்கு எங்குமே கேட்டறியாத வகையில் முன்னோர்கள் 'பூலோக கிருஷ்ணன் கோயில்' என்ற திருப்பெயரைச்சூட்டி மகிழ்ந்துள்ளனர். அன்றுதொட்டும் இன்றுமாக இப்பெயர் அழைக்கப்பட்டு வருவதால் திராவிடவேதமாகிற ஆழ்வார்களின் அருளிச்செயலுக்குத் தஞ்சையில் தனிச்சிறப்பிடம் தந்தமை உணரப்படுகிறது. பூலோக தேவேந்திரர்கள் என்ற புகழுரையுடன் விஜயநகர அரசர்கள் சிலர் கூறப் படுகின்றனர் என்பதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

பூலோககிருஷ்ணன் என அழைக்கப்படும் இத்திருக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் செட்டியார்களால் கட்டப்பெற்றது. பின்னர் இது அவர்களது வழிவருவோர்களால் பராமரிக்கப்பட்டது. திரு பஞ்சாபகேச செட்டியார் என்பவரால் திருப்பணி செய்யப்பட்டுள்ளதும் அறியமுடிகிறது. திருவையாறு ஸப்தஸ்தான விழாவின் போது இத்திருக்கோயில் அறக்கட்டளையின் மூலம் திருக்கண்டியூரிலுள்ள ஒரு மண்டபத்தில் அன்னதானம் செய்யப்பட்டுள்ளது. திருபஞ்சாபகேசசெட்டியாரின் புதல்வர் ஜெயராமன் என்பவர் இந்த பூலோககிருஷ்ணன் கோயிலைத் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்திற்கு எழுதிக்கொடுத்து விட்டார்.

இந்த அரிய செய்தியை அரண்மனை தேவஸ்தான அர்ச்சகர்களுள் ஒருவரும் அக்கோயிலை பூசை செய்து வந்தவருமான திருவாளர் S. மணிகண்ட பட்டாச்சாரியார் அவர்கள் தெரிவித்தார்.

3-10 வேழமுடை வேங்கடம்

ஆழ்வார்கள் பன்னிருவரால் பாடல்பெற்ற திருத்தலங்களைத் திவ்யதேசம் என்றழைக்கிறோம். திவி என்றால் ஆகாயம். புவியிலிருந்து கொண்டே திவ்யமான ஸ்ரீ வைகுண்டத்தைக் காட்டித்தருவதாலும், அங்கு உள்ளவன் இங்கே வந்து நின்றமையாலும் அவனுறையும் திருப்பதிகள் திவ்யதேசங்களெனப் போற்றப் படுகின்றன.

அத்திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமான்களின் குணானுபவங்களில் ஆழங்காற்பட்டு அதனடியாகப் பெருகியவைகள் தான் திவ்ய பிரபந்தங்கள் அவைகளில் காணும் காட்சிகள் பல. வெற்பென்றிருஞ் சோலை வேங்கடமென்றிவ்விரண்டும் நிற்பென்று மாலுக்குகப்பான மாலிருஞ்சோலையும், வேங்கட மலையும் நினைவிற்கு வருவது இயற்கை. இவ்விரு மலைகளில் திருமலையின் இயற்கை கண்டு இன்புறத்தக்கது. இயற்கை காட்சிகளை 'வேழமுடை வேங்கடம்' எனும் தலைப்பில் சிறிதே அறிந்து மகிழ்வோம்.

திருமலையாம் திருவேங்கடமலையில் ஒரு சமயம் யானையொன்று சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அதனைக் கண்ட வேடுவர் ஒரு மணியை விட்டெறிந்தார். அக்கணமே அம்மலையில் ஒரு வரிப்பாம்பு தனது புற்றைச் சென்றடைந்தது. இதைக் கண்ட ஸ்ரீபொய்கையாழ்வார் -

"விண்ணைத்தொடுமாறு அமைந்த திருமலையில் யானை சஞ்சரிப்பதை வானத்தில் நீருண்ட மேகம் உலாவு வதற்கொப்பாகவும், வேடுவர் எறிந்த மணியின் ஒளிதனை வானத்திலேற்படும் மின்னலுக்கு ஒப்பாகவும், மழைக் காலத்தில் ஏற்படும் மின்னலைக் கண்டஞ்சிய ஊரும் வரியரவம் தன்னுடைய புற்றை அடைகின்றது எனவும் கூறி அக்கருத்தினைத் தமது பாட்டில் வைத்தார்.

அக்காட்சியினை விளக்கும் பாடல் கீழ்வருமாறு

"ஊரும் வரி அரவம் ஒன்குறவர் மால் யானை
பேர எறிந்த பெருமணியைக் கார் உடைய
மின் என்று, புற்று அடையும் வேங்கடமே-மேலசுரர்
எம் என்னும் மாலது இடம் (முதல் திருவந்தாதி-38)"

இதோ பாருங்கள்! திருவேங்கடமலைச் சிகரத்தில் இரண்டு யானைகள் எதிரெதிரே நின்றுகொண்டிருக்கின்றன. அவ்விரு யானைகளில் ஒன்று மதம் பிடித்த ஆண்யானை. மற்றொன்று பெண்யானை. அந்த பெண்யானை இரண்டு கணுக்களேயுள்ள ஒரு இளமூங்கிலை எடுத்து மதவேழத்திற்கு அளிக்கின்றது. அவ்விளமூங்கிலையளிக்கின்ற விதமோ அதை விட ஆச்சரியம்! "இருகண் இளமூங்கில் வாங்கி அருகிருந்த தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம்" என்னுமாப்போலே இயற்கையாகவே இனிக்குமதான இளமூங்கிலை இன்னமும் தேனில் கலந்து கொடுக்கின்றது.

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை. (இரண்டாம் திருவந்தாதி-75)

அவ்வாறு மதயானைக்குக் கொடுத்து மதத்தைத் தணியச் செய்கின்றதாம்.

வேங்கை, வேழம் முதலான விலங்குகள் தத்தம் வாழ்நாளை கடத்துவதற்கு இருப்பிடமாகவும், பாபத்திரளைப் பொசுக்க வல்ல வேம்+கடம் எனத் திகழ்கின்றதுமான திருமலையில் திருவின் மணாளனாகத் திருமால் வந்து நின்றான்.

இயற்கை வளம் கொழிக்கும் அம்மலையில் வேழங்கள் கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை சென்று, தன் துதிக்கையால் நீரை முகர்ந்து முதலில் முகம் சோதித்துப் பின்பு கீழ்தாழ்ந்து, தமது கால்களைக் கழுவி

நீராடி இறைவனைத் தொழுது முடிந்த அளவில் நீரையும், அப்போதே அலர்ந்த மலர்களையும் கொண்டுசென்று எம்பெருமானை வழிபடுகின்றனவாம். .... என்ன ஆச்சர்யம் ? இக்கருத்தை உரைக்கின்ற கீழ்வரும் பாடல் மூன்றாமாயிரம் பேயாழ்வார் இயற்றிய மூன்றாம் திருவந்தாதியில் காணக்கிடைக்கின்றது.

புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து, அருவி
உகுமதத்தால் கால்கழுவிக் கையால் - மிகுமதத்தேன்
விண்டமலர் கொண்டு விரல் வேங்கடவனேயே
கண்டு வணங்கும் களிறு.

விலங்குகளுக்கு வாழ்விடம் மலைப்பிரதேசங்கள். மலையென்றாலே எங்கும் அருவிகள் நிறைந்து இயற்கையின் எழிலுக்கு மெருகூட்டுகின்றன.

அந்த அருவிகளில் குரங்குகள் நீர் குடித்தும் தன் விருப்பப்படி விளையாடிக்கொண்டுமிருக்கின்றன. ஒரு சமயம் ஒரு ஆண்குரங்கு அந்த அருவியின் நீரில் தனது முகத்தை பார்க்கின்றது. நீரில் தன்முகம் கண்ட குரங்கு தன்னைக் காட்டிலும் வேறான ஒரு குரங்கு இங்குள்ள தெனவறிந்து கறுமையான களங்கனியை (கலாக்காயை) பறித்துத் தரச்சொல்லுகின்றதாம்.

இக்காட்சியினைக்கண்ட ஆழ்வாருக்கு துவாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடன் போரிட்டு மாண்ட வத்ஸாசுரன் மற்றும் கபித்தாசுரன் கதை நினைவிற்கு வருகின்றது. முன்பொரு சமயம் வத்ஸாசுரனும் கபித்தாசுரனும் முறையே கன்றினுருவாகியும், விளங்கனி உருவாகியும் வந்து ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்லவந்தார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் வத்ஸாசுரனின் பின்னங்கால்களை வாலினால் கட்டி அவனையும், உயர எறிந்து மரமீது உள்ள கனியுருவாகிய கபித்தாசுரனையும் கொன்றான். ஆகவே

களங்கனிக்காட்சியின் மூலம் விளங்கனி விருத்தாந் தத்தையும் கூறி அப்படிப்பட்டவன் உறைவது இவ்வெற்பு என்று விளம்புகின்றார். இக்கருத்தினைச் சித்தரிக்கும் பாடல் கீழ்வருமாறு-

"பார்த்த கடுவன் சுனைநீர்நிழல் கண்டு"
பேர்த்து ஓர் கடுவன் எனப்பேர்ந்து - கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும் வேங்கடமே மேனாள்
விளங்கனிக்குக் கன்று எறிந்தான் வெற்பு. (மூன்றாம் திருவந்தாதி-69)

மேலும் இப்பாடலைக் கருத்தில்கொண்ட ஸ்ரீபிள்ளைப்பெருமாள் அய்யங்கார் தனது அஷ்டப்பிரபந்தத்தில் விளக்கியுள்ள ஒரு பாடலைக் காண்போம்.

"வாயுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்"
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே - தாவு கடல்
வேவ இலங்கைக்கு ஒண்தார் வீடணனை வைத்தொழிந்தார்
சாவவில் அங்கைக் கொண்டார் சார்பு. *(திருவேங்கடமாலை-42)*

இதோடுமட்டுமல்ல மூன்றாம் திருவந்தாதிப் பாசுரத்தின் முதலடியினையிட்டுப் பார்க்கும்போது, விலங்குகட்கரசனான சிங்கம் கிணற்று நீரில் தன்னைப்பார்த்துத் தனக்கெதிரி இருப்பதாக எண்ணி கிணற்றில் விழுந்து உயிர்விடும் பஞ்ச தந்திரக்கதையும் நமக்கு நினைவுக்கு வருகின்றது.

புரிந்து மதவேழம் மாப்பிடியோடு, ஊடி,
திரிந்து, சினத்தால் பொருது, விரிந்தசீர்
வெண்கோட்டு முத்து உதிர்க்கும் வேங்கடமே மேலொருநாள்
மண் கோட்டுக்கொண்டான் மலை. (மூன்றாம் திருவந்தாதி-45)

இப்பாசுரத்தை இயற்றிய ஸ்ரீபேயாழ்வார், திருவேங்கட மாமலையை மங்களாசாஸனம் செய்கின்ற நோக்கத்துடன் மலையின் சிறப்பையும், மலையானின் மேன்மையையும் விளக்குகின்றார். ஒரு சமயம் திருவேங்கடமலையில் மதங்கொண்ட யானையொன்று பெண்யானையின் மீது காதல்கொண்டு, மகிழ்ச்சியுடன் ஊடற்புரிந்து , பிறகு பிரணயகலகம் ஏற்பட்டு ஒன்றையொன்று போரிட்டு அங்குள்ள மணிச்சுவர்களில் (மலைப்பாறைகளில்) தந்தங்களைத் தேய்த்து முத்துக்களை உதிரச்செய்கின்றதாம் இக்காட்சியினைக் கண்ட ஆழ்வாருக்கு விபவாவதார நிகழ்ச்சி யொன்று மனத்திரையில் ஓடுகின்றது.

முன்பொருகால் இரணியாட்சன் என்னும் அசுரன் பூமியைக்கவர்ந்து கொண்டு கடலுள் மூழ்குகிறான். அப்போழ்து திருமால் (வராகம்) பன்றியுருக்கொண்டு தனது கோரைப்பற்களால் பூமியைத் தாங்கி மேலெழுந்தார். இதனைக்கருத்தில் கொண்ட ஆழ்வார், "மேலொரு நாள் மண் கோட்டுக் கொண்டான் மலை" என்று பாடியுள்ளார்.

இவ்விதம் யானைகளின் ஊடல் மற்றும் பிரிவு, முத்துதிரச் செய்யும் போர் ஆகியவை மலையின் சிறப்பையும், முன்பு வராகரூபியாய் வந்தவன் தற்போது அர்ச்சைவடிவினாய் மலைமீது காட்சியருளுவது மலையானின் (திருவேங்கடவனின்) மேன்மையையும் வெளிப்படுத்துகின்றது.

திருமகள் நாயகனாம் திருநாரணன் திருவேங்கட மலையிலிருந்துகொண்டு பக்தர்களுக்கு அருள் புரிந்து வருகின்றான். அவன் குடிகொண்டுள்ள வேங்கட மலையில் யானைகள் முதலான காட்டு விலங்குகள்

வசித்து வருகின்றன. அங்கு வாழும் யானைகள் மலை மீது நடந்து செல்லுங்கால் நிலவை தன் தும்பிக்கையால் பிடித்து நாரணனுக்கு நந்தா விளக்குப்பணி மேற்கொள்ள முற்படுகின்றன. இதனை திருமழிசையாழ்வார் தனது நான்முகன் திருவந்தாதியிலே மிகச் சிறப்புறச் சித்திரித்துள்ளார். அப்பாடல் கீழ்வருமாறு:-

வைப்பன் மணி விளக்காம் மாமதியை மாலுக்கென்று
எப்போதும் கை நீட்டும் யானையை எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே
நாடு வளைத்தாடுது மேல் நின்று.

அதாவது யானைகள் சஞ்சரித்துச்சென்று நிலவைப்பிடிக்க விரும்புகின்றது. தக்க தருணம் பார்த்து வேடுவர்களும் அவற்றை பிடிக்க முற்படுகின்றனர்.

இருப்பினும் மாலவன் மீது பக்தி கொண்ட யானை நிலவைப் பிடித்தாவது என் ராசாவிற்கு நந்தா விளக்குக் கைங்கரியம் செய்வோமே என்றெண்ணுகிறது. இக்கருத்தை அஷ்டப்பிரபந்தத்தில் காணப்பெறும் “திங்கள் இறுமாந்துலவ” என்ற பாசுரத்தின் வாயிலாகவும் நாம் அறியலாம்.

இதற்கு மேலாக கேரள தேசத்து யானையொன்று நிலவைத் தன் நாயகனுக்காகப் பிடிக்க எண்ணி கை நீட்டுவதை “திங்கள் மேல் நீட்டுமத தன் கை” என்ற ஈற்றடியில் முடியும் முத்தொள்ளாயிரப் பாடலும் இங்கே சிந்திக்கத் தக்கதாகின்றது.

4. புராணம்

4-1 அனந்தநகர் மேவிய ஆண்டளப்பான்

"திருவரங்கம் குடந்தை கச்சி சிறுபுலியூர் உறையூர் சீராமவிண்ணகரம் சேறை மழை பெய்யும் அரிமேய விண்ணகரம் ஆதனூர் அழுந்தூர்" என்கிற தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சிப் பாடலில் இடம்பெறும் வைணவத் தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது ஆதனூர் என்னும் திவ்யதேசம். ஆ+தன்+ஊர் ஆனபடியால் அத்தலத்திற்கு ஸம்ஸ்க்ருதத்தில் கோபுரி என்று பெயர். இத்திருத்தலம் திருப்பனந்தாள், ஆலங்குடி, திருப்பழனம், விருத்தாசலம் போன்ற க்ஷேத்திரங்களின் நடுப்குதியில் அமைந்துள்ளது.

ஒரு சமயம் உலக நன்மைக்காகக் கடல் கடையப் பட்டது. பல பொருட்கள் அதனின்றும் கிடைத்தன. கிடைத்தவையுள் காமதேனு வசிஷ்டர்பால் அளிக்கப் பெற்றது. பசுவும் முனிவரது வேள்விக்குப் பாலை அளித்து வந்தது. யார் எது வேண்டினாலும் அதை அளிக்கும் திறமை தனக்கேற்பட வேண்டித்தவம் புரிய காமதேனு காவிரியின் வடகரையில் அமைந்த விஷ்ணு ஸ்தலத்திற்கு வந்தது. ஐந்நூறு ஆண்டுகாலம் கடுந்தவம் புரிந்து எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்துத் தன் விருப்பம் ஈடேறப்பெற்றது. காமதேனுவின் வம்சம் நிலைத்திடும் வகையில் அது தவம்புரிந்து வணங்கிய தலம் அன்று முதல் இன்றிறுதியாய் கோபுரீ(ஆதனூர்) என்றழைக்கப்பட்டு வருகிறது. இத்தலத்திற்கு 'அனந்தநகர்' என்றொரு பெயருண்டு.

அனந்தநகர்

திரு அனந்தாழ்வானுக்குத் திருமால் கண்துயிலும் மெல்லணையாய்ப் பணிபுரிய ஆவலுண்டாயிற்று. அந்த

ஆவல் மாபெரும் தவத்தின் பயனாய் நிறைவேறும் என்றெண்ணி கோபுரீ க்ஷேத்திரத்தை வந்தடைந்தார். பின் நாற்புறமும் தீமூட்டி நாரணனைக் குறித்து நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அனந்தாழ்வான் கடுந்தவம் புரிந்தார். தவத்தால் மெச்சிய எம்பெருமான் காட்சி தந்து அனந்தாழ்வானின் விருப்பத்தை நிறைவெற்றி வைத்தார். அருந்தவத்தால் அனந்தன் ஆங்கே நாரணனைக் கண்டதால் அனந்தநகரம் என்ற காரணப்பெயருடன் அத்தலம் திகழ்கிறது.

ஆண்டளப்பான் - ஆழ்வார்கள் பன்னிருவருள் கடையரான திருமங்கைமன்னனால் பாடல்பெற்று நூற்றெட்டு வைணவத்தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது இத்திருத்தலம். திருமங்கை ஆழ்வார் இத்தலத்துறை எம்பெருமானை குருவாகப் போற்றியுள்ளது. குறிப்பிடத் தக்க ஒன்று. ஆண்டினை அளக்கும் எம்பெருமான் என்பது ஆழ்வாரின் அமுதமொழி. அரவணையில் கண் துயிலும் அவ்வெம்பெருமானின் தலைமாட்டில் ஒரு மரக்கால் காணப்படுகிறது. ஆதலால் ஆண்டளக்கும் ஐயன் என்பது பெருமாளின் காரணப்பெயர். ஆண்டளப்பான் என்ற சொல் குரு அல்லது வியாழன் எனப்பொருள்படுகிறது. ஆதனூர் ஐயன் கையில் எழுத்தாணியும் உள்ளது. இடையூறுகளை களைபவர் ஆபத்ஸஹாயேச்வரர். ஆதனூரில் அருள்பாலிப்பவரும் ஆபத்ஸஹாயர்தான்.

ஆபத்ஸஹாயோ பகவான் ஆஸ்தே யத்ர யதாநிதி: | சூர்ய புஷ்கரிணீதீர்த்தே ஸ்நாத்வா நத்வா தயாநிதிம் || ஸம்பூஜ்ய ஆபத்ஸஹாயாக்யம் அனந்தசயனம் ஹரிம் || என்று கோபுரீச்வரம், கோபுரீச்வரநாதன் குறித்த விரிவான செய்திகள் தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்டுள்ள லக்ஷ்மீபுர மாகாத்மியத்தில் ஆறாம் அத்தியாயத்தில் காணக்கிடைக்கின்றன.

ஆண்டளப்பான் அனந்தநகர் மேவுதல் - அனந்தனின் தவப்பயனாய் ஆதனூராகிய இத்தலத்திற்கு அநந்தநகர் எனப்பெயர் வந்ததை நாம் கண்டோம். இத்தலத்திற்கு சூரியன் வருகை தந்து தவம்புரிந்ததால் பாஸ்கரக்ஷேத்திரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. பாஸ்கரனின் தவத்தால் ஆண்டளப்பான் இங்கே எழுந்தருளினார்.

ஒரு கால் தக்ஷப்ரஜாபதி வேள்வி புரிந்தபோது வீரபத்திரரின் தாக்குதலுக்கு ஆளானவர்களுள் சூரிய பகவானும் ஒருவர். அவர் தனது தோஷம் நீங்க நாரதரிடம் வழிகேட்டபோது நாரதர், கோபுரீ க்ஷேத்திரத்திற்குச் சென்று தவமியற்றி தோஷம் நீங்கப் பெறுவீராக என்று கூறிச் செல்கிறார். கோபுரீ க்ஷேத்திரம் மேவிய சூரியபகவான் ஆங்கே ஒரு தடாகத்தை நிறுவி அதில் மூவேளையும் நீராடித் தன் கட்டைவிரல் ஆதாரத்தில் நின்று ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தாலும், தோத்திரத்தாலும் மெச்சிய எம்பெருமான் கருடவாகனராகக் காட்சி தந்தார். சூரியபகவான் தவம் மேற்கொள்ள அமைத்த நீர்நிலையே பிற்காலத்தில் சூரியபுஷ்கரிணியாயிற்று. அவ்வாறு ஆதவன் மேவிய அனந்தநகரத்தில் அருள்பாலிப்பவன் அச்சுதன். அனந்தகீர்த்தியை உடையவன். ஆதியந்த மில்லாதவன். நச்சுநாகணைக் கிடந்த நாதன். வேதங்களால் போற்றிப் புகழப்படும் கீதனுமாவான்.

அரவணையில் கண்துயிலும் ஆண்டளக்கும் ஐயன் ஸந்நிதானம் தஞ்சை மாவட்டத்தின் கும்பகோணம்-மண்டங்குடி பேருந்து மார்க்கத்தில் அமையப்பெற்றுள்ளது. குடந்தையிலிருந்தும் நகரப்பேருந்து வசதி உண்டு. இத்திருக்கோயிலில் ஸ்ரீவைஷ்ணவ ஆகமங்களுள் ஒன்றான ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தைப்பின்பற்றி பௌஷ்கர ஸம்ஹிதையின் அடிப்படையில் பூஜைகள்

செய்யப்படுகின்றன. இத்திருக்கோயில் வடகலை ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சார்ந்தது.

இத்திருக்கோயில் அஹோபிலமடத்து ஆதீனத்தைச் சார்ந்தது. இத்திருக்கோயிலின் மீது தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கர் மிக்கபற்றுள்ளவர் எனப் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். இந்த ஸ்வாமிதானன்றி பல அஹோபிலமடத்து ஸ்வாமிகளும் ஈடுபாடு கொண்டிருந்தமைக்கு அருகிலுள்ள நரசிம்புரத்தில் காணப்படும் பிருந்தாவனங்களே சாட்சியாகும். ஆதனூருக்கு இன்றே செல்வோம். அடியவருகந்த அமுதைப் பருகிக் களிப்போம்.

4-2 அன்பில் ஜலசயனன்

நாகத்தணைக் குடந்தை வெஃகா திருஎவ்வுள்
நாகத்தணை அரங்கம் பேரன்பில் - நாகத்தணைப்
பாற்கடல் கிடக்கும் ஆதிநெடுமால் அணைப்
பாற்கருத்தனாவான்.

-நான்முகன் திருவந்தாதி - திருமழிசை ஆழ்வார். பா.36

சோழநாட்டின் உட்பிரிவு மழநாடு. அதுமேல் மழநாடு, கீழ்மழநாடு என இரு பிரிவுகளைக்கொண்டு விளங்கியது. மேல்மழநாட்டின் தலைநகர் திருத்தவத்துறை (இலால்குடி). அன்பில் மேல்மழ நாட்டில் கலால் கூற்றத்தைச் சேர்ந்தது. அன்பில் மூன்று வருவாய்த் துறை கிராமங்களைக் கொண்டது. விஜயநகர அரசர் பிரௌடதேவராயரின் தென்னகப் பிரதிநிதி சாளுவசங்கமதேவன். அவன் பெயரால் விளங்கும் சங்கமராஜபுரம், மதுரைநாயக்கவம்சத்து அரசி

மங்கம்மாள் பெயரால் மங்கம்மாள்புரம், கீழ் அன்பில் ஆகிய மூன்று கிராமங்களின் தொகுப்பே அன்பில் எனும் ஊராகும். அரவணையில் அறிதுயிலமர்ந்த பரமனின் ஆலயங்கள் நாலாயிரதிவ்யபிரபந்தம்-இயற்பா ஆயிரத்தில் நான்முகன் திருவந்தாதியில் திருமழிசை ஆழ்வாரால் '**நாகத்தணைக்குடந்தை**' என தொகுத்துப் பாடப்பெற்றது. திருக்குடந்தை, திருவெஃகா, திருவள்ளூர் திருவரங்கம், திருப்பேர், திருஅன்பில் ஆகிய ஆறு திவ்யதேசங்களில் திருப்பாற்கடலில் கிடக்கும் வியூஹ மூர்த்தியான ஆதிநெடுமால் அர்ச்சாவதாரமாகக் கோயில் கொண்டுள்ளார் என்பது அந்த பாடலின் விளக்கமாகும்.

இனி அன்பிலையும் ஜலசயனப்பெருமாள் குறித்தும் சிறிது பார்ப்போம்.

அன்பில்

அன்பிற்கு இல்லமாகவும் அனைத்து தேவர்களுக்கும், ஆங்கே பிறந்தோருக்கும் அன்பைக் கொடுக்கக்கூடியதுமான இத்தலம் வடமொழியில் பிரேமபுரம் என்றழைக்கப்படுகிறது. பிரேமபுரத்தின் தலப்பெருமையுணர்த்தும் 'பிரேமபுரீ மாகாத்மியம்' சைவமகாபுராணத்தின் ருத்ரசம்ஹிதையில் க்ஷேத்திர கண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

நைமிசாரண்ய வாசிகளான தபோதனர்கள் மற்றும் பலர் கேழ்க்க, இந்த மாகாத்மியத்தை சூதர் வெளியிடுகின்றார். முன்பொருகால் இந்திரனுக்குத் தம்பியாக விஷ்ணு அவதரித்து விஷ்ணுவையே எதிர்த்து மூன்றடி மண் கேட்டான். அது சமயம் மூவுலகை வசப்படுத்தினர் தேவர்கள். அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. தேவர்கள் விஷ்ணுவின் சக்கரத்தை அபஹரித்து, அதனைக்கொண்டு

சிம்மத்திடம் அகப்பட்ட சிறிய மிருகங்கள் போலே அசுரர்களை ஓட்டிவிட்டனர். அவ்வாறு தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் ஏற்பட்ட போரில் எம்பெருமான் தேவர்களுக்கு உதவிய ஸ்ரீமகாவிஷ்ணு தனக்கு ஏற்பட்ட சிரமம் தீர பிரேமபுஷ்கரிணிக் கரைக்கு எழுந்தருளினார்.

ப்ரதஸ்தே ப்ரேமநாம க்ஷமாம் வைகுண்டோ கருடத்வஜ:|
ஸனகாத்யை: ஸேவ்யமான: ஸேவிதஸ்ச மஹர்ஷிபி: ||
ப்ரேமபுஷ்கரிணீம் கத்வா புஷ்பவிருக்ஷோபசோபிதாம் |
ஸஹ்யஜாயாஸ்தடே புண்யே ஸர்வஸ்ய ஸுமனோஹரே ||

ஸ்ரீரங்கபூர்வதிக்பாகே பஞ்சநத்யாஸ்து பஸ்சிமே |
காவேர்யாச்சோத்தரே தீரே ப்ரேமபுஷ்கரிணீ தடே ||

(Premapuri Mahatmyam 8th Adhyaya)

அந்த பிரேமபுரம் முனிக்கணங்களால் சூழ்ந்து கிடந்தது. ஆங்கே எழுந்தருளின பெருமாளின் சிரமும் தீர்ந்தது.

ஸ்ரீமத்பிரேமபுரம் நாம முனிமண்டல ஸேவிதம் |
பிராப்யைவம் சுந்தரம் ரூபம் ஸ்ரீபூமிப்யாம் ஸுஸேவிதம் ||

அந்த எம்பெருமானின் திருவடிகளை மட்டும் கண்டவாரே (சயனப்பெருமாளின் வலது இடது திருவடிகளுக்கு அருகில் அமர்ந்து திருவடிபற்றிக் கைங்கர்யம் புரிதலைத் தவிர) மற்றதை ஒருபோதும் சிந்தியாதவர்களாய் ஸ்ரீதேவி ஸ்ரீபூமிதேவிகள் இருவரும் மாறிமாறி கைங்கர்யம் செய்யும் காட்சியினை அன்பில் திவ்யதேசத்தை விட்டு வேறெங்கும் காணவே முடியாது. மேலும் ஸ்ரீசுந்தரராஜப்பெருமாளின் ரூபலாவண்ய விபவாதிகள் பிரேமபுரீ மாகாத்மியத்தில் எட்டு மற்றும் இருபத்தோராம் அத்யாயங்களில் விரிவாகப்பேசப் பட்டுள்ளன.

கந்தர்ப்பகோடி லாவண்யஸ்ததாபூர பயோநிதி: |
ஸ்ரீபூமி ஸஹிதோ ரேஜே பிரேமபுஷ்கரிணீ தடே ||

ததோ தேவாஸ்ஸகந்தர்வா: ஸித்தாஸ்ச பரமர்ஷய: |
பிரம்மணா ச புரஸ்க்ருத்ய தேவதேவம் வவந்திரே ||

ததாரப்யார்ச்சயத் க்ஷேத்ரே பகவான் புருஷோத்தம: |
லக்ஷ்மீ மஹீ கராம்போஜ லாலிதாங்க்ரிஸரோருஹ: ||

போகீந்த்ரசயனோ நித்யம் ராஜா தேவரதோ ந்ருணாம் ||

ஸ்ரீமன் ஸஹஸ்ரபணமண்டல போகசர்யின்
லக்ஷ்மீ மஹீகரஸரோருஹ லாலிதாங்க்ரே ||
அஸ்மாஸு தேஹி ..... கருணாகடாக்ஷ தாராம் |
யாதா வயம் தவ பதம் சரணம் சரண்ய ||

(Premapuri Mahatmyam 8th Adhyaya)

இவ்வாறு அரிய உருவாய் சுந்தரராஜர் காட்சி தந்தருளும் அன்பில் தக்ஷிணகாசி என்றே போற்றப்படுகிறது.

கவேரஜா ஸா கங்கேவ பிரேமலிங்கம் ஸனாதனம் |
ததேவ காசீ விச்வேச ஸ்வவடோக்ஷய்ய பூருஹ: ||

வர்த்ததே மாதவஸ்தத்ர ரூபநாராயணாக்யயா |

அஹோ ! பணிபணாகண பிரகரதுங்க ரத்னாவளீ
பிரபாருணித விக்ரஹோ .... |
ரமாக்ஷித கராம்புஜைரபசிதாங்க்ரி பங்கேருஹோ
வ்யலோகி ச ஸமாதவஸ்த்விஹ ஹி ரூபநாராயண: ||

(Premapuri Mahatmyam 21th Adhyaya)

ஸ்ரீபூமிஸஹிதோ நித்யம் ராஜதே சுந்தராக்ருதி: |
மூர்த்தித்ரயஸ்ய ஸாந்நித்யாத் உத்தமம் க்ஷேத்ரமேவ ஹி ||

(Premapuri Mahatmyam 22th Adhyaya)

என்கிறபடி திருமகள், மண்மகள் உடனாய எம்பெருமான் சுந்தராகாரத்துடன் இத்தலத்தில் அழகிய வடிவினனாக வடிவழகியபெருமாள் என்ற பெயர்பூண்டு திகழ்கின்றார். விஷ்ணு பிரம்மருத்ராதிகளால் விளங்கும் இந்த க்ஷேத்திரம் மும்மூர்த்திகளின் ஸாந்நித்யம் பெற்ற

உத்தம (சிறந்த) க்ஷேத்திரமாகும். அழகியவல்லி நாச்சியார், தாரகவிமானம், மண்டூகபுஷ்கரிணீ, கிழக்கே திருமுகமண்டலமும், புஜங்கசயனம், பிரம்மாவிற்கும், வல்மீகருக்கும் பிரத்யக்ஷம். இத்திருக்கோயில் காசியில் திகழும் பிந்துமாதவர் கோயில்போல் தாரக விமானத்தையும், புஜங்கசயனத்தையும், கிழக்கே திருமுகமண்டலமும் அமையப்பெற்ற மும்மூர்த்தி தலமாகவும் விளங்குவதால் இது தக்ஷிணகாசிதான் என்பதில் ஐயமில்லை. தஞ்சை மாநகரில் இருந்த சரபோஜி மகாராஜாவானவர் தாம் காசியாத்திரை சென்றுவிட்டு திரும்புகையில் இவ்விடத்திலும் தமது பித்ருக்ளை உத்தேசித்து சிராத்தம் செய்துண்டு என ஜகதீச அய்யர் அவர்கள் இயற்றிய 'தென்னிந்தியக்ஷேத்திரங்கள்' நூல் குறிப்பிடுகிறது.

தம் பிரேமவல்லீ ப்ரியமாதிதேவம் ஸ்ரீரூபநாராயணமம்புஜாக்ஷம் |
ஸ்நாத்வா ஜலேஸ்மின் பிரணமந்தி தேஷாம் ந மாதுரேதே ஜடரே நிவாஸம் ||

என்கிறபடி பிரேமபுஷ்கரிணீ நீராட்டம், அத்தலத்துறை நாதர்களை வணங்குதல் ஆகியவை பிறப்பற்றதான மோட்சத்தைக் கொடுக்கின்றது. 'பிரேமபுரிப்புராணம்' டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் உள்ளது. திண்ணியம் எனும் திருநயம் அப்பாவையர் திரிசிரபுரம் வித்வான்களில் ஒருவர். இவர் திருவிளையாடற்கீர்த்தனம் முதலியவற்றை இயற்றியவர். பரம்பரையாகத் தமிழ்ப்புலமைவாய்ந்த குடும்பத்தினர் இவர் என மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்ரத்தில் (ப.எண்.18, டி.182, தஞ்சாவூர் மகாராஜா சரசுவதிமகால் நூலகம்)டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளார். இவருக்கு கிருஷ்ணபாரதி என்ற மற்றொரு பெயருண்டு. அறுபது

அத்யாயங்களைக் கொண்ட பிரேமபுரிப்புராணம் இவரது காலத்தில் 25 அத்யாயங்களாகச் சுருக்கம் பெற்றது. பிரேமபுரிப்புராணத்தை முதன்முதலில் வடமொழியிலிருந்து இவர் தமிழுக்குச் செய்யுள் நடையில் மொழிபெயர்த்துள்ளார். கிருஷ்ணபாரதி எனும் திருநயம் அப்பாவைய்யரின் புதல்வர் மேலன்பில் நரசிம்மபாரதி ஆவார். இவர் தன்தந்தை இயற்றிய செய்யுள்நடைப் பிரேமபுரிப்புராணதை தமிழில் உரைநடைப்பகுதியாக்கித் தந்துள்ளார். இந்த வடமொழி பிரேமப்புரிப் புராணம் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலும், லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலும் பாதுகாக்கப்பெற்றுள்ளது.

அன்பில் கல்வெட்டுகள்

அன்பில் தினசிந்தாமணிவளநாட்டு கலால் கூற்றத்து பிரம்மதேயம் எனகுறிப்பிடப்பெறும் திருத்தலமாகும். அன்பில் சுந்தரராஜபெருமாளின் 10 நாள் பிரம்மோத்ஸவத்திற்கு உபயதாரர்களைக் குறிப்பிட்டு பெருங்குறி மகாசபை திருவிழாப்புறமாக விட்ட நிலக்கொடை சாஸனத்தையும், கரும்பாளூர் பற்பநாபநாராயணன் என்பவர் மூன்றுமா நிலம் மற்றும் எண்பது கலநெல்லைக் குறிப்பிட்டு பொலிசைக் கல்வெட்டாக நாட்டியமையும், ஸ்ரீகுருகூர்நம்பி சீதாராமலக்ஷ்மணாஞ்சநேயர்களை அன்பில் திவ்யதேசத்தில் நிறுவியமையும் (சாஸனக் கவிமஞ்சரியின் கூற்றுப்படி அமைந்த இராமலக்ஷ்மணாதியர்கள் அன்பில் கரைக்கிராமமான நந்தியாறு பாயும் நந்தை ஸ்ரீநத்தமாங்குடி ஆதிமூலப்பெருமாள் கோயிலின் கருவறை அருகே காட்சி தருகின்றனர். இராமாதியருக்கு மூலமூர்த்திகளோ கருவறைகூடிய

தனிச்சன்னிதியோ, அங்குள்ள கல்வெட்டுகளிலோ இவர்களை பற்றிய குறிப்போ கிடையாது.) அமாவாசைதோறும் அப்பம் அமுது செய்ய நான்கெல்லைகள் குறிப்பிட்ட நிலத்தினை பாரதாயன் நிலக்கொடை சாஸனமாக்கியதும், சாளுவசங்கமதேவ மகாராஜன் கி.பி. 1486 ஆம் ஆண்டில். ஸ்ரீஜெயந்தி புண்ணிய தினத்தில் கஞ்சிரம்பாடி, செய்யாமங்கலம் மற்றொரு ஊரும் சேர்ந்து மூன்று ஊர்களை இக்கோயிலுக்கு ஸர்வமான்யமாக வழங்கியமையும், கி.பி. 1481ல் தத்தமங்கலத்தை (திருச்சிராப்பள்ளி உஜுரு சாவடி - ராஜகம்பீரவளநாடு - மதுரை சொக்கநாதநாயக்கர் கி.பி.1659-1682ஆம் ஆண்டின் தாமிரபட்டயம் குறிப்பிடும் பல ஊர்களுள் தத்தமங்கலமும் அன்பிலும் இடம் பெற்றுள்ளன. ஆதாரம் : திருவரங்கம் கோயிலொழுகு), சாளுவசங்கமதேவன் சர்வமான்யமாக அளித்ததும், புஷ்யம் திருக்கார்த்திகைக்கான நிலக்கொடையும், முதலாம் சாளுவசங்கமன் கி.பி. 1748ல் அளித்த நிலக்கொடைகளும், மருதூர் மாறனேரி(யின்) உறங்காவில்லிதாசரின் மகன் ராமானுசதாசரின் பொற்கொடை, மண்டபமேற்கூரைக்கான கற்கள் அளிப்பினையும், அன்பில் பெருமாள் கோயில் மகாமண்டபத்திற்கு சங்கமராயன் திருமண்டபம் என பெயர்பொறிப்பும், ஒய்சல சக்ரவர்த்தி இராமனாதன் ஓர் உரோகிணி நாளில் அளித்த நிலக்கொடையும், வீரபாண்டியன் என்பவன் இத்திருக்கோயிலுக்கு புதன் கூடிய பூச நக்ஷத்திரத்தில் அளித்த நிலக்கொடையும், மதுரை கொண்ட திருபுவன சக்கரவர்த்தி சோழ தேவர் தனது 22வது ஆட்சியாண்டில் துலாமாதம், சுக்கில பக்ஷத்தில் அளித்த நிலக்கொடையும் அன்பில் கல்வெட்டு குறிப்புகளால் அறியப்படுகின்றன.

அன்பில் செப்பேடுகள்

அன்பிலைச் சார்ந்த செப்பேடுகள் மொத்தம் பதினொன்று ஆகும். இவைசோழமன்னர்களின் மரபு வழியினைத் தெளிவாக உணர்த்துகின்றது. இந்த செப்பேடுகளை எழுதியவர் சுந்தரசோழன் காலத்தவரும் அன்பிலைச் சேர்ந்தவரும் ஆன மாதவபட்டர் ஆவார். சுந்தரசோழனின் மந்திரி அன்பில் அநிருத்த பிரம்மராயருக்கு கருணாகரமங்கலம் ஏகபோக பிரம்மதேயமாக அளித்தசெய்தியும் இவற்றில் காணக் கிடைக்கின்றது. அநிருத்த பிரம்மராயர் ஜைமினிசூத்ரத்து காச்யபகோத்திர வழி வந்த அந்தணர் ஆவார். இவருக்கு திருவரங்கப்பெருமானிடம் மிகுந்தபக்தி உண்டு.

மூதூர் அன்பில்

“மூதூர் அன்பிலானை” எனக்குறிப்பிடும் பராங்குசர் துதிநூல் கூற்றுப்படி பழம்பெரும் புலவர்கள் வருகைதந்து சிறப்பித்த பெருமையையும் இத்தலம் பெற்றுள்ளது. சிலம்பிதாசி என்பவள் அன்பிலில் வசித்துவந்தாள். ஒரு சமயம் கவிச்சக்கரவர்த்தி கம்பர் அன்பிலுக்கு வர சிலம்பி கவிதை ஒன்றை எழுதித்தருமாறு கம்பரிடம் வேண்டினார். கம்பரும் ஆயிரம் பொன்வேண்டும் கவிதை ஒன்றை எழுதுவதற்கு என்று தெரிவிக்க, கம்பரிடம் தன்னிடமிருந்த 500 பொன்னை அளித்தாள். அதற்கு அரைப்பாடலை “தண்ணீரும் காவிரியே ! தார்வேந்தனும் சோழனுமே! மண்ணாவதும் சோழமண்டலமே” என கம்பர் கவி செய்துபோனார். முழுமைபெறாத அந்தக் கவிதையைத் தனது வீட்டின் சுவற்றில் எழுதிவைத்தாள் அன்பிற்சிலம்பி. பின்பொருநாள் ஔவையார் அன்பிலுக்கு விஜயம் செய்தார். பசியோடு இருந்த ஔவைக்கு கூழை உணவாக அளித்து மகிழ்வித்தார். அதுசமயம் சுவற்றில் கண்ட கவிச்சக்கரவர்த்தியின் கவிதையைக் கண்டு காரணமறிந்து கூழுக்குக் கவிபாடி

அம்பொற் (அன்பிற்)சிலம்பி அரவிந்தத் தாளடியாள்
செம்பொற் சிலம்பே சிலம்பு - பாடல் : 16

என்ற தமது கவிதையால் அதனை முழுப்பாடலாக்கிக் கொடுத்தார் ஔவையார். இச்செய்தி தனிப்பாடல் திரட்டு (பாகம் ஒன்று, பக்க எண்-105, த.ம.ச.ச.ம. நூலகம், தஞ்சை, தமிழ்ப்புத்தக எண். 13647) நூல் மூலம் அறியவருகின்றது.

அன்பில் ஜலசயனப் பெருமாள்

அன்பில் சுந்தரராஜப்பெருமாளுக்கு கல்வெட்டுகள் மூலம் அன்பில் ஜலசயனத்துப் பள்ளிகொண்டாழ்வார், அன்பில் ஜலசயனப்பெருமாள், அன்பில் பெருமாள், வடிவழகிய பெருமாள் ஆகிய திருநாமங்கள் அறியப் படுகின்றன. ஜலசயனம் என்றால் ஜலத்தில் சயனம் என்று பொருள்படும். ஜலசயனத்துப் பள்ளிகொண்டாழ்வார் என்கிறபோது ஜலசயனம் என்பதே தனித்து விளங்கும் ஒரு சொல்லாகின்றது. ஜலசயனம் என்பது பழங்காலத்தில் ஒரு வாய்க்காலின் பெயராக அமைந்திருந்தது.

ஜலசயனவாய்க்கால்

மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்தில் வாழ்ந்தவர் நொட்டூர் நாராயணபட்டன். இவரது மனைவி நாயகதேவிச்சானி. இவருக்கு உரிமையாக இருந்த நிலம் திருநாராயணநல்லூர் கட்டளையில் ½ மா ½ காணி. இதனை 5000 காசுகளுக்கு ஸ்ரீநந்தை ஆதிமூர்த்தி நாயனார் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக விற்றுக் கொடுத்தார். மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம் வடகரை இராஜராஜவளநாட்டுப் பொய்கைநாடு என்னும் பிரிவின் கீழ் இருந்தது. திருநாராயணநல்லூர் கட்டளை என்பது நத்தம் ஊருக்கு மற்றொரு பெயர். மேலும் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தைசேர்ந்த சிற்றூராக (பிடாகை) இருந்தது எனவும் அறிகிறோம். இந்த நாயகதேவிச்சானி என்பார் விற்ற நிலத்திற்கு தண்ணீர்பாய்ந்த வாய்க்கால்கள் சூர்யதேவவதி, 'ஜலசயனவாய்க்கால்' என அழைக்கப் பட்டன.

<u>நத்தமாங்குடி கல்வெட்டு குறிப்புகள்</u>

1. இவ்வூர் பிடாகை திருநாராயணநல்லூர் கட்டளையில் சூர்யதேவவதிக்கு மேற்கு, ஜலசயன வாய்க்காலுக்கு வடசிறகு (எண். 10, மூன்றாம் இராஜராஜன் காலம், கி.பி. 1243).

2. இவ்வூர் பிடாகை, திருநாராயணநல்லூர் கட்டளையில் சூர்யதேவவதிக்கு மேற்கு, நித்தவினோத வாய்க்காலுக்கு வடசிறகு (எண்-15, வீரராமநாதன் காலம், கி.பி. 1271)

இவ்விரு கல்வெட்டுக் குறிப்புகளிலேயே வாய்க்காலின் பெயர் மாறியுள்ளமை காணக்கிடைக்கிறது.

அன்பில் திவ்யதேசத்திலிருந்து ஈசான்ய (வடகிழக்குத்) திசையில் திருநாராயண நல்லூர் எனப்படும் நத்தம் ஆதிமூலப்பெருமாள் கோயில் அமைந்திருக்கின்றது. ஆதலால் ஜலசயன வாய்க்காலும் ஒரு காலத்தில் அன்பிலில் ஓடி நாளடைவில் பெயரும் மாறியிருக்கவேண்டும். அன்பிலின் வடபகுதியில் திருநள்ளாறுடையான் வாய்க்கால் குறிப்பு காணப்பட்டு காவிரி மற்றும் வாய்க்கால்களின் நடுவில் 'ஜலசயனம்' என்பது ஊகித்தறியப்பெறினும் நத்தமாங்குடி திருக்கோயில் கல்வெட்டில் காணப்பெறும் ஜலசயன வாய்க்காலைத் தொடர்புபடுத்தி அன்பில் கல்வெட்டு களில் ஜலசயனப்பெருமாள் (குலோத்துங்கசோழன் கி.பி. 1070) என்று சுட்டப்பெறும் கல்வெட்டுச் சொற்றொடர்கள் அமைந்தனவாதல் வேண்டும் என்பது உறுதி பெறுகின்றது.

4-3 அன்பில் பிரேமபுரீசுவரர்

பிரம்மா விஷ்ணு திவாகராதி மருத: ப்ரோக்தை:பரத்வாஜத:
வல்மீகாதி வசிஷ்டகாச்யபவரை: வ்யாஸாதிராட் கும்பஜை: |
காவேரீ கவிராஜஜைமினிமுகை: ஸம்ஸேவ்யமான: சிவ:
ஸ்ரீமத்பிரேமபுரீ க்ஷிதௌ விலஸிதம் தம் பிரேமலிங்கம் பஜே ||

(பொருள்) பிரம்மா, விஷ்ணு, சூர்ய மருத் கணாதிகளால் போற்றப்பட்டவரும், பரத்வாஜர், வல்மீகர், வசிஷ்டர், காச்யபர், வியாஸர், அகஸ்த்யர், ஜைமினி போன்ற முனிவர்களால் வணங்கப்பட்டவரும், காவேரீ போன்றவற்றால் பணிவிடை செய்யப்பட்ட வருமாக பிரேமபுரித்தலத்தில் விளங்கும் அந்த பிரேமலிங்கத்தை நான் வணங்குகிறேன். (பிரேமபுரீ மாகாத்மியத்தில் 2ம்- அத்தியாயம்)

ஹரிணபரகுஹஸ்தம் பாஸமானோத்தமாங்கம்
நிகில பலக நேத்ரம் ஜ்யோதிஷா த்ருச்யமானம் |
த்ரிணயனமகமீட்யே பிரேமபீ: ஸார்வபௌமம்-
ஸகல சுரமுனீந்த்ரை: பூஜ்யமானங்க்ரிபத்மம் ||

(பொ.) மான் மழுவேந்தியகையினரும் ஒளிர்கின்ற சிரத்தை உடையவரும் அன்பும், பயமும் அடங்கிய அரசப்பெருந்தகை போன்றவரும், தேவர்களாலும், முனிவர்களாலும் தொழுதேத்தப்பட்ட திருவடித் தாமரை களையுடையவரும், வானத்தின் நிலவு போன்றும் நெற்றியிலே மூன்றாம் கண்ணை உடைய முக்கண் மூர்த்தியை நான் வணங்குகிறேன். (பிரேமபுரீ மாகாத்மியத்தில் 3ம்- அத்தியாயம்)

பிரத்யூஹ சைல குலிசாயுத பாதபத்மம்-
பிரம்மாத்மகம் ஸகல காமதமாச்ரிதானாம் |
கௌரீமுகாப்ஜ மிஹிராபரவாரணாஸ்யம்-
தம் ஸத்யவாக் இதி ஜகத்பிரதிதம் பஜாம: ||

(பொ.) எதிர்த்த மலையைப் பொடியாக்கிய வஜ்ராயுதத்தை ஒத்த திருவடித் தாமரைகளைப் பெற்றவரும், பிரம்மதேவரைத் தன் ஆத்மாவாக உடையவரும், அண்டியவர்களுக்கு விரும்பிய அனைத்தையும் அருள்பவரும், கௌரியின் சாபத்தால் யானை முகத்தைப்பெற்றவரும் 'ஸத்யவாக்' என்று அழைக்கப்படுபவரும் ஆகிய கணேசரை வணங்குவோம். (பிரேமபுரீ மாகாத்மியத்தில் 2ம்- அத்தியாயம்)

பிரேமபுரீ மாகாத்மியம் எனும் அன்பில் திருத்தலப் பெருமை சைவமகாபுராணத்தில் ருத்ரசம்ஹிதையில் க்ஷேத்திரகண்டத்தில் கூறப்பட்டுள்ளது. நைமிசாரண்ய வாசிகளான தபோதனர்கள் மற்றும் பலர், 'முன்பொருகால் 12 வருடம் மேற்கொள்ளப்படும் ஸத்ர யாகத்தின் சமயம் கங்காதி ஸர்வதீர்த்தங்கள், க்ஷேத்திரங்கள் ஆகியவற்றின் பெருமை உரைக்கப் பட்டது. அதன் நடுவே காவேரிக்கரையில் 'பிரேமபுரீ' என்னும் ஒரு திருத்தலம் உள்ளதாகக் குறிப்பிட்டீர்கள். அது குறித்து விரிவாகக்கூறுங்கள்' என்று கேழ்க்க, சூதபுராணக்ஞர் 'சோழ பூ மண்டலத்தில் காவேரிக் கரையில் அழகுடைப்பிரதேசங்கள் அனேகம் உள்ளன. அவற்றுள் திருவையாற்றுக்கு மேற்கில் இரண்டு யோசனைத்தொலைவிலும், காவேரியாற்றுக்கு வடகரை-பைரவீவனத்தின் கிழக்கேயும், திருவானைக்காவிற்கு 10 குரோசத்தொலைவில் கிழக்கேயுமாக இந்த பிரேமபுரம் உள்ளது. தாழை, வாழை, தென்னை போன்ற மரங்களால் அழகுற விளங்குவதும், மல்லிகை, மாலதி, ஜாதி போன்ற கொடிகளால் வாசமுற்றுத் திகழ்வதும், மயில், கிளி போன்ற புண்ணியபக்ஷிகளால் சூழப்பெற்றதும், பல்வேறு மிருகக் கூட்டங்களால் விளங்குவதும், காவேரி ஜலத்தால் குளிர்ந்தும், விசித்ரமான தாமரை, செங்கழுநீர்,

குமுதம், அல்லி மலர்களால் பூத்துக்குலுங்குவதும், அன்னம் முதலான பக்ஷிகளாலும், தடாகங்களாலும், விசித்திர பாலகர்களாலும், ஐங்கார ஒலியுடன் கூடியதும், வைகானஸ வாலகில்யாதி முனிவர்களால் சூழப் பெற்றதும், ஸ்வாஹா, ஸ்வதா, வஷட்காராதிகளால் எப்போதும் தேவபித்ராதி யக்ஞங்கள் மேற்கொள்ளப் படுவதும், சுந்தரமான சாமவேத கானத்தால் மங்களம் குடிகொண்டுள்ளது போலவும், வானெங்கும் பரவிய அக்னி ஹோத்ராதி புகைமண்டலத்தை உடையதும், மிருகங்கள் ஒன்றையொன்று சாந்தமனதுடன் திரிபவை யாகவும், சிம்மம் வாய்துடைக்கத் தண்ணீரை ஆனைத் துதிக்கையால் மொண்டு அளிப்பதும், பெண்புலி தன்குட்டிகளை யன்றி மான்குட்டிகளைப் பாலருந்தச் செய்வதும், படமெடுத்த பாம்பின்மேல் கீரிப்பிள்ளை விளையாடுவதும் ஆன வியப்பினைத்தோற்றுவிக்கும் தலமே பிரேமபுரி ஆகும்' என்று உரைக்கிறார்.

பிரம்மதேவர் வருகை

ஒரு சமயம் பிரம்மதேவர் ஹைமவதியின் சாபத்திற்கு ஆளாகின்றார். சாபவிமோசனம் வேண்டிய பிரம்மதேவருக்கு பிரேமபுரித்தலமகிமை உரைக்கப் படுகிறது. புண்யமான காவேரிதீரத்தில் ஐப்யேச (ஐயாறு) க்ஷேத்திரத்திற்கு மேற்கில், பிரேமபுஷ்கரிணிக்கரையில் பிரேமபுரீ என்ற திருத்தலமுள்ளது. அதுவே தென்திசைக் காசி என மூவுலகிலும் கொண்டாடப்படுகிறது. கவேரன் மகளான காவிரியே கங்கை. ஆங்கே புனிதம் மிக்க பிரேமலிங்கம் காசிவிச்வேசர். அங்குள்ள ஆலமரமே அக்ஷய வடவிருக்ஷத்திற்கு ஒப்பானது. ரூபநாராயணனே காசிக்கு ஒப்பான மாதவர். அங்குள்ள டுண்டு விநாயகரே பிரம்மா. கயை, திரிவேணி, காசி ஆகிற மூன்று ஸ்தானமும் ஆங்கே (அன்பில் ஆலந்துறையில்) உள்ளது.

அக்ஷய வடவிருக்ஷத்திற்கு இணையான ஆலமரம் உள்ளதால் 'கயாஸ்தானம்' அதுவே ஆகும். திரிஸ்தானத்தில் உள்ள அனைத்தும் அங்குள்ளது. ஆகையால் நீவிர் விந்திய மலையை விட்டு, தென்திசைசென்று, பிரேமபுரத்தை அடைந்து, பிரேமலிங்கத்தை பூசிப்பாயாக' என்றார். அவ்வாறு இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்த பிரம்மதேவர் தன் உலகுபடைக்கும் திறனை இத்தலத்தினில் சிவ வழிபாட்டால் பெற்றார். இங்கே தான் சாப உருவான தவளை உருவத்திலிருந்து கேகயராஜா விடுபட்டார். பிறகு முனிவரின் சாபமேற்ற திருமால் இத்தலத்தில்தான் சுந்தர வடிவு பெற்றார். பிரேமபுஷ்கரிணியும் இங்கே உள்ளது. பிரேமபுஷ்கரிணிக் கரையில் புண்யாங்குர விமானத்தின் கீழே பிரம்மாதிகளால் தோத்தரிக்கப்பெற்ற ஸ்வயம் வ்யக்தமான பிரேமமகாலிங்கமூர்த்தி உள்ளார். அவரது தரிசனம் ஜன்மாந்தரகிருத தபோபலத்தாலும், அருளாலும் கிட்டுகிறது. அந்த மூர்த்தியைக் காண்பது, வணங்குவது பூசிப்பது, தோத்தரிப்பது, நினைப்பது ஆகியவற்றால் கல்மஷம் அகலுகிறது. இதுவே அந்த பிரேமலிங்கத்தின் சிறப்பாகும்.

சூரியன் வருகை

சூரியன் இந்த பிரேமபுஷ்கரிணீ தீரத்தையடைந்து பிரேம விமானத்தின் கீழ் அருள்பாலிக்கின்றவரும் யக்ஷர், கந்தர்வர், சித்தர், தைவதர்களால் போற்றப்பட்டவரும் சின்மயானந்த ஸ்வரூபியுமான சங்கரனைத் துதித்து அவரை நினைத்து சிலதினங்கள் இங்கே கிழக்குத் திசையில் தவம் மேற்கொண்டார். தவப்பயனாய் தரிசனம் தந்த சிவபெருமான் சூரியனிடம் 'சூர்யபுருஷனே! எனது கட்டளையை ஏற்று இத்தலம் வந்து பிரம்மாதி தேவர்களால் வணங்கப்பட்ட என்னைக்குறித்து தவம் புரிந்தாய். நீ உன் மனைவி சாயையுடன் இங்கே

எவ்வளவுகாலமாயினும் உல்லாசமாக இருக்கலாம். பூவுலகில் உண்டான இந்த நீர்நிலை சூரியனாகிய நீ நீராடியதால் 'சூரியபுஷ்கரிணீ'' என்றே இப்புவியில் அழைக்கப்பெறும். இந்த நீர் நிலையில் நீராடுபவர்களின் அனைத்துப் பாவங்களும் ஒழிவதோடு நோய்கள் அனைத்தும் அழிவுறுகின்றன.

வசிஷ்டர் வருகை

பிரேமபுரத்தின் பெருமைதனை பரத்வாஜர் வாயிலாகக் கூறக்கேட்டு ஆனைக்காவிலிருந்து பிரேமபுஷ்ரிணிக்கரையில் அமைந்த இந்த பூதலத்தே விளங்கும் ஆலங்காட்டிற்கு வந்து சேர்ந்தார். ஆலங்காடு எனும் பிரேமபுரம் திரிவேணி ஜலசாயியான திருமாலுடன் புண்யக்ஷேத்திரமாகவும், தாமரை, செங்கழுநீர் போன்ற மலர்ந்த புஷ்பங்கள் தீர்த்தங்கள் ஆகியவற்றால் பணிவிடை செய்யப்பெற்று பற்பல முனிகணங்களால் சூழ்ந்ததாய் ஸாக்ஷாத் கைலாசம் போலும் காட்சிதந்தது. அதைக்கண்டு மகிழ்ந்து திரிவேணி தீர்த்தத்தில் நீராடி புண்யாங்குர விமானத்தின் கீழ் அருள்பாலிக்கும் வடமூலேச்வரரை வணங்கி சூர்ய புஷ்கரிணிக்கரையில் தன்பெயரில் ஒரு லிங்கத்தையும், ஞானவாபியையும் ஏற்படுத்தி இறையருளுக்கு இலக்கானார். அந்த ஞானவாபியின் மேற்கில் வில்வ மூலநாதரை வசிஷ்டர் பஞ்சாக்ஷர மகாமந்திரத்தாலும் ஆயிரத்தெட்டு நாமாவளிகளாலும் அனுதினமும் ஜபித்து பெருமகிழ்ச்சி பெற்றார்.

அகஸ்தியர் வருகை

ஒரு சமயம் அகஸ்தியருக்கு காசிக்ஷேத்திரத்தின் பெருமையுணர்ந்து அங்கிருக்கும் போது அவருக்கு பூலோகம் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது ஆகாசவாணியின் மூலம் ' காசிக்ஷேத்திரத்திற்கு உள்ள அனைத்துபெருமையும் கூடியது இந்த க்ஷேத்திரம்.

விச்வேசம் மாதவம் டுண்டும் தண்டபாணிம் ச பைரவம் |
வந்தே காசீம் குஹாம் கங்காம் பவாநீம் மணிகர்ணிகாம் ||

(ஆரியர் திவ்யதேச யாத்திரையின் சரித்ரம் - P.No. 41)

இதி தேவான் நமஸ்கிருத்ய காசீயான் ஸகலானபி |
வாராணசி மஹாபாகோ காசீவிச்வேச மாதவ ||

மணிகர்ணிகே ஹே டுண்டே திசம் யாஸ்யாமி தக்ஷிணாம் |
யூயம் ஸர்வே ஸந்நிதத்ஸ்வ ஸமயா பிரேமபூ தடே ||

நோ சேத் ஸந்நிதிஸ்தத்ர புனரத்ரைவ மே கதி: |
இதி பிரார்த்ய மகாதேவம் பிரதஸ்த்தே தக்ஷிணாம் திசம் ||

என்கிறபடி அகஸ்தியர் காசிக்ஷேத்திரதேவர்களை வணங்கி, அவர்களிடம் தென்தேசம் செல்வதைத் தெரிவித்து, பிரேமபூமியாகிற காவேரித்தடத்தில் நீங்களும் கோயில் கொண்டருள வேண்டும். உங்களின் சந்நிதி அங்கில்லை யாகில் மறுபடியும் எனக்கு இங்கேதான் வாசமமையும் என்று கூறி தென்திசை நோக்கிப் புறப்பட்ட அகஸ்தியர் பிரேமபுரி என்றழைக்கப்பெறும் அன்பிலை வந்தடைகிறார்.

அன்பில் திருத்தலப் பெருமை

பிரேமலிங்கேசுவரர் காசி விச்வேச்வரருக்கு ஒப்பானவர். அக்ஷய்ய வடத்திற்கு ஒப்பான ஆலமரம் இங்குள்ளது. இங்கு பிரம்ம தேவரே கணேசராக டுண்டு விநாயகர் என அழைக்கப்படுகிறார். காவேரி நதி தென் கங்கை என்றும், காயத்ரியும், பூமியினுள்ளே ஓடுவதாக சரசுவதி நதியும் திரிவேணிக்கு ஒப்பாக உருவெடுத்து விளங்குகிறது. இங்கு நீராட்டம் புரிபவர் திரிவேணியில் நீராடிய பெருமை பெறுவர். ஆலமரத்தருகே இங்கே புரியும் சிராத்தம் கயையில் மேற்கொள்ளும் அக்ஷய்யவடத்தின் நிழலில் செய்த பெருமையைத்தரும்.

மேலும் அமாவாஸ்யை, வ்யதீபாதம் சந்திர, சூர்ய கிரகணங்கள், மாதப்பிறப்பு, விஷு புண்யகாலம் ஆகியவற்றில் திரிவேணி சங்கமமான இங்கே சிராத்தம், பிண்டம், எள்ளுநீர் போன்றவற்றை பித்ருக்களுக்கு அளிப்பவர் கயாசிராத்தபயனை அடைவதோடு பிதருக்களின் பிரீதிக்கும் பாத்திரமாவர்.

பிரேமலிங்கமே தர்மலிங்கம்

பிரேமன் என்றொரு இடையன் தேவாலயப் பசுக்களை காப்பாற்றி வருவதோடு ஈச்வரனுக்குப் பணிவிடையும் செய்து, வந்தான். அறத்தின் நின்றும் வழுவாநிலையாய் இருந்தபோதும் அவனை அறம் வழுவச்செய்து, அங்குள்ளார் அவன் மீது குற்றம் பல சுமத்தினர். குறிப்பாக கோவில் மாடுகளைக்கொண்டு பால் கறந்து வெளியே விற்றுவாழ்கிறான் என்ற குற்றத்தின்பேரில் ஆலயத்தின் வரவு செலவு கணக்கதிகாரி வசீ என்பவரால் பிரேமன் சிறையில் அடைக்கப்பட்டான். உணவு நீரின்றி வாடினான். அத்தருணம் சிவபெருமானைத் தொழுதேத்த, சிவபெருமான் அன்னமளிக்கிறார். அன்னம் தருபவர் எதிர்கூட்டதவர் என்றே நினைத்து அதை ஏற்க பிரேமன் மறுக்கிறான். அப்போது சிவபெருமானின் மொழிகேட்டு மகிழ்ந்த பிரேமன் விலங்கிலிருந்தும் சிறையிலிருந்தும் தன்னை விடுவிக்க வேண்டுகிறான். வேண்டிய மறுகணமே விடுதலையும் கிடைக்கின்றது. இவ்வாறு பிரேமன் தொழுததால் அத்தலத்துறை நாதனான சிவபெருமான் பிரேமலிங்கேச்வரர் என்றும், தர்மத்திலிருந்து வழுவாது பிரேமனைக் காத்ததால் தர்மலிங்கேச்வரர் என்றும் அழைக்கப்பெறுகிறார். இக்கருத்திற்கு P.V. ஜகதீச அய்யர் இயற்றிய தென்னிந்திய

க்ஷேத்திரங்கள், அன்பில் குடமுழுக்கு விழாமலர் போன்றவை அடிப்படை ஆகின்றன.

அன்பில் ஆலந்துறை கல்வெட்டுகள்

பாண்டிய மன்னன் மாறவர்மன் குலசேகரன் ராஜராஜவளநாட்டு கிளார் கூற்றத்து பிரம்மதேசம் அன்பில் உடையார் திரு ஆலந்துறை உடையார் கோயிலின் ஆதிசண்டேச்வர தேவர்கர்மிகளான இந்நாயனார் கோயில் தேவரடியார், கைகொளர்க்கும் முதலியார் திருப்பைஞ்சீலி முதலியார் போன்றோர்களுக்கு திருமடைவிளாகத்து திருக்கோயில் சூழ்ந்த திருவீதி மனைகளில் மடங்களும் ... காணிஆளர் (உழவின் மேல் ஊக்கமுள்ள குடிமகன்) நம்பிமார் சிவபிராமணர் மனைகளும், கோயில் கணக்கு அம்பிலுடையார் மனையும் மனையும், நீக்கிநின்ற மனைகளும், சன்னிதித் தெருவிலுள்ள மனைகளும், ஆதி சண்டேசுவரம் பெருவிலையாக விலைப்பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசுக்கொடையினையும் (SII Vol.viii, P.No.95/No.192) பழுதை ஆண்டார் கோயில் அமுதுபடிக்குத் திருநாமத்துக்காணிக் கொடையினையும் (SII Vol.viii, P.No.95/No.193) ஒய்சள ராமநாதன் தனது 8வது ஆட்சியாண்டில் ஒரு நிலம் வாங்கி அதற்கு 'சூரியநந்தவனம்' எனப்பெயரிட்டு ஆலந்துறை ஈசருக்கு கொடையாக அளித்தமையும் (SII Vol.viii, P.No.96No.194) 'திருப்புதியது' (புதிசு(து)=திருவிளக்கின் முன்வைக்கப்படும் முதல் விளைச்சற்காணிக்கை, புதியது= அறுவடையானது கொண்டாடும் பண்டிகை அமுதுசெய்ய 'திருப்புதியது விளாகம்' (அறுவடைசெய்து அந்த புது அரிசியினால்) ஆன அமுதினை இறைவனுக்குப் படைத்துக் கொண்டாடும்படியான பண்டிகைக்கு அளிக்கப்படும் நிலக்கொடை) ஆக இவ்வூர் பிராம்மணரில்

உடையார் உத்தமநம்பி மகன் தேவர் பக்கல் விலைகொண்டு இன்னாயனாருக்கு (அன்பில் ஆலந்துறை ஈசருக்கு) திருப்புதியது வழக்கத்துக்கு அமுதுப்படிக்கு திருப்புதியது விளாகமாக திருநாமத்துக்காணி கொடுத்தேன் என்ற நிலக்கொடையினையும் (SII Vol.viii, P.No.97/No.195) சிவன்கோயில் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

விநாயகர் கோயில் கல்வெட்டுகள்

இருகழஞ்சு பொன்னை மூலநிதியாய் அமைத்து அதன் வட்டியைக்கொண்டு மூன்று சந்தியும் திருவிளக்கு எரிக்க, இருவர் கையொப்பமிட்டு விடப்பட்ட பொலிசைக்கல்வெட்டும் (SII Vol.viii, P.No.98/No.197) இரு கழஞ்சு பொன்னில் தினமும் ஒரு படி நெய்கொண்டு பிள்ளையார்கோயிலில் திருக்காப்புதிறந்து, திருக்காப்பு கொள்ளுமளவு செய்யவேண்டிய திருவிளக்கு எரிக்கொடை கல்வெட்டும் (SII Vol.viii, P.No.97/No.196) திருவிடைக்குடி, அமுதமொழிப் பெரும்பள்ளி திருப்பணியும், பூஜையும் மேற்கொண்ட குறிப்புகளையும் அன்பில் திருத்தலத்திலுள்ள சாமவேதவிநாயகர் கோயிலுள்ள கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

இவ்வளவு பெருமை வாய்ந்த அன்பில் ஆலந்துறை திருத்தலம் பிரேமபுரம், பிரேமபுஷ்கரிணீ, பிரேமவிமானம், பிரேமவல்லீ, பிரேமலிங்கம் என்கிறபடி ஐந்து வகைகளில் பிரேமம்=அன்பு என்ற சொல்லைப் பெற்று அன்பிற்கு இல்லமாய் 'பஞ்ச பிரேமக்ஷேத்திரம்' ஆக விளங்குகிறது.

ஸ்ரீமத் பிரேமபுரம் ராஜன் பிரேமபுஷ்கரிணீ தடே |
ஸ்ரீமத் பிரேமவிமானஸ்த்தம் பிரேமவல்லீ ஸமன்விதம் ||
பிரேமலிங்கம் ஸக்ருந்நத்வா புனர்ஜன்ம ந வித்யதே ||

பிரேமபுரம் ஆகிற அன்பிலுக்குச்சென்று புஷ்கரிணியில் நீராடி, பிரேம விமானத்தின் கீழே அருள்பாலிக்கும் பிரேமவல்லீ உடனுறை பிரேமலிங்கேசுவரரை ஒருமுறை சென்று வணங்கியவருக்கு மறுபிறவிகிடையாது என்று 'அன்பில் பிரேமபுரீசுவரர்' தலபுராணம் கூறுகிறது.

4-4 ஆதிசேஷன் இயற்றிய அனந்தாஷ்டகம்

ஆதிசேஷன் ஆதனூர் (தஞ்சை மாவட்டம்) திருத்தலத்தில் ஸ்ரீமன் நாராயணனைப் போற்றி வணங்கியது. இந்த அனந்தாஷ்டகம் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடான லக்ஷ்மீபுரமாகாத்மியம் என்ற நூலில் காணப்படுகிறது.

ஸஹஸ்ர நேத்ராய ஸஹஸ்ர சீர்ஷ்ணே
ஸஹஸ்ரபாஹாய(பாஹவே) ஸஹஸ்ரநாம்னே ।
ஸஹஸ்ர பாதாய ஸஹஸ்ரதாம்னே
ஸஹஸ்ர லீலாய நமோ நமஸ்தே ॥

1. எண்ணற்ற கண்கள், தலைகள், கைகள் பெயர்கள், பாதங்கள், இருப்பிடங்கள், லீலைகள் ஆகியவற்றை உடைய திருநாரணனான உங்களை நான் வணங்குகிறேன்.

ஸஹஸ்ர ரூபாய ஸஹஸ்ர தேஜஸே
ஸஹஸ்ர பாணாய ஸஹஸ்ர கர்மனே ।
ஸஹஸ்ர கர்ணாய ஸஹஸ்ர மூர்தயே
ஸஹஸ்ர வேதாய நமோ நமஸ்தே ॥

2. எண்ணற்ற உருவங்கள், அளவற்ற பிரகாசம், அம்புகள், செயல்கள், காதுகள், வடிவங்கள், வேதங்கள் ஆகியவற்றைக்கொண்ட உங்களை நான் வணங்குகிறேன்.

நாநாகுணாய நளினாஸன ஸன்னுதாய
நாதாய விஷ்வநிலாய நபோ குணாய ।
நாதாத்மகாய நரகார்ணவ தாரணாய
நாராயணாய புருஷாய நம: பரஸ்மை ॥

3. பலவகையான தெய்விகக் குணங்கள் வாய்ந்தவரும், தாமரையை ஆசனமாகக் கொண்ட பிரம்மதேவரால் வணங்கப்படுபவரும், நர்தஸ்வரூபியும், உலகிலுள்ள உயிர்களுக்கு இருப்பிடமானவரும், ஆகாசம் போன்று நீக்கமற நிறைந்திருப்பவரும், நாதங்களின் அடிப்படையானவனரும், நரகம் என்ற கடலிலிருந்து பக்தர்களைக் கரைசேர்ப்பவரும், நாராயணனும், புருஷோத்தமனும் ஆகிய உங்களை வணங்குகிறேன்.

காலாய காலகலனாய கலாயிகாய
காலாந்தகாய கலிகல்மஷ நாசனாய ।
காமாய காமஜனகாய கவீச்வராய
காமாவதார விபவாய நம: பரஸ்மை ॥

4. காலத்தின் வடிவமாக இருப்பவரும், காலத்தைத் தம் பிடியில் வைத்திருப்பவரும், உலகிற்கு இனிய ஒளியைத் தரும் சந்திரன் போன்று குளிர்ந்திருப்பவரும், (யமனுக்கே) யமன் போன்றவரும், கலிகாலத்தின் கொடுமையால் பக்தர்களுக்கு ஏறபடும் குற்றங்களை அழிப்பவரும், நல் விருப்பங்களின் வடிவமானவரும், மன்மதனின் தந்தையும், ‘கவி’ எனப்படும் சுக்கிரன் முதலான நவக்கிரகங்களின் தலைவரும், தமது விருப்பம் போல் அவதாரம் செய்தவரும் ஆகிய உங்களை நான் வணங்குகிறேன்.

பத்மாலயாய பரமாய பராத்பராய
பத்மாஸநாய பவிஹஸ்த நிஷேவிதாய ।
பாபேந்தநௌக தஹனோன்முக பாவகாய
பஞ்சானனேऽத்ய சரணாய நம: பரஸ்மை ॥

5. மகாலட்சுமியின் ஆலயமாக இருப்பவரும், பரம்பொருளும், எல்லாவற்றிற்கும் மேலானவரும், தாமரை மலரில் வீற்றிருப்பவரும், வஜ்ராயுதம் உடைய இந்திரனால் துதிக்கப்பட்டவரும், பாவங்கள் என்ற விறகுக்குவியலை எரிக்கும் நெருப்பு போன்றவரும், சிவன் போன்றவர்கள் சரணடைவதற்குரியவரும் ஆகிய உங்களை நான் வணங்குகிறேன்.

பக்தாபவர்க பலதாய பவாபஹாரய
பக்தப்ரியாய பவதாத பவாம்புஜாய ।
பாவாந்தரங்க நிலயாய முனீச்வராணாம்
பாகீரதீ பவபதாய நம: பரஸ்மை ॥

6. பக்தர்களுக்கு முக்தி வழங்குபவரும், பக்தர்களைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற்றுபவரும் பக்தர்கள் மீது பிரியம் வைத்திருப்பவரும், உலகைப் படைத்த பிரம்மா குடிகொண்டிருக்கும் தாமரையை உடையவரும், சிறந்த முனிவர்களின் மனதில் குடியிருப்பவரும், பாகீரதியான கங்கை தோன்றுவதற்குக் காரணமான திருவடிகளை உடையவருமாகிய உங்களை நான் வணங்குகிறேன்.

யோகாய யோக விதிதாய சுயோகிவர்ய-
யோகாஸனாய பவதாத பவாம்புஜாய ।
பாவாந்தரங்க நிலயாய முனீச்வராணாம்
பாகீரதீ பவபதாய நம: பரஸ்மை ॥

7. யோகத்தின் வடிவமானவரும், யோகத்தால் அறியப்படுபவரும், சிறந்த யோகிகளின் இதயத் தாமரையில் எழுந்தருளியிருந்து யோகத்திற்கு அனுகூலமாய் யிருப்பவரும், யோகாசனத்தில் வீற்றிருப்பவரும், கர்வத்தை நீக்குவதில் தீவிரமானவரும், யோகீஸ்வரரும், வரம் அருள்பவரும் ஆகிய உங்களை நான் வணங்குகிறேன்.

வேதாந்த சூசித விநிஷ்கல விக்ரஹாய
வேதாங்க வேதவிதிதாய சுநிர்மலாய |
வேதைரசிந்த்ய விபவாய விதாயகாய
விப்ரப்ரியாய சுலபாய நம: பரஸ்மை ||

8. வேதாந்தத்தில் (உபநிஷதங்களில்) கூறப்படும் உருவமற்ற பரம்பொருளானவரும், வேதாங்கங்களாலும் வேதத்தாலும் சுட்டிக்காட்டப்படுபவரும், அப்பழுக்கற்றவரும், வேதங்களாலும் அறியமுடியாத மகிமையுடையவரும், உலகைத் தோற்றுவிப்பவரும், முனிவர்களுக்குப் பிரியமானவரும், எளிதில் அடையத்தக்கவரும் ஆகிய உங்களை நான் வணங்குகிறேன்.

இதி ஸ்துத்வா மஹாவிஷ்ணும் அனந்தம் விச்வதோமுகம் |
பிரணிபத்ய யதாகாமம் ஸந்துஷ்டாத்மா பபூவ ஹ ||

9. இவ்விதம் ஆதிசேஷன், எங்கும் இருப்பவரும், எல்லையில்லாதவருமான மகாவிஷ்ணுவை வணங்கித் துதித்து விரும்பியபடி அவரை மகிழ்வித்துத் தானும் ஆனந்தப்பரவசமடைந்தது.

4-5 கந்துகாபுரமாகாத்மியத்தில் பசுபதீசுவராஷ்டகம்

தஞ்சையை ஆண்ட மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலக ஸம்ஸ்க்ருதத்துறையில் கந்துகாபுரமாகாத்மியம் என்ற தலைப்பில் இரு சுவடிகள் பதிவாகியுள்ளன. இவைகளில் கந்துகாபுரமெனப்படும் பந்தணைநல்லூர்க் குறித்த தலப்பெருமைகள் பன்னிரண்டு அத்தியாயங்களில் விவரிக்கப்பெற்றுள்ளன.

அரிய சுவடியான இந்நூலைத் தமிழாக்கம் செய்து தஞ்சை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ளது.

'கந்துகம்' என்ற சொல் பந்தையும் மாகாத்மியம் என்பது பெருமையையும் குறிக்கின்றது. ஒரு சமயம் பார்வதி பந்து விளையாட்டை மிகவும் ஈடுபாட்டுடன் விளையாடியபோது, சிவபெருமான் சொல்லைக் கேட்கவில்லை. பந்து எழும்புகையின் காரணமாக உலகமே அதிர்ச்சியுற்றது. உலகத்தார் அனைவரும் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர்களுக்குக் காரணம் கூறி அவர்களைத் தத்தம் இருப்பிடம் அனுப்பி விட்டு, பார்வதியின் செய்கையை நினைத்துப் பார்வதியை சபித்துவிடுகிறார். சாபவிமோசனத்திற்காக பந்தணவும் விரலாளாகிய பார்வதியும், மிடற்றிலே விஷம் நிறுத்தியதுபோல வயிற்றிலே பந்தை அணைந்த சிவபெருமானும் பார்வதியின் சாபத்தைப் போக்குவதற்காக மேவிய ஊர் 'பந்தணைநல்லூர்' ஆயிற்று. பார்வதியின் தவத்திற்கு ஆதிகேசவன் துணை நின்றார்.

பந்தணைநல்லூரில் ஆதிகேசவன்

பந்தணைநல்லூரில் ஆதிகேசவனுக்கு நிர்ருதி (தென்மேற்குத்) திசையில் சந்நிதி அமைக்கப் பெற்றுள்ளது. அஜித காரண தீப்த யோகஜ வீராகமங்கள் சைவாலயங்களில் திருமாலை எண்பரிவாரங்களுள் ஒருவராகப் பேசி அவருக்கு ஸௌம்ய ஸ்தானத்தையும் (வடக்குத் திசையையும்) போதிக்கின்றன. அப்படி அல்லாது போனால் (வருணே விஷ்ணுவாஸ: ஸ்யாத், காமிகாகமம்) & (கிராமஸ்ய வாருணேபாகே ஸமம் குர்யாத் விசேஷத: । அதவா வாயுதிக்பாகே கருடாலய

முத்தமம் || காரணாகமம், தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம், வடமொழி புத்தக எண் 7302, பக்க எண்-124, என்கிறபடி) வருண வாயவ்ய (மேற்கு, வடமேற்குத்) திசைகளையும் ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. மேற்கு, வடமேற்குத் திசைகளில் திருமாலுக்கு கோயில் அமைந்தமையை முறையே சுந்தரபெருமாள்கோயில் - வாழப்பழக்கடைக்கு அருகிலுள்ள நல்லூரிலும், திருவண்ணாமலையிலும் காணலாம். கந்துகாபுரமாகாத்மியத்தின் ஆசிரியர், "ஹரிர் வாயவ்ய திக்பாகே" என்று கூறியுள்ளார். பந்தணை நல்லூர் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியின் தெற்கு, மேற்கு, வடக்குச் சுவரின் வெளிப்புறத்தில் துண்டு துண்டாகக் கல்வெட்டுக்கள் தொடர்ச்சியற்றதாய் உள்ளன. இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது ஆதிகேசவரின் சந்நிதி தற்போதுள்ள இடத்திற்குப் பிற்காலத்தில் வந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது. ஆதிகேசவன் கோயில், கொண்டருளும் சிவாலயங்கள் திருவோத்தூர், திருநணா, கொடிமாடச் செங்குன்றூர் ஆகியன. தக்ஷன் புரிந்த வேள்வியில் அழையா விருந்தினளாய்ச் சென்ற தாக்ஷாயணீ, தவமேற்று ஈசனின் இடப்பாகம் பெற்ற புராணம் திருவோத்தூரில் கூறப்படுகிறது. அங்கும் ஆதிகேசவன் எழுந்தருளி யுள்ளார். சிவபெருமானின் துணைவியார் தவம் புரியும் இடங்களில் அவருக்குத் துணையாகத் திருமால் ஆதிகேசவனாக அருள்புரிவார் என்பது இதனால் அறிய முடிகிறது. மாலின் துணையோடு மாதவம் இயற்றிய பார்வதி சிவபெருமானையும், திருமாலையும், தேவர்கள் வாலி, சூரியன் ஆகியோர் சிவபெருமானையும் செய்த தோத்திரங்கள் படிப்போரின் மனதைக் கவர்ந்து இழுப்பவை. அவற்றுள் தேவர்கள் போற்றிய பசுபதீச்வராஷ்டகத்தினை தமிழ்ப் பொழிப்புரையோடு சிறிது பார்ப்போம்.

பசுபதீச்வராஷ்டகம்

கங்காதரம் த்ரிணேத்ரம் ச சந்த்ரசேகரமவ்யயம் ।
பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் வந்தே பசுபதீச்வரம் ॥

1. கங்கையைத் தரித்தவரும், மூன்று கண்கள் உடையவரும், சந்திரனைத் தலையில் சூடியவரும், அழிவற்றவரும், உடல் முழுவதும் திருநீறணிந்தவரும் ஆகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

வியாக்ரசர்மதரம் நாகபூஷணம் பார்வதீபதிம் ।
மநோஜ தர்ப்பஹந்தாரம் வந்தே பசுபதீச்வரம் ॥

2. புலித்தோலை அணிந்தவரும், நாகங்களை அணிகலன்களாகப் பெற்றவரும், பார்வதிதேவின் கணவரும், மனதில் ஏற்படும் இறுமாப்பை ஒழிப்பவரும் ஆகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

சுத்தஸ்படிக ஸங்காசம் பூர்ணசந்த்ரநிபானனம் ।
ஹேமவர்ண ஜடாயுக்தம் வந்தே பசுபதீச்வரம் ॥

3. தூய்மையான ஸ்படிகம் போல் விளங்குபவரும், பூர்ண சந்திரன் போன்ற முகம் உடையவரும், பொன்னிறமான சடைமுடி உடையவரும் ஆகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

அஷ்டமூர்த்திம் மகாகாயம் நீலகண்டச்ச சூலினம் ।
ஜகத்ஸம்ஹார கர்த்தாரம் வந்தே பசுபதீச்வரம் ॥

4. நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று, சூரியன், சந்திரன், யஜமானன் (தலைவன், வேள்வித்தலைவன், இந்திரன்) ஆகிய எட்டு வடிவமானவரும், பெரிய உடலைப் பெற்றவரும், தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த விஷத்தைத் தன் கழுத்தில் நிறுத்தியதால் நீலகண்டன் எனப்படுபவரும், சூலாயுதத்துடன் திகழ்பவரும், உலகைச் சம்ஹாரம் செய்பவருமாகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

பக்தாபீஷ்டப்ரதம் லோகே புஜாஷ்டக விபூஷிதம் |
டமராத்யாயுதோ பேதம் வந்தே பசுபதீச்வரம் ||

5. உலகில் பக்தர்கள் விரும்பியவற்றை அளிப்பவரும், எட்டு தோள்களுடன் விளங்குபவரும், டமாரம் முதலான ஆயுதங்கள் உடையவருமாகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

க்ஷிப்ரப்ரஸன்னம் பூதேசம் சிவார்தம் வ்ருஷவாகனம் |
சுபாலமாலினம் சம்பும் வந்தே பசுபதீச்வரம் ||

6. விரைவில் பக்தர்களுக்கு அருள்புரிபவரும், பூதகணங்களுக்குத் தலைவரும், பார்வதிதேவிக்குப் பாதி உடலை அளித்தவரும், ரிஷப வாகனம் கொண்டவரும், மண்டையோடுகளை மாலையாகத் தரித்தவரும் ஆகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

த்ரிபுராரிம் வ்யோமகேசம் தக்ஷாத்வரவிநாசகம் |
ம்ருத்யுஞ்யம் மகாதேவம் வந்தே பசுபதீச்வரம் ||

7. திரிபுரத்திற்கு எதிரியும், வானத்தையே கேசமாகப்பெற்றவரும், தக்கன் வேள்வியைத் தகர்த்தவரும், காலனை வென்றவரும், மகாதேவருமாகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

வீந்த்ராஹீந்த்ர மஹேந்த்ராதி சந்த்ரசூர்ய மருத்கணை: |
கணாதி நாயகைஸ்ஸேவ்யம் வந்தே பசுபதீச்வரம் ||

8. பறவைகளின் அரசன் (கருடன்), பாம்பரையன் (ஆதிசேஷன்), தேவர்களின் தலைவன் (இந்திரன்) ஆகியவர்களாலும், சந்திரன் + சூரியன் + மருத்கணங்களாலும் கணங்களின் நாயகர்களாலும் வணங்கப்படுபவராகிய பசுபதீசுவரரை வணங்குகிறேன்.

சிவாஷ்டகமிதம் புண்யம் ய:படேத் சிரத்தயான்வித: |
ஸர்வபாபவிநிர்முக்தோ லபதே வாஞ்சிதம் பலம் ||

9. பசு பூஜித்ததால் பசுபதீசுவரர் என்று அழைக்கப்படும் பந்தணைநல்லூர் சிவபெருமானைத் தேவர்கள் தரிசித்து போற்றிப்பாடிய இந்த சிவாஷ்டகத்தை யாரொருவர் சிரத்தையுடன் படிக்கிறாரோ, அவர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு நினைத்ததைப் பெற்று மகிழ்வார். இந்த துதி கந்துகாபுரமாகாத்மியம் ப.எண். 34ல் உள்ளது.

4-6 குரிச்சித்தலப்பெருமை

காவிரி ஆற்றின் இருமருங்கிலும் எண்ணற்ற பல திருத்தலங்கள் காண க்கிடைக்கின்றன. அவையாவும் வடகரை தென்கரைத் தலங்கள் என்று வகைசெய்யப் பட்டுள்ளன. காவிரியும் கொள்ளிடமும் இருபுறம் பெருக அதன் நடுவே அமைந்து தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் திகழ்வதுவே லக்ஷ்மீபுரம் எனும் பந்தநல்லூர்ச் சீமை குரிச்சித் திருத்தலமாகும்.

தலபுராணம்

லக்ஷ்மீபுரம், லக்ஷ்மீபதிபுரம், லக்ஷ்மீவிலாஸபுரம் என்றெல்லாம் போற்றப்பெறும் இந்தத் திருத்தலம் "**குரிச்சி**" என்ற பெயருடன் திகழ்கின்றது. "இந்தத் திருத்தலம் ஒரு காலத்தில் தாடகையின் வசமிருந்ததாகவும், ராமன் ராவணவதம் முடித்துத் திரும்பும்போது, சீதாதேவி கேட்டுக்கொண்டதற்கிணங்க, சுந்தரவிமானத்தின் கீழிருந்தருள்பாலித்துவரும் லக்ஷ்மீநாராயணனுடைய தலமாகவும், லக்ஷ்மீதேவியால் தோற்றுவிக்கப்பெற்று "லக்ஷ்மீபுரம்" என்றழைக்கப்பெறுவதுமாகிய இத்தலத் திற்கு வருகை புரிந்தான்" என்பதாகவும் "லக்ஷ்மீபுர

மாகாத்மியம்" கூறுகின்றது. மேற்கூறிய செய்தியை அடியொற்றி இராமபிரானின் சந்நிதி அக்கோயிலில் அருள்பாலித்துவரும் லக்ஷ்மீநாராயண னுடைய முகமண்டபத்தின் (லக்ஷ்மீநாராயணனுடைய சந்நிதிக்கு) இடது புறம் ஒரு சிறு கோயிலாக அமைக்கப் பெற்றுள்ளது. இராமன் சந்நிதானத்தில் இலக்குமணனும், சீதையும், ஆஞ்சநேயனும் அருள்பாலிக்கின்றனர். இருவருடைய சந்நிதானத்தையும் இணைக்கின்ற முகமண்டப மேற்கூரையில் கண்களைக் கவரும் வண்ணம் இராமாயணக் காட்சிகள் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளன. இன்றும் ஆங்கே ஸ்ரீராமநவமி உற்சவம் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பெறுகின்றது. லக்ஷ்மீபுர மாகாத்மியம் 3 அத்யாயங்களில் 98 சுலோகங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. மூலம் தேவநாகரியிலும், தமிழாக்கமும் கொண்ட இந்நூல் தஞ்சை சரசுவதி மகாலில் கிடைக்கிறது. இந்நூலில் இத்திருத்தல அமைப்பினைக் குறிப்பிடும்போது -

.... லக்ஷ்மீபுரமிதி ஸ்த்திதம் ।
காவேர்யாச்சோத்தரே தீரே நரபுராயாஸ்து தக்ஷிணே ॥

(லக்ஷ்மீ. அத்: 1:8)

என்றொரு குறிப்புக் காணப்படுவதால் இதன் இருமருங்கிலும் காவிரியும், கொள்ளிடமும் ஓடுகின்றன. என்பதை அறியமுடிகிறது. இத்தலத்துறை நாதனான லக்ஷ்மீநாராயணன், சக்ரவர்த்தித்திருமகன் ஆகியோர் களுக்கு ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெற்றுவருகின்றன.

குரிச்சி கல்வெட்டுகள்

விக்ரமசோளீச்வரம் என்றழைக்கப்பெறும் குரிச்சியில் லக்ஷ்மீநாராயணர் - கோதண்டராமசுவாமி

கோயில் உள்ளது. தெற்குநோக்கி அமைந்திருக்கும் கோதண்டராமசுவாமி கோயிலின் கிழக்குப்புற அதிஷ்ட்டானத்தில் 16ம் நூற்றாண்டைச் சார்ந்த நிலக்கொடை கல்வெட்டும் (ARE. 101 of 1931-32) கோபுர விதானத்தில் அச்சுத தேவமகாராயன் காலத்தில் எதிரிலி சோழன் காட்டூரில் நன்செய், புன்செய் நிலங்களை நான்கெல்லைகளுடன் நாராயணய்யன் என்பவர் அளித்த நிலக்கொடைக் கல்வெட்டும், கோதண்டராமசாமி கோயில் சன்னதிக்கு கிழக்குப் புறம் குமுதத்திற்குக் கீழுள்ள பட்டை மற்றும் கிழக்குப்புறச் சுவர்களில் ஒரு நிலக்கொடை சாஸனமும், மேல்புறச்சுவரில் திருநாமத்துக்காணி நிலக்கொடை கல்வெட்டுகளும் உள்ளன.

இத்தனைச் சிறப்போடும், பெருமதிள்கள், திருச்சுற்றுகள் ஆகியவற்றுடன் திகழும் இந்த திருக்கோயிலைக் குரிச்சிதனில் இன்றும் நாம் கண்டு மகிழலாம்.

4-7 தஞ்சைப்பெருஉடையார்கோயில் தலப்பெருமை

தஞ்சைப்பெருவுடையார் கோயிலை மையமாகக் கொண்டு அமைந்ததுதான் சரசுவதிமகால் நூலகத்தில் விளங்கும் பிருஹதீச்வர மாகாத்மியம். அது முப்பது அத்தியாயங்களைக் கொண்டது. தஞ்சைத் தலபுராணம் குறித்த நூலாகையால் அந்நூல் ஆங்கிலம் தமிழ் ஆகியவற்றில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பெருவுடையார் கோயிற் பெருமை பகரும் பிருஹதீச்வர மாகாத்மியம் அரிய பல வரலாற்றுச் செய்திகளின் பின்னனியில் அமையப்பெற்ற ஒரு கதை இலக்கியம் என்றால் அது மிகையல்ல. இனி இந்நூல்தரும் சில சிறப்புச்செய்திகளைச் சிறிது சிந்திப்போம்.

நூல்தரும் செய்திகள்

இந்நூலில் முறையே குலோத்துங்க-தேவ சசிசேகர-சிவலிங்க-வீர-கரிகால-பீம-ராஜேந்திர- வீரமார்த்தாண்ட-புகழ்-ஜய-கனக-சுந்தர-காலகால-கல்யாண-பத்ரசோழர்கள் ஆகியோர்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. சேர வம்சத்தில் தோன்றிய 22 மன்னர்கள் கங்கைக் கரையில் 64 நீராடும் துறைகளையும், ஆங்கே காசி விச்வநாதர் போன்ற 142 சிவாலயங்களையும், தண்ணீர்ப் பந்தல், அன்னதானம், (முதலாம் இராஜராஜசோழனது உக்கல் கல்வெட்டினின்று தண்ணீர்ப் பந்தல் தருமம் ஆறு மாதங்கள் நடக்கும் என்பதையும், இந்த இராஜராஜனே திருவிசலூரில் துலாபாரம் புகுந்தமை அவ்வூரிலுள்ள சிற்பத்தாலும் கல்வெட்டாலும் அறியப்பெறுமென்ற குறிப்பினையும் தஞ்சை மராட்டியர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் நூல் தருகின்றது.) சத்திரங்கள், நடைபாதை போன்றவற்றை நிறுவினர் என்ற குறிப்பும் இதில் காணப்படுகின்றது. சேர சோழ பாண்டியர்கள் ராமேச்வரம், தில்லை, வேதாரண்யம், திருவாரூர், ஸ்ரீகண்டம், திருவானைக்கா முதலிய க்ஷேத்திரங்களில் திருப்பணிகளையும், காவிரிக்கரையில் பல ஆலயங் களையும் எழுப்பினர். ஆற்றங்கரையில் கருங்கல் படித்துறைகளும், புஷ்யமண்டபங்களும் தோன்றின. பாசனத்துக்கு ஏரி, நீர்த்தேக்கங்கள், கிணறு, பொய்கைகள் வெட்டப்பெற்றன. மன்னர்கள் வெற்றியால் கிடைத்த பொருட்களை சிவாலயத்துக்கு அர்ப்பணித்தனர். வெல்லம், சுண்ணாம்பு, செங்கல் போன்றவை வரியாக வசூலிக்கப்பெற்றன. மன்னர்கள் மக்களையும் குறிப்பாக அங்கஹீனர்களையும் காத்தனர். குலோத்துங்கசோழன் தவமியற்றி தஞ்சபுரீச்வரரைக் கண்டதும், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் சிவாலயத் திருப்பணி செய்ததையும் இந்நூல் குறிப்பிடுகின்றது.

திருவையாற்றின் தென்திசையில் சமீவனத்தில் அமைந்த தஞ்சபுரீச்வரம் பராசரர் தவமியற்றிய பெருமைவாய்ந்தது. குபேரனுக்கும் தஞ்சனுக்கும் காட்சி தந்தார் சிவபெருமான். தஞ்சாசுரனின் வேண்டுகோளால் இவ்வூர் தஞ்சாவூர் ஆயிற்று. இங்கிருந்து வடகிழக்கில் வசிஷ்ட்ட தீர்த்தமும், கரதலேச்வரர் திருக்கோயிலும் உள்ளன. ஒரு சமயம் தஞ்சாசுரன் பிரம்மதேவனிடமிருந்து வரம்பெற்று அங்கு வாழ்மக்களைத் துன்புறுத்தினான். அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். உலகைக் காக்க அவர் ஆனந்தவல்லி அம்பிகையிடம் கூறினார். ஆனந்தவல்லிதேவியும் தன் சக்தியை ஏகவீரா, ஜயந்தி, மர்தினீ, மஹிஷார்தினீ, மாரீ, ரேணுகா, காளி, கோடி என்னும் எட்டுசக்திகளாகப் பிரித்துக்கொண்டு எண்டிசையிலிருந்தும் போரிடவந்தாள் என பிருஹதீச்வர மாஹாத்மியம் கூறுகின்றது. அதைப்போல இத்தஞ்சைக்கு செல்லியம்மன், குந்தாளம்மன் (விண்ணாற்றங்கரை), வாஞ்சிஅம்மன், வடகாளியம்மன், பத்ரகாளியம்மன் ரேணுகை எனும் மாரியம்மன், எல்லையம்மன் செங்களநாச்சியம்மன் ஆகியோர் வல்லைக் காவலராக அமைந்துள்ளனர். கோடீச்வர சாமள பிரவாளகாளி போன்றோர் கிரியாசக்திகள் என்கிற தஞ்சைமாநகரத்தல புராணச்செய்தி ஈண்டு நினைக்கத்தக்கது. சங்ககாலச் சோழர்களின் வரிசையில் கரிகாலன் தலைசிறந்தவன். கரிகாற்சோழன் காவிரியின் நடுவில் ஓர் அணைகட்டி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றான். அதனைத் தெரிவிக்கும் வகையில் காவிரி தேவியின் அருளால் எக்காலமும் நிலைத்திருக்கும் வண்ணம் அணை கட்டினான் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதனால் கரிகாற்சோழனுக்கு காவிரிக்கரைகண்ட சோழன் என்ற பெயர் வந்திருக்கலாம். மேலும் இந்நூலில் பல சைவவைணவ திருக்கோயில்களின் திருப்பணிகள்

குறிக்கப்பெற்றுள்ளன. பழுதடைந்த ஆலயங்களின் திருப்பணிகளைக் குறிப்பிடும் போது 'கற்களை வரிசைவரிசையாய் அடுக்கி அதன் நடுவே கடுக்காய், வெல்லம் தேத்தங்கொட்டை, கமுகு ஆகியவற்றைச் சேர்த்து அரைத்த வெண்ணை அல்லது அமுதம் போன்ற சுண்ணாம்புக் குழைவினை அந்தக் கற்களின் நடுவே பூசுவார்கள்' என்பதைத் தெரிவிக்கும் வஜ்ஜிரக் காரையைக் குறிப்பிடும் சுலோகம் பிருஹதீச்வர மாஹாத்மியத்தில் உள்ளது. வஜ்ஜிரக் காரைத் தயார் செய்யும்முறை மதுரைத் திருப்பணிமாலையில் விரிவாகக் காணலாம். பெருவுடையார் பெருமைகூறும் இந்நூலில் சிவலிங்க சோழனின் 119 சைவவைஷ்ணவாலயத் திருப்பணிகளும், அவனது மகன் வீரசோழன் காவிரிக்குக் கிளைநதி ஒன்றை ஏற்படுத்த அதற்கு 'வீரசோழனாறு' எனப்பெயரிட்டு அழைத்ததும், அவனது மகன் கரிகாலன் ஹரதத்தரை குருவாக ஏற்று, அக்னீச்வரரை நிறுவி ஏகாதசருத்திரஜபம், மண்டலாபிஷேகம் நடத்தி வைத்ததும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிருஹதீச்வரர் கோயிலிலுள்ள பாணலிங்கம் நர்மதை நதியிலிருந்து எடுத்துவரப் பெற்றதாய் தஞ்சபுரீச்வரர் ஆலயத்தில் வைத்து பாலாலயமாகப் பூசித்தபின்னர் பெருங்கோயில் அமைத்து அதில் நிறுவப்பெற்றது. மன்னர் மகுடாகம முறையில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு புனித நீராட்டு விழாவைச்செய்திருக்கின்றார். பிறகு மண்டலாபிஷேகாதி உத்ஸவங்களையும் பற்பல திரவியங்களைக்கொண்டு நடத்திவைத்ததாகவும், இறைவனுக்குப் பூஜை நாள்தோறும் நடைபெற ஏற்பாடுகளையும் சோழமன்னர் செய்தார். அதனைத் தொடர்ந்து பிரம்மோற்சவமும் சிவகங்கைக் குளத்தில் தீர்த்தவாரியும் நடைபெற்றன. அக்குளத்தில் கங்கை தோன்றி காசிவிச்வநாதரை ஆங்கே நிறுவச் செய்ததால் அது 'சிவகங்கை' எனவழைக்கப்

பட்டது என்பதனையும் பிருஹதீச்வர மாஹாத்மியம் பகர்கின்றது. இத்தகைய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கதை இலக்கிய வரிசையில் தலபுராணங்கள் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் மிகுதியாகக் காணக்கிடைக்கின்றன. கதை இலக்கியம் சார்ந்த தஞ்சை சரசுவதிமகால் நூலகப் பதிப்புகளில் சோழசம்பூ, அளகாபுரி, தஞ்சாபுரி, பராசரக்ஷேத்திரம், பிருஹதீச்வர மாகாத்மியங்கள் (தலப்பெருமை பேசும் கதை இலக்கியங்கள்) குறிப்பிடத்தக்கவை.

பிருஹதீச்வரமாகாத்மியம் என்னும் கதை இலக்கியத்தில் மட்டுமே காணக்கிடைக்கும் துதி "பிருஹதீசாஷ்டகம்" ஆகும்.

நமோ தேவாதி தேவாய சந்த்ரசூடாய சம்பவே |
பிருஹதம்பாபதே துப்யம் பிருஹதீசாய தே நம: || 1

விச்வநாதாய நித்யாய வ்யோம கேசாய சூலினே |
வாமதேவாய பீமாய பிருஹதீசாய தே நம: || 2

மஹாதேவாய சுத்தாய சங்கராய கபர்தினே |
பிரணதாஞான நாசாய பிருஹதீசாய தே நம: || 3

கங்காதராய விச்வாய ஸர்ப்பஹாராய தே நம: |
பசூனாம் பதயே துப்யம் பிருஹதீசாய தே நம: || 4

பஸ்ம ருத்ராக்ஷமாலாய குமாரஜனகாய ச |
கணேச நந்திஸேவ்யாய பிருஹதீசாய தே நம: || 5

விருஷத்வஜாய ஸர்வாய பிரஹ்மமுண்டதராய ச |
கபாலமாலினே துப்யம் பிருஹதீசாய தே நம: || 6

க்ஷமாரதாய நமஸ்துப்யம் நமஸ்தே மேருதன்வனே |
விஷ்ணுபாணாய தேவாய பிருஹதீசாய தே நம: || 7

திரயம்பகாய பர்காய நீலகண்ட்டாய ஹேதவே |
ஸர்கரக்ஷாகராந்தாய பிருஹதீசாய தே நம: || 8

த்வதர்ச்சகானாம் பக்தானாம் ஸத்ய:க்ஷிப்ரப்ரஸாதினே |
ஸ்ரீருத்ர பிரதிபாத்யாய பிருஹதீசாய தே நம: || 9

ஏவம் ஸ்துவன் ததா ராஜா பிருஹதீசாஷ்டகேன வை |
பிரணம்ய தண்டவத் பூமௌ தேவதேவ்யாச்ச மத்யத: ||10

(பொ.) தேவர்தம் தலைவன், பிறைசூடி, மங்கலம் தருபவன், பிருஹந்நாயகி மணாளன், உலகநாதன், அழிவற்றவன், வானத்தையே முடியாகக்கொண்டவன், சூலாயுதத்தைப் பெற்றவன், வாமதேவன், பீமன், மஹாதேவன், சுத்தன், சங்கரன், சடாபாரம் தரித்தவன் வணங்குவோரின் அறிவின்மையை ஒழிப்பவன், கங்கை நதியைத் தலையிலணிந்தவன் உலகை ஆள்பவன், பாம்பைக் கழுத்தணியாகப்பெற்றவன், உயிரினங்களின் நாதன், திருநீரும், உருத்ராக்ஷமாலையும் அணிந்தவன், முருகப்பெருமானின் தந்தை,கணேசர், நந்தி ஆகியோரால் வணங்கப்பட்டவர், விருஷபக்கொடியோன், ஸர்வன், பிரஹ்ம கபாலாதிகளை கழுத்தணியாகப் பெற்றவன், க்ஷமாரதன், மேருவைத் தன் இருப்பிடமாகக் கொண்டவன், விஷ்ணுபாணம் என்ற லிங்கஸ்வரூபி, தவன், திரயம்பகன், பர்கன், நீலகண்டன், ஸ்ருஷ்ட்டி, ஸ்திதி, லயத்திற்கு காரணபூதன், உன்னை அர்ச்சிக்கின்ற அடியவர்களுக்கு விரைவில் அருள்பவன், வேதத்திலுள்ள ஸ்ரீருத்ர சூக்தத்தால் துதிக்கப்படுபவர்.

இத்தகைய நாமாவளிகளைப்பெற்ற பிருஹதீசாஷ்டகம் எனப்படும் தோத்திரத்தால் துதிசெய்து பிருஹந்நாயகி உடனுரை பிருஹதீசரை தண்டாகாரமாக ஒருவர் விழுந்து வணங்கியதாக இந்த அற்புதத் துதி அமைந்திருக்கிறது.

4-8 திருவேங்கடமும் அதன் பெருமைகளும்

கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரம் ஆகிய திருத்தலங்கள் ஆழ்வார்களாலும் போற்றப்பட்டுத் தலைசிறந்த திவ்ய க்ஷேத்திரங்களாகத் திகழ்கின்றன. அவைகளுள் ஒன்றாகிய திருமலை ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படித் திருவாராதனம் கண்டருளும் தனிப்பெரும் புகழுடன் மிளிர்கிறது. அங்கே காட்சி தருகிற எம்பெருமான், யுகயுகாந்தர மூர்த்திகளாய் வடிவெடுத்து இறுதியில் கலியுகம் காக்கவல்ல கலியுகக் கண்ணனாய்த் திருவேங்கடத்தில் அலர்மேல் மங்கை மணாளனாகத் திகழ்கின்றான்.

அதனை வடமொழி சுலோகம் ஒன்று அழகாய்க் குறிப்பிடுகின்றது.

க்ருதே து நரஸிம்ஹோऽபூத்-
த்ரேதாயாம் ரகுநந்தன: ।
துவாபரே வாசுதேவச்ச-
கலௌ வேங்கட நாயக: ॥

என்கிறபடியே, "வேங்கடம்" என்ற திவ்யதேசத்தின் நாயகனாக அவ்வெம்பெருமான் விளங்குகின்றான்.

திவ்யதேசம்

ஆழ்வார்கள் பன்னிருவரால் பாடல்பெற்ற 108 வைணவத் திருத்தலங்களுள் ஒன்றாகத் திகழ்வதால் இதனைத் "திவ்யதேசம்" என்றழைக்கப்படுகின்றது. "திவி" என்ற சொல் ஆகாயம் அல்லது வானம் எனப் பொருள்படுகின்றது. ஆழ்வார்கள் பாடிய திருத்தலங்கள் 106 புவியில் உள்ளன. ஆகவே இப்பெயர் எப்படி பொருந்தும் என்ற ஐயப்பாடு எழுகின்றது. இதற்கெல்லாம் கலங்கரை விளக்கமாகத் திகழ்பவைதாம் இந்தப் பூதலத்தே அமைந்த திருக்கோயில்கள்

அவ்வண்ணமமைந்த திருக்கோயில்களில் விளங்கும் எம்பெருமான், நித்யவிபூதியாகிற பரமபதத்தை விட்டு தனது திருவிளையாடற் கருதி பூவுலகிற்கு அவதரணம் (இறங்குகை) செய்ததே இதற்கு மற்றுமோர் சான்று.

இவ்விதமாகப் பூலோகவாசிகளுக்கு அருள்புரிவதைக் கருத்தில் கொண்டு, நாராயணனும்

மாயாவீ பரமானந்தம் த்யக்த்வா வைகுண்ட்டமுத்தமம் ।
ஸ்வாமிபுஷ்கரிணீ தீரே ரமயா ஸஹ மோததே ॥

என்றவாறு பேரின்பம் அளிக்கவல்ல - ஸ்ரீவைகுந்தத்தை விட்டு ஆதிவராஹ க்ஷேத்திரத்தில் வந்து நின்றான். அதோடு மட்டுமின்றி, ஸ்ரீவைகுந்தத்தை விரலிட்டுக் காட்டுமாப்போலே உயர்ந்த மலையில் திருக்கோயில் கொண்டானல்லவா ? என்ன ஆச்சர்யம் ! இவ்வாறு திவியில் (வானத்தில்) உள்ள திவ்யானுபவம் நிறைந்த திவ்யதேசத்தைப் புவியிலிருந்தே காட்டுகின்றார்ப் போலமையப் பெற்றதால் இவைகளுக்கு "திவ்யதேசம்" என்ற பெயர் வழக்கில் ஏற்பட்டது.

வேங்கடமும் அதன் பெருமைகளும்

திருமகள் கேள்வனாகத் திருவருள்புரியும் திருவேங்கடவனைத் தினம் நாவினால் நவின்றாலே போதும், நம் பாபங்களனைத்தும் பொறிக்கனலில் இட்ட பஞ்சுபோல மாய்ந்துவிடும். இதனையே-

ஸர்வ பாபானி வேம் ப்ராஹு:
கடஸ்தத் தாஹ உச்யதே ।
ஸர்வ பாபதஹோ யஸ்மாத்-
தஸ்மாத் வேங்கட நாமவான் ॥

என்று வேங்கடேசபுராணம் கூறுகின்றது. ஆகையால் "வேங்கடம்" என்ற சொல்லே "வேம்" என்பதால்

பாபத்திரளையும் முழுதுமாய் "கடம்" எரித்துவிடுகின்றது. அதோடு நில்லாமல் உயர்வானில் ஏறுவதற்கும் நற்கதியை அடைவிக்கின்றது. இக்கருத்தினை விளக்கும் ஒரு சிறுகதையும் அப்புராணத்தில் காணப்படுகிறது.

ஸ்ரீசைலத்திற்கு மேற்கே "நந்தனபுரம்" என்ற ஊரில் "மாதவன்" என்றொரு அந்தணன் வாழ்ந்து வந்தான். அவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். அவனது மனைவி சந்திரலேகையும் பதிவ்ரதா தருமத்தைக் குறைவற நடத்திவந்தாள். அது மட்டுமின்றி அவர்கள் இருவருமே ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு அன்பு கலந்த இல்லறத்தை நடத்தி வந்தனர். அவர்களது 'பதிவிரதா தருமம்' மிகச் சிறப்பு வாய்ந்தது. பொதுவாகவே 'பதிவிரதா தருமம்' நெருப்பையே தணிக்கவல்ல தன்மை பொருந்தியது. அதனை விளக்கும் அழகான சுலோகம் கீழ்வருமாறு -

சுதம் பதந்தம் ப்ரஸமீக்ஷ பாவகே -
ந போதாயாமாஸ பதிம் பதிவ்ரதா |
ததாபி தத் பதிபக்தி கௌரவாத்-
ஹுதாசன: சந்தன பங்க சீதள: ||

ஒரு பதிவிரதைப்பெண், தனது கணவன் தம்மடிமேல் தலைவைத்துறங்கும் தருவாயில் அவளது புதல்வன் நெருப்பின் அருகில் சென்றுவிடுகிறான். அதனையறிந்தும் தனது கணவனையெழுப்பாது தீயெம்பெருமானைத் துதிக்கின்றாள். அவளது பிரார்த்தனைக் கிணங்கிய தீக்கடவுளும், பதிவிரதா தர்மத்தின் பெருமையை வெளிப்படுத்த அந்த அக்னிக் கனலையே சந்தனக்குழம்பாக மாற்றிவிடுகின்றார். இதனால் குழந்தையும் பிழைத்தது. பதிவிரதா தருமமும் நிலைத்தது. அவ்விதம், பதிவிரதானுஷ்டானத்தில்

வழுவாத அத்தம்பதியினருக்குத் திவ்யதேச யாத்திரையில் விருப்பம் மேலிட்டுத் தலயாத்திரை புரிந்தனர். அப்படி ஒவ்வொரு தலமாகத் தரிசித்து வரும் வேளையில் உணவிற்காகக் காய்கனிகள் சேகரிக்க வேண்டித் தனது மனைவியை மாதவன் ஒரு தடாகத்திற்கருகில் தங்கவிட்டுச் சென்றான். சிறிது தூரம் கடந்த பின்னர், அழகிய பெண்மணி ஒருவளைக் கண்டு மையலுற்று, மனைவியை மறந்து அவளுடன் காலங்கடத்தி வந்தான். இப்படியே நாள்கள் செல்ல அவனுக்கு முதுமையும், மேனியில் பலஹீனமும் காணப்பட்டது. ஆதலால், ஊதியத்துக்கும் உழைப்புக்கும் அவன் உதவாமல் போய்விடவே, அவன்மேல் மையலுற்று இன்ப வாழ்க்கை புரிந்த பெண்மணி அவனைவிட்டகன்றாள். அச்சமயத்தில்தான் மாதவனுக்கு முதல் மனைவி பற்றிய நினைவு வருகின்றது. இன்னல்களும் இடர்பாடும் நிறைந்த இந்நிலையில் இரண்டாம் மனைவியைத் தேடிச் செல்வதா ? முதல் மனைவியை நாடிப் போவதா ? என்று மாதவன் குழம்ப ஆரம்பித்தான். அத்தருணத்தில் திருமலையெம்பெருமான், மாதவனின் கனவில் தோன்றி, 'என்னுடைய திவ்யதேசத்திற்கு வாரும், உமது தீவினைகளும், கஷ்டங்களும் தேய்ந்து போகும்' என்றான்.

திருமலையெம்பெருமானே நேரில் காட்சி தந்து தம்மை அழைத்ததின்பேரில், 'அந்தோ! யான் பெற்ற புண்ணியம்' என்றெண்ணி மாதவன் திருமலைக்கச் செல்கிறான். திருமலைக்குள் புகுந்ததுதான் தாமதம் ! அவனது தீவினைகளும், கஷ்டங்களும், தீயிலிட்ட பஞ்சு போல் பொசுங்கிவிட்டனவாம்.

பின்னர் புதுப்பொலிவுடன் திகழ்ந்த மாதவனைக் கண்ட முனிவர்கள், 'தாங்களால் இத்திருத்தலம் பாபம்

போக்கும் நகரமாகியது. ஆகையால், இன்று முதல் இத்திருத்தலம் வேம்-கடம் பாபம் போக்கடிக்கவல்ல நகராக விளங்கட்டும்' என உரைத்தார்கள். ஆதலால் நாம் திருவேங்கடத்திற்குச் சென்றாலும், அத்திருத்தலத்தின் திருநாமத்தை நாவால் நவின்றேத்தினாலும் நமது வினைகள் கழிந்து நன்மைகள் பல உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

4-9 திவ்யதேசமஹிமா எனும் திருத்தலப்பெருமை*

'திவ்யதேச மகிமை' என்ற தலைப்பில் ஒரு ஓலைச்சுவடி தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சம்ஸ்க்ருதத்துறையில் கிரந்த எழுத்தில் எழுதப்பெற்றதாய் காணப்படுகிறது. (Green No. 1018/D.No. 31245-/ T.M.S.S.M.L. Tanjore Vol. No. 26) இந்த சுவடியானது லக்ஷ்மீபுரமாகாத்மியம் என்ற நூலின் பின்னிணைப்பு இரண்டில் சம்ஸ்கிருத தமிழ் எழுத்துகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் முறையே திருவஹீந்திரபுரம், சிதம்பரம், சீர்காழி, திருவாலித்திருநகரி, திருநாங்கூர், திருஇந்தளூர், சிறுபுலியூர், திருக்கண்ணபுரம், நாகப்பட்டணம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை ஆகிய பதினோரு திருத்தலங்களின் குறிப்பு காணக்கிடைக்கிறது.

இந்த பதினோரு திருத்தலங்கள் குறித்த சுலோகங்களை தமிழ் எழுத்தில் அமைத்து அதன் பொழிப்புரையும் தமிழில் கொடுத்து பதிப்பிக்கப் படுகின்றது.

---

* Lakshmipuramahatmyam, T.M.S.S.M. Library, Edn. 1999 Page No.68-74.

1. திருவஹீந்திரபுர க்ஷேத்திரம் (திருவயிந்திரபுரம்)

ப்ரணத ஸுகிரீட ப்ராந்தாரமாலா
விகளிதமகரந்தஸ்ஸ்நிக்தபாதாரவிந்த: |
பசுபதிவிதிபூஜ்ய: பத்மபத்ராயதாக்ஷ:
பணிபதிபுரநாத: பாது மாம் தேவநாத: || (அ)

(தேவநாயக பஞ்சாசத் - 1)

மார்க்கண்டேய-பரத்வாஜ-புண்டரீக-நிவாஸிபி: |
பூஜிதாங்க்ரிஸரோஜாய தேவநாதாய மங்களம் || (ஆ)

1. திருஅயிந்தை : *(பொருள்)* பற்பல முடி மன்னர்களால் வணங்கப் பெற்றவரும், நல்ல திருமுடியும், கழுத்தணியாக மந்தார மாலையையும், மந்தாரம் முதலிய மலர்களிலிருந்து உண்டான மகரந்தப் பொடிகளால் நைப்புடையதான திருவடி இணைகளையும், தாமரை இதழ்களைப்போன்று நீண்ட கண்களையும் பெற்று சிவபெருமான், பிரம்மதேவர் போன்றோரால் பூசிக்கப்பட்டு தேவர்களின் தலைவரும் திருவயிந்திரபுர நாதனுமான தேவரீர் எம்மைக் காப்பாற்றுவீராக.

மார்க்கண்டேயர், பரத்வாஜர், புண்டரீகர் போன்ற ரிஷிகளாலும் *(திருவயிந்திரபுர)* க்ஷேத்திரவாசிகளாலும் பூசிக்கப்பட்ட திருவடித்தாமரைகளையுடைய தேவநாதனுக்கு மங்களம் ஆகட்டும்.

2. புண்டரீக க்ஷேத்திரம் (தில்லைத் திருச்சித்திரகூடம்)

லக்ஷ்மீகாந்தமநந்தபோகசயனம் காலாம்புத ச்யாமளம்
ஹஸ்தோத்பாஸித சங்கசக்ரமமலம் பீதாம்பராலங்க்ருதம் |
சாந்தம் சக்ரமுகாமரஸ்துதிகணம் ராஜீவநாதம் விபு:
ராஜத்ரத்னகிரீட குண்டலதரம் கோவிந்தராஜம் பஜே || (அ)

புண்டரீகஸரஸ்தீரே விமானே ஸாத்விகாஹ்வயே |
தில்லீவனஸமாகீர்ணே சித்ரகூடே மனோஹரே || (ஆ)

கண்வஸ்ய வரதானார்த்தம் அகச்சத் புருஷோத்தம: |
கோவிந்தராஜோ பகவான் புராணோ பக்தவத்ஸல: || (இ)

உமாபதிச்ச தத்ரைவ ஹரிதர்சனலாலஸ: |
கோவிந்தராஜபாதாக்ரே ஸ்த்தித்வா தாண்டவமத்புதம் || (ஈ)

கரோதி தஸ்ய பாதாக்ரே வஸன் ஹி ப்ரீயதோ ஹர |
கோவிந்தராஜஸேவார்த்தம் அத்யாப்யானந்த தாண்டவம் || (உ)

அஸ்து கோவிந்தராஜாய கல்யாணகுணஸிந்தவே |
பாந்தவே ஸர்வலோகானாம் ச்ரிய:காந்தாய மங்களம் || (ஊ)

சித்ரகூடநிவாஸாய சித்ராSSனந்த விபூதயே |
ஸ்ரீமத் கோவிந்தராஜாய ஸ்ரீவத்ஸாங்காய மங்களம் || (எ)

ஆத்யாய வேதவேத்யாய ஞானானந்தமயாத்மனே |
கோப்த்ரே கோவிந்தராஜாய தேவதேவாய மங்களம் || (ஏ)

நாராயணாய நாதாய வாஸுதேவாய விஷ்ணவே |
நாம்னா கோவிந்தராஜாய பூம்னே பவது மங்களம் || (ஐ)

ஜீவாதவேSத்ர ஜகதாம் திவ்யஞானபிரதாயினே |
க்ருபாம்புநிதயே நித்யம் கீதாசார்யாய மங்களம் || (ஒ)

2. **சிதம்பரம்** : *(பொ.)திருவின்மணாளனும், அனந்தாழ்வான் மீது பள்ளிகொண்டவனும், கடலில் தோன்றிய விஷம் போல் கறுமையானவனும், நிர்மலமான சங்கு சக்கரங்களைத் திருக்கைகளில் விளங்கப்பெற்றவனும் மஞ்சள் பட்டாடை அணிந்திருப்பவனும், சாந்தனும், இந்திரன் போன்ற அமர கணங்களால் துதிக்கப்பட்டவனும், தாமரையின் நாதனும், வியாபித்திருப்பவனும், ரத்தின குண்டலங்களைத் தரித்து விளங்குபவரும், ஆன கோவிந்தராஜனை நான் வணங்குகிறேன்.*

புண்டரீகபுஷ்கரிணிக்கரையில் சாத்விக விமானத்தின் கீழ் தில்லீவன பிராந்தத்தில் அழகியதான

தக்ஷிண சித்ரகூடத்தில் கண்வருக்கு வரமளிக்கவேண்டி புருஷோத்தமனும், புராணபுருஷனும் பக்தவத்ஸலனும் ஆன கோவிந்தராஜப்பெருமாள் கோயில்கொண்டார். உமையின் கணவரான பரமசிவனும் கோவிந்தராஜனைப் பார்ப்பவராய் அற்புதமான தாண்டவம் புரிந்தார். இன்றும் ஆனந்ததாண்டவமாடுகின்றார். கல்யாண குணக்கடலும், அகில உலகிற்கும் உறவினரும், திருவின் மணாளரும் ஆன ஆநிரை காத்தவருக்கு மங்களமுண்டாகட்டும். சித்திரகூடநிவாஸியும், விசித்ர ஆனந்தச் செல்வமளிப்பவரும், ஸ்ரீவத்ஸமருவுடன் விளங்குபவரும் ஆன கோவிந்தராஜனை நான் வணங்குகிறேன்.

ஆதியும், வேதத்தால் அறியப்படுபவரும், அறிவு ஆனந்தம் ஆகியவற்றைப் பெற்றவரும், ஜனங்களைக் காப்பாற்றுபவரும், தேவர்களுக்கு தேவனும் ஆன கோவிந்தராஜனுக்கு மங்களமுண்டாகட்டும்.

நாராயணர், நாதர், வாசுதேவர், விஷ்ணு என்ற பல நாமாக்களால் அறியப்படுபவருமான ஸ்ரீகோவிந்தராஜனுக்கு மங்களமுண்டாகட்டும்.

நாராயணர், நாரதர், வாசுதேவர், விஷ்ணு என்ற பல நாமாக்களால் அறியப்படுபவருமான ஸ்ரீகோவிந்தராஜனுக்கு மங்களமுண்டாகட்டும்.

உலகுக்கே உள்ளுயிரானவரும், திவ்யஞானத்தை அருள்பவரும், அருட்கடலும், கீதையை உபதேசித்தவரும் ஆன கண்ணனுக்கு நித்யம் மங்களமுண்டாகட்டும்.

3. ரோமச க்ஷேத்திரம் (காழிச் சீராமவிண்ணகரம்)

பிரம்மாண்டாந்தரமேதினீகதபதாம்போஜம் நபோமண்டலம்
பிரக்ஷிப்தான்யபதம் த்ருதீய பதவின்யாஸம் பலேர்மூர்தனி |
குர்வாணம் கனசோபிகௌஸ்துபதரம் வக்ஷஸ்த லக்ஷ்மீயுதம்
சங்கம் சக்ரமபீதிமீப்ஸிததரம் ஹஸ்தைர் வஹந்தீம் பஜே || (அ)

பாதேனைகேன ப்ருத்வீம் சரணஸரஸிஜேநாண்ட பித்யந்தராளம்
ஊர்த்வோத்க்ஷிப்தாந்தரேணாऽऽகிலமபிஸமாக்ரம்ய திஷ்டந்தமப்ரம் |
அன்யம் பாதம் பலிசிரஸி முதா விச்வரூபம் க்ருபாளும்
த்யாயேத் ஸ்ரீபூமிநீளாஸஹிதமபயதம் சங்க்க சக்ராப்ஜபாணிம் ||

பிரமாண்ட ப்ருத்வீகத பாதபங்கஜம்
வாமாங்க்ரிணாऽऽக்ராந்த நபோऽவகாசம் |
த்ருதீய பாதாங்கித தைத்யமஸ்தகம்
த்ரிவிக்ரமம் தம் சரணம் ப்ரபத்யே || (இ)

ஜகதாமாதிபூதாய ஸச்சிதானந்தரூபிணே |
மஹாபலிப்ரஸாதாய த்ரைவிக்ரமாய மங்களம் || (ஈ)

3. சீர்காழி : பிரம்மாண்டத்தினுள்ளே விளங்கும் பூவுலகு மற்றும் ஆகாயம் வரையிலாக அளந்த திருவடித் தாமரையை உடையவரும், பாதாளபர்யந்தமாக பலிசக்ரவர்த்தி தலையில் வைக்கப்பெற்ற மற்றொரு பாதகமலத்தைப் பெற்றவரும், இவ்வாறு செய்ததுடன் கழுத்தினில் கௌத்துவத்தை அணிந்தவரும், மார்பில் லக்ஷ்மியை மன்னிடப்பெற்றவரும், சங்குசக்ராதி ஆயுதங்கள் மற்றும் வரதாபயமுத்திரைகள் ஆகியவற்றுடன் திகழ்பவருமான திருமாலை வணங்குகிறேன்.

அண்ட சராசரங்களான பூமியை ஒரு பாதத்தால் அளந்தவரும், கையை உயரே தூக்கி விண்ணளவும் ஆக்ரமித்து நிற்பவரும்,மற்றொரு பாதத்தினை பலியின் திருமுடியில் வைத்து மகிழ்ச்சியாய் அவருக்கு விச்வரூபம்

அளித்த கருணைக்கடலும், ஸ்ரீபூநீளாநாயகராய் அபயமுத்திரையுடன் சங்காழித் திருக்கையராய் விளங்கும் எம்பெருமானை மனத்தினால் நினைக்கவேண்டும்.

பிரமாண்ட பர்யந்தமான நிலப்பகுதியை பாதமொன்றல் அளந்தவரும், இடது திருக்கையால் வானளவு ஆக்கிரமம் செய்தவரும், மூன்றாவதாக தம் திருவடியை பலிச்சக்ரவர்த்தியின் தலை மீது வைத்தவரும் ஆன மூவுலகளந்தோனை நான் சரணடைகின்றேன்.

உலகிற்கு முழுமுதற்பொருளும், ஸத்வம், ரஜஸ், தமஸ்ஸு ஆகிய முக்குணங்களுடன் இயங்குநிலை, இயங்காநிலை ஆகியவற்றிற்குத் தலைவரும், மகிழ்ச்சி தரும் மங்கல உருவினரும், மகாபலிக்கு அருளியவரும் ஆன மூவுலகசேவடியோனுக்கு மங்களமுண்டாகட்டும்.

4. பில்வாரண்ய க்ஷேத்திரம் (திருவாலி திருநகரி)

அஷ்டாக்ஷரமயம் திவ்யம் விமானம் சம்ஸதாஹ்வயம் |
அஷ்டாக்ஷரப்ரதோ விஷ்ணு: மோததே ரமயா ஸஹ || (அ)

காவேர்யாச்சோத்தரே தீரே நூபுராயாச்ச தக்ஷிணே |
ரோமசோருதன்வதோ மத்யே பில்வாரண்யமிதி ஸ்ம்ருதம் || (ஆ)

பில்வமூலே ஸ்த்திதோ பூத்வா நரஸிம்ஹஸ்ய ஸன்னிதௌ |
ஜபேதஷ்டாக்ஷரம் மந்த்ரம் மந்த்ரஸித்திமவாப்னுயாத் || (இ)

தீர்த்தானாம் உத்தமம் தீர்த்தம் த்ரிஷு லோகேஷு விச்ருதம் |
ஹ்லாதினீ தீர்த்தமித்யேதத் ஸர்வபாப ப்ரணாசனம் || (ஈ)

4. **திருவாலிதிருநகரி** : *(பொ.)* திருவெட்டெழுத்தின் வடிவாயும், ஸம்ஸத் எனப்படும் விமானத்தின் கீழ் எட்டெழுத்தின் பயனைத் தரவல்ல விஷ்ணு பகவான் இலக்குமியோடு இன்பமுற்றுரைகின்றார்.

பில்வாரண்யம் என்று போற்றப்படும் இத்தலம் உரோம க்ஷேத்திரமான சீர்காழிக்கும், கொள்ளிடக் காவிரியின் வடதிசையிலும், நூபுரம் என்ற பெயரோடு விளங்கும் காவிரிக்கு தெற்கிலுமாக இதன் நடுவில் அமையப்பெற்றுள்ளது.

இங்கே கோயில் கொண்டுள்ள நாசிம்மரின் சன்னிதானத்தில் வில்வமரத்தடியில் அமர்ந்து எட்டெழுத்து மந்திரத்தைச் ஜபித்தால் சித்திபெறலாம். புண்ணிய தீர்த்தங்களுக்குள் உயர்ந்ததும், மூவுலகில் சிறந்ததுமான மகிழ்ச்சியைத் தரவல்ல ஹ்லாதினீ தீர்த்த நீராட்டம் பாபங்களனைத்தையும் போக்குகிறது.

5. நாகபுரி க்ஷேத்திரம் (நாங்கூர்)

நந்தாதீபகடப்ரணர்த்தகமஹாகாருண்யரக்தாக்ஷக-
ஸ்ரீநாராயண பூருஷோத்தமபதி ஸ்ரீரத்னகூடாதிபான் ।
வைகுண்ட்டேச்வர மாதவௌ ச கமலாநாதம் ச கோபீபதிம்
நௌம்யேகாதச நாகபுர்யதிபதீன் ஸார்தம் கலிதுவம்ஸினா ॥ (அ)

(இரண்டாம் அனுபந்தத்தின் ப. எண். 70ஐக் காண்க)

5. திருநாங்கூர் : *(பொ.)* இந்த சுலோகம் திருநாங்கூர் திவ்யதேசத்தின் பதினோரு திருப்பதி மூர்த்திகளின் திருநாமங்கள் ஒருங்கே அமைக்கப்பெற்ற சிறப்புடையது. பதினோரு திருமால்களை மங்களாசாஸனம் செய்த திருமங்கை ஆழ்வாரோடு ஒரு சில மணித்துளியிலேயே நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் பயன்பெற இந்த சுலோகம் துணை நிற்கும்.

சுலோகம் தரும் திவ்ய தேசக்குறிப்புகளுக்கு விளக்கம் தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்டுள்ள லக்ஷ்மீபுரமாகாத்மிய நூலை வாங்கிப்பயனடைக.

6. சுகந்தவன க்ஷேத்திரம் (இந்தளூர் - மயிலாடுதுறை)

(மாயூராக்ய?)பூராரிகேந்துநகரே ஸஹ்யாத்ரிஜாயோத்தரே
பாகே சந்த்ர ஸரோவ (ரே ச ஸஹிதே?) ஸௌகந்த்யவத்யாத்புதே।
வேதாமோதவிமாநமத்யவிலஸத்போகீ(ந்த்ரசய்யாச்ர?)யம்
சந்த்ரே ந: பணிநா ச்ரியா து ஸஹிதம் ஸௌகந்த்ய ரங்கப்ரபும்॥(அ)

(பவஹர?) விமலாக்ஷோ பிரம்மஸூர்யேந்து யுக்த:
பணிநமதிசயானோ பத்மவல்லீ ஸமேத:।
சதமகமணி நீலச்சாருகல்ஹாரஹார: -
பரிமளவனநாத: பாது மாம் ரங்கநாத: ॥ (ஆ)

6. திரு இந்தளூர் : (பொ.) மயூரபுரம், இந்து நகரம் என்றெல்லாம் அழைக்கப்பெறும் திருத்தலம் காவிரியின் வட பகுதியில் அமைந்துள்ளது. அத்புதமான சுகந்தவனத்தின் சந்திரபுஷ்கரிணிக் கரையில் வேதாமேத விமானத்தின் கீழே திருமால் அரவணையில் கண் துயிலுகின்றார். சந்திர சாபத்தையும் களைந்து திருமகளோடு இனிது உறங்கும் சௌந்தர்யரங்கபிரபுவை நான் வணங்குகிறேன்.

உலக வாழ்க்கையை ஒழிக்கும் தூய்மையான திருஷ்டியைப் பெற்றவரும், பிரம்மா, சூர்யன், சந்திரன் ஆகியோரால் பணிவிடை செய்யப்பெற்றவரும் பத்மவல்லிஸமேதராய் பாம்பணையன் மீது பள்ளிகொண்டவரும், தாமரை மணி போன்ற நீலநிற முடையவரும் அழகிய கல்ஹார மாலை அணிந்து விளங்குபவரும், பரிமளவனத்தின் நாதனுமான ரங்கநாதன் என்னைக் காப்பாற்றட்டும்.

7. தப்ரவியாக்ரபுர க்ஷேத்திரம் (சிறுபுலியூர்)

(பா?)ந்தம் காந்தம் மஹாந்தம் விதிவிஹிதமஹாஸ்தோத்ரபாத்ரம் பவித்ரம்
தப்ர வ்யாக்ராபிதாநே பு(ர?)வரமஹிதே சேஷபோகே சயானம் ।
துர்வாஸ பிரம்மசேஷ ப்ரமதகணபதி வ்யாக்ரகண்வாதி பூஜ்யம்
வந்தே காருண்யவார்திம் பவஜலதிபய த்ராணமானம் (பிரபத்யே?) ॥

7. சிறுபுலியூர் : *(பொ.)* திருமகள் கேள்வனும், பெரிய உருவானவரும், பிரம்மதேவரின் பெருந்துதிக்கு இலக்கானவரும், தூய்மையாய் விளங்குபவரும், தப்ரவியாக்ரபுரம் எனும் சிறுபுலியூரில் ஆதிசேஷன் மீது கண்துயில் கொள்பவரும் துர்வாஸர், வியாக்ர கண்வ முனிவர்கள் போன்றோரால் பூசிக்கப்பட்டவரும், கடல்போன்ற உலக வாழ்வெனும் அச்சம் களைபவரும் ஆன கருணைக்கடலை நான் வணங்குகிறேன்.

8. கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம் (திருக்கண்ணபுரம்)

(புண்ட?)ரீகவிசாலக்ஷம் சரச்சந்த்ரநிபானனம் ।
நீலாத்ரிமிவ திஷ்டந்தம் நீலமேகமஹம் பஜே ॥ (அ)

உத்பலாவதகே திவ்யே விமானே புஷ்கரேக்ஷணம் ।
சௌரிராஜமஹம் வந்தே (பாதி?) ஸர்வாங்கஸுந்தரம் ॥ (ஆ)

8. திருக்கண்ணபுரம் : *(பொ.)* அரவிந்தம் போன்று நீண்ட கண்களையுடையவரும், சரத்கால சந்திரன் போன்று ஒளிர்பவரும், நீலமலை போல் நிற்பவருமான நீலமுகில் வண்ணனை நான் வணங்குகிறேன்.

உத்பலாவதகம் என்றழைக்கப்பெறும் திவ்ய விமானத்தின் கீழ் அருள்பாலிக்கும் தாமரை போல் கண்ணானை அனைத்து அங்கங்களால் அழகியானை சௌரிராஜன் என்ற நாமதேயம் பெற்றவனை நான் பணிகின்றேன்.

9. ஸௌந்தர்யாரண்ய க்ஷேத்திரம் (நாகப்பட்டிணம்)

க்ருதே சேஷார்ச்சிதோநந்த: த்ரேதாயாம் பூஸமர்ச்சித: |
துவாபரே சைவ யோகீசா: ம்ருகண்டுதனயார்ச்சித: || (அ)

கலௌ சோளார்ச்சிதச்சைவ கௌரீஸௌந்தர்யதாயக: |
ஸாரபுஷ்கரிணீ தீரே மத்யே ஸுந்தரகானனம் || (ஆ)

ஆவிர்பபூவ பகவான் லக்ஷ்மீச: க்ஷீரஸாகராத் || (இ)

ஸாரபுஷ்கரிணீ ரோதஸ்யதிவாஸினமன்வஹம் |
ஸௌந்தர்யராஜமனிசம் ஸம்பத்ப்ரதமுபாஸ்மஹே || (ஈ)

ஸௌந்தர்யவல்லீ குரு மங்களம் மே
ஸரோஜபூ வந்தித பாதபத்மே |
கடாக்ஷலேசேன தவாம்ச்ச லோகே
ஸஹஸ்ர நேத்ரஸ்ய ஸமா பவந்தி || (உ)

ஸார புஷ்கரிணீ சைஷா ஸர்வபாபப்ரணாசினீ |
ஸர்வதீர்த்தமயீ புண்யா ஸத்யோ முக்திப்ரதாயிநீ || (ஊ)

ய ப்ரயச்சதி க்ருஹ்ணாதி ஸுந்தராரண்ய பூதலே |
தாவுபௌ புண்யகர்மாணௌ போக்தாரௌ சூர்யமண்டலம் ||

9. நாகப்பட்டணம் : *(பொ.)* கிரேதையில் சேஷனும் அனந்தனும், திரேதையில் பூமியும், துவாபரத்தில் யோகீசர்களும், மிருகண்டுவின் புதல்வராலும், கலியில் சோழர்களாலும் கௌரியாலும் அர்ச்சிக்கப்பட்ட இந்த திருமால் பாற்கடலிலிருந்து அழகிய காட்டிடையே விளங்கும் ஸாரபுஷ்கரிணிக்கரையில் ஆவிர்பாவம் செய்தார். செல்வத்தை வாரிவழங்கும் ஸாரபுஷ்கரிணிக் கரை உறைவானை ஸௌந்தர்யராஜனை நான் எப்போதும் வணங்குகின்றேன். அழகியாரின் நாயகியான ஸௌந்தர்ய வல்லியே ! (அழகியகொடியே) உந்தன் சிறுதுளி கடைக்கண் பார்வையாலே இந்திரனுக்கு நிகரான பதவி கிட்டும். பிரம்ம தேவராலும் வணங்கப்பெற்ற தாயே ! எனக்கு மங்களம் அருள்வாயாக.

10. கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம் (திருக்கண்ணங்குடி)

உத்பலாவதகே திவ்யே விமானே கமலாபதிம் ।
வந்தேऽமமரமுக்யைஸ்து வந்திதம் லோகநாயகம் ॥ (அ)

ஸ்ரீமத்க்ருஷ்ணகுடீதடீப்ரவிலஸத் திவ்யாலயாந்த:ஸ்த்திதம்
தீரஸ்னிக்த கபீர நீரததனும் ஸ்ரீவத்ஸலக்ஷ்மோஜ்வலம் ।
கோட்யம்சப்ரபசக்ரசங்க்க விலஸத் பாகுதுவயம் ஸுந்தரம்
ஸ்ரீதாமோதர தேவமாதிபுருஷம் நாராயணம் தம் பஜே ॥ (ஆ)

புண்யாக்ருத்யாக்ய முக்யஸ்த்லவஸதிக்ருதே மாடரப்ரஹ்மசைத்ய:
ஸ்ரீப்ருக்வாக்யர்ஷிமுக்யஸ்துத சரணயுகாயாதிரூபாய தஸ்மை ।
ஸ்ரீநாதாயாதிகர்த்ரே ஸகலகலிமுஷே காமிதார்த்தப்ரதாத்ரே
ஸர்வக்ஞாயாநேஷ்டப்ரதிபதசயுகாயாதி தாம்னே நமோऽஸ்து ॥ (இ)

நமோऽஸ்து லோகநாதாய பக்தாபீஷ்டப்ரதாயிநே ॥
அரவிந்தாக்ஷநாயக்யா ஸமேதாய மஹர்தயே ॥ (ஈ)

நமோ நமோ நாத ஜநார்த்திநிக்னதே
நமோ நமோ லோகக்ருதே ஸுமாயினே ।
நமோ நமோ பக்தஜனேஷ்டதாயினே
நமோ நமோऽனந்ததயைக ஸிந்தவே ॥ (உ)

ஸகல நிகமஸாரம் ஸம்ச்ரிதேரந்தராய:
சமிதவிபுதகேதம் சன்னிதானம் முனீனாம் ।
அமலகணஸமாஜம் ஹாரகேயூர ரம்யம்
சரணமுபகதோஹம் ஸாரதிம் பாண்டவானாம் ॥ (ஊ)

10. திருக்கண்ணங்குடி : *(பொ.) அமரமுனிக் கணங்களால் தொழுதேத்தப்பட்டவரும், உலக நாயகனும், உத்பலாவதக விமானத்தின் கீழ் அருள்பாலிப்பவரும் ஆன திருமகள் நாயகனை நான் வணங்குகிறேன்.*

செல்வச்செழிப்பான கிருஷ்ணகுடி எனும் திருக்கண்ணங்குடியின் கோயிலினுள்ளே அருள்பாலிப்பவரும்

அருகே ஆழமான புஷ்கரிணீ உள்ளதால் நீருண்டமேகம் போன்ற உடலை உடையவரும், ஸ்ரீவத்ஸம் எனும் மருவினால் விளங்குபவரும், கோடிக் கிரணங்கள் கொண்ட சக்கரம், சங்கம் ஆகியவற்றைத் தன் இரு கைகளில் கொண்டு சுந்தரமாய்க் காட்சிதருபவரும் ஸ்ரீதாமோதரன் என்ற பெயரோடு விளங்கும் ஆதிபுருஷனான அந்த நாராயணனை வணங்குகின்றேன். பிரம்மாதி தேவர்களால் வகிக்கப்பட்ட பெருமை யுடையதும் ஆங்கே பிருக்வாதி முனிவர்களால் தொழுதேத்தப்பட்ட ஆதிரூபமான திருமகள் கேள்வனுக்கும், கலியின் கொடுமைகளை விரட்டுபவரும், விரும்பியவற்றை அளிப்பவரும், ஸர்வஞரும் ஆன ஆதிதேவனுக்கு எனது வணக்கம் உரித்தாகட்டும்.

உலகநாதனும், பக்தர்களின் மனோரதத்தைப் பூர்த்தி செய்விப்பவரும், அரவிந்தவல்லி நாயகியின் உடனுறை பவனுமான பெருந்தகைக்கு எனது வணக்கம் உரித்தாகட்டும்.

அண்டியவர் துயரம் வெட்டுபவனே ! உலகத்திற்காக மாய உருவைத் தாங்குபவனே ! பக்த ஜனங்கள் விரும்பியதை அளிப்பவனே, கருணைப் பெருங்கடலே ! உமக்கு பன்முறை எனது வணக்கங்கள். வேதமனைத்தின் வடிவானவரும், அண்டியவர் துயர்களைபவரும் அறிஞர்களின் துன்பக்கனலை தணிப்பவரும், முனிவர்களின் நெஞ்சத்தில் குடிகொள்பவரும், தூய்மைக் குணங்களின் இருப்பிடமும் அணிகலன்களால் விளங்குபவரும் பாண்டவர்களின் சாரதியுமான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நான் வணங்குகின்றேன்.

11. கிருஷ்ணமங்கள க்ஷேத்திரம் (திருக்கண்ணமங்கை)

பக்தாபீஷ்ட பலப்ரதாங்க்ரியுகளம் கௌசேயவஸ்த்ரான்விதம்
லக்ஷ்மீநாத உர:ஸ்த்தித:ப்ரவிலஸத் ரத்நாவளீ கௌஸ்துபம் |
ஹஸ்தே சங்க்க ரதாங்க பங்கஜ கதா: பிப்ராண ஸம்ப்ராக்ருதா
ராகாசந்த்ரமஹம் ஸுஜாதமகுடம் ஸ்ரீபக்தஜீவம் பஜே || (அ)

11. திருக்கண்ணமங்கை : (பொ.) அண்டியவர் நினைப்பதை நிறைவேற்றி வைக்கும் பெருமை பொருந்திய திருவடி இணைகளைப் பெற்றவரும், பட்டாடை உடுத்தி விளங்குபவரும், திருவை மார்பில் தரித்து லக்ஷ்மீநாதராகத் திகழ்பவரும், கௌத்துவம், இரத்தினமாலை ஆகியவற்றை அணிந்தவரும், கைகளில் சங்கு, சக்கரம், தாமரை, கதை ஆகிய படைக்கலன்களைக் கொண்டு பிரகிருதி மண்டலத்திற்கு அப்பாற்பட்ட பெருநாட்டினை (பரமபதத்தைக்) காட்டித்தருவதாகவும் நிறைமதி போல் ஒளிர்ந்து, சிறந்த வகையில் செய்த மகுடத்தையும் அணிந்து பத்தராவியாய் விளங்குபவரை நான் வணங்குகின்றேன்.

4-10 பராசரர் போற்றிய பிரசன்ன வேங்கடேசர்

பராசர க்ஷேத்திர மாகாத்மியம் கூறும் ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசரின் ஆலயம் தஞ்சை அய்யன் கடைவீதிக்கு சற்றே தொலைவில் அமைந்துள்ளது. எம்பெருமான் உபய நாச்சியாருடன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்தோடு சேவைசாதிக்கிறார். ஆதிப்ரதிஷ்டை மரத்தாலாகி அது சிறிதே பிளவு பட்டதால் புதிதாக ஸ்தாபிக்க நினைத்தபோது கனவின் மூலமாயறிந்த செய்தியின்பால் அய்யன் குளத்திலிருந்து

கண்டெடுக்கப்பட்டு நிறுவப்பட்டவர்தான் தற்போது கருவறையினுள் காட்சி தரும் பிரஸன்னவேங்கடேசர், புதிதாகச் செய்யப்பெற்ற சிலை கோயிலின் உள்ளே இருப்பதையும் நாம் பார்க்கலாம்.

கோயிலமைப்பு:

ஸ்ரீ பிரஸன்ன வேங்கடேசப் பெருமாள் ஆலயம் பூமிமட்டத்திற்கு மேல் உன்னத மேற்பரப்பில் சிற்சில படிக்கட்டுகளுடன் அமைந்து உள்ளதால் திருமலையில் அருள்பாலிக்கும் மலையப்ப ஸ்வாமியையும், இக்கோயிலின் அருகே-

குடதிசை முடியை வைத்து குணதிசைபாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டி தென்திசை இலங்கைநோக்கி

(திருமாலை-19)

என்கிற திவ்யபிரபந்த பாசுரப்படி அமைந்த பள்ளிகொண்ட பெருமாளைக் காண்கின்ற அப்போது அரங்கநகரப்பனையும், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளையும் நினைப்பூட்டுவதாய் விளங்குகின்றது.

குறவஞ்சி இலக்கியத்தில் வேங்கடேசர்

தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சியில் குறிசொல்லவரும் பெண் ஒருத்தி தன்னுடைய தொழில் ஈதென்று விவரிக்கும்போது:-

கோபாலப் பெருமாள் சிங்கப்பெருமாள் மணிகண்டப்
பெருமாள் மின்மலை வேங்கடேசர் ரகுநாதப் பெருமாள்
ஆதிகேசவப் பெருமாள் முகப்பில் ஆறுமுகப்பெருமாள்
கருடங்கோட்டை மேல கோதண்டப் பெருமாள்
தாழியான் நீலமேகன் விதனமே போக்கும் தஞ்சை
நரசிங்கப்பெருமாள் ஏனையோரும் தஞ்சை
வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சியில் முன் நடக்கவேணும்

என்று கேட்டுக்கொள்ளும் பாடலின் வழி தஞ்சைத்தலத்து எம்பெருமான்களை கோர்வையாகக் கூறி ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசர் 'மின்மலை வேங்கடேசர்' எனப் போற்றப்பெற்றுள்ளார்.

'யதோக்தகாரி' ஆகிய சொன்ன வண்ணம் செய்த பெருமாளே தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சியில் 'வழக்கறிந்த பெருமாள்' என வாழ்த்தப் படும் கூற்று ஈண்டு குறிப்பிடத்தக்கது.

தஞ்சை பிரஸன்ன வேங்கடேசப் பெருமாள் கோயிலில் மிக அருகில் அவருக்கு தென்பகுதியில் அருள்பாலிப்பவர் ஸ்ரீஆதிகேசவப் பெருமாள். ஒரு சமயம் ஆதிகேசவரின் பூசைக்காக சிறந்த நறுமணங்கொண்ட புஷ்பங்களை அரசர் அனுப்பியிருந்தார். அர்ச்சகரும் அதனைக் கன் காமக்கிழத்திக்கு அளித்துவிட, புஷ்பம் அளித்த அரசனும் இறைவனைத் தொழவரும்போழ்து என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த அர்ச்சகர், அப்பெண்மணி தலையில் சூடிய புஷ்பத்தை வாங்கி அரசனுக்கு அளித்து விடுகிறார். அதில் கேசம் இருப்பது கண்டு அரசன் வியப்புற்று வினவ, அர்ச்சகர், எம்பெருமானுக்கே கேசமுண்டு என மொழிகின்றார். சரி !! அப்படியானால் மீண்டும் வந்து பார்ப்போம் என்று கூறிச் சென்றார். மீளவும் வந்து காண்கின்றபோது, அர்ச்சகரின் பிரார்த்தனையின் பேரில் எம்பெருமான் கேசம் உடைய வராய் காட்சி தந்தார். ஆதலால் கேசரே கேசவர் ஆக ஆதிகேசவாரானார் என்று இக்கோயிலைக் குறித்த செவிவழிச் செய்தியும் உண்டு. இதனால் அர்ச்சகர் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் "வழக்கறிந்த பெருமாள்" ஆதிகேசவர் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று. தஞ்சையில் தோன்றிய 'அனங்கவிஜயபாணம்' எனும் ஓரங்க நாடகத்தின் காட்சி மேடையாக அமைந்த பெருமையும் உடையது இத்திருக்கோயில்.

'பராசர க்ஷேத்திர மாகாத்மியம்' என்ற பெயரில் தஞ்சை 'பிரஸன்ன வேங்கடேசப் பெருமாள் ஸ்தலபுராணம்' தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்ற சுவடிச் செய்தியை தேவநாகரியில் அமைத்து தஞ்சை சரசுவதி மகால் நூலகம் விரிவாக வெளியிட்டுள்ளது. மூன்று அத்தியாயங்களைக் கொண்ட இதனை யாவரும் புரிந்து கொள்ளுவதற்காகத் தமிழாக்கமும் செய்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை பிரஸன்ன வேங்கடேசர் ஸ்தல புராணம் :

தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்டுள்ள பராசர க்ஷேத்திர மாகாத்மியத்தில் காவிரியின் வடகரையில் அமைந்த திருவையாறு ஸ்ரீ பஞ்சநதேச்வரர் ஆலயத்திலிருந்து இரண்டு குரோசத் (4 மைல்) தொலைவில் தென் திசையில் வசிஷ்டேச்வரத் தலத்தைக் (கரந்தையைக்) கூறி அதன் தென்மேற்கில் ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசர் திருக்கோயிலின் அமைவிடம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசரின் ஸ்தலபுராணத்தை, காலவர், வியாஸரின் வழியாக வெளியிட்டதால் இத்தலத்திற்கு 'ஆதி காலவ க்ஷேத்திரம்' என்பது மற்றொரு பெயர். காலவர் தன்னுடைய தவம் சித்தி பெறத்தகுதியான க்ஷேத்திரம் எதுவென விரித்துரைக்க கேழ்க்க, வியாஸர் கூறுகிறார்.

ஸ்ரீவிருஷாத்ரி நிவாசியான பிரஸன்ன வேங்கடேசர் அருள்பாலிக்கும் ஸ்தலத்திற்கு 'பராசரக்ஷேத்திரம்' என்பது பெயர். இதற்கு பராசர க்ஷேத்திரம் என்று பெயர் வர ஒரு காரணமுண்டு. என்னுடைய கொள்ளுதாத்தா வசிஷ்டர் இங்கே தவம் மேற்கொண்டு தவப்பயனால், திருவேங்கடவனைக் கண்டார். வசிஷ்ட மஹர்ஷியின் பௌத்திரர் பராசரர். அவரே என்னுடைய

(வியாஸருடைய) தகப்பனார் ஆவார். பராசரர் யஜ்ஞம், தானம், தவம் முதலியவற்றால் வேங்கடவனைப் பூஜித்து வந்தார். பராசரமஹர்ஷியால் பூஜிக்கப்பட்டு வந்த இத்தலம் பராசர க்ஷேத்திரம் ஆயிற்று.

வஸிஷ்டேச்வரத்திற்குத் தென் மேற்கில் அழகியதான பிரதேசத்தில் வசிஷ்டர் இரண்டு மாதகாலம் திருமாலைக் குறித்து தவமிருந்தார். எம்பெருமானும் தவத்தால் மகிழ்ந்து திருமலையிலிருந்து இங்கே எழுந்தருளினார். எம்பெருமானை வணங்கி பிரஸன்ன வேங்கடேசராய் எப்போதும் இங்கே எழுந்தருளியிருக்க வேண்டும் என்று வேண்டினார் வசிஷ்டர். அதற்கு செவி சாய்த்த எம்பெருமானும் உமது விருப்பம்போலே இங்கேயே நான் எழுந்தருளி இருக்கிறேன் என்றும் மறுமொழி கூறினார். மகிழ்ச்சியடைந்த வசிஷ்டர் மறுபடியும் இறைவனைத் தொழுது தன் ஆசிரமத்திற்குத் திரும்பினார்.

வசிஷ்டரது ஆசிரமத்திற்கு மேற்குப்பகுதியில் அழகியதான ஒரு நீர்நிலை ஏற்படுத்தப்பட்டது. அதனருகில் பிரஸன்ன வேங்கடேசரின் பூஜைக்காக ஒரு பூந்தோட்டமும் நிறுவப்பட்டது. பராசரரால் ஏற்படுத்தப்பட்ட அந்த நீர்நிலையில் அமுதக்குடமும் நாட்டி 'அம்ருதசரஸ்' என அழைக்கவும் பெற்றது. அம்ருதசரஸ்ஸின் நீரால் விளைந்த பூக்களாலும், கனிகளாலும் ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசரைப் பராசரர் 108 நாமாக்களைக் கொண்டு வணங்கி மகிழ்ந்தார். இந்த எம்பெருமானுக்கே உரியதான பராசரர் போற்றிய நூற்றெட்டு நாமாவளியும், துதியும் தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டில் தனித்துக் காட்டப்பெற்றுள்ளது.

இந்த க்ஷேத்திரத்திற்கு தஞ்சை என்ற பெயர் எவ்வாறு வந்தது ? என்பதை காலவருக்கு வியாஸர் கீழ்வருமாறு விளக்குகின்றார். பராசரர் மிகவும் மகிழ்ச்சியுற்றவராய் இத்தலத்திலேயே வெகுகாலம் தங்கியிருந்தார். அவ்வாறு வாழ்ந்திடும் காலத்தில் மழையில்லாது பெரும் பஞ்சம் நிலவியது. தஞ்சகாசுரன் 'நீர்நிலை எங்கேனும் உண்டோ எனப் பார்த்து வாருங்கள்' என்று தன் மந்திரிகளை அனுப்பிவைத்தான். அவர்களும் பூவுலகெங்கும் சுற்றித் தேடிவிட்டு வசிஷ்டரின் ஆசிரமத்திற்கு அருகிலமைந்த நீர்நிலையைக் கண்டனர் அங்கிருந்த முனிவர்களிடம் தீயமுறையில் நடந்து கொண்டனர். அதைக் கண்ட பராசர முனிவர் நேரே சென்று அவர்களை நிந்தித்தார். ஆத்திரமடைந்த அரக்கர்களின் கொடுமை தாங்காது பராசரர் சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமான் அம்பிகையின் மூலம் தஞ்சகனை வீழ்த்தச் செய்கின்றார். பராசரர் போன்றோர் மகிழ்ச்சியுற அம்ருத சரஸ்ஸில் வீழ்ந்த தஞ்சகன் மீண்டும் அம்ருத நீரைப்பருகி உயிர்த்தெழுந்து ஆனை வடிவினனாக வந்து துன்புறுத்துகின்றான். பராசரரும் திருமாலைச் சரணம் புக திருமாலும் தன் சக்கரத்தை பிரயோகித்து யானை வடிவான தஞ்சகனை ஓட்டம் பிடிக்கச்செய்தார். அவ்வசுரனைக் கொல்ல திருமால் நரங்கலந்த சிங்க வடிவை எடுத்தார். தஞ்சாகாசுரன் ஆளரியைக் கண்டு தன் அசுரத்தன்மையையும் களைந்து, 'இந்த பராசரக்ஷேத்திரம் என் பெயரால் விளங்கவேண்டும்' என்று வேண்டினான். அவனது வேண்டுகோளை நிறைவேற்றுவதாகக் கூறி தஞ்சகனை விண்ணுலகம் அனுப்பினார் எம்பெருமான். இந்த பராசர க்ஷேத்திரம் 'ஆதிகாலவ க்ஷேத்திரம்' என்றும், தஞ்சகனின் வேண்டுகோளால் 'தஞ்சாநகரம்' எனவும் பெயர் பெற்றது.

பராசரர் பிரஸன்ன வேங்கடேசரை வணங்கி, 'ந்ருஸிம்ஹரும், நீலமேகரும், அம்பிகையும் இந்த க்ஷேத்திரத்தில் இப்படியே எழுந்தருளி பிரஸன்ன வேங்கடேசரான தங்களுடன் அருள்பாலித்து வரவேண்டும்' என்க் கேட்டுக்கொண்டார். முனிவரின் மொழிகளுக்கு 'அப்படியே ஆகட்டும்' என்று இறைவன் மறுமொழி கூறினார்.

பராசர க்ஷேத்திர மாகாத்மியத்தில் குறிப்பிடப் பெறும் நரஸிம்ஹர், நீலமேகர்களைப் போன்றே தஞ்சைத் ஸ்தல புராணமான அளகாபுரி மாகாத்மியத்திலும், சோழசம்பூ எனும் நூலிலும் ஸ்ரீதஞ்சபுரீசர், ஸ்ரீஆனந்தவல்லி அம்பிகை, ஸ்ரீஏகவீராம்பிகை, ஸ்ரீகோடி அம்பிகை, ஸ்ரீகுந்தளாம்பிகை போன்றோர் சிறப்பாகக் குறிப்பிடப்பெறுகின்றனர்.

தஞ்சாநகரத்தில் ஸ்ரீகோவிந்தராஜனைத் தொழுத படியே ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசரைத் தரிசிக்கும்போது, நாம் ஏழுமலையானை திருமலையிலே சென்று இப்பொழுதே சேவித்துக் கொண்டிருக்கின்றோமா என பெருமைகொள்ளச்செய்யும். மேலும் தென்திசை நோக்கிய ஸ்ரீகோவிந்தராஜனின் தரிசனம் இலங்கை நோக்கும் திருவரங்கத்து எம்பெருமானை தஞ்சையில் இருந்தே தரிசிக்கும் பயனை அளிக்கிறது.

பராசர முனிவரின் வேண்டுகோளின்படி தஞ்சையில் வேங்கடவன் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசராக காட்சி தருகிறார். அந்த எம்பெருமானை முத்துஸ்வாமி தீக்ஷிதர்-

வசந்த பைரவி திஸ்ரத்ரிபுடை

(பல்லவி)

பிரஸன்ன வேங்கடேச்வரம் பஜரே
வாடி வஸந்த பைரவி நுதம் ஸ்ரீ

(சரணம்)

பிரஸித்த தஞ்ஜநகரஸ்திதம்
பிரபல குருகுஹவேத்யம் ஆத்யம்
வஸிஷ்ட்வாமதேவ விதிதம்
வர அலமேலுமங்காச்ரிதம்
ரஸிசேகரம் கிருபாகரம்
ரக்ஷித பக்த ஆனந்தகரம்

(பொ. மனிதா! பிரஸன்ன வேங்கடேசரை வணங்கு. வாடி வசந்தபைரவியில் தொழப்பட்டவரே ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசராவார். தஞ்ஜாநகரம் என சிறப்புற்ற நகரத்தில் எழுந்தருளியிருப்பவரும், பிரபல குருக்களாலும் குஹராலும் அறியப்பட்டவரும், ஆதியும், வசிஷ்ட வாமதேவர்களால் அறியப்பட்டவரும், சிரேஷ்டையான அலுமேலுமங்கையால் அடையப் பெற்றவரும், ரஸிகசேகரரும், அருளைப்பொழிபவரும், தமது ஆனந்தகரம் அளித்து பக்த ஜனங்களைக் காத்தவரும் ஆன பெருமையுடையவர் ஸ்ரீபிரசன்னவேங்கடேசர் என்று) தமது கீர்த்தனையால் மகிழ்வித்துள்ளார் என்பது 'தஞ்சாவூர் இசைப் பாரம்பரியம்' (Tanjore Music tradition, P.No. 191, Sl. No. 7, T.M.S.S.M. Library Book No. P.No.U.G. 4523) *என்ற நூலால் அறிய முடிகிறது.*

இணைப்பு - I

இந்நூல் தரும் திருத்தலங்கள்

(அகர வரிசை)

வரிசை (பொருளடக்கம்)

(1. தல வரலாறு, 2. சிற்பம், 3. இலக்கியம், 4. புராணம்)

	வரிசை எண்
1. அதம்பார்	1-1
2. அன்பில்	4-2 & 4-3
3. அயிந்தை	4-9
4. ஆதனூர்	4-1 & 4-4
5. ஆலங்குடி	2-13
6. ஆலிநகர்	2-13 & 4-9
7. ஆழ்வார் திருநகரி (திருக்குருகூர்)	3-5
8. இந்தளூர் (மயிலாடுதுறை)	4-9
9. இராமர்கள்	1-10
1. புன்னைநல்லூர்	
2. கொண்டிராஜபாளையம்	
3. மேலராஜவீதி	
4. அய்யன் கடைத்தெரு	
5. வல்லம் பட்டாபிராமர்	
6. ஆஜாரம்	
10. உடுப்பி	2-4
11. கண்டியூர்	1-4
12. கண்ணன்குடி	4-9
13. கண்ணபுரம்	4-9
14. கண்ணமங்கை	4-9
15. கம்பர்நத்தம்	1-9
16. கலியுக வேங்கடேசர்	1-3
17. கல்யாணபுரம்	1-4
18. காஞ்சிபுரம்	3-5
19. காவலகுடி (குடவாசல்)	2-13

	வரிசை எண்
20. கிருஷ்ணர்கள்	1-12 & 3-9
1. வெண்ணைக்கூத்தன் (மகரநோன்புச்சாவடி)	
2. ராஜகோபாலன் (தஞ்சை)	
3. பூலோக கிருஷ்ணன் (தஞ்சை)	
4. மேலவீதி கிருஷ்ணன் (தஞ்சை)	
5. யாதவக்கண்ணன் (கரந்தை)	
21. குடந்தை	3-3 & 3-4
22. குரிச்சி (பந்தநல்லூர் சமீபம்)	4-6
23. குருகாவலப்பர்	1-6
24. கோயிலடி (அப்பக்குடத்தான்)	1-2
25. கோயில்வெண்ணி	1-8
26. கோவிந்தராஜன் (திருவானைக்கா)	3-5
27. கோவிந்தராஜன் (சிதம்பரம்)	4-9
28. கோவிந்தராஜன் (தஞ்சை)	1-11
29. சிங்கரிகோவில்	2-13
30. சிறுபுலியூர்	4-9
31. சீர்காழி	4-9
32. ஜனார்தன வாசுதேவர் (எல்லையம்மன்தெரு)	2-8
33. தஞ்சபுரீச்வரர்	1-17
34. தாயுமானவர் (திருச்சி மலைக்கோட்டை)	2-9
35. திட்டைநவநீதகிருஷ்ணர்	1-14

	வரிசை எண்
36. திருநாராயணபுரம் (மேல்கோட்டை)	1-20 & 2-10
37. திருபுவனவீரபுரம்	1-7
38. திருமலை	3-10 & 4-8
39. தெய்வநாயகன் (வல்லம், தஞ்சை)	1-15
40. நத்தமாங்குடி	2-3
41. நரசிம்மர் (தஞ்சை)	2-6 & 2-13
42. நரசிம்மர் (வல்லம், தஞ்சை)	1-15
43. நாகை	4-9
44. நாங்கூர்	4-9
45. நீலமேகர் (தஞ்சை)	3-6
46. படவேடு	2-13
47. பட்டீச்வரம்	3-8
48. பந்தணைநல்லூர்	4-5
49. பவுண்டரீகபுரம்	1-19
50. பிரசன்னவேங்கடேசர் (தஞ்சை)	2-5 & 4-10

	வரிசை எண்
51. பெரும்பூதூர்	3-5
52. பெருவுடையார்	3-2 & 4-7
53. மணிக்குன்றன் (தஞ்சை)	1-5
54. மண்டங்குடி	3-5
55. யக்ஞமூர்த்தி (தஞ்சை)	3-9
56. ராமாபுரம் (தஞ்சை)	2-7
57. வரதராஜர் (திருச்சி)	2-9
58. வரதராஜர் (வெண்பாவூர்)	1-13
59. விட்டோபா அனுமார் (சுங்காந்திடல், தஞ்சை)	1-16
60. விண்ணாற்றங்கரை	2-14
61. விளங்குடி	2-15
62. ஸ்ரீமுஷ்ணம்	2-11
63. ஸ்ரீரங்கம்	2-1, 2-2, 3-1, 3-5, 3-7

துணைநூற்பட்டியல்

1. புலவர் செ. இராசு,
தஞ்சாவூர் மராட்டியர் செப்பேடுகள் - 50
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர். ஆண்டு -1983.

2. மதுரகவி இராமானுஜதாஸர்
அர்ச்சாவதார ஸ்தலவைபவ தர்ப்பணம்
மும்பை. ஆண்டு-1924

3. கோயிலொழுகு, பகுதி-2
ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாச்சார்யர்
ஸ்ரீரங்கம் - 2006

4. ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்
பதிப்பாசிரியர்,
கோயிலொழுகு
திருச்சி-1976.

5. S. Krishnaswami Ayyangar,
Sources of Vijayanagar History,
University of Madras.-1919

6. R. Champakalakshmi,
Vaishnava Iconography in the Tamil Country,
Orient Longman limited, NewDelhi. Year-1981.

7. முனைவர் மு. செல்வன்,
ஆசிரியர்,
தஞ்சை மாவட்ட நாட்டுப்புற நாடகங்கள்
கிரிஜா பதிப்பகம், தஞ்சாவூர்,
ஆண்டு-2000.

8. P.V. ஜகதீச அய்யர்,
தென்னிந்திய க்ஷேத்திரங்கள்,
வைத்யநாதர் ப்ரோஸ் பப்ளிஷர்ஸ்,
சென்னை. ஆண்டு-1927

9. தமிழ்ப்பொழில்
கரந்தை தமிழ்ச்சங்கத் திங்கள்
வெளியீடு. 35/2,
மே &ஜுன். ஆண்டு-1959.

10. தனிப்பாடல் திரட்டு - முதற்பாகம்
சென்னை. ஆண்டு-1902.

11. Anna L. Dallapiccola, Anila Verghese,
Sculpture at Vijayanagara,
Iconography and style,
American Institute of Indian studies,
New Delhi. Year-1998.

12. கு. தாமோதரன்,
தொல்லியல் நோக்கில் தமிழகம்,
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை. ஆண்டு-1999.

13. T.R. தாமோதரன் & N. விச்வநாதன்
பதிப்பாசிரியர்,
சேஷ அய்யங்கார் கீர்த்தனைகள்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர். ஆண்டு-1983.

14. தஞ்சாவூர் M. தியாகராஜன்,
ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதரின் 101 கீர்த்தனைகள்
தஞ்சாவூர் இசைப்பாரம்பரியம்
சென்னை. ஆண்டு-1992.

15. நாவல்பாக்கம் N. S. தேவநாதாச்சாரியார்
பதிப்பாசிரியர்,
திருவாய்மொழி வாசகமாலை,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர். ஆண்டு-1952.

16. மயிலை கொ. பட்டாபிராமன்,
விஷ்ணுஸ்தல மஞ்சரி
ஆண்டு-1915.

17. குடவாயில் M. பாலசுப்ரமணியன்
பதிப்பாசிரியர்,
மன்னார்குடி கும்பாபிஷேக மலர்,
தஞ்சாவூர். ஆண்டு - 1995.

18. S.R. Balasubramanyam,
Later Chola temples,
Mudgala trust,
Madras. Year-1979.

19. மயிலை மாதவதாஸன்,
நாலாயிரதிவ்யபிரபந்தம்,
மணலி லக்ஷ்மண முதலியார்
ஸ்பெசிபிக் எண்டோமெண்ட்ஸ்,
சென்னை. ஆண்டு-1962.

20. C.T.M. Milan
Translater,
Anciant India from the Origins to XIII century A.D.
New Delhi.Year-2001

21. Miss. Ramesh, I.A.S.,
108, Vaishnavite Divya desams, Vol.III
Tirumala Tirupati Devasthanams Press,
Tirupati-517 507, Year-1995.

22 S.V. S. ராகவன்,
ஆசார்யவைபவம்,
ஸ்ரீவிசிஷ்டாத்வைத ரிசர்ச் சென்டர்,
No. 66, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18, ஆண்டு-2004.

23. முனைவர் ஆ. வீரராகவன்,
பதிப்பாசிரியர்,
லக்ஷ்மீபுர மாகாத்மியம்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர். ஆண்டு-1999.

24. முனைவர் ஆ. வீரராகவன்,
பதிப்பாசிரியர்,
சதுர்விம்சதி மூர்த்தி லக்ஷணம் - I&II
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர். ஆண்டு-2002, 2010

25. முனைவர் ஆ. வீரராகவன்,
பதிப்பாசிரியர்,
விஹகேந்திர சம்ஹிதை - I&II
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர். ஆண்டு-2005, 2006.

26. N.K. Venkatesa pandalu,
Quarterly Journal of the Andhra,
Historical research Society,
Rajmundry. Year-1928

27. K.M. வேங்கடராமையா,
ஆசிரியர்
தஞ்சை மராட்டியர் கால அரசியலும்
சமுதாய வாழ்க்கையும்,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர். ஆண்டு-1984.

28. C. வேங்கட்ரமண சாஸ்திரி,
தமிழ்நாடின கர்நாடக மந்திரி (கன்னட நாவல்)
நஞ்சன்கூடு. ஆண்டு-1928.

29. வ. வேணுகோபாலன்,

ஆசிரியர்

தஞ்சை மன்னரும் சரசுவதி மகால் நூலகமும்,

மயில் பதிப்பகம்,

தஞ்சாவூர். ஆண்டு-*1978.*

30. R. Satyanatha Iyer,

History of the Nayaks of Madura,

Annamalai University,

Chidambaram. Year-1980.

31. S. சுப்பராயன்,

தஞ்சாவூரு நாயக்கர பிரதானி கோவிந்ததீக்ஷிதரு,

ஹொய்சல கர்நாடக சங்கம்,

பெங்களூரு. ஆண்டு - *2008*

சரசுவதி மகால் நூலக அச்சகம்